## பாடல் 1

துதிக்கிறோம் தேவனே! துதிக்கிறோம் இயேசுவே!!
ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்!! அல்லேலுயா!!!

1. தாழ்வில் எங்களை நினைத்தீரே துதிக்கிறோம்
வாழ்வில் எங்களை உயர்த்தினீரே துதிக்கிறோம்
சத்தருவின் கையினின்று எங்களை விடுவித்த
சர்வ வல்ல தேவனே உம்மை துதிக்கிறோம்

2. வானங்களில் உள்ளவைகளே கர்த்தரை துதியுங்கள்
தேவ சேனைகளே நீங்கள் கர்த்தரை துதியுங்கள்
பூமியின் இராஜக்களே சகல ஜனங்களே
சேர்ந்து நம் இயேசுவை துதித்திடுங்கள்

3. வாலிபரே கன்னியரே இயேசுவை துதியுங்கள்
பிள்ளைகளே பிரபுக்களே இயேசுவை துதியுங்கள்
துயாதி துயவரை போற்றி பணிந்து
இராஜாதி இராஜாவை வணங்கிடுவோம்

4. தேவாதி தேவனை ஏகமாய் துதிப்போம்
மாரநாதா சபையே நாம் சேர்ந்து துதிப்போம்
அதிசயங்களை காணச்செய்யும் நம் இயேசு ராஜாவை
என்றென்றும் வாழ்த்தி உயர்த்திடுவோம்

## பாடல் 201

திரும்பு! திரும்பு!! மனம் திரும்பு!!!
பரலோக ராஜ்யம் மிக சமீபம்!!! - 2

1. யோனாவே நில்லு நினிவே செல்லு
என்னை பற்றி அதனிடம் நீ சொல்லு
நினிவே பாவம் நிறைந்த பட்டணம்
அழிவை விரும்புதோ அதனிடம் சொல்லு

2. நினிவே செல்வேனோ? நானும் சாவேனோ?
தர்ஷீசுக்கு செல்வேனோ? தப்பி பிழைப்பேனோ?
கடலும் எனதே காற்றும் எனதே
அலையால் கப்பலை மூழ்கடிப்பேன்

3. யோனா விழுந்தான் மீனின் வாயிலே
மூன்று நாள் வாழ்ந்தான் மீன் வயிற்றிலே
கர்த்தரை நோக்கி கதறி அழுதான்
கர்த்தரின் சித்தத்தால் நினிவே சென்றான்

4. அழிவை நினிவேக்கு எடுத்து உரைத்தான்
கர்த்தரின் வார்த்தையை நினிவே ஏற்றது
கூட்டமாய் எல்லாரும் கூடி ஜெபித்தனர்
கர்த்தரும் ஜெபம் கேட்டு இரங்கினார்

5. இரங்கின தேவன் நினிவேயை பார்த்தார்
நினிவே மக்களுக்காக மனஸ்தாப பட்டார்
நினிவேயை இரட்சித்து அவர் ஆசீர்வதித்தர்
நினிவே தேவ தயவால் காக்கப்பட்டது

# பாடல் 202

விதை விதைக்க புறப்படுங்கள்!!!
நல்ல இடத்தில் விதைத்திடுங்கள்!!!
கண்ணீரோடு ஜெபித்திடுங்கள்!!!
அனுதினமும் ஜெபித்திடுங்கள்!!!

1. பாதையில் விதையை விதைக்காதே
பாதகன் வந்து பொருக்கிடுவான்
வசனம் கேட்டு உணரும் முன்னே
பொல்லாங்கன் வந்து பிடுங்கிடுவான்
- விதை விதைக்க

2. கற்பாறையில் விதையைப் போட்டால்
முளைத்து வரும் விரைவில் காய்ந்திடும்
வசனம் கேட்டு உணராதிருந்தால்
விரைவில் அவன் விலகிபோவான்
- விதை விதைக்க

3. முள்ளுகளுக்குள் விதை விதைத்தால்
முள் வளர்ந்து விதையை நெருக்கிடும்
வசனம் கேட்டு வளர்ந்து வருவான்
உலக கவலை பணத்தால் மயங்கிடுவான்
- விதை விதைக்க

4. நல்ல நிலத்தில் விதை விதைத்தால்
பச்சையான மரத்தைபோலிருப்பான்
வசனம் கேட்டு உணர்வு அடைந்து
சீயோன் மலை போல் இருப்பான்
- விதை விதைக்க

5. விதை விதைக்க காட்டிடு வேகம்
காலம் இல்லை தாமதம் வேண்டாம்
அசதியாய் விதை விதைக்காதே
அறுப்பு காலம் மிக சமீபம்
- விதை விதைக்க

# பாடல் 2

என்னை அக்கினி அபிஷேகத்தாலே
நிரப்பும் ஆவியானவரே - 2
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே - 2

1. நான் உயிரோடுருக்கும் மட்டும்
என் கர்த்தரை துதிப்பேன் - 2
மரணப் பள்ளத்தாக்கில் இயேசு
என்னோடு இருக்கின்றார்
- என்னை அக்கினி

2. நான் உள்ளளவும் என் தேவனை
கீர்த்தனம் பண்ணவேன் - 2
மனிதனே என்றென்றும்
நான் நம்பவே மாட்டேன்
- என்னை அக்கினி

3. யாக்கோபின் தேவனை நான் உயர்த்தி
என்றும் உயர்த்திடுவேன் - 2
இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
நல்லவர் வல்லவர்
- என்னை அக்கினி

## பாடல் 3

மகிமைக்கு பாத்திரரே எங்கள்
மன்னாதி மன்னவரே
நன்றி செலுத்துகிறோம்
உமக்கு நன்றி செலுத்துகிறோம்

நன்றி நன்றி ஐயா -- 4
உமக்கு நன்றி நன்றி ஐயா

1. வேதனை மாற்றினீரே
வேத வசனத்தால் தேற்றினீரே
கண்டென்னை அழைத்தீரே உம்
கரம் நீட்டி என்னை காத்தீரே

நன்றி நன்றி ஐயா -- 4

2. பாவத்தை போக்கினீரே என்னை
பரிசுத்தம் ஆக்கினீரே
கர்த்தாதி கர்த்தரே
என் கன்மலையானவரே

நன்றி நன்றி ஐயா -- 4

3. அழிவுக்கு விலக்கினீரே
உம் வார்த்தையில் நிறுத்தினீரே
பாசம் உள்ள தேவனே
என் கல்வாரி நாயகனே

நன்றி நன்றி ஐயா -- 4

4. என்னை அபிஷேகித்தீர்
தேவ அன்பால் நிறப்பினீரே
வரங்களால் அலங்கரித்தீர்
உம் சபையில் நிறுத்தீனீரே
நன்றி நன்றி ஐயா -- 4

## பாடல் 203

பரலோக ராஜ்யம்! நல்ல நிலத்தில் விதை
விதைத்த ஊழியனுக்கு ஒப்பாயிருக்குது!!
வருகிறார்! வருகிறார்!! ஜெய வீரர் வருகிறார்!!!
ஆரவாரத்தோடும் இயேசு வருகிறார்!!!!

ஆயத்தமா ஆயத்தமா?
இயேசுவோடு வாழ நீ ஆயத்தமா?

1. பரலோக ராஜ்யம் மனுஷன் விதைக்கும்
கடுகு விதைக்கு ஒப்பாய் இருக்குது
வருகிறார் வருகிறார் ஜெய வீரர் வருகிறார்
பிரதான தூதனோடும் இயேசு வருகிறார்

2. பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்த
பொக்கிஷத்திற்கு ஒப்பாய் இருக்குது
வருகிறார் வருகிறார் ஜெய வீரர் வருகிறார்
எக்காளத்தோடும் இயேசு வருகிறார்

3. பரலோக ராஜ்யம் நல்ல முத்தை தேடும்
வியாபாரிக்கு ஒப்பாய் இருக்குது
வருகிறார் வருகிறார் ஜெய வீரர் வருகிறார்
வானத்திலிருந்து இயேசு வருகிறார்

4. பரலோக ராஜ்யம் ஊழியனிடம் கணக்கு
கேட்கும் ராஜாவுக்கு ஒப்பாய் இருக்குது
வருகிறார் வருகிறார் ஜெய வீரர் வருகிறார்
தூத சத்தம் முழங்க இயேசு வருகிறார்

5. பரலோக ராஜ்யம் மகனுக்கு திருமணம்
செய்த ராஜாவுக்கு ஒப்பாய் இருக்குது
வருகிறார் வருகிறார் ஜெய வீரர் வருகிறார்
மேகமீதிலே மேசியா வேகம் வருகிறார்

## பாடல் 204

கர்த்தரின் வழி உனக்கு உத்தமமானது!!
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே!!
கர்த்தரின் வழியை நீ கண்டுபிடித்தால்!!
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே!!

அல்லேலூயா (6)
அல்…லே…லூா..யா!!!

1. தேவனுக்கு என்றும் நீ செவிகொடுத்தால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே
தேவ வார்த்தையை நீ கைகொண்டால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே

2. தேவ வழியில் என்றும் நடந்துகொண்டால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே
தேவனுக்கு என்றும் நீ பயந்து நடந்தால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே

3. தேவ வார்த்தைகள் உன் நாவில் இருந்தால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே
தேவ வார்த்தையை நீ கைகொண்டால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே

4. ஜெபத்தில் என்றும் நீ விழித்திருந்தால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே
ஜெபத்தில் என்றும் நீ போராடினால்
நன்மைகள் என்றும் உன்னை தேடிவருமே

## பாடல் 4

வானாதி வானவரை
துதியுங்கள் துதியுங்கள்
வார்த்தைகளால் வாழ்த்தியே
போற்றுங்கள் போற்றுங்கள்

அவர் பெரியவர் அவர் பரிசுத்தர்
அவர் நல்லவர் அவர் வல்லவர்

1. பரிசுத்த தேவனையே
துதியுங்கள் துதியுங்கள்
பார்போற்றும் தேவனையே
போற்றுங்கள் போற்றுங்கள்
- அவர் பெரியவர்

2. மேசியா இயேசுவையே
துதியங்கள் துதியுங்கள்
மேன்மை பாராட்டியே
போற்றுங்கள் போற்றுங்கள்
- அவர் பெரியவர்

3. ஆசீர்வதிக்கும் தேவனையே
துதியுங்கள் துதியங்கள்
ஆனந்தமாய் பாடியே
போற்றுங்கள் போற்றுங்கள்
- அவர் பெரியவர்

4. சகலத்தையும் படைத்தவரை
துதியுங்கள் துதியுங்கள்
சத்திய தேவனையே
போற்றுங்கள் போற்றுங்கள்
- அவர் பெரியவர்

5. பரலோக தேவனையே
துதியுங்கள் துதியங்கள்
வரப்போகும் மேசியாவை
போற்றுங்கள் போற்றுங்கள்
- அவர் பெரியவர்

## பாடல் 5

மகிமையின் மேல் மகிமை - உம்
மாறாத தேவ மகிமை

1. சீனாய் மலையின் மேல் இறங்கின மகிமை
   இன்று எங்கள் மேல் இறங்கிடுமே - 2

2. மறுரூப மலையின் மேல் இறங்கின மகிமை
   இன்று எங்களை மறுரூமாக்கிடுமே - 2

3. பக்தன் மோசே மேல் இறங்கி பிரகாசித்த மகிமை
   இன்று சபைமேல் இறங்கி பிரகாசிக்கணுமே - 2

## பாடல் 205

என் ஆத்ம நேசரே! என் இயேசு ராஜனே!!
எழுந்து வாருமே! எழுந்து வாருமே!!

இராக்காலத்தில் என் படுக்கை அறையில்!
இராமுழுதும் என் நேசரை தேடினேன்!
நான் தேடினேன் தேடினேன் தேடியும்!
அவரை நான் காணவில்லையே!!!!

1. நான் எழுந்து நகர வீதிகளெல்லாம்
   என் ஆத்தும நேசரை தேடிவருகிறேன்
   நான் தேடினேன் தேடினேன் தேடியும்
   அவரை நான் காணவில்லையே

2. காவலாளிகள் என்னை அடித்தார்கள்
   என் மேலிருக்கும் போர்வையை
   எடுத்துக்கொண்டார்கள்
   நான் தேடினேன் தேடினேன் தேடியும்
   அவரை நான் காணவில்லையே

3. எருசலேம் குமாரத்திகளே என் இயேசு ராஜனை
   நீங்களும் அவரை கண்டீர்களோ
   நான் தேடினேன் தேடினேன் தேடியும்
   அவரை நான் காணவில்லையே

4. என் சத்தம் கேட்டார் என் ஆத்துமநேசர்
   என் ஆத்ம நேசரை நான் கண்டுபிடித்தேன்
   அல்லேலூயா ஆமேன் அல்லேலூயா!!
   அல்லேலூயா ஆமேன் அல்லேலூயா!!

## பாடல் 206

நீ இனி கைவிட படுவதும் இல்லை!!
உன் தேசம் பாழாவதும் இல்லவே இல்லை!!
உன்னை எப்சிபா என்பார்கள்!!
உன் தேசம் பியூலா என்றழைப்பார்கள்!!

1. ஜாதிகள் உன் நீதியை காண்பார்கள்
இராஜாக்களும் உன் நீதியை காண்பார்கள்
கர்த்தரின் வாயால் பேருண்டாகும்
தேவன் உன்னில் மகிமைப்படுவார் - நீ

2. கர்த்தரை என்றும் பிரஸ்தாபம் பண்ணு
அவரை அமைதியாக இருக்கவிடாதே
உன் ஆகாரத்தை அன்னியன் புசிப்பதில்லை
உன் பிரயாசத்தின் பலனை அனுபவிப்பாய் - நீ

3. உன் மூலம் ஜனங்கள் வருவார்கள்
நீ தான் பாதையென்றும் சொல்வார்கள்
சீயோனை நோக்கி இரட்சிப்பை சொல்லு
பூமியின் கடைசிவரை சென்று சொல்லிடு - நீ

4. பரிசுத்த ஜனத்தின் பாதை உயர்த்து
மீட்க பட்டோரின் கொடியை ஏற்றிடு
தேடி கொள்ளப்பட்ட ஒன்றாகிவிடுவாய்
கைவிடாத நகரம் என்றும் இருப்பாய் - நீ

## பாடல் 6

நான் வேதனையாய் இருந்த போதெல்லாம்
இயேசு என்னை தேற்றினார்
நான் கலங்கி தவித்த போதெல்லாம்
தேவன் என்னை தாங்கினார்

நன்றி தேவனே நன்றி இயேசுவே - 4

1. என் வாழ்க்கையை ஆசீர்வதிப்பார்
என் வாஞ்சைகளை நிறைவேற்றுவார்
நன்றி தேவனே நன்றி இயேசுவே -4

2. என் வியாதியிலே சுகம் தருவார்
என் பாதைகளை காத்திடுவார்
நன்றி தேவனே நன்றி இயேசுவே -4

3. என் குறைகளை நிறைவாக்குவார்
என் தேவகளை சந்திக்கிறார்
நன்றி தேவனே நன்றி இயேசுவே -4

4. என் கண்ணீரை துடைக்கின்றார்
என் துக்கங்களை மாற்றுகிறார்
நன்றி தேவனே நன்றி இயேசுவே -4

## பாடல் 7

என்னை ஆசீர்வதிக்கும் தேவன் நீரல்லவா
என்னை உயர்த்துகின்ற தேவனும் நீரல்லவா
எனக்கு உதவி செய்யும் தேவன் நீரல்லவா
எனக்கு பெலன் தரும் தேவனும் நீரல்லவா

ஆசீர்வதியும் உயர்த்திவிடும் - 2
என்னை செழித்தோங்க செய்துவிடும்

1. நான் நம்புகின்ற தெய்வம் நீரல்லவா
நான் சேவிக்கும் தேவனும் நீரல்லவா
என்னை அபிஷேகிக்கும் தேவன் நீரல்லவா
என்னை அரவணைக்கும் தேவன் நீரல்லவா

2. என்னை ஸ்திரப்படுத்தும் தெய்வம் நீரல்லவா
எனக்கு ஜெயம் கொடுக்கும் தேவன் நீரல்லவா
என் ஜெபத்தை கேட்க்கும் தெய்வம் நீரல்லவா
எனக்கு பதில் தரும் தேவனும் நீரல்லவா

3. என்னை காண்கின்ற தேவன் நீரல்லவா
என்னை அறிகின்ற தேவன் நீரல்லவா
என்னை நடத்துகின்ற தேவன் நீரல்லவா
என்னை அணைக்கும் தேவன் நீரல்லவா

## பாடல் 207

ஆபத்து காலத்தின் இரட்சகரே
எங்கள் நடுவில் வாருமையா!!
உமது நாமம் தரித்துகொண்டோமைய்யா
எங்களை விட்டு போகாதிரும்!!

1. தேவ ஊழியரை அனுப்பி வையும்
சாவு எங்களை விட்டுபோகட்டும்
சிறையிருப்பு மாறிபோகட்டுமய்யா
பஞ்சம் எங்களை விட்டுபோகட்டும்

2. என்னை அழிக்க பட்டயம் வேண்டாம்
பிடித்திழுக்க நாய்கள் வேண்டாம்
பட்சித்து அழிக்க பறவை வேண்டாம்
கடித்திழுக்க மிருகம் வேண்டாம்

3. இயேசுவே எனக்கு நீரே போதும்
இயேசுவே எனக்கு உம் வழி போதும்
இயேசுவே எனக்கு இரட்சிப்பு போதும்
இயேசுவே எனக்கு உம்மன்பு போதும்

4. இயேசுவே என்னை படைக்கிறேன்
இயேசுவே என்னை தூக்கிவிடும்
இயேசுவே என்னை நடத்துமே
உம் வழியில் நான் ஜீவிப்பேன்

## பாடல் 208

உள்ளதை உள்ளதென்று சொல்லிடு!!
இல்லாததை இல்லையென்று சொல்லிடு!!
உண்மையை உண்மை என்று சொல்லிடு!!
சத்தியத்தை சத்தியமென்று சொல்லிடு!! - நீ

1. யாக்கோபுக்கு எதிராய் ஒன்றும் இல்லை
இஸ்ரவேலுக்கு விரோதமாய் ஒன்றும் இல்லை
கலப்பையில் கை வைத்து திரும்பாதே
பின் நோக்கி திரும்பி போகாதே - நீ

2. வேர்வை இரத்தமாய் மாறட்டுமே
அனுதினம் ஜெபித்திட கற்றுக்கொள்
கண்ணீரோடும் ஜெபிக்க பழகிகொள்
கதறி ஜெபிக்க என்றும் கற்றுக்கொள் - நீ

3. உலகில் பாடு உண்டு பயப்படாதே
விசுவாசத்தில் என்றும் நிலைத்திரு
உபத்திர பாதை தான் உனக்குண்டு
துன்ப பாதையில் நடந்துகொள் - நீ

4. பவுலும் கஷ்டத்தின் பாதையிலே
நடந்து கடந்து சென்றானே
உபத்திர பாதையை ஜெயமாக
பவுலும் நடந்து வென்றானே - நீ

5. விசுவாசியே என்றும் பயப்படாதே
கலங்கி என்றும் தவிக்காதே
இயேசு மகா ராஜா சீக்கிறம் தான்
உன்னை தேற்ற வருகிறார் - அவர்

## பாடல் 8

பாடுவேன் பாடுவேன் நான் பாடுவேன்
ஆடுவேன் ஆடுவேன் நான் ஆடுவேன்

1. நாவினாலே பாடுவேன்
வார்த்தையினால் பாடுவேன்

2. அற்புதரை பாடுவேன்
அதிசயரை பாடுவேன்

3. பரிசுத்தரை பாடுவேன்
படைத்தவரை பாடுவேன்

4. நித்தியரை பாடுவேன்
நினைத்தவரை பாடுவேன்

5. மன்னவரை பாடுவேன்
மகிழ்ச்சியோடு பாடுவேன்

6. கர்த்தரையே பாடுவேன்
காலமெல்லாம் பாடுவேன்

7. தேவனையே பாடுவேன்
தேசமெங்கும் பாடுவேன்

# பாடல் 9

பிரபு ஸிர்ப் தேரி பிரஸன்ஸா கரு
பிரபு ஸிர்ப் தேரி ஆராதனா கரு

பிரஸன்ஸா பிரஸன்ஸா பிரஸன்ஸா தேரி ஹி கரு
ஆராதனா ஆராதனா ஆராதனா தேரி ஹி கரு

1. மேரே பிரேம் கா நாயக் தூஹி ஹே
   மேரே பியார்க் கா பிரபு தூஹி ஹே

2. மேரே ஆத்துமாக்கா சாஹத் தூஹி ஹே
   மேரே சரீர்க்கா ரக்ஷக் தூஹி ஹே

3. மேரே ஜீவன் கா தாதா தூஹி ஹே
   மேரே ஜிந்தஹி கா மார்க் தூஹி ஹே

4. மேரே ஜீவன் கா ஸப்குச் தூஹி ஹே
   மேரே பிராண் கா சக்தி தூஹி ஹே

# பாடல் 209

மலை குன்றுகளில்! தேவன் இல்லவே இல்லை!!
பனி மலையிலும்! தேவன் இல்லவே இல்லை!!
அலை பெருங்கடலிலும்! இல்லவே இல்லையே!!
மனிதனே உனக்குள்ளே தேவன் இருக்கிறார்!!

சர்வ சிருஷ்டியிலும் தேவன் இருக்கிறார்!!! - 2

1. மலை தியானத்தில் தேவன் இல்லவே இல்லை
   மலை அடிவாரத்தில் தேவன் இல்லவே இல்லை
   வற்றாத பெருநதியில் தேவன் இல்லயே
   தேவன் உனக்குள்ளே என்றும் இருக்கிறார்

2. சூரியனில் தேவன் இல்லவே இல்லை
   சந்திரனில் தேவன் இல்லவே இல்லை
   பெருங்காற்றிலும் தேவன் இல்லவே இல்லை
   மனிதனே உனக்குள்ளே தேவன் இருக்கிறார்

3. அவர் சொன்னதை சொல்லும் கிளியினிடம் இல்லை
   சொல் தவராத தேவன் உனக்குள்ளே இருக்கிறார்
   கடிக்கும் பாம்பினிடம் தேவன் இல்லவே இல்லை
   மானிடனே உனக்குள்ளே தேவன் இருக்கிறார்

4. மிருக ஜீவனிலும் தேவன் இல்லவே இல்லை
   பறக்கும் பறவையிலும் தேவன் இல்லவே இல்லை
   பசு கன்றிலும் தேவன் இல்லவே இல்லை
   மானிடனே உனக்குள்ளே தேவன் இருக்கிறார்

# பாடல் 210

காரிருள் பூமியை மூட போகுது!!
அந்தகாரம் ஜனங்களை அமிழ்த்த போகுது!!
ஆனாலும் கர்த்தர் உன் மேல் உதிப்பார்!! - 2
கர்த்தரின் மகிமை உன்னை காக்குமே!! - 2

ஆமேன் ஆமேன் ஆமேன் அல்லேலுயாயா!!!! - 4

1. உன் கண்களை சுற்றிலும் ஏறிட்டு பார்
ஜனங்கள் கூட்டமாய் ஓடி வருவார்கள்
மணவாட்டி ஆபரணம் அணிவது போல் - 2
எல்லோரையும் ஆபரணமாய் அணிந்துகொள் - 2

2. வானங்களே மகிழ்ந்து பாடுங்கள்
பர்வதமே கெம்பீரித்து முழங்குங்கள்
கர்த்தர் ஜனத்திற்கு ஆறுதல் செய்வார் - 2
கர்த்தர் தம் பிள்ளைக்கு இறங்கிடுவார் - 2

3. என் கைகளில் உன்னை வரைந்துள்ளேன்
எப்போதும் கண் முன் நீ இருக்கிறாய்
பசியாய் இனி நீ இருப்பது இல்லையே - 2
தாகமாய் இனி நீ அலைவது இல்லையே - 2

4. கர்த்தர் உன் நிழலாயய் இருக்கிறார்
பகல்! வெயில்! உன்னை சேதப்படுத்தாது
கர்த்தர் தீமைக்கு உன்னை விலக்கிடுவார் - 2
உன் ஆத்துமாவை தினம் காத்திடுவார் - 2

# பாடல் 10

இயேசுவே நீர் எனக்கு போதுமைய்யா
என்றென்றும் நீரே போதும் - 2

1. பாவம் வேண்டாம் நீரே போதும்
சாபம் வேண்டாம் நீரே போதும்
பரிசுத்தமான நீரே போதும்
பரமன் இயேசுவே நீரே போதும்

2. உலக இன்பம் வேண்டாம் நீரே போதும்
உள்ளத்தில் என்றும் நீரே போதும்
உண்மை தேவனே நீரே போதும்
உருக்கம் நிறைந்தவர் நீரே போதும்

3. சர்வ வல்லமையே நீரே போதும்
எந்தன் சிருஷ்டிகரே நீரே போதும்
சர்வாதிகாரியே நீரே போதும்
சத்திய வேந்தனே நீரே போதும்

4. உலக இரட்சகரே நீரே போதும்
உலகத்தின் ஒளியே நீரே போதும்
உம்மையே என்றும் சார்ந்திருப்பேன்
உம் வழியில் நான் சென்றிடுவேன்

5. மனதுருகும் என் தெய்வமே
மன்னாதி மன்னவரே நீரே போதும்
மங்காத பிரகாசமே நீரே போதும்
உம் மகிமை ஒன்றே என்றும் போதுமே

## பாடல் 11

பொற் காசை பொழிந்தாரே எனக்கு
பொக்கிஷத்தை தந்தாரே
ஆசீர்வதித்தாரே
ஆமேன் அல்லேலூயா - 4

1. வார்த்தையால் பேசி விட்டர்
விசுவாசம் ஊற்றி விட்டார்
உள்ளத்தில் வந்து விட்டார்
என்னை உண்மையாய் வாழவைத்தர்
ஆமேன் அல்லேலூயா - 4

2. குறைகளை நிறைவாக்கினார்
என் தேவைகளை சந்தித்தார்
வாஞ்சையை நிறைவேற்றினார்
என் வாழ்க்கையை உயர்த்திவிட்டார்

3. தரிசனங்கள் தந்தார்
வேத வசனங்கள் தந்தார்
காட்சிகள் காண செய்தார்
என்னை சாட்சியாய் நிறுத்தி விட்டார்

4. இரட்சிப்பால் அலங்கரித்தார்
வரங்களால் அலங்கரித்தார்
ஊழியம் செய்ய வைத்தார்
என்னை தூக்கி நிறுத்திவிட்டார்

5. அற்புதங்கள் செய்தார்
அதிசயம் காண செய்தார்
அல்லேலூயா பாடவைத்தார்
அல்லேலூயா ஆமேன்

## பாடல் 211

நீ எதிர்பார்க்கும் உன் முடிவை
நான் உனக்கு கொடுத்திடுவேன்!!
உனக்காய் நான் நினைத்திருக்கும்
என் நினைவுகளை நான் மறவேன்!!

1. நான் தான் உன்னை உருவாக்கிய
தேவனாகிய கர்த்தர் நானே என்றார்
நான் உன்னை மீட்டுகொண்டேன்
உன்னை பேர் சொல்லி அழைத்த தேவன்

2. உன்னை விட்டு விலகமாட்டேன்
உன்னை நான் கைவிடமாட்டேன்
தேவன் எனக்கு வாக்குரைத்தார்
வார்த்தையை எனக்காய் நிறைவேற்றுவார்

3. அனுதினம் உன் பேரில் மனதுருகும்
கர்த்தராகிய நான் சொல்லுகிறேன்
நான் நினைத்ததை செய்திடுவேன்
பயப்படாதே நான் உன் தேவன்

4. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
நான் உம்மை நோக்கி கூப்பிடுகிறேன்
என் சத்தம் கேட்டு இரங்கி வாரும்
என் விருப்பத்தை நிறைவேற்றிடும்

## பாடல் 212

எழுபத்தி நாலாம் ஆண்டு
இயேசு என் வாழ்வில் வந்தார்
பாவ சாபம் மாற்றிவிட்டார்
வியாதி எல்லாம் நீக்கிட்டார் - என்

1. பரலோகம் துறந்த இயேசு இவர்
மனிதனாய் பிறந்த இயேசு இவர்
மாற்றினார் மரண பயத்தையும் - என்
மன்னவர் இயேசு ராஜா

2. ஏழையாக வந்தார் இயேசு
கஷ்டங்களை அறிந்த இயேசு
ஜாதி மதம் பாாத்திடாமல்
அன்போடு அணைத்திடுவார் உன்னை

3. வருமையில் வாழும் மனுக்குலமே
வருவாயா உன் கஷ்டம் மாற
கஷ்டம் கண்ணீர் மாற்றும் இயேசு
கரம் பிடித்து உன்னை நடத்திடுவார்

4. பரலோகம் விட்டு வந்த இயேசு
மனிதன் மேல் அன்பு கொண்ட தெய்வம்
இவர் தான் பரலோகம் சேர்க்கும் இயேசு
மனிதனுக்காய் வந்த தெய்வம் - இவர்

## பாடல் 12

என் இயேசுவோடு செல்ல நீ ஆயத்தமா!
என் இயேசுவோடு வாழ நீ ஆயத்தமா - 2

இயேசு இன்று வரலாம்
அவர் நாளை வரலாம்
இயேசு இப்ப வரலாம்
அவர் எப்பவும் வரலாம்

1. பாவத்தை விட்டு நீ ஆயத்தமாகு
உன் கோபத்தை விட்டு ஆயத்தமாகு
இயேசு இன்று வரலாம்

2. நியாயம் செய்து நீ ஆயத்தமாகு
நீதியாய் வாழ்ந்து நீ ஆயத்தமாகு
இயேசு இன்று வரலாம்

3. சுவிசேஷம் சொல்லி நீ ஆயத்தமாகு
ஆத்தமா ஆதாயத்தோடு நீ ஆயத்தமாகு
இயேசு இன்று வரலாம்

4. தேவனை காண நீ ஆயத்தமாகு
அவர் புகழை பாடி நீ ஆயத்தமாகு
இயேசு இன்று வரலாம்

5. துதித்துப் பாடியே நீ ஆயத்தமாகு
தூதரோடு பாட நீ ஆயத்தமாகு
இயேசு இன்று வரலாம்

6. திருடனைப் போல் வருவார் நீ ஆயத்தமாகு
மறுரூபமாய் மாற நீ ஆயத்தமாகு
இயேசு இன்று வரலாம்

# பாடல் 13

ஒன்று கூடுவோம் சேர்ந்து துதிப்போம்
நம் தேவனையே மகிமைப் படுத்துவோம்

போற்றுவோம் வாழ்த்துவோம்
உயர்த்துவோம் வணங்குவோம்

1. ஆயிரம் நன்மை செய்தார் இயேசு - 2
அளவில்லா அதிசயம் செய்தார் இயேசு - 2

2. மனதுருகி மன்னிப்பு தந்தார் இயேசு
மறுபடியும் மலரசெய்தார் இயேசு

3. வானத்தை திறந்து வந்தார் இயேசு
வாழ்க்கையை ஆசீர்வதித்தார் இயேசு

4. உயிர் தந்து காத்து வந்தார் இயேசு
உயர்த்தியே என்றும் மகிழ்ந்தார் இயேசு

5. பேதைக்கு ஞானம் தந்தார் இயேசு
பெரியவனாய் மாற்றிவிட்டார் இயேசு

6. வேதனையை மாற்றிவிட்டார் இயேசு
வளமாக செழிக்க செய்தார் இயேசு

# பாடல் 213

எருசலேமே!! எருசலேமே!!
நான் உன்னை மறப்பேனோ!
உன்னை நான் மறப்பதில்லை!
உன்னை நான் வெறுப்பதில்லை!

1. உன்னை நான் மறந்தால்
செய்ததெல்லாம் மறக்கணும்
நான் உன்னை மறப்பதில்லை
உன்னை நான் விடுவதில்லை - எருசலேமே

2. என் வலகரம் செய்ததை
நான் என்றும் மறப்பதில்லை
நான் உன்னை நினையாமல்
ஒரு போதும் இருப்பதில்லை - எருசலேமே

3. பெற்றோர் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை வெறுத்தாலும்
நண்பன் உன்னை துரத்தினாலும்
நான் உன்னை மறப்பதில்லை - எருசலேமே

4. கஷ்டம் கண்ணீர் கலக்கினாலும்
கடன் பாரம் நெருக்கினாலும்
நோய் நொடிகள் ஒடிக்கினாலும்
உன்னை நான் அணைத்திடுவேன் - எருசலேமே

5. உன்னை நான் மறப்பதில்லை
உள்ளங்கையில் வரைந்துவிட்டேன்
எப்போதும் உன் மதில்
என் முன்னே நிற்கிறது - எருசலேமே

## பாடல் 214

யாருக்கு ஒப்பிடுவேன்?
எதற்கு ஒப்பிடுவேன்?
என் இயேசு ராஜாவை!
என்ன சொல்லி வாழ்த்திடுவேன்?

1. ஆவியால் ஜெனித்தார்
பாவிக்காய் வெளிப்பட்டார்
பாவியை நேசித்தார்
மனிதனை இரட்சித்தார் - யாருக்கு ஒப்பிடுவேன்?

2. மூன்று நாள் பூமியின்
வயிற்றிலே வாழ்ந்தார்
மூன்றாம் நாள் உயிர்த்து
எல்லோரையும் காணசெய்தார் - யாருக்கு ஒப்பிடுவேன்?

3. ஊமையனை பேசவைத்தார்
குருடனை பார்க்கவைத்தார்
முடவனை நடக்கவைத்தார்
மரித்தோரை உயிர்கொடுத்தார் - யாருக்கு ஒப்பிடுவேன்?

4. கடலையும் காற்றையும்
அமைதி படுத்தினார்
சீஷர்கள் பிரமிக்க
அற்புதம் காணச்செய்தார் - யாருக்கு ஒப்பிடுவேன்?

5. வந்தவர் எல்லோரயும்
குணமாக்கி அனுப்பினார்
அனைவரும் காணதக்க
அதிசயம் காணசெய்தார் - யாருக்கு ஒப்பிடுவேன்?

## பாடல் 14

நான் ஆராதிக்கும் என் தேவனே எனக்கு இரங்கும்
நான் துதிக்கும் என் தேவனே எனக்கு இரங்கும்
நான் ஜெபிக்கும் என் தேவனே எனக்கு இரங்கும்
நான் போதிக்கும் என் தேவனே எனக்கு இரங்கும்

1. கர்த்தர் என் கன்மலையானவரே
கர்த்தர் என் கோட்டையுமானவரே
கர்த்தர் என் இரட்சிப்புமானவரே
நான் யாருக்கும் பயப்படேன்

2. மரண அலைகள் என்னை சூழ்ந்தது
துர்ச்சன பிரவாகம் என் மேல் வந்தது
பாதாள கட்டுகள் சுற்றிக்கொண்டது
நான் எதற்கும் பயப்படேன்

3. நெருக்கத்தில் நான் நோக்கி கூப்பிட்டேன்
தேவனை நோக்கி அபயமிட்டேன்
அவர் ஆலயத்திலிருந்து என் சத்தம் கேட்டார்
நான் எதற்கும் அஞ்சமாட்டேன்

4. கர்த்தர் என் தேவனுமானாரே
நான் அவர் பிள்ளையுமானேனே
அவர் என்னை தூக்கி எடுத்தார்
அவர் நாமத்தை என்றும் உயர்த்துவேன்

## பாடல் 15

இணையில்லா தேவனே எல்லா மகிமையும் உமக்கே
இரட்சிப்பின் தேவனே எல்லா மகிமையும் உமக்கே

இரக்கத்தின் தேவனே இரக்கத்தின் சிகரமே
இரக்கத்தின் ஐசுவரியமே எல்லா மகிமையும் உமக்கே

1. விண்ணக பிதாவே எல்லா மகிமையும் உமக்கே
   விடுதலை தருபவரே எல்லா மகிமையும் உமக்கே

2. கனிவோடு காண்பவரே எல்லா மகிமையும் உமக்கே
   கண்மணிபோல் காப்பவரே எல்லா மகிமையும் உமக்கே

3. வல்லமையுள்ளவரே எல்லா மகிமையும் உமக்கே
   வழி காட்டியானவரே எல்லா மகிமையும் உமக்கே

4. மனதுருக்கமுள்ளவரே எல்லா மகிமையும் உமக்கே
   மாறாத நேசரே  எல்லா மகிமையும் உமக்கே

5. பரிசுத்தம் உள்ளவரே எல்லா மகிமையும் உமக்கே
   பரலோக தேவனே எல்லா மகிமையும் உமக்கே

6. கண்ணீரை துடைப்பவரே எல்லா மகிமையும் உமக்கே
   கதறலை மாற்றினீரே எல்லா மகிமையும் உமக்கே

## பாடல் 215

எனக்காய் யார் யார் போவார்கள்?
வார்த்தையை யார் யார் சொல்வார்கள்?
இரட்சிப்பை சொல்லிட வருவாயா?
இரட்சகர் இயேசுவை அறிவிக்க வா!!

1. குறை சொல்ல உன்னை அழைக்கவில்லை
   பாவிகளை மீட்டிட அழைக்கின்றேன்
   அறுவடை மிகுதி ஆளோ இல்லை
   அறுத்திட விரைந்து நீ வரவேண்டும்

2. தேசம் எங்கிலும் சென்று நீ
   பாவத்தில் மாழ்வோரை மீட்டிட வா
   நானே உன்னை அனுப்புகிறேன்
   இரட்சித்து மீட்டு அழைத்திட வா

3. நான் அழைத்த என் மகனே
   வேகம் சென்று என் சேவை செய்
   குற்றம் உன் மேல் சுமர்வதில்லை
   யாரும் உன்னை அசைப்பதில்லை

4. படிப்பு தான் எனக்கு இல்லையே
   என்று சொல்லி நீ திகைக்கவேண்டாம்
   உன்னோடு எப்போதும் இருக்கின்றேன்
   உன்னை விட்டு என்றும் விலகமாட்டேன்

5. இதுவே கடைசி காலம் தான்
   இயேசு சீக்கிரம் வருகின்றார்
   மேக மீதிலே வருகின்றார்
   ஆயத்தமுள்ளோரை சேர்த்திடுவார்

# பாடல் 216

தாயின் வயிற்றில் முடவனாய் பிறந்த
மனிதனை தேவாலயத்தில் சுமந்து வந்து
பிச்சை எடுக்க தான் வைத்தார்கள் - 2
பேதுரு யோவானையும் நோக்கிபார்த்தான்

அற்புத தேவனே நன்றி ஐயா!! - 4
அதிசய தேவனே நன்றி ஐயா!!

1. பொன்னும் இல்லை பொருளும் இல்லை
   பணமும் இல்லை காசும் இல்லை
   என்னிடம் உள்ளதை உனக்கு தருகிறேன் - 2
   இயேசுவின் நாமத்தில் எழுந்து நட

2. வலக்கை பிடித்து பேதுரு யோவானும்
   முடவனை தூக்கி நிறுத்தி விட்டார்கள்
   உடனே அவனுடைய கால்களும் - 2
   கரடுகளும் பெலன் கொண்டது

3. முடவன் குதித்து எழுந்து நின்றான்
   நடந்து குதித்து தேவனை துதித்தான்
   பேதுரு யோவானோடு ஆலயம் சென்றான் - 2
   முடவனை பார்த்தோர் ஆச்சரியபட்டனர்

4. அற்புதம் பெற்றுகொள்ள நதி வேண்டாம்
   பாவம் மன்னிக்க குளமும் வேண்டாம்
   உன் அருகில் நிற்கும் இயேசுவை பார் - 2
   முழு மனதோடு இயேசுவை அண்டிக்கொள்

5. இயேசுவை அண்டினால் அற்புதம் காண்பாய்
   அவரை பிடித்து கொண்டால் நீ வாழ்வாய்
   இயேசுவை நோக்கி பார் ஜெயத்தை காண்பாய் - 2
   இயேசுவை பிடித்தால் பரலோகில் வாழ்வாய்

# பாடல் 16

பியாரா பிரபு இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ
பிரேமி பிரபு இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ

தயாலு பிரபு இயேசு தயாலு ஈஸ்வர் இயேசு
தயாமே அனுக்கிரஹ ஈயேசு ஸப் மகிமா துஜ்க்கோ

1. பரம பிதா இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ
   சுடானே வாலே இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ

2. தரஸ் கானே வாலே ஸப் மகிமா துஜ்க்கோ
   சங்கா கர்னே வாலே ஸப் மகிமா துஜ்க்கோ

3. சர்வ சக்திமான் ஸப் மகிமா துஜ்க்கோ
   ஜீவன் தேனே வாலே ஸப் மகிமா துஜ்க்கோ

4. அனுக்கிரஹ காரி இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ
   நா பதல்னே வாலே ஸப் மகிமா துஜ்க்கோ

5. பவித்ர பிரபு இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ
   சொர்கக்கா பிதா இயேசு ஸப் மகிமா துஜ்க்கோ

6. ஆசு மிட்டானே வாலே ஸப் மகிமா துஜ்க்கோ
   ஆனந்திலானே வாலே ஸப் மகிமா துஜ்க்கோ

## பாடல் 17

சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
எங்கள் தேவனே
சீக்கிரம் இறங்கி வந்து
அற்புதம் செய்திடுமே

1. பாவத்தை மன்னித்து என்னை
தூக்கி எடுத்து நிறுத்திவிடும்
கோபத்தை மறந்து என்னை
அன்பால் அணைத்திடுமே

2. புலம்பலை மாற்றி என்னை
ஆனந்தமாய் மாற்றிவிடும்
துக்கங்களை நீக்கி என்னை
சந்தோஷமாய் காத்துக்கொள்ளும்

3. வேதனையை மாற்றி என்னை
புது பெலன் பெற செய்யும்
வியாதிகளை நீக்கி என்னை
பரிசுத்தமாய் மாற்றிவிடும்

4. உமக்கு என்றும் பிரியமாய்
என்னை என்றும் மாற்றிவிடும்
வரங்களால் அலங்கரித்து
உமக்காய் என்றும் பயன்படுத்தும்

## பாடல் 217

கையளவு மேகம் கன மழை பெய்திடும்!!
உள்ளங்கை மேகம் பெரு மழை பெய்திடும்!!
தேவ மனிதனே தேவ மனிதனே!!
விசுவாசித்தால் எல்லாம் நடந்திடுமே!!

1. எலியா ஜெபித்து பெலன் கொண்டான்
பணிந்து குனிந்து என்றும் ஜெபித்தான்
தேவ மனிதனே தேவ மனிதனே
உன்னாலும் கூடாதது ஒன்றுமே இல்லை

2. எலியா விசுவாசத்தோடு ஜெபித்தான்
பெரும் மழை இரைச்சலோடு வந்துவிட்டன
ஜெபத்தை கேட்ட தேவன் பெரியவர்
பூமி குளிர மழையும் பெய்தன

3. உனக்காய் மரித்து உயிர்த்த இயேசு
இன்று உன் ஜெபத்தையும் கேட்டிடுவார்
உன் ஜெபத்திற்கு பதில் தந்திடுவார்
கண்ணீரோடு கதரி நீ ஜெபித்திடு

4. தானியேல் தேவனை நோக்கி ஜெபித்தான்
தேவ தரிசனம் கண்டு மகிழ்ந்தான்
தானியேல் ஜெபத்தில் ஜெயம்பெற்றான்
ஜெபத்தில் நீயும் ஜெயம் பெருவாய்

# பாடல் 218

நீதிமான்களே கர்த்தருக்குள் களிகூருங்கள்!!
துதிசெய்து செம்மையாய் என்றும் இருங்கள்!!
தேவனை துதித்து வீணை தம்புரோடும்!!
துதித்து பாடி கீர்த்தனம் பண்ணுங்கள்!!

நன்றி ஐயா! உமக்கு நன்றி ஐயா!!!
நன்றி ராஜா! எங்கள் இயேசு ராஜா!!!

1. புது பாட்டை தேவனுக்கு பாடிடுங்கள்
   பத்து நரம்பு வீணையோடும் பாடுங்கள்
   ஆனந்த சத்தத்தோடு வாழ்த்தி பாடுங்கள்
   வாத்தியத்தை நேர்த்தியாய் வாசித்திடுங்கள்

2. கர்த்தருடைய வார்த்தை உத்தமமானது
   கர்த்தருடைய செய்கைகள் சத்தியமானது
   கர்த்தருடைய ஆலோசனை நித்தியமானது
   கர்த்தருடைய நினைவுகள் தலைமுறையானது

3. கர்த்தருடைய காருண்யம் சத்தியமானது
   நீதியிலும் நியாயத்திலும் உண்மையானது
   கர்த்தரை தெய்வமாய் ஏற்றுகொண்டால்
   பரிசுத்த ஜனமாய் உன்னை மாற்றிடுவார்

4. உன் மேல் நோக்கமாய் என்றும் இருப்பார்
   தேவனே உனக்கு துணையாய் இருப்பார்
   பஞ்சத்தில் உன்னை என்றும் காத்திடுவார்
   மரணத்திற்கு பாதுகாத்து தப்புவிப்பார்

# பாடல் 18

நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி ஐயா - 4

1. என் பாவத்தை நீர் மன்னித்தீரே நன்றி ஐயா
   என் பாதைகளை மாற்றினீரே நன்றி ஐயா

2. என் வியாதிகளை நீக்கிவிட்டீர் நன்றி ஐயா
   என் வியாகுலத்தை மாற்றி விட்டீர் நன்றி ஐயா

3. என் துயரங்களை மாற்றினீரே நன்றி ஐயா
   உம் அன்பாலே நிறப்புகின்றீர் நன்றி ஐயா

4. எளியவனை உயர்த்துகின்றீர் நன்றி ஐயா
   எண்ணில்லா நன்மை செய்தீர் நன்றி ஐயா

5. என் கூக்குரலை மாற்றி விட்டீர் நன்றி ஐயா
   என் குறைகளை நிறைவாக்கினீர் நன்றி ஐயா

6. அற்புதங்கள் செய்து விட்டீர் நன்றி ஐயா
   அதிசயங்களை காணசெய்தீர் நன்றி ஐயா

## பாடல் 19

தன்ய தன்ய தன்ய தன்ய தன்ய ராஜா - 4

1. மேரே பாப்போக் கோ ஷமா கியா தன்ய ராஜா
   மேரே மார்க் கோக்கு பதல் தியா தன்ய ராஜா -2

2. மேரே ரோகோக்கு சங்கா கியா தன்ய ராஜா
   மேரே கஷ்டோக்கு தூர் கியா தன்ய ராஜா - 2

3. மேரே ஷிராப்போக்கு துார்கியா தன்ய ராஜா
   முஜே பிரேம் ஸே பர்தியா தன்ய ராஜா - 2

4. ஹர் தீன் தஸலி தியா தன்ய ராஜா
   ஸ்துதி கீத் முஜே தியா தன்ய ராஜா - 2

5. கங்கால்க்கு உட்டாலியா தன்ய ராஜா
   தயா கர்க்கே யாத்கியா தன்ய ராஜா - 2

6. மேரே ஆசுவோக்கு மிட்டாலியா தன்ய ராஜா
   முஜே ஆனந்து ஸே பர்தியா தன்ய ராஜா - 2

## பாடல் 219

எங்கள் தேவன்! ராஜாதி ராஜா!!
எங்கள் தேவன்! கர்த்தாதி கர்த்தர்!!
ஆமேன் ஆமேன் அல்லேலூயா!!! - 4

1. எங்கள் தேவன் உயர்ந்தவர் - 2
   எங்கள் தேவன் நல்லவர் - 2
   அல்லேலுயா ஓசன்னா - 4

2. எங்கள் தேவன் பெரியவர் - 2
   எங்கள் தேவன் பரிசுத்தர் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

3. எங்கள் தேவன் தேவாதி தேவன் - 2
   எங்கள் தேவன் மகா பெரியவர் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

4. காண்டா மிருகத்தின் கொம்பைப்போலவும்- 2
   என் கொம்பை உயர்த்துகின்றார் - 2
   அல்லேலூயா ஓசன்னா - 4

5. புது எண்ணெயால் என் தலையை - 2
   அபிஷேகம் செய்கின்றார் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

6. ஜீவனுள்ள நாளெல்லாம் - 2
   நன்மை கிருபை பின் தொடரும் - 2
   அல்லேலூயா ஓசன்னா - 4

7. சத்துரு முன்பாக ஒரு பந்தியை - 2
   தேவன் எனக்கு ஆயத்த படுத்தினார் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

## பாடல் 220

கர்த்தர் என் கன்மலையானார்!!
கர்த்தர் என் கோட்டையுமானார்!!
கர்த்தர் என் துருகமுமானார்!!
கர்த்தர் என் நம்பிக்கையானார்!!

1. மரண அலைகள் என்மேல் வந்தது
பாதாள கட்டுகள் என்னை சூழ்ந்தது
எனக்கு உண்டான நெருக்கத்திலே
தேவனை நோக்கி நான் கூப்பிட்டேன்

2. ஆலயத்திலிருந்து சத்தம் கேட்டார்
அசைந்து பூமி அதிர்ந்தது
அஸ்திபாரங்கள் குலுங்கினது
கேருபீன்மேல் வேகம் வந்தார்

3. வானங்களை தாழ்த்தி இறங்கினார்
உயரத்திலிருந்து கரம் நீட்டினார்
பிடித்து என்னை தூக்கிவிட்டார்
சத்துருவுக்கு என்னை விடுவித்தார்

4. தேவன் எனக்கு அரணானவர்
என் வழியை செவ்வைபடுத்தினார்
என் கால்களை பலப்படுத்தி
உயரத்தில் என்னை நிறுத்துகிறார்

5. தயவுள்ளவனுக்கு தயையுள்ளவர்
உத்தமனுக்கு உத்தமர் அவர்
புனிதனுக்கு புனிதர் அவர்
மாறுபவனுக்கு அவர் மாறிடுவார்

## பாடல் 20

தேவன் சொல்ல ஆகும்
அவர் கட்டளையிட நிற்கும்
அவர் சித்தம் கொண்டால்
எல்லாம் சுத்தமாகுமே

1. இஸ்ரவேல் ஜனத்திற்கு இறங்கி வந்த தேவனே 2
எங்களுக்கும் இறங்கி வந்து அற்புதம் செய்யுமே 2

2. மரித்துப்போன லாசருக்கு உயிர் கொடுத்தவரே 2
மறக்காமல் எங்களையும் உயிர் பெற செய்யுமே 2

3. கட்டுண்ட லேகியோனின் கட்டவிழ்த்தீரே 2
கட்டப்பட்ட கட்டுகளை அவிழ்க்க வாருமே 2

4. நாயீனூர் விதவைக்கு மனம் இரங்கினீரே 2
எங்களுக்கும் மனம் இரங்கி அற்புதம் செய்யுமே 2

5. சித்தமுண்டு சுத்தமாகு என்று சொன்னீரே 2
எங்களையும் சுத்தமாக்க இரங்கி வாருமே 2

## பாடல் 21

ஜெபத்தோடு என்னை தேடு என்றீர்
விழித்திருந்து என்னை தேடு என்றீர்
உண்மையேடு என்னை தேடு என்றீர்
முழு உள்ளத்தோடு தேடு என்றீர்

1. வார்த்தையினால் பேசுவேன்
   வல்லமையாய் இறங்குவேன்

2. உன் வாஞ்சைகளை நிறைவேற்றுவேன்
   உன் விருப்பங்களை பூர்த்தி செய்வேன்

3. கூப்பிடுவோருக்கு செவி கொடுப்பேன்
   உன் குறைகளை நிறைவாக்கி தந்திடுவேன்

4. தேடிவரும் உன்னை தேற்றிடுவேன்
   தினந்தோரும் உன்னை நடத்திடுவேன்

## பாடல் 221

நடக்க சொல்லி தாரும்!
நடக்க சொல்லி தாரும்! - 2
நல் வழியில் என்னை!
நடத்தி செல்லும் தேவனே! - 2

1. நான் நடக்கும் பாதையில்
   என்னை நடத்தி சென்றிடுமே - 2
   நான் நடக்கும் வழிகளெல்லாம்
   ஜீவ வழியாய் மாறட்டுமே - 2

2. வழியும் சத்தியமும் ஜீவனும்
   நானே என்று சொன்னவரே - 2
   உம் வழியில் என்னை என்றும்
   நடத்தி சென்றிடும் தேவனே - 2

3. நல்ல மேய்ப்பன் நானே
   என்று வாக்குரைத்த தேவனே - 2
   நல்ல மேச்சலில் மேய்த்திடுமே
   நான் உம்மை பின்தொடர்வேன் - 2

4. இஸ்ரவேல் மலையின் மேல்
   அனுதினமும் மேய்த்திடுமே - 2
   இஸ்ரவேலின் ஆற்றண்டையில்
   என்னை என்றும் அமரச்செய்யும் - 2

5. சாரோன் என்னும் தொழுவத்தில்
   சாய்ந்து கொள்ள உதவிடுமே - 2
   சாரோனின் ரோஜாவே
   சாந்தமுள்ள தெய்வமே - 2

# பாடல் 222

முந்தினதை நீ நினைக்க வேண்டாம்!!
பிந்தினதையும் நீ நினைக்க வேண்டாம்!!
புதிய காரியம் செய்திடுவேன் நான்!!
இப்பொழுதே அது தோன்றிற்றதே!!

அற்புத தேவன் நீரே ஐயா!!
அதிசய தேவனும் நீரே ஐயா!! - 2

1. தெரிந்து கொண்ட என் ஜனத்தின்
தாகம் தீர்க்க ஜீவ தண்ணீரையும்
பசியுள்ளோரை பசி ஆற்றிட
மன்னாவினால் நான் போஷிப்பேனே

2. என்னை துதிக்க உன்னை தெரிந்தேன்
அனுதினம் என்னை துதித்திடுவாய்
உன்னோடு நான் என்றும் இருப்பேன்
உன்னை விட்டு நான் விலகமாட்டேன்

3. யாக்கோபே என்றும் பயப்படதே
இஸ்ரவேலே நீ கலங்காதே
பாவங்களை நான் மன்னித்துவிட்டேன்
உன்னோடும் நான் இருக்கின்றேன்

4. உன் மீட்பரும் தாயின் கர்ப்பத்திலும்
உருவாக்கின கர்த்தர் சொல்லுகிறேன்
எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்
வார்த்தையை நான் நிறைவேற்றுவேன்

# பாடல் 22

நம்பிக்கையானவரை (ஸ்தோத்தரிப்பேன் -- 3)
நங்கூரமானவரை (ஸ்தோத்தரிப்பேன் -- 3)
நாள் தோறும் காப்பவரை (ஸ்தோத்தரிப்பேன் -- 3)
நன்மையால் நிறப்புகின்றார் (ஸ்தோத்தரிப்பேன் --3)

1. ஆத்துமாவை அழிவுக்கு மீட்பவரும் இயேசுவே
அனுகூல துணையாய் இருப்பவரும் இயேசுவே

2. அரணும் கோட்டையும் எந்நாளும் இயேசுவே
கேடகமும் துருகமும் எந்நாளும் இயேசுவே

3. காரிருளில் வெளிச்சமாய் வந்தவரும் இயேசுவே
கால்களுக்கு தீபமாய் இருப்பவரும் இயேசுவே

4. உண்மையான தேவனாய் இருப்பவரும் இயேசுவே
எப்போதும் கூடயிருந்து காப்பவரும் இயேசுவே

5. சர்வ வல்லவருமாய் இருப்பவரும் இயேசுவே
சத்துருக்கள் மத்தியில் உயர்த்துபவர் இயேசுவே

6. பரிசுத்த பாதையில் நடத்துபவர் இயேசுவே
பரலோக வாழ்வை தருபவரும் இயேசுவே

## பாடல் 23

உம்மைப் போல என்னை மாற்றும் - நான்

சோர்ந்திடாமல் பெலன் பெறவே (ஜெயம் பெறவே)

உமக்காக ஒளியாய் எழுந்து - நான்

உம் நாமத்தை உயர்த்திடவே 2

1. உம்மை போல நானும் நடக்க
   என் கால்களை பெலப்படுத்தும்
   உம்மை போல நானும் பேச
   என் நாவை நீர் கூர்மையாக்கும் 2

2. உம்மை போல பாடு சகிக்க
   எனக்கு தாழ்மையை என்றும் தாரும்
   நீர் சுமந்த சிலுவை சுமக்க
   என்னை என்றும் பெலப்படுத்தும் 2

3. மண்ணுலகில் எனக்காய் வந்தீர்
   மீண்டும் விண்ணுலகம் சென்றீரே
   உம்மை போல என்னை மாற்றி
   என்னை விண்ணுலகம் அழைத்து செல்லும் 2

## பாடல் 223

குக்கூக்கூ குயில் பாடுவதும் தேவனை நோக்கிதான்!!
கொக்கரக்கொ சேவல் கூவுவதும் தேவனை நோக்கிதான்!!
காகா காகம் கரைவதும் தேவனை நோக்கிதான்!!
மேகம் கண்டு மயில் ஆடுவதும் தேவனை நோக்கிதான்!!

ஐந்தறிவு பறவைகள் தேவனை நோக்கி… பாடுது பார்…3

ஐந்தறிவு ஜீவன்கள் தேவனை நோக்கி… கூப்பிடுது பார்…3

1. விதைகள் முளைப்பது தேவனை நோக்கிதான்
   விதைகள் வளர்வதும் தேவனை நோக்கிதான்
   கொடிகள் படர்வதும் தேவனை நோக்கிதான்
   செடிகள் பூப்பதும் தேவனை நோக்கிதான்

2. சூரிய வெப்பம் சுடுவதும் தேவ சித்தமே
   சந்திர வெப்பம் குளிர்வதும் தேவ சித்தமே
   கடல் நீர் உப்பாவதும் தேவ சித்தமே
   மழை நீர் சுவைப்பதும் தேவ சித்தமே

3. மேகத்தால் மழை வருவதும் தேவ சித்தமே
   மழையால் பூமி குளிர்வதும் தேவ சித்தமே
   கடலில் உயிரினம் வாழ்வதும் தேவ சித்தமே
   கல்லுக்குள் தேரை வாழ்வதும் தேவ சித்தமே

4. சகல உயிரினம் வாழ்வதும் தேவ சித்தமே
   ஜீவராசிகள் வாழ்ந்து மரிப்பதும் தேவ சித்தமே
   மனிதர்களுக்காய் இயேசு மரித்ததும் தேவ சித்தமே
   உலகத்துக்காய் இயேசு உயிர்த்ததும் தேவ சித்தமே

# பாடல் 224

உலகத்தை பார்க்காதே! தம்பி திருடபார்க்காதே!!
திருடி உன் வாழ்க்கையை அழித்து விடாதே!! - 2
திருட்டை விட்டு திருந்திட தேவனிடம் வந்திடு!!
தேவன் உன் வாழ்க்கையை இன்று மாற்றிடுவாார்!! - 2

1. குடிக்க போகாதே தம்பி குடியை தேடாதே
குடி உன் குடும்பத்தை கெடுத்து விடுமே - 2
திருந்தி வாழ்ந்திடு தம்பி தேவனிடம் வந்திடு
தேவன் உன் வாழ்க்கையை மாற்றிவிடுவார் - 2

2. சினிமா பார்க்காதே தம்பி சினிமாவுக்கு போகாதே
சினிமா பார்த்து சீரழிந்து சிதைந்து போகாதே - 2
தேவனை நம்பி தேவனிடம் வந்திடு தம்பி
தேவன் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டார் - 2

3. நாளை நடப்பது என்ன என்பது உனக்கு தெரியுமா
மனித வாழ்க்கை நிலையில்லா மாய வாழ்க்கையே-2
மனித வாழ்க்கை தம்பி புகையை போன்றது
மனிதனின் வாழ்க்கை அஞ்சல்காரனை போன்றது -2

4. பெருமையினால் எதையும் செய்ய எண்ணாதே
உன்னையே நம்பி செய்தால் தோல்வி அடைவாய் -2
எதை செய்தாலும் தேவ சித்தத்தோடே செய்
செய்யும் வேலையில் ஜெயத்தை பெற்றிடுவாய் -2

5. இயேசு போதுமே உனக்கு இயேசு போதுமே
அன்போடு இயேசு உன்னை அழைக்கின்றார் -2
மார்போடு இயேசு உன்னை அணைத்துகொள்வார்
பரலோக ராஜ்யம் உன்னைகொண்டு சேர்த்திடுவார் -2

# பாடல் 24

தேரே ஜைய்ஸா முஜே பதலோ - மே
நிர்பல் மே ஜெய் பானே - 2
தேரேலியே ஜோதி பன்க்கர்
தேரே நாம் கோ மே உன்ச்சா கருங்கா - 2

1. தேரே ஜைய்ஸா மே பி சல்னே
மேரே பாவோக்கு ஸ்தீர் கீஜியே - 2
தேரே ஜைய்ஸா மே பி போல்னே
மேரே ஜீப்போக்கு கோ தேஜ் கீஜியே - 2

2. தேரே ஜைய்ஸா கஷ்டு ஸஹனே
முஜே ஹர்தம் தீரஜ் தீஜியே - 2
தேரே ஜைய்ஸா குருஸ் உட்டானே
முஜே ஹமேஷா பல் தீஜியே - 2

3. மேரே லீயே தர்த்தி மே ஆயா
பிர்ஸே சொர்க்மே சலா ஹெயா - 2
தேரே ஜைய்ஸா முஜே பதல்கர்
முஜே சொர்க்மே லே ஜாய் யே - 2

## பாடல் 25

எக்காலமும் இயேசுவை தொழுது கொள்ளுங்கள்
எந்நேரமும் இயேசுவை துதித்து பாடுங்கள் --2

1. இயேசு தான் நமது அடைக்கலம்
இயேசு தான் நமது இரட்சிப்புமானார்
இயேசுவை நம்மை காண்கிற தேவன்
இயேசுவை நம்மை காக்கின்ற தேவன்

2. இயேசு தான் நமது துணையாளர்
இயேசு தான் நமது இம்மானுவேலர்
இயேசுவே உன்னை தினம் உணர்த்துவார்
இயேசுவே உன்னை தினம் உயர்த்துவார்

3. இயேசு தான் நமது மேய்ப்பனானார்
இயேசு தான் நமது மீட்புமானார்
இயேசுவை நமது ஜீவனானார்
இயேசுவை நமது தேவனானார்

4. இயேசுவே நம்மை இரட்சித்தார்
இயேசுவே நம்மை அபிஷேகித்தார்
இயேசு தான் சீக்கிரம் வரப்போகிறார்
இயேசு தான் பரலோகம் அழைத்து செல்வார்

## பாடல் 225

என் ஆத்துமாவே நீ கலங்காதே!!
என் ஆத்துமாவே நீ திகையாதே!!
என் ஆத்துமாவே நீ பதறாதே!!
தேவனை நோக்கி அமர்ந்திரு!!

1. என் இதயமும் என் மாம்சமும்
ஜீவனுள்ள தேவன் மேலேயே
தேவனை நோக்கி கெம்பீரமாய்
என்றும் துதித்து போற்றிடுதே

2. என் இராஜாவும் என் தேவனும்
உம்முடைய பீடத்தண்டையிலே
அடைக்கலான் குருவிக்கு வீடும் உண்டு
தகைவிலான் குருவிக்கு கூடும் உண்டு

3. தேவ வீட்டில் வாசமாகவே
எப்போதும் இருப்போர் பாக்கியவான்
அவர்கள் எப்போதும் தேவனையே
பாடி துதித்து மகிழ்ந்திருப்பார்கள்

4. அழுகை பள்ளத்தில் நடந்தாலும்
ஆசீர்வாத ஊற்றாய் மாற்றிடுவார்
மழையும் குழங்களை நிறப்பிடுமே
பலத்தின் மேல் பலம் அடைவார்கள்

5. சேனைகளின் கர்த்தாவே தினம்
என் விண்ணப்பம் கேட்டிடுமே
கேடகமாகிய எங்கள் தேவனே
நீதிமானின் முகத்தை பாரும்

## பாடல் 226

இயேசு போதுமே! உனக்கு இயேசு போதுமே!!
உன் வாழ்க்கையில் நன்மை உண்டாக இயேசு போதுமே!!

1. மண்ணான மனிதனே நீ மடிந்துபோகாதே
   சிகரட்! பீடி! பான்பராக்! உபயோகிக்காதே
   சிகரட்! பீடி! பான்பராக்கில் புற்று நோய் வரும்
   சிகரட்! பீடி! பான்பராக்கால் குடும்பம் அழியுமே
2. வெற்றிலை! பாக்கு! போயிலையும்! நீ போடாதே
   கண்டதை தின்னால் கேன்சர் வியாதி வருமே
   சகலவித போதைகளையும் விட்டு விலகிடு
   எல்லாவித கெட்ட பழக்கத்தையும் விட்டு வந்திடு
3. மனம் திரும்பி இயேசுவை நீ ஏற்று கொள்
   இரட்சிகப்பட்ட மனிதனாய் வளர்ந்து நீ வா
   தேவ வார்த்தையை படித்து பின்சென்றிடு
   ஜெயத்தின் மேல் ஜெயம் நீ பெற்றிடுவாய்
4. குடும்பத்தில் சமதானம் நீ காண்பாய்
   வீட்டிலும் சந்தோசத்தை நீ காண்பாய்
   செல்லும் இடத்தில் சமதானம் நீ காண்பாய்
   வாழ்க்கை முழுதும் சந்தோசம் நீ காண்பாய்
5. தேவனால் தெரிந்து கொண்ட மனிதன் என்பார்கள்
   உலகத்தாரும் உன்னை கண்டு பயப்படுவார்கள்
   சீயோனிலிருந்து கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்
   கடைசி வரை கண்மணிபோல் காத்திடுவார்

## பாடல் 26

அதிசயம் செய்திடும் அற்புதம் செய்திடும் இயேசப்பா
எனக்கு ஆலோசனை தந்து வழி நடத்தும் என் இயேசப்பா
வியாதியை நீக்கி சொஸ்தப்படுத்தும் இயேசப்பா - என்
விண்ணப்பத்துக்கு செவிகொடும் என் இயேசப்பா

1. துன்பம் ஆயிரம் வந்தும்
   தூயவரே என்னை காத்தீர்
   துயரங்கள் பாரங்கள் நீக்கி
   சுகமாய் வாழச் செய்தீர்
2. இக்கட்டு இன்னல்கள் வந்தும்
   மாறா இறக்கம் செய்தீர்
   இனிய பாடலை உமக்காய்
   என்றும் பாட வைத்தீர்
3. கஷ்டம் கண்ணீர் வந்தும்
   எல்லாம் நீங்க செய்தீர்
   கர்த்தரே உம்மையே என்றும்
   பற்றி துதிக்க வைத்தீர்
4. நெருக்கம் நிந்தைகள் வந்தும்
   அனைத்தையும் மாற செய்தீர்
   நெருங்கி உந்தன் பாதம்
   என்றும் அமர செய்தீர்

## பாடல் 27

கர்த்தர் பயங்கரமானவர் கர்த்தர் வல்லமையுள்ளவர்
யுத்த வீரனைப்போல் வருகிறார்
வைராக்கிய மூண்டு வருகிறார் -- 2
ஜெயத்தை நமக்கு தருகிறார்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா

1. கர்த்தர் பராக்கிரம சாலியாய்
   யுத்த வீரனைப் போல் எழும்புகிறார்
   வைராக்கிய மூண்டு வருகிறார்
   சாத்தானின் கோட்டையை தகர்த்து
   ஜெயத்தை நமக்கு தருகிறார் -ஆமேன் ஆமேன்
2. சத்துரு சேனையை முறியடிக்க
   முளங்கி வருகிறார் ஜெய வீரர்
   இயேசு மகா ராஜா வருகிறார்
   வேகமாய் வருகிறார்
   ஜெயத்தை நமக்கு தருகிறார் -ஆமேன் ஆமேன்
3. எரிகோ போன்ற தடைகளை
   கர்த்தர் தகர்த்திட வருகிறார்
   எதிரியின் ஆயதத்தை கர்த்தர்
   அகற்றிட வருகிறார்
   ஜெயத்தை நமக்கு தருகிறார் -ஆமேன் ஆமேன்
4. யோர்தானின் வெள்ளத்தையும்
   கடக்க ஜெய வீரர் வருகிறார்
   யோர்தானை மிதித்து செல்ல
   மேசியா வருகிறார்
   ஜெயத்தை நமக்கு தருகிறார் -ஆமேன் ஆமேன்

## பாடல் 227

ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டு விட்டாய்!!
பாதியிலே வந்த பணத்தின் பின்னே சென்றுவிட்டாய்!!

மனம்திரும்பி சிலுவை தனை நோக்கி பாரு!!!
விளக்கு தண்டு உன்னிடமே இருக்கப் பாரு!!

1. பரிசுத்த நாளை நீ மறந்து போனாய்
   பாவி போன வழிதனில் நடக்க துணிந்து விட்டாய்

2. ஆதியின் தீர்மானத்தை விட்டு விட்டாய்
   பாதியிலே ஜெபத்தையும் விட்டு விட்டாய்

3. படித்திருந்த வேதத்தையும் விட்டு விட்டாய்
   வாழ்ந்து வந்த வாழ்க்கையும் மறந்து விட்டாய்

4. சபை கூடி வருவதையும் விட்டு விட்டாய்
   சபையின் ஐக்கியத்தையும் விட்டுவிட்டாய்

5. இராஜா இயேசு சீக்கிரம் வரப்போகிறார்
   வருகையில் நீயும்தான் கைவிடப்படுவாய்

## பாடல் 228

விழுந்துபோன தூதனோடு கரம்கொடுக்காதே!!
எழுந்து நிற்கும் தூதனோடு கரம்கொடுத்து நில்!!
ஆரம்பத்தில் எடுத்த தீர்மானத்தை மறந்திடாதே!!
தீர்மானத்தில் என்றும் நீ நிலைத்து நின்றிடு!!

1. காலை எழும்பி ஜெபிப்பதை மறந்துவிடாதே
   இடிந்து போன அலங்கத்தை கட்டியெழுப்பிடு
   சீக்கிரம் வருவேன் என்பதை மறந்துவிடாதே
   நான் வரும் வேளையை எவரும் அறியாரே

2. உலக பேச்சு பேசுவதற்கு தீவிரபடாதே
   வேத வார்த்தை கேட்க நீ தீவிரப்படு
   உலகத்தில் புறங் கூற தீவிரப் படாதே
   பரிசுத்தரின் அன்பை கூற தீவிரப்படு

3. மேகமீதில் மேசியா சீக்கிரம் வருகிறாரே
   வருகையில் எடுத்து கொள்ள ஆயத்தப்படு
   கைவிட படுவாயானால் பரிதாபப் படுவாய்
   இயேசுவை நோக்கி மீண்டும் நீ ஓடிவா!

4. மனம்திரும்பி இயேசுவண்டை ஓடி வா
   மலைக்காமல் இயேசுவை நோக்கி பார்
   கிருபையின் வாசல் அடைபடும் முன்னே
   கண்ணீரோடு கதறி இயேசுவண்டை வா!

## பாடல் 28

நல்ல போராட்டம் போராடி நான்
என் ஓட்டத்தை முடித்துக்கொள்வேன்
ஜெயம் பெற்று நான் வாழ்வேன்
ஜெயம் பெற்று நான் ஓடுவேன் - 2
எந்நாளும் இயேசுவை பாடிடுவேன்

அல்லேலூயா ஆமேன் அல்லேலூயா

1. விசுவாசத்தில் நான் என்றும்
   தேவனில் நிலைத்திருப்பேன் -- 2
   உலகத்தை நான் ஜெயிப்பேன்
   உலகத்தை மேற்கொள்ளுவேன் --2
   எந்நாளும் இயேசுவை உயர்த்திடுவேன்

2. ஜெபத்தில் நான் என்றும்
   போராடி நிலைத்திருப்பேன் -- 2
   ஜெபத்தால் ஜெயம் பெற்று
   விழித்திருந்து ஜெபித்து -- 2
   எந்நாளும் இயேசுவை துதித்திடுவேன்

3. என் மேல் யுத்தம் வந்தாலும்
   நான் எதற்கும் அஞ்சமாட்டேன் --2
   விழித்திருந்து ஜெபித்து
   ஜெயத்தின் மேல் ஜெயம் கொண்டு
   எந்நாளும் இயேசுவை போற்றிடுவேன்

4. நான் கூப்பிடும் வேளையிலே
   என் இயேசு வந்திடுவார்
   என் கால்களை கன்மலை மேல்
   அவர் உறுதி படுத்திடுவார் நான்
   எந்நாளும் இயேசுவை வாழ்த்திடுவேன்

# பாடல் 29

பின்னடையா சிங்கம் நம் இயேசு மகா ராஜா
அவர் சீறி பாய்ந்து வருவார் நம் யூத ராஜ சிங்கம்

1. கட்டுகளை முறியடித்து
   கட்டவிழ்க்கு சிங்கம்
   கரடான பாதைகளை
   கடந்து வரும் சிங்கம்

2. மடங்கி படுத்து பாயம் சிங்கம்
   நம் யூத ராஜ சிங்கம்
   எதிரிகளை அழிக்கும் சிங்கம்
   நம் இயேசு ராஜ சிங்கம்

3. சர்வ வல்ல தேவன் நம்
   யூத ராஜ சிங்கம்
   சகலத்தையும் படைத்தவர்
   நம் இயேசு ராஜ சிங்கம்

4. உன் கஷ்டங்களை மாற்றும்
   நம் யூத ராஜ சிங்கம்
   உன் துக்கங்களை மாற்றிட்டவர்
   நம் இயேசு ராஜ சிங்கம்

5. உன் வியாதிகளை மாற்றும் இவர்
   சிலுவை சுமந்த சிங்கம்
   உன் சாபங்களை ஏற்றுக்கொண்டு
   பாடுபட்ட ராஜ சிங்கம்

# பாடல் 229

ஓ மண்ணான! ஓ மனிதனே!!
குதிரைகளை உன்னால் தான் அடக்கமுடியுமே!! - 2
கப்பல்களை சுக்கானால் திருப்பமுடியுமே!!
நாவை உன்னால் அடக்கதான் ஏன் ஏன் முடியவில்லை?

1. காட்டை உன்னால் கொழுத்தவும் முடியுமே
   மிருகங்களை அழிக்கவும் உன்னால் முடியுமே - 2
   பறவைகளை துரத்தவும் உன்னால் முடியுமே
   நாவை உன்னால் அடக்கதான் ஏன் ஏன்
   முடியவில்லை?

2. மிருகங்களும் உனக்கு அடங்கிவிடுமே
   பறவைகளும் உனக்கு அடங்கிவிடுமே - 2
   நீரில் வாழும் ஜந்துகளும் அடங்கிவிடுமே
   நாவை உன்னால் அடக்கதான் ஏன் ஏன்
   முடியவில்லை?

3. உன் நாவை அடக்க ஓரே வழி இயேசு தான்
   இயேசுவை நீ ஏற்றுகொண்டால் வார்த்தை மாறுமே-2
   இயேசுவை உன் வாயினால் துதித்து பாடலாம்
   துதிக்க துதிக்க உள்ளமெல்லாம் மாறிடுமே

4. என் நாவு விரைவாய் எழுதும் எழுத்தாணி
   என் நாவினால் தேவனை உயர்த்திடுவேன் - 2
   என் நாவினால் தேவனை வாழ்த்திடுவேன்
   என் நாவினால் தேவனை போற்றிடுவேன்

## பாடல் 230

கர்த்தரை துதியுங்கள்! கர்த்தரை துதியுங்கள்!!
கர்த்தாதி கர்த்தரை! என்றும் துதியுங்கள்!!
தேவனை துதியுங்கள்! தேவனை துதியுங்கள்!!
தேவாதி தேவனை! என்றும் துதியுங்கள்!!

1. தேவன் வருகிறார் அவரை துதியுங்கள்
தேவாதி தேவன் வருகிறார் அவரை துதியுங்கள்
கர்த்தர் வருகிறார் அவரை துதியுங்கள்
கர்த்தாதி கர்த்தர் வருகிறார் அவரை துதியுங்கள்

2. உயர்த்தி துதியுங்கள் இயேசு இராஜா வருகிறார்
போற்றி துதியுங்கள் இயேசு இராஜா வருகிறார்
வாழ்த்தி துதியுங்கள் இயேசு இராஜா வருகிறார்
ஆடிப்பாடி துதியுங்கள் இயேசு இராஜா வருகிறார்

3. அல்லேலுயா சொல்லி தேவனை துதியுங்கள்
ஆடிப்பாடி என்றும் உயர்த்தி துதியுங்கள்
ஓசன்னா! என்று சொல்லி தேவனை துதியுங்கள்
மன்னாதி மன்னர் வருகிறார் என்று துதியுங்கள்

4. வருகிறார் வருகிறார் ஜெய கிறிஸ்து வருகிறார்
மேகமீதிலே வேகம் இயேசு வருகிறார்
பிரதான தூதனுடைய சத்தத்தோடும் வருகிறார்
எக்காள சத்தத்தோடும் இரங்கி வருகிறார்

5. குருத்தோலை கையில் ஏந்தி தேவனை துதியுங்கள்
ஓசன்னா! ஓசன்னா! என்று சொல்லி துதியுங்கள்
மகிமையின் இராஜா வருகிறார் என்று துதியுங்கள்
மாறாத தேவன் வருகிறார் சொல்லி துதியுங்கள்

## பாடல் 30

எத்தனை நல்ல தேவன்
எத்தனை நல்ல நேசர்
எந்தனை இரட்சிக்க இயேசு
தம்மையே ஈந்தனரே -- 2

1. மண்ணுலகில் வந்தவரே
மனிதனாய் வாழ்ந்தவரே
மண்ணான மனிதனை இயேசு
தம்மை போல் மாற்றிட்டாரே

2. ஞானத்தின் ஊற்றாம் இயேசு
எனக்கு ஞானம் தந்தாரே
குருசில் மறித்த இயேசு
எனக்கு கீழ்ப்படிதல் கற்றுதந்தாரே

3. என் பாரத்தை சுமந்து தீர்த்தார்
என் சாபத்தை மாற்றினாரே
நான் வாழ்ந்து சுகித்திருக்க
என் ஆத்துமாவை உயிர்ப்பித்தாரே

4. விசுவாசமும் நம்பிக்கையும்
அளித்திட வந்தாரே
ஆவியின் வரங்களால்
என்னை அலங்கரித்து மகிழ்ந்தாரே

5. கனி தரும் மரமாக
என்னை என்றும் வனைந்தாரே
நித்திய ராஜ்யத்தில்
என்னை ஏற்றுக் கொள்வாரே

# பாடல் 31

என் உள்ளம் மறியும் உத்தம தேவனே
உமக்கே என்றும் ஸ்தோத்திரம் ஐயா
சத்துருக்களை எந்தன் பாதத்திற்குள்ளாக
ஒப்பு கொடுத்தீரே ஸ்தோத்திரம் என்றும்

ஆமேன் ஆமேன் அல்லேலுயா -- 4

1. லேகியோன் பிசாசை வார்த்தையால் துரத்தினீர்
   வார்த்தையால் என்றும் ஜெயிக்க செய்தீர்
   உமக்கே ஸ்தோத்திரம் -- 2
   உமக்கே என்றும் ஸ்தோத்திரம்

2. என் ஆத்துமாவை சிங்கத்தின் நடுவில்
   மீட்ட தேவனே ஸ்தோத்திரம் ஐயா
   உமக்கே ஸ்தோத்திரம் -- 2
   உமக்கே என்றும் ஸ்தோத்திரம்

3. சர்ப்பத்தின் விஷம் போல் சீறிவந்த சத்துருவை
   ஒப்புகொடுத்தீரே ஸ்தோத்திரம் ஐயா
   உமக்கே ஸ்தோத்திரம் -- 2
   உமக்கே என்றும் ஸ்தோத்திரம்

4. சகல ஜனங்களே நீங்கள் ஆர்ப்பரித்து
   நம் தேவனை உயர்த்திடுங்கள்
   உமக்கே ஸ்தோத்திரம் -- 2
   உமக்கே என்றும் ஸ்தோத்திரம்

# பாடல் 231

மனிதனே! மனிதனே! பண ஆசை உனக்கு!!
எல்லா தீமையை உண்டாக்குமே!!
சோதனை வரும் அதோடும் கூட!!
அழிவும் சேதமும் சேர்ந்து வந்திடும்!!

1. நானே வழியும் சத்தியமும் என்ற
   தேவனின் வழியை பின் பற்றிடு
   தேவனின் வழியில் ஜீவன் உண்டாகும்
   சமதானமும் உன்னை பின்தொடரும்

2. உலகில் நாம் வரும்போது வெறுமையாய்
   தாயின் கர்ப்பத்தில் இருந்து வந்தோமே
   கொண்டு வந்ததும் நாம் ஒன்றும் இல்லையே
   கொண்டு போவதும் நாம் ஒன்றும் இல்லையே

3. போதும் என்ற மனம் உனக்கு வேண்டும்
   பணக்காரன் ஆக நீ விரும்பாதே
   கேடும் வரும் உனக்க துன்பமும் வந்திடும்
   அதோடும் கூட அழிந்தும் போவாய்

4. தேவ மனிதனே தேவ மனிதனே
   இவைகளில் சிக்காமல் விட்டு விலகு
   நீதியும் தேவ பக்தியும் உனக்குள் வந்தால்
   அது உன்னை என்றும் நல்வழி நடத்தும்

5. விசுவாசத்தில் நல்ல போராட்டம் போராடிடு
   நித்திய ஜீவனை பற்றிகொண்டிடு
   இதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்
   அனேகருக்கு முன் சட்சியாய் இருந்திடு

## பாடல் 232

என் மகனே! என் மகளே!!
என் வார்த்தையை என்றும் நீ ஏற்றுக்கொள்!! - 2
தேவனிடம் நீ சேர்ந்து கொண்டால்!! - 2
உன் வாழ்க்கை என்றும் மாறிடுமே!! - 2

1. யாருக்கும் விரோதமாய் நடக்காதே
எவருக்கும் விரோதமாய் பேசாதே - 2
உன் வீம்பினால் விரோதம் கொள்ளாதே - 2
தேவன் இரட்சிக்க வல்லவர் - 2

2. பெருமை ஒரு போதும் கொள்ளாதே
எப்போதும் தாழ்மையாய் நடந்துகொள் - 2
நீ துயரப்பட்டு அழவும் வேண்டாம் - 2
உன் துக்கம் சந்தோசமாய் மாறும் - 2

3. நாளை நடப்பது உனக்கு தெரியுமா
நமது வாழ்க்கை புகை போன்றது - 2
நன்மை செய்ய முடிந்தால் நீ செய் - 2
செய்யாமல் போனால் பாவமாகும் - 2

4. யுத்தம் சண்டை ஏன் வருகிது
இச்சித்தும் ஏன் கிடைக்கவில்லை - 2
ஒருவருக்கொருவர் வாக்குவாதம் - 2
தகாதவிதம் ஜெபம் பண்ணினதால் - 2

## பாடல் 32

பேசும் தேவனே நீர் பேசும் தேவனே -- 2
என்னோடு பேசும் தேவனே -- 2
நீர் பேசும் தேவனே -- 2

1. உம் வார்த்தையிலே ஜீவன் உண்டாகுமே --2
உம் அபிஷேகத்தால் நுகம் முறியுமே --2

2. பேதுருவை நோக்கி பார்த்தீரைய்யா -- 2
என்னையும் நோக்கி பாருமைய்யா -- 2

3. பேதுரு கலக்கத்தை மாற்றினீரே -- 2
என் கலக்கத்தையும் மாற்றிடுமே -- 2

4. பேதுருவை நிற்க செய்தீரே -- 2
என்னையும் நிற்க செய்திடுமே -- 2

5. பேதுருவை கொண்டு இரட்சித்தீரே -- 2
என்னையும் கொண்டு இரட்சியுமே -- 2

6. பேதுருவை கொண்டு அற்புதம் செய்தீரே --2
என்னையும் கொண்டு அற்புதம் செய்திடுமே --2

7. பேதுருவை கொண்டு ஆலயம் கட்டினீர் -- 2
என்னையும் கொண்டு ஆலயம் கட்டிடும் -- 2

## பாடல் 33

பாத் கரோ பிரபு ஆப் பாத் கரோ பிரபு - 2
மேரே ஸே பாத் கரோ பிரபு -- 2
ஆப் பாத் கரோ பிரபு -- 2

1. தேரே வச்சன் மே ஜீவன் ஓஹா -- 2
தேரே அபிஷேக் ஸே ஜுவா துட்டேஹ -- 2

2. பத்ரஸ்க் கோ அவுர் தேக்கா பிதா -- 2
மேரே பி அவுர் தேக்கோ பிதா -- 2

3. பத்ரஸ்க் கோ வியக்குல்க்கு கோ பதலே -- 2
மேரே பி வியாக்குல்க்கு கோ பதலோ பிதா --2

4. பதரஸ்க் கோ அப்னே கடா கியா -- 2
முஜே பி ஆப் கடா கரோ -- 2

5. பத்ரஸ்க் கோ ரக்கர் உதார் கியா -- 2
முஜே பி ரக்கர் உதார் கரோ -- 2

6. பத்ரஸ்க் ரக்கர் சமத்கார் கியா -- 2
முஜே பி ரக்கர் சமத்கார் கரோ -- 2

7. பத்ரஸ்க் கோ ரக்கர் பவன் பாந்தே -- 2
முஜே பி ரக்கர் பவன் பாந்தோ -- 2

## பாடல் 233

எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்!!
எல்லாவற்றிற்கும் ஜெபம் பண்ணுங்கள்!!
எந்நேரமும் ஜெபம் பண்ணுங்கள்!!
எல்லோருக்கும் ஜெபம் பண்ணுங்கள்!!

ஆமேன் ஆமேன் அல்லேலூயா!!!
ஆமேன் ஆமேன் ஜெபித்திடுங்கள்!!!

1. ஜெபம்தான் உனக்கு ஜீவன்
ஜெபம்தான் ஜெயம் தந்திடும்
ஜெபம்தான் உன்னை நடத்தும்
ஜெபம்தான் உன்னை உயர்த்தும்

2. உயர்ந்திடவே ஜெபம் பண்ணுங்கள்
தந்திடுவார் ஜெபம் பண்ணுங்கள்
சந்தேகமின்றி ஜெபம் பண்ணுங்கள்
சமாதானத்துக்காய் ஜெபம் பண்ணுங்கள்

3. ஊக்கமாக ஜெபம் பண்ணுங்கள்
திடனற்றோறுக்காய் ஜெபம் பண்ணுங்கள்
தேசத்திற்காய் ஜெபம் பண்ணுங்கள்
தேசம் காக்க ஜெபம் பண்ணுங்கள்

4. பரிசுத்தவான்களுகாய் ஜெபம் பண்ணுங்கள்
பரிசுத்தமாய் வாழ ஜெபம் பண்ணுங்கள்
போதகருக்காய் ஜெபம் பண்ணுங்கள்
சபை வளர ஜெபம் பண்ணுங்கள்

5. அரசாங்கத்திற்காய் ஜெபம் பண்ணுங்கள்
அரசியல்களுக்காய் ஜெபம் பண்ணுங்கள்
அதிகாரிக்காய் ஜெபம் பண்ணுங்கள்
அனுதினமும் ஜெபம் பண்ணுங்கள்

## பாடல் 234

இது கர்த்தரை தேடும் காலம்!!
இது கர்த்தரை தேடும் நேரம்!!
நீங்கள் நீதிகென்று விதைவிதைங்கள்!!
நீங்கள் தயவாய் அறுப்பு அறுங்கள்!!

1. உங்கள் தரிசு நிலங்களையும்
   நீங்கள் பண் படுத்திடுங்கள்
   தேவன் சீக்கிரம் வந்திடுவார்
   வந்து அழைத்து சென்றிடுவார்

2. நீங்கள் அநியாயத்தை விதைக்காதே
   தீமையை அறுக்க வேண்டாம்
   நீங்கள் நீதியை விதைத்திடுங்கள்
   நீதியின் கனிகளை கொடுத்திடுங்கள்

3. இஸ்ரவேல் பலனற்ற செடியாய்
   அது தனக்கே கனிகொடுக்குது
   இஸ்ரலேை நான் நேசித்தேன்
   அவனின் கனி கசப்பானது

4. என் கோபப்படி செய்யமாட்டேன்
   நான் எப்பிராயிமை அழிக்கமாட்டேன்
   நான் உன் நடுவில் பரிசுத்தர்
   உன் பட்டணத்தை ஆசீர்வதிப்பேன்

5. நீ நன்மை செய்ய படித்துகொள்
   நன்மை செய்தால் மேன்மை வரும்
   நன்மை உன்னை உயர்த்திடும்
   தேவ நன்மையால் போஷிப்பார்

## பாடல் 34

கடல் மேல் நடந்தவர் நம் இயேசு
காற்றையும் அதட்டினார் நம் இயேசு
அமைதி உண்டானதே – அன்று -- 2
இன்று அமைதி உண்டாகுமே

1. செங்கடல் பிளந்தவர் நம் இயேசு
   ஜனங்களை நடத்தினார் நம் இயேசு
   -- அமைதி

2. மாராவை மாற்றினவர் நம் இயேசு
   வாஞ்சைகளை தீர்த்தவர் நம் இயேசு
   -- அமைதி

3. மன்னாவை தந்தவர் நம் இயேசு
   மறக்காமல் போஷித்தவர் நம் இயேசு
   -- அமைதி

4. கன்மலையை பிளந்தவர் நம் இயேசு
   எல்லா தாகத்தை தீர்த்தவர் நம் இயேசு
   -- அமைதி

5. எரிகோவை தகர்த்தவர் நம் இயேசு
   ஜெயத்தை கொடுத்தவர் நம் இயேசு -- அமைதி

6. நம் மத்தியில் இருப்பவர் நம் இயேசு
   என்றென்றும் ஜீவிப்பவர் நம் இயேசு
   -- அமைதி

## பாடல் 35

இயேசு என்னோடு இருக்கின்றார்
நான் பயப்படவே மாட்டேன் --2
நான் பயப்படவே மாட்டேன் --4

1. இயேசு எனக்கு வெளிச்சமானார்
இயேசு எனக்கு இரட்சிப்புமானார்
இயேசு எனக்கு ஜீவனுமானார்
இயேசு எனக்கு பெலனுமானார்

2. தீங்கு நாட்கள் வந்தாலும் அவர்
கூடார மறைவில் மறைத்து கொள்வார்
கன்மலை மேல் உயர்த்திடுவார்
கருத்தாய் நம்மை காத்துகொள்வார்

3. சத்துரு என்னை நெருக்கும் போது
தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
கர்த்தர் என்னை கைவிடாமல்
செம்மையான பாதையில் நடத்திடுவார்

4. கர்த்தரை நான் கூப்பிடுவேன்
என் சத்தம் கேட்டு வந்திடுவார்
கன்மலை மேல் உயர்த்தி என்னை
கால்கள் வழுவாமல் காத்திடுவார்

## பாடல் 235

கிறிஸ்மஸ் கொண்டாடும் கிறிஸ்தவனே
கிறிஸ்மஸ் நாளை நீ எதிர்பார்க்கிறாய்
கிறிஸ்மஸ்க்கு வீட்டை சுத்தம் செய்கிறாய்
கல்வாரி இரத்தத்தால் மீட்கப்பட்டாயா

பிறந்தார்! பிறந்தார்!! இயேசு பிறந்தார்!!!
பெத்தலேகம் ஊரிலே இயேசு பிறந்தார்!!! - 2
மேகமீதிலே இயேசு வேகம் வருகிறார்!!! - 2

1. கிறிஸ்மஸ் தினத்தில் ஏழைகளுக்கு
புத்தாடை கொடுத்து நீ அழகுப் பார்
தரித்திரனை கண்டு அவன் பசியாற்றிடு
பரலோக தேவனை ஆராதிக்க சென்றிடு

2. கிறிஸ்து பிறந்தது மனிதனுக்காய்
பாவத்தை மன்னிக்க இயேசு பிறந்தார்
மனிதனை மீட்டு இரட்சிக்கவே
மண்ணில் மனிதனாக இயேசு பிறந்தார்

3. மனிதன் வாழ்ந்து சுகித்திருக்க
மன்னவர் இயேசு பிறந்தாரே
இயேசு பிறந்த நல் நாள்தனிலே
இயேசுவை அண்டி நீ வாழ்ந்திடு

4. மேசியா இயேசு வருகின்றார்
வருகையில் செல்ல ஆயத்தமாகு
மேக மீதிலே வேகம் வருகிறார்
அவரோடு கூட நீ சென்றிடு

# பாடல் 236

யேகோவாயீரே!! யேகோவாயீரே!!!
நீர் என்னை காண்கிறவர்!!!
யேகோவாவே!! யேகோவாவே!!!
நீர் நித்திய ஜீவனுள்ளவர்!!!

1. யேகோவா நிசி!! யேகோவா நிசி!!
   கர்த்தர் என்றும் ஜெயம் தருகிறார்
   ஜெயத்தின் மேல் நான் ஜெயமெடுத்து
   என் தேவனை தினம் உயர்த்திடுவேன்

2. யேகோவாஷாலோம்!! யேகோவாஷாலோம்!!
   கர்த்தர் சமாதானம் என்றும் தருகிறார்
   சமாதானத்தின் மேல் சமாதானம் பெற்று
   கர்த்தரை என்றும் வாழ்த்திடுவேன்

3. யேகோவாஷம்மா!! யேகோவாஷம்மா!!
   கர்த்தர் என்னோடும் இருக்கின்றார்
   நான் பெலத்தின் மேல் பெலம்பெற்று
   தேவனை என்றும் பறைசாற்றுவேன்

4. யேகோவாரூபா!! யேகோவாரூபா!!
   என் பரிகாரியாகிய கர்த்தர் இருக்கிறார்
   நான் என்றென்றும் தேவனோடு வாழ்ந்து
   தேவனை என்றும் மகிமை படுத்துவேன்

5. யேகோவாஷிட்கேனு!! யேகோவாஷிட்கேனு!!
   உம் நீதியை நான் பின்பற்றுவேன்
   நீதியின் மேல் நீதியை நான் நிறைவேற்றி
   கர்த்தர் மகிமை என்னை காத்திடுமே

# பாடல் 36

நம்பாதே நம்பாதே மனுஷனின் அன்பை நீ நம்பாதே
மனுஷனின் அன்பிலே மயங்கி நீயும் நில்லாதே

நம்பி வா! நம்பி வா! இயேசுவையே நீ நம்பி
இயேசுவே தான் உனக்கு நன்மை என்றும்
செய்திடுவார் -- 2

1. மாழாதே மாழாதே பாவத்தில் விழுந்து மாழாதே
   பாவத்தின் சம்பளம் எரியும் நரகமாக மாறிவிடும்

2. நம்பாதே நம்பாதே செல்வங்களை நம்பாதே
   செல்வங்களெல்லாம் ஒரு நாள் உன்னைவிட்டே
   போய்விடும்

3. நம்பாதே நம்பாதே மாட மாழிகையை நம்பாதே
   மாட மாழிகையும் ஒரு நாள் உன்னைவிட்டே
   போய்விடும்

4. நம்பி வா! நம்பி வா! தேவனின் வார்த்தையை
   நம்பி வா!
   தேவனின் வார்த்தை தான் உனக்கு நித்திய ஜீவன்
   தந்துவிடும்

5. நம்பி வா! நம்பி வா! ஜீவ வழியை நம்பி வா!
   ஜீவனுக்கு போகும் வழி பரலோக வழியாகும்

6. நம்பாதே நம்பாதே உலக வழியை நம்பாதே
   உலக வழி உன்னை என்றும் நரகம் கொண்டு
   சேர்த்து விடும்

7. நம்பி வா! நம்பி வா! இயேசு வழியை நம்பி வா!
   இயேசு வழி தான் உன்னை பரலோகம் கொண்டு
   செல்லும்

## பாடல் 37

தேவனே என்னை பாருமே
நோக்கி என்னை பாருமே
நிற்க எனக்கு பெலன் தான்
ஒன்றுமே இல்லையே

1. பாவம் நிறைந்த உலகிலே – நான்
   அழிந்து போகாமலே
   பாசமுள்ள கல்வாரி தேவ அன்பு
   என்னை தூக்கட்டுமே

2. பாவியான மனிதன்
   பாரம் சுமந்து தவிக்கிறேனையா
   பரிசுத்தமாய் வாழ எனக்கு
   இரக்கம் செய்திடுமே

3. நான் திகைக்கிறேன் என்
   தேவனே எனக்கு இரங்குமே
   என்னை என்றும் ஜீவ வழியில்
   நடத்தி சென்றிடுமே

4. திகையாதே கலங்காதே நான்
   உன் தேவன் என்றுரைத்தவரே
   என் கரத்தை பிடித்து என்றும்
   என்னை நல் வழி நடத்திடுமே

5. தேவனே என்னை என்றும்
   உம்மை போல் மாற்றிடுமே
   என்னை மாற்றி உம்மை போல
   பரலோகம் சேர்த்திடுமே

## பாடல் 237

புதியாண்டு புதியாண்டு வந்து விட்டது!!
நல்ல வழியும் நமக்கு திறந்து விட்டது!!
மனவிருப்பமெல்லம் நிறைவேற்றுவார்!!
விசுவாசித்து தேவனில் நிலைத்திருப்போம்!!

தந்தானே! தந்தானே!! தந்தனை தானானேனே!!! - 4

1. வருடத்தை நன்மையால் முடி சூட்டுவார்
   வளர்ந்து செழித்து நீ கனி கொடுத்திடு
   கர்த்தருக்கு பயந்து வழியில் நடந்தால்
   உன் பிரயாசத்தை என்றும் நீ சாப்பிடுவாய்

2. உன் மனைவி வீட்டோரங்களில் கனிதரும்
   திராட்ச்சகொடி போல் என்றும் இருப்பாள்
   உன் பிள்ளைகள் பந்தியை சுற்றிலும்
   ஒலிவ கன்றுகளை போல் இருப்பார்கள்

3. கர்த்தருக்கு பயப்படும் மனிதரெல்லாம்
   கர்த்தரின் ஆசீர்வாதம் பெற்றுகொள்வார்கள்
   கர்த்தர் சீயோனிலிருந்து என்றும் உன்னை
   கடைசி வரையிலும் காத்திடுவார்

4. வருடத்தை நன்மையால் முடி சூட்டினவர்
   பாதைகள் நெய்யாய் பொழிய செய்வார்
   தேவ நதியால் உன்னை செழிப்பாக்குவார்
   என்றும் நீ செழித்து வாழ்ந்திடுவாய்

5. வருடத்தின் துவக்கம் முடியும் மட்டும்
   உன் தேவனாகிய கர்த்தரின் கண்களும்
   எப்போதும் உன் மேல் நிலைத்திருக்கும்
   முன்னும் பின்னும் உன்னை காத்திடுவார்

## பாடல் 238

தேவாதி தேவனோடும்!!
நான் என்றும் வாழ்ந்திருக்க!!
தேவனே என்னை என்றும்!!
உம்மில் நிலைக்கசெய்யும்!!

எனக்காக வந்த இயேசு!!!
நீர் என்றும் வாழ்க வளர்க!!!
எனக்காக வரப்போகிறீர்!!!
எனக்காக வரப்போகிறீர்!!!

1. கர்த்தாவே உம்மை போற்றி
நான் என்றும் வாழ்ந்திடவே
நீர் என்னை என்றுமாக
நிலைக்க செய்யும் தேவனே

2. நான் என்றும் வேதம் வாசிக்க
ஞானம் எனக்கு தாருமே
தேவ வார்த்தையில் நிற்க
தினம் என்னை உறுதிபடுத்தும்

3. தினம்காலை உம்மைதேட
விழிப்பை எனக்கு தாருமே
சோர்ந்திடாமல் தினமும்
விழித்திருந்து ஜெபிப்பேன்

4. ஜெபம் கேட்க்கும் என் தேவனே
இரங்கி வாரும் என் இராஜனே
நடக்கும் என் பாதைகளை
தினம் காட்டும் என் தேவனே

5. நடக்கும் என் பாதையெல்லாம்
தேவனின் பாதையாகட்டும்
ஜீவ பாதையில் நடக்க
தினம் என்னை நடத்தும் தேவா

## பாடல் 38

வாரும் ஐயா எங்கள் இயேசு ராஜா
எங்களிடம் தங்கியிரும்
நான் உந்தன் பிள்ளை என்றால்
என்னை விட்டு போகாதிரும்

1. என் மகனே என் போதகத்தை
மறக்காமல் அதை பின் பற்றிகொள்
கட்டளையை காத்து கொள்ளு
அது தான் உனக்கு நித்திய ஜீவன்

2. உனக்கு என்றும் நீடித்த நாட்களையும்
தீர்க்காயுசையும் பெருக பண்ணும்
கிருபையும் சத்தியமும் உன்னில் பெருகுமே
உன்னில் நற்புத்தி உண்டாகுமே

3. சுயபுத்தியின் மேல் சாயாமல்
முழு மனதோடு நம்பி இரு
பாதை எல்லாம் நினைத்து கொள்ளு
பாதைகளைச் செவ்வை படுத்திடுவார்

4. ஞானியென்று நீ எண்ணாதே
கர்த்தருக்கு பயந்து தீமையை விடு
அது உனக்கு ஆரோக்கியமாகும்
எலும்புகளுக்கு ஊனுமாகும்

5. பொருளாலும் முதற்பலனாலும்
கர்த்தரை என்றும் கனம் பண்ணு
அப்பொழுது உன் களஞ்சியங்கள்
பரிபூர்ணமாய் என்றும் நிரப்பி விடும்

## பாடல் 39

நல்ல போரட்டம் போராடி
ஓட்டத்தை ஜெயமாய் முடித்திடுவோம்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா -- 4

1. சுவிசேஷம் சொல்லி ஆத்துமாக்களை
   கர்த்தருக்காய் என்றும் ஆதாயம் செய்வோம்

2. பரிசுத்தமாய் நாம் என்றும் ஜீவித்திடுவோம்
   பரன் இயேசு பாதத்தை பற்றி கொள்வோம்

3. விசுவாசத்தில் என்றும் நிலைத்திருப்போம்
   வாக்குறைத்த தேவனை நம்பி இருப்போம்

4. ஜெபத்திலே உருதியாய் தரித்திருப்போம்
   சோதனைக்கு உட்படாமல் விழித்திருப்போம்

5. நீதியாய் நாம் என்றும் ஜீவித்திடுவோம்
   நித்தியரின் நியாயங்களை கைக்கொள்வோம்

6. ஜீவ கீரிடத்தை என்றும் பெற்றுக்கொள்வோம்
   அழைப்புக்கு பாத்திரமாய் ஜீவித்திடுவோம் - நாம்

## பாடல் 239

புத்தாண்டு பிறந்தது! புதுவாழ்வும் வந்தது!!
கர்த்தருக்குள் செழித்து வாழ்ந்திடுவோம்!!
வருடத்தை நன்மையால் முடி சூட்டிடுவார்!!
வாழ்க வாழ்க இயேசுயென்று வாழ்த்திடுவோம்!!

1. கர்த்தர் உன்னை நித்தமும் விசாரித்து
   நல்ல வழியில் அழைத்து சென்றிடுவார்
   நீ விட்டு வந்த எகிப்து தேசம் போல
   இருக்கவே இருக்காது பயப்படாதே

2. வருடத்தின் துவக்கம் முடிவு வரை
   கர்த்தரின் கண்களும் உன் மேலிருக்கும்
   இரவானாலும் பகலானாலும் என்றென்றும்
   தேவன் உன்னை காத்திடுவார்

3. இரவில் உண்டாகும் கொள்ளை நோய்க்கும்
   மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும்
   எதற்கும் பயப்படாமல் அமைதியாயிருப்பாய்
   தேவன் உன் பக்கத்தில் என்றும் இருப்பார்

4. வழியில் உன்னை என்றும் காத்திடுவார்
   காத்திடவே தூதனுக்கு கட்டளை கொடுப்பார்
   உன் பாதம் கல்லில் என்றும் இடறாமல்
   கைகளில் உன்னை என்றும் ஏந்திடுவார்

5. நீடித்த நாட்களாய் உன்னை நடத்துவார்
   ஆலயத்தில் ஒலிவ கன்றாய் நாட்டிடுவார்
   அனுதினமும் ஆலயத்தில் வாழ்ந்திடுவாய்
   உத்தமர் கர்த்தர் என்று சொல்லிடுவாய்

# பாடல் 240

என் தேவனே! என் இயேசுவே!!
நான் என்றும் உம்மை துதிப்பேன்!!
நான் என்றும் உம்மை பாடுவேன்!!
நான் என்றும் உம்மை துதிப்பேன்!!

அற்புதம் செய்தீரே! உம்மை நான் போற்றுவேன்!!
அதிசயம் செய்தீரே! உம்மை நான் உயர்த்துவேன்!!

1. என் தேவனே நீர் ராஜாதி ராஜா
   நான் என்றும் உம்மை போற்றுவேன்
   நான் என்றும் உம்மை பாடுவேன்
   நான் என்றும் உம்மை போற்றுவேன்

2. என் தேவனே நீர் கர்த்தாதி கர்த்தர்
   நான் என்றும் உம்மை வாழ்த்துவேன்
   நான் என்றும் உம்மை பாடுவேன்
   நான் என்றும் உம்மை போற்றுவேன்

3. என் தேவனே என் இராஜனே
   நான் என்றும் உம்மை உயர்த்துவேன்
   நான் என்றும் உம்மை பாடுவேன்
   நான் என்றும் உம்மை வாழ்த்துவேன்

4. என் தெய்வமே என் தெய்வமே
   நான் என்றும் உம்மை பாடுவேன்
   நான் என்றும் ஆடிப் பாடுவேன்
   நான் என்றும் ஓடோடி சொல்வேன்

# பாடல் 40

துன்பங்கள் வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் நேரிட்டாலும்
என்னோடிருப்பவர் என்னை என்றும்
காத்திடுவார் இயேசு காத்திடுவார்

1. கரம் பிடித்து நடத்திடுவார்
   காலமெல்லாம் காத்திடுவார்
   கழுகை போல உடனிருந்து அவர்
   செட்டைகளால் மூடிகொள்வார்

2. எண்ணங்களை நிறைவேற்றுவார் என்
   ஏக்கங்களை பூர்த்தி செய்வார்
   எக்காலமும் ஸ்தோத்தரிப்பேன்
   எவ்வேளையும் வந்து உதவிடுவார்

3. வியாதியிலே சுகம் தருவார்
   வல்லமை ஆவியை ஊற்றிடுவார்
   விசாலங்களில் வைத்து என்னை
   என்றும் உயர்த்தி மகிழ்ந்திடுவார்

4. அவர் துதியை பாடவைப்பார்
   அவர் நாமத்தை புகழவைப்பார்
   இயேசுவுக்காய் ஜீவிக்கவே
   என்னை தெரிந்து கொண்டார்

## பாடல் 41

என்னை உருவாக்கும் என் தேவனே - 2
உம்மை போல என்னை உருவாக்குமே -- 2

1. நீரே வழி சத்தியம் ஜீவன் என்றும் - 2
   உம் வழியில் நான் நடக்கவே என்றும்
   உம் வழியில் நான் நடக்கவே

2. குயவன் கையில் நான் களிமண்ணாய் - 2
   இயேசுவே என்னை அற்பணிக்கிறேன்
   ஏற்றுக்கொள்ளும் என் இயேசுவே

3. இயேசுவே உமக்கு பிரியமான - 2
   பாரத்திரமாக என்னை வனைந்து
   எடுத்து என்னை என்றும் பயன்படுத்தும்

4. தேவனே நான் கெட்டு போகாமல் - 2
   தினம் கனி கொடுக்கும் பாத்திரமாக
   தேவனே என்னை எடுத்து நிறுத்தும்

5. சபை கட்டுவேன் என்று சொன்னீரே - 2
   எங்கள் சபையை கட்டி எழுப்பும்
   தேவா உமக்காய் நாங்கள் எழும்ப

6. சபையை நாட்டுவேன் என்றுரைத்தீரே - 2
   எங்கள் சபையை நாட்டிவிடுமே
   எங்கள் ஜனங்களை ஆசீர்வதியும்

## பாடல் 241

ஏழு பிறவி மனிதனுக்கு இல்லையே!!
கண்டபடி நீ பிறப்பதும் இல்லையே!!
ஒருமுறை பிறப்பதும் ஒருமுறை மரிப்பதும்!!
தேவனின் படைப்பு அதுவே தான்!!

1. கர்த்தரின் வேதம் சொல்லியபடியே
   அவன் செயலின்படியே நியாயதீர்ப்புண்டு
   இந்த வார்த்தையை மறந்துவிடாதே
   இது சத்திய வேதத்தின் வார்த்தையே

2. பரலோகம் செல்லும் வழிகள்
   எதுயென்று தெரிந்து நீ கொள்ளவும்
   அது தான் இயேசு சென்ற வழிகள்
   அதுவே பரலோகம் செல்லும் ஜீவவழி

3. இந்த வழியில் நடந்தால் தான்
   பரலோகம் செல்ல முடியுமே
   இதற்கு வேத சட்டங்கள் உண்டு
   மனம்திரும்பி இரட்சிக்கபடவேண்டும்

4. வேதத்தை படித்து வழியில் நடந்து
   பரிசுத்த பாதையை பிடித்து செல்லவும்
   இதுதான் இரட்சிப்பின் பாதைகள்
   இதுதான் மனிதனை பரலோகம் சேர்க்கும்

5. இயேசு கிறிஸ்து வேகம் வருகிறார்
   அவரோடு சேர்ந்திட ஆயத்தமாகு
   மேகமீதிலே வேகம் வருகிறார்
   ஆயத்தமுள்ளோரை அழைத்து செல்லதான்

## பாடல் 242

கர்த்தர் எனக்கு என்றும் நல்லவர்!!
நம்புவோரை தினம் அறிவார்!!
நான் என்றும் அவர் பின்செல்வேன்!!
நான் பின்னாலே சென்றிடுவேன்!!

1. கர்த்தர் எரிச்சல் உள்ள தேவன்
   கர்த்தர் நீதியை சரிக்கட்டுவார்
   கர்த்தர் உக்கிற கோபமுள்ளவர்
   சத்துருக்களை மிதித்துபோடுவார்

2. கர்த்தர் கடல் காற்றை அதட்டிடுவார்
   ஆறும் ஊற்றும் வறண்டு போகும்
   பாசான் கர்மேலும் வாடிப் போகும்
   லீபனோனின் செழிப்பும் வாடி போகும்

3. சத்துரு சிதறடிக்க வருகிறான்
   உன் அரணை காத்துக் கொள்
   உன் வழிதனை காத்துக் கொள்
   உன் அறயை கட்டிக் கொள்

4. யூதாவே நீ பயப்படாதே
   கர்த்தருக்குள் நீ மகிழ்ந்திரு
   துஷ்டன் உன்னிடம் வருவதில்லை
   முழுவதும் அவன் அழிக்கப் பட்டான்

5. கர்த்தர் நீடிய சாந்தமுள்ளவர்
   கர்த்தர் மிகுந்த வல்லமையுள்ளவர்
   சுழல் பெருங்காற்றும் வழியாகும்
   மேகமெல்லாம் பாத தூளாகும்

## பாடல் 42

வீடு கட்டுவோரால் தள்ளப்பட்ட கல்
மூலைக்கு தலைக்கல்லாய் மாறினது
இது கர்த்தரின் செயல் -- 2
களிகூர்ந்து நாம் என்றும் கீதம் பாடுவோம்

1. யோசேப்பு குடும்பத்தால் தள்ளப்பட்ட கல்
   எகிப்தின் அதிபதியாய் மாறினானே
   இது கர்த்தரின் செயல் -- 2
   களிகூர்ந்து நாம் என்றும் கீதம் பாடுவோம்

2. மோசே பார்வோனால் தள்ளப்பட்ட கல்
   இஸ்ரவேலுக்கு தலைவனாக மாறினானே
   இது கர்த்தரின் செயல் -- 2
   களிகூர்ந்து நாம் என்றும் கீதம் பாடுவோம்

3. தாவீது சவுலால் தள்ளப்பட்ட கல்
   இஸ்ரவேல் ராஜாவாக மாறினானே
   இது கர்த்தரின் செயல் -- 2
   களிகூர்ந்து நாம் என்றும் கீதம் பாடுவோம்

4. இயேசு ராஜா யூதர்களால் தள்ளப்பட்ட கல்
   இயேசு ராஜா பரலோக தேவனானாரே
   இது கர்த்தரின் செயல் -- 2
   களிகூர்ந்து நாம் என்றும் கீதம் பாடுவோம்

## பாடல் 43

உன் கண்ணீரை காணும் தேவன்
உன் கஷ்டத்தை மாற்றுகிறார்
நம்பிக்கையோடே நீ வா -- 4

1. ஆகாரின் அழுகை சத்தம்
கேட்ட தேவன் அல்லோ -- 2
உன் சத்தம் கேட்டிடுவார்
உன் ஜெபத்தை ஏற்றுக்கொள்வார் -- 2

2. ஆபிரகாமை அழைத்து சென்றார்
உன்னையும் அழைத்து செல்வார் -- 2
எலியாவை போஷித்தவர்
உன்னையும் போஷிப்பாரே -- 2

3. எண்ணில்லா வாக்குரைத்தார்
தம் வார்த்தையை நிறைவேற்றுவார் -- 2
உனக்கும் வாக்குறைத்தார்
தம் வார்த்தையை நிறைவேற்றுவார் -- 2

4. ஈசாக்கை ஆசீர்வதித்தார்
அவன் சந்ததியை பெருக செய்தார் -- 2
உன்னையும் ஆசீர்வதித்து
உன் சந்ததியை பெருக செய்வார் -- 2

## பாடல் 243

காண்பதால் கண் திருப்தியாவதும் இல்லை!!
கேட்பதால் செவி நிரப்படுவதும் இல்லை!!
கோணலான ஒன்றும் நேராவது இல்லையே!!
குறைவானது ஒன்றும் முடிய வில்லையே!!

1. அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு
அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்
பூமிக்கு மேலே எல்லாம் மாயையே
பூமிக்கு மேலே மனிதனும் மாயையே

2. இருளை பார்க்கிலும் வெளிச்சம் உத்தமம்
மதியீனம் பார்க்கிலும் ஞானம் உத்தமம்
ஞானிக்கும் மூடனுக்கும் ஒன்றாய் நடக்குது
நூதனம் என்று பூமியில் இல்லை இல்லையே

3. தேவனின் பார்வைக்கு நல்லவனாய் இருந்தால்
ஞானத்தையும் இன்பத்தையும் தேவன் கொடுப்பார்
தேவ பார்வைக்கு பாவியாய் இருந்தால்
அவன் சேர்த்ததை புரத்தியான் தின்பான்

4. புசித்து குடித்து சகலமும் அனுபவிக்க
தேவனின் தயவு உனக்கு வேண்டுமே
கர்த்தரின் முன்னால் உத்தமனாய் இருந்திடு
நடந்தபின் தேவன் உன்னை விசாரிப்பார்

5. நீ தேவனுக்கு பொருத்தனை பண்ணிக்கொள்
அதை செலுத்துவதில் தாமதம் செய்யாதே
பணபிரியன் திருப்தி அடைவதும் இல்லை
செல்வபிரியன் திருப்தி அடைவதும் இல்லை

# பாடல் 244

முந்தினவர்! பிந்தினவர்!! மரித்தும் பிளைத்தவர்!!
இருபுறமும் கருக்குள்ள பட்டயமுடையவர்!!
சபைக்கு சொல்வதை காதுள்ளவன்!!
கவனித்து கவனமாக கேட்க கடவன்!!

1. உன் கிரியைகளை நான் அறிந்திடுவேன்
நீ இருக்கும் இடத்தையும் நான் அறிவேன்
நீ விசுவாசித்து மறுதலிப்பதை நான் அறிவேன்
விக்கிரகத்தோடும் சேர்ந்திருப்பதை நான் அறிவேன்

2. உன் கஷ்டத்தை நான் பார்த்துவிட்டேன்
உன் கடத்தின் பாரங்களை அறிந்துவிட்டேன்
மனம்திரும்பி தேவனை பின்பற்றி கொள்
உன் கண்ணீர் கவலைகள் துடைத்திடுவேன்

3. சீக்கிரமாய் மனம்திரும்பி குணப்படு
நான் சீக்கிரமாய் உன்னிடம் வந்திடுவேன்
என்வாயின் வார்த்தையால் யுத்தம்பண்ணுவேன்
மகிழ்ச்சியோடு ஜெயத்தை பெற்றுக்கொள்வாய்

4. ஜெயம்கொண்டால் ஜீவகிரீடம் தருவேன்
ஜெயம்கொண்டால் அதிகாரம் தருவேன்
ஜெயித்தால் ஆலயத்தில் தூணாக்குவேன்
ஜெயித்தால் சிங்காசனத்தில் உட்காருவான்

5. இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன்
நான் அளிக்கும் பலன் என்னோடுவருகிறது
வாசல் வழியாய் உள்ளே பிரவேசியுங்கள்
கற்பனையின் படி செய்கிறவன் பாக்கியவான்

# பாடல் 44

கர்த்தரை நான் எக்காலத்திலும்
கருத்துடன் துதிப்பேன் நான் துதிப்பேன்

1. என்னோடு சேர்ந்து கர்த்தரையே
ஒருமித்து நாம் உயர்த்திடுவோம் -- 2
கர்த்தருக்குள் என் அத்துமா
என்றென்றும் மகிழ்ந்திருக்கும் -- 2
-- கர்த்தரை

2. கர்த்தரை நான் தேடினேன்
அவர் எனக்கு செவிகொடுத்தார் -- 2
எல்லா பயத்தையும் மாற்றி விட்டார்
என்னை தூக்கி நிருத்திவிட்டார் -- 2
-- கர்த்தரை

3. கர்த்தர் நல்லவர் என்பதை நீ
ருசித்து பார் ரசித்து பார் -- 2
அவர் மேல் நம்பிக்கை வைத்து பார்
நம்பிக்கை உள்ளோரை கைவிடாரே-- 2
-- கர்த்தரை

4. சிங்ககுட்டிகள் தாழ்ச்சி அடைந்து
பட்டினியாகவே இருந்து விடும் -- 2
கர்த்தரை நீ தேடும் போது
குறைகள் எல்லாம் மாறி விடும் -- 2
-- கர்த்தரை

5. கர்த்தரின் கண்கள் என்றென்றுமாய்
நீதிமான் மேல் நோக்கி இருக்கும் -- 2
அவரின் செவிகள் என்றென்றும்
கூப்பிடுவோருக்கு திறந்திருக்கும் -- 2
-- கர்த்தரை

# பாடல் 45

என்னை ஆசீர்வதியும்
தேவா ஆசீர்வதியும்
நான் உந்தன் பாதத்தில்
வந்து பணிகிறேன்
நான் உந்தன் பிள்ளையே
நீர் என்னை மறவாமல்
நான் உந்தன் மணவாட்டி
நீர் என்னை சுத்தமாக்கும்
தேவா இரங்கி வாருமே
என் விண்ணப்பம் கேளுமே

**ஹிந்தி**

முஜே ஆஷீஸ் தீஜியே
பிரபு ஆஷீஸ் தீஜியே
மெ ஆப் கே சரணோமே
ஆக்கர் ஜீக் தாகும்
ஹம் ஆப் கே பச்சே ஹே
ஹமே நா பூல் நா
ஹம் ஆப் கே துல்கன் ஹே
ஹமே பவித்திர கீஜியே

பிரபு உத்தர்க்கர் ஆயியே
மே வினந்தி கர்த்தாகும்

# பாடல் 245

சுவரிலிருந்து பாவம் உன்னை கூப்பிடுதைய்யா
உத்திரம் மச்சியிலிருந்து சாட்சி சொல்லுதைய்யா
இரத்த பழியால் பட்டணத்தை கட்டிக்கொள்ளாதே
அநியாயத்தால் நகரத்தை நீ பலப்படுத்தாதே

1. உன் தோழனுக்கு குடி கொடுத்து கெடுக்காதே
மதுபானத்தை நண்பனுக்கு முன் வைக்காதே
உன் நண்பனை கெடுக்கவே நீ கெடுக்காதே
அவன் அழிந்துபோக காரணமாய் நீ இராதே

2. மரத்தை வெட்டி பொன்னால் நீ மூடாதே
மரத்தை பார்த்து விழியென்றும் நீ சொல்லாதே
கல்லை வெட்டி வெள்ளியால் நீ மூடாதே
கல்லை பார்த்து இரட்சியென்று நீ சொல்லாதே

3. நாங்கள் மட்டும் தேசத்தில் இருப்போம் என்காதே
மற்றவர்களும் தேசத்தில் குடியிருக்க செய்
வீட்டோடே வீட்டை நீயும் சேர்க்காதே
வயலோடே வயலையும் நீ சேர்க்காதே

4. தீமை செய்து நன்மையென்றும் நீ சொல்லாதே
நன்மையை தீமையென்றும் நீ சொல்லாதே
கசப்பை பார்த்து தித்திப்பென்றும் நீ சொல்லாதே
தித்திப்பை கசப்பு என்றும் நீ சொல்லாதே!

5. இயேசு ராஜா சீக்கிரம் தான் வரப்போகிறார்
அவர் வரும்போது நீயும் பரிதாபப்படுவாய்
மனம்திரும்பி இயேசுவிடம் இன்றே ஓடி வா!
நில்லாமல் இயேசுவின் பாதம் பற்றிக்கொள்!

## பாடல் 246

பயப்படமாட்டேன்! நான் பயப்படமாட்டேன்!!
பள்ளத்தாக்கில் நடந்தாலும் பயப்படமாட்டேன்!!
தேவன் என்னோடு என்றும் இருக்கிறார்!!
மனிதன் எனக்கு என்ன செய்திடுவான்!!

1. பதினாயிரம் பேர் எதிர்த்து வந்தாலும்
   கலக்கம்தான் எனக்கு ஒன்றும் இல்லையே
   உம் கோலும் தடியும் என்னை தேற்றிடும்
   கர்த்தரோடு நான் என்றும் இசைந்திருப்பேன்

2. தேவாலயத்தில் நான் என்றென்றுமாய்
   ஒலிவ மரத்தை போல் என்றும் இருப்பேன்
   கர்த்தர் என்னோடு என்றும் இருக்கிறார்
   அவர் நாமத்தை என்றும் துதித்து உயர்த்திடுவேன்

3. தேவனோடு நான் நடந்து சென்றிடுவேன்
   பொல்லாப்புக்கு நான் என்றும் பயப்படேன்
   பாவ இருளுக்கு நான் அஞ்சிடேன்
   மரண பயம் என்னை ஒன்றும் செய்யாது

4. மேசியா இயேசுவே வேகம் வாரும்
   உம்மோடு என்னை அழைத்து சென்றிடும்
   பரலோகில் நான் என்றும் உம்மோடு
   யுக யுக காலமாய் வாழ்ந்திடுவேன்

## பாடல் 46

சீயோனின் கர்த்தர் பெரியவர்
எல்லா ஜனங்களிலும் உயர்ந்தவர்
அவர் நாமம் பரிசுத்தமுள்ளது
அவரை துதித்து பாடுங்கள்

1. கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்
   கர்த்தர் வல்லமை உள்ளவர்
   கர்த்தரை உயர்த்தி துதியுங்கள்
   அவர் எல்லா ஜனத்திலும் உயர்ந்தவர்

2. கர்த்தர் பரிசுத்தம் உள்ளவர்
   கர்த்தரே தேவனென்று அறியுங்கள்
   நம்மை உண்டாக்கின தேவனுக்கு
   முன் குனிந்து பணிந்திடுவோம்

3. அவர் வாசல்களில் துதியோடும்
   அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும்
   என்றும் பிரவேசித்து துதியுங்கள்
   கர்த்தர் நல்லவர் பெரியவர்

4. தேவ கிருபை என்றென்றெக்கும்
   தலைமுறை தலைமுறையாயிருக்கும்
   தம் ஜனங்கள் மேல் உள்ளது
   என்றும் உயர்த்தி துதியங்கள்

# பாடல் 47

எனக்கு பரிசுத்தம் தாரும் தேவா
என்னை பரிசுத்தம் ஆக்கும் தேவா
பரிசுத்தம் இல்லாமல் உம்மை
ஆராதிக்க முடியாதைய்யா

1. பாவ உலகில் நான் வாழ்கிறேன்
பாவ உலகில் நான் போராடுகிறேன்
பாவம் என்னை மேற்கொள்ளாமல்
தேவா நீர் என்னை மேற்கொள்ளுமே

2. அன்பின் கையிற்றால் இழுத்துக்கொள்ளும்
உமக்கு பின்னே ஓடிவருவேன்
தேவா என்னை உமது அன்பினால்
அணைத்துக்கொண்டு மகிழச்செய்யுமே

3. என் உள்ளத்தில் பரிசுத்தம் தாரும்
என் நடத்தையில் பரிசுத்தம் தாரும்
என் பார்வையில் பரிசுத்தம் தாரும்
என் பேச்சில் பரிசுத்தம் தாரும்

4. என்னையும் உம்மை போல் மாற்றும்
என்னைக் காண்போர் உம்மை காண
உம் வார்த்தை வல்லமையாக
எனக்குள் இருந்து வெளிப்படவும்

# பாடல் 247

பூமியிலே புஷ்பங்கள் பூத்து குலுங்குதைய்யா!!!
காட்டுப் பறவை கூட்டமாக பாட்டுபாடுதைய்யா!!!
அத்திமரம் பூத்து காய்கள் காய்க்குது!!!
திராட்சை செடி பூத்து வாசனை தருகுது!!!

1. பிரியமே என் பிரியமே எழுந்து வாராயோ
மாரிகாலம் சென்றது மழையும் ஓய்ந்தது
கன்மலையின் வெடிப்பிலோ சிகரங்களிலோ
தங்குகிற புறாவே எழுந்து வாராயோ

2. உன் சத்தம் நான் கேட்டிடுவேன் குறைகள் நீக்கிடுவேன்
உன் முகத்தை பார்த்து உன்னோடு நான் இருந்திடுவேன்
குள்ள நரி கெடுக்குமோ சிறுநரியும் கெடுக்குமோ
பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்

3. பிரியமே! என் பிரியமே! உன்னில் பழுது இல்லை
அடைக்கப்பட்ட தோட்டமும் மறைக்கப்பட்டதும்
அவர் வெண்மையும் சிகப்பும் ஆனவரே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே

4. அவர் என்றும் அழகில் சிறந்த தேவன்
அவர் நம்மை நேசிக்கும் தேவனானவர்
அவர் என்னை கவர்ந்து கொண்ட தேவன்
அவரை என்றும் நான் பற்றிக்கொள்வேன்

5. அவர் இடதுகை என் தயின் கீழ்
அவர் வலக்கை என்னை தேற்றுகிறது
அவர் என்னை தாங்கும் தேவனானவர்
அவர் என்னை நடத்தி சென்றிடுவார்

## பாடல் 248

இயேசுவே தேவனின் குமாரன் என்று

விசுவாசித்தால் உலகத்தை நீ ஜெயிப்பாய்

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்

உன் விசுவாசம் உலகத்தை ஜெயிக்கும் ஜெபமே

1. நாம் தேவனிடம் அன்புகூர்ந்து நடந்து சென்றால்
   தேவனின் கற்பனையை கைகொண்டு நடப்போம்
   தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்
   உன் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெபமே

2. தேவன் நமக்கு கொஞ்ச நாள் ஜீவன் தந்தாரே
   அந்த ஜீவன் நித்திய ஜீவனாய் இயேசுவில் உண்டு
   இயேசுவை உடையவன் ஜீவன் உடையவன்
   இயேசுவை அறியாதவன் ஜீவன் அற்றவன்

3. எதையாகிலும் தேவ சித்தபடி கேட்டால்
   அவர் நமக்கு செவிகொடுத்து தந்திடுவார்
   செவிகொடுக்கும் தேவன் நமக்குள் இருக்கிறார்
   இதுதான் கர்த்தருக்குள் நமக்கு நம்பிக்கை

4. பிதாவானவர் வார்த்தையாக பரலோகில் இருக்கிறார்
   ஆவி! ஜலம்!! இரத்தம்!!! இது மூன்றும் ஒன்றே
   இம்மூன்றும் பூமியில் ஒன்றுபட்டு இருக்கிறது
   இம்மூன்றும் பரலோகில் ஒன்றாய் இருக்கிறது

5. மனிதனே மனிதனே தேவனை அறிந்துகொள்
   ஆவி! ஜலம்!! ரத்தம்!!! இது மூன்றும் ஒன்றே
   இம்மூன்றும் பூமியில் ஒன்று பட்டு இருக்கிறது
   இம்மூன்றும் பரலோகில் ஒன்றாய் இருக்கிறது

## பாடல் 48

சேனைகளின் கர்த்தாவே நீர் பெரியவர்
உமது வாசஸ்தலம் இன்பமானது
என் ஆத்துமாவே நீ கலங்காதே
என் ஆத்துமாவே நீ திகையாதே

1. தேவனை நோக்கி காத்திருப்பேன்
   என் முகத்திற்கு இரட்சிப்பு வரும்
   தேவனை நோக்கி அமர்ந்திருப்பேன்
   தினமும் என் தேவனை துதித்திடுவேன்
   -சேனைகளின் கர்த்தாவே

2. என் ஆத்துமா தேவ ஆலையத்தில்
   வாஞ்சையும் கவனமுமாய் இருக்கிறது
   தேவனை நோக்கி கெம்பீரமாய்
   சத்தத்தோடு துதிக்கின்றது
   -சேனைகளின் கர்த்தாவே

3. என் தேவனும் என் ராஜனுமாம்
   உமது பீடத்தண்டை வருகிறேன்
   தகைவிலான் குருவிக்கு கூடுகிடைத்தது
   உம்மில் எனக்கு அடைக்கலம் தாரும்
   -சேனைகளின் கர்த்தாவே

4. உம்மில் பெலன் கொள்ளுகின்ற
   மனிதர் யாவரும் பாக்கியவான்கள்
   பலத்தின் மேல் பலம் அடைந்து
   சீயோனிலே காணப்படுவார்கள்
   - சேனைகளின் கர்த்தாவே

## பாடல் 49

ஆராதிப்போம் நாம் ஆராதிப்போம்
தேவனையே ஆராதிப்போம்
மரணத்திற்கு தப்புவித்த
தேவனையே ஆராதிப்போம்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா -- 4

1. யாக்கோபின் தேவனை கெம்பீரமாய்
பாடி போற்றி ஆர்ப்பரிப்போம்
தம்புருவாசித்து இனிய ஓசையோடும்
எக்காள தொனியோடும் ஆராதிப்போம்

2. மாத பிறப்பிலும் நியமித்த காலத்திலும்
பெலனாகிய தேவனை ஆர்ப்பரிப்போம்
சுரமண்டலத்தோடும் வீணையோடும்
தேவனை வாழ்த்தி ஆராதிப்போம்

3. பண்டிகை நாளிலும் எக்காளத்தோடும்
ஓசையுள்ள தாழத்தோடும் ஆர்ப்பரிப்போம்
ஜெயம் தந்த தேவனிடம்
பணிந்து குனிந்து நாம் ஆராதிப்போம்

4. உச்சிதமான கோதுமையால்
போஷிப்பவர் முன் ஆர்ப்பரிப்போம்
கன்மலையின் தேனினாலும்
திருப்தி ஆக்குபவரை ஆராதிப்போம்

## பாடல் 249

உம்மை நான் நம்பியே நம்பியே இருக்கிறேன்!
உம்மை நான் என்றும் சார்ந்தும் இருப்பேன்! - 2
தேவனே உம்மை நான் மறக்கவும் மாட்டேன்! - 2
தேவனே விட்டு விட்டு போகவும் மாட்டேன்! - 2

ஆமேன் ஆமேன் இயேசுவே சீக்கிரம் வாருமே!!
ஆமேன் ஆமேன் இயேசுவே என்னை தேற்றுமே!! - 2

1. என்னை தெரிந்துகொண்ட என் இயேசு ராஜனே
என்னை அழைத்த என் தெய்வம் இயேசுவே - 2
என்னை இரட்சித்த என் இயேசு ராஜனே - 2
என்னை மறக்காமல் தினம் நடத்திடுமே - 2

2. சீக்கிரம் வரப்போகும் மேசியா இயேசுவே
உம்மோடு சேர்த்துக்கொள்ள என்னை படைக்கிறேன்-2
சீக்கிரம் இறங்கிவந்து சீயோனில் சேர்த்திடும் -2
என்னை உமக்கு என்றும் பலியாய் தருகிறேன் -2

3. உம்மை விட்டு விலகாமல் என்னை காத்துக்கொள்ளும்
என்னை உம் வழியில் நடத்திடும் தேவனே - 2
வேதத்தை படித்து என்றும் உம்மில் நின்றிட - 2
சுகம் பெலன் தந்து என்னை நடத்திடும் தேவனே - 2

4. ராஜாதி ராஜா இயேசு நீர் என்றும் வாழ்கவே
உம் நாமம் உலகமெங்கும் வளர்ந்து பெருகவே - 2
நான் போகும் இடமெங்கும் அற்புதம் செய்திடும் - 2
ஜனங்கள் உம்மை காண இறங்கி வாருமே - 2

## பாடல் 250

வாரும்! வாரும்!! வல்லமையின் தேவனே வாரும்!!
வந்து எங்கள் மத்தியில் தங்க வேண்டுமே!!
உம்மையே நாங்கள் நம்பி வந்துள்ளோம்!!
எங்கள் மேல் வல்லமை ஊற்றவேண்டுமே!!

1. உம்மோடு நாங்கள் பேச வேண்டுமே
உம்மோடு நாங்கள் தங்க வேண்டுமே
உம்மை பார்க்க வந்து இருக்கிறோம்
உம் வார்த்தை கேட்டு வாழவேண்டும்

2. அன்பின் சொருபனே ஆருயிர் நண்பனே
அன்பின் ஆவியால் என்னை நிரப்பிடும்
எப்போதும் உம்மோடு நான் இருக்க
உன்னத ஆவியால் என்னை நடத்துமே

3. உம்மில் நான் என்றும் நிலைத்திருக்க
என்னில் நீர் என்றும் நிலைத்திருந்து
திராட்சை செடியாய் நீர் நின்றிட
கொடியாய் நான் உம்மில் படர்ந்திட

4. உமக்குள் நான் என்றும் வாழ்ந்திருந்து
கனிகள் மிகுதியாய் கொடுத்திடவே
என் துக்கத்தை நீர் சுமந்து
உம் சந்தோசம் எனக்கு தாரும்

5. நீர் என்னை தெரிந்து கொண்டிரே
நான் என்றும் உம் பின் செல்வேன்
என்னை விடாமல் காத்துக்கொள்ளும்
அனுதினமும் உம் பின் செல்வேன்

## பாடல் 50

கர்த்தாவே உம்மை துதிப்பேன்
உன்னதமானவரை கீர்த்தனம் பண்ணுவேன்
வீணையினாலும் தம்புருவினாலும்
தியானமான வாசிப்பினாலும் - அல்லேலூயா

1. காலையில் உமது கிருபையும்
இரவில் உமது சத்தியமும்
அறிவிப்பதும் விவரிப்பதும்
என்றும் எனக்கு நலமாகும் - கர்த்தாவே உம்மை

2. கர்த்தாவே உமது செய்கைகளும்
உமது கரத்தின் கிரியைகளும்
ஆனந்தமாய் ஆர்ப்பரிப்பேன்
உம்மையே சார்ந்திருப்பேன் - கர்த்தாவே உம்மை

3. காண்டாமிருகத்தின் கொம்பைபோல
என் கொம்பு உயர்த்தப்படும்
புது எண்ணையின் அபிஷேகம்
என்னில் ஊற்றப்படும் - கர்த்தாவே உம்மை

4. நீதிமான் பனையைப்போலவும்
லீபனோனின் கேதுருபோலவும்
செழிப்புமாய் வளர்ச்சியுமாய் உம்
ஆலயத்தில் நாட்டப்படுவார்கள் - கர்த்தாவே

5. கர்த்தருடைய ஆலயத்திலும் எங்கள்
தேவனுடைய பிரகாரத்திலும்
முதிர் வயதிலும் கனி தந்து
என்றென்றும் செழித்திருப்பார்கள் - கர்த்தாவே

# பாடல் 51

மேகங்கள் நடுவே என்
இயேசுவை கண்டேன்
மேன்மை பாராட்டியே
என்றும் மகிழ்வேன்

1. பாவியான என்னை
   கண்ணோக்கிப் பார்த்தார்
   பாசத்துடன் என்னை
   தூக்கி எடுத்தார்

2. மண்ணான என்னை
   மறவாமல் காக்க
   மன்னவரே என்னை
   உமக்காய் அழைத்தீர்

3. ஏழையான என்னை
   ஏந்தி சுமந்தீர்
   ஏதிரிகளின் சூழ்ச்சிக்கு
   விலக்கி காத்திடும்

4. தாயின் கருவில்
   என்னை காத்தீரே
   தகப்பனாய் உடனிருந்து
   என்னை அணைத்தீரே

5. பேதையான எனக்கு
   ஞானத்தை தந்தீர்
   உடனிருந்து என்னை
   உயர்த்தி மகிழ்ந்தீரே

# பாடல் 251

துதித்து! துதித்து!! மகிழ்ந்திடுவேன்!!!
தூயாதி தூயவர் இயேசுவையே!!!
ருசித்து! ரசித்து! போற்றிடுவேன்!!!
தூயவர் இயேசுவை உயர்த்திடுவேன்!!!

1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
   துதிகளின் பாத்திரற்கு ஸ்தோத்திரமே
   அல்லேலூயா அல்லேலூயா அன்பர் இயேசுவுக்கே
   ஆராதனை ஆராதனை தேவாதி தேவனுக்கே

2. என்ன வந்தாலும் துதித்திடுவேன்
   எது நடந்தாலும் ஜெபித்திடுவேன்
   பாடுகள் வந்தாலும் பாடிடுவேன்
   பரமன் இயேசுவை தேடிடுவேன்

3. கஷ்டங்கள் வந்தாலும் துதித்திடுவேன்
   கண்ணீர்கள் வந்தாலும் கலங்கமாட்டேன்
   நஷ்டங்கள் வந்தாலும் நன்றி சொல்லுவேன்
   நல்லவர் இயேசுவை தினம் துதிப்பேன்

4. தேசம் காத்திட ஜெபித்திடுவேன்
   தேசத்தில் ஜனங்கள் மனம்திரும்பிட
   தேசம் அமைதிக்காய் ஜெபித்திடுவேன்
   தேசத்தின் நன்மைக்காய் தினம் ஜெபிப்பேன்

# பாடல் 252

கர்த்தரின் மகிமை!
உன்மேல் உதித்திட!
இயேசு அழைக்கின்றார்!!
உன்னை அழைக்கின்றார்!!

ஆயத்தம் உள்ளோரை ஆகாயம் சேர்க்க!!
இயேசு வருகிறார் வேகம் வருகிறார்!!

1. கர்த்தரின் கரத்தில்
   ராஜமுடியாய் இருக்க
   இயேசு அழைக்கின்றார்
   உன்னை அழைக்கின்றார்

2. ஆலயத்தில் உன்னை
   தூணாய் நிறுத்திட
   இயேசு அழைக்கின்றார்
   உன்னை அழைக்கின்றார்

3. தேவனின் வார்த்தையை
   உலகத்தில் அறிவிக்க
   இயேசு அழைக்கின்றார்
   உன்னை அழைக்கின்றார்

4. தேசத்தில் அற்புதம்
   அதிசயம் நடந்திட
   இயேசு அழைக்கின்றார்
   உன்னை அழைக்கின்றார்

# பாடல் 52

மான்கள் நீரோடைக்கு
வாஞ்சிப்பதுபோல
தேவா நான் என்றும்
உம்மை வாஞ்சிக்கிறேன் - 2

1. அற்புதம் செய்தவரை
   ஆனந்தமாய் வாஞ்சிக்கிறேன்
   அதிசயம் செய்தவரை
   ஆர்ப்பரித்து வாழ்த்துகிறேன் - நான் - 2

2. பணிவான கர்த்தரையே
   துதிக்க வாஞ்சிக்கிறேன்
   பாசம் நிறைந்தவரை
   பாடி வாழ்த்துகிறேன் - நான் - 2

3. வாழ்வை தந்தவரை
   வணங்க வாஞ்சிக்கிறேன்
   வார்த்தையால் வர்ணித்து
   போற்றி வாழ்த்துகிறேன் - நான் - 2

4. சர்வ சிருஷ்டிகரை
   சந்தோஷமாய் வாஞ்சிக்கிறேன்
   சமாதான காரணரை
   கனிவோடு வாழ்த்துகிறேன் - நான் - 2

5. பேர் சொல்லி அழைத்தவரை
   பின்பற்ற வாஞ்சிக்கிறேன்
   பேரொளி வீசும் சுடரை
   போற்றி வாழ்த்துகிறேன் - நான் - 2

## பாடல் 53

என் கண்ணீரின் வேளையிலே - தேவா
என் கண்ணீரை துடைத்தீரே
என் கலக்கத்தின் நேரத்திலே
என்னை மார்போடு அணைத்தீரே

இயேசுவே நீரே எனக்கு போதுமே

1. எனக்கு ஆயாசம் வந்த நேரத்தில்
என்னை அரவணைத்தீரே
பசியான நேரத்திலே எனக்கு
மன்னா தந்து போஷித்திரே - இயேசுவே நீரே

2. நான் நடந்து சென்ற பாதையிலெல்லாம்
என்னை தூக்கி சுமந்தீரே
நான் சோர்வடைந்த வேளையெல்லாம்
என்னை ஆற்றி தேற்றினீரே - இயேசுவே நீரே

3. என் ஊழியத்தின் வேளையெல்லாம்
என்னை காத்து நடத்தினீரே
நான் விழுந்து போன நேரமெல்லாம்
என்னை தூக்கி நிறுத்தினீரே -- இயேசுவே நீரே

4. என் நெருக்கத்தின் வேளையெல்லாம்
என் கூடவே இருந்தீரே
நான் ஜெபிக்கும் வேளையெல்லாம்
தேவா அற்புதங்கள் செய்தீரே -- இயேசுவே நீரே

5. உம் சேவையில் இதுவரையில்
என்னை உண்மையாய் காத்தீரே
என் உள்ளத்தை அறிந்த தேவா
நான் உள்ளளவும் நடத்திடுமே -- இயேசுவே நீரே

## பாடல் 253

என்னை நோக்கி பாரும் தேவனே!!
நான் உம்மை நோக்கி பார்க்கின்றேன்!!
உம்மை காண வாஞ்சிக்கின்றேன்!!
நான் பேச வந்து நிற்கின்றேன்!!

1. நான் நிற்கவும் முடியவில்லை
என்னால் நிமிரவும் முடியவில்லை
கிருபையால் என்னை நிறுத்தும்
உம் தயவினால் என்னை நடத்தும்

2. உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேன்
தேவனாலே மதிலையும் தாண்டிடுவேன்
வெண்கல வில்லும் வளைந்திடுமே
இரும்பு தாழ்பாளும் முறிந்திடுமே

3. தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவர்
உத்தமனுக்கு நீர் உத்தமரே
புனிதனுக்கு நீர் புனிதராவீர்
மாறுபவனுக்கு நீர் மாறிடுவீர்

4. நம்புகின்றவனுக்கு துருகமானீர்
விசுவாசிப்பவனுக்கு கேடகமானீர்
ஆதரவற்றவனுக்கு அடைக்கலமானீர்
இரட்சிக்கப்பட்டவனுக்கு இரட்சகரானீர்

# பாடல் 254

என்னை தேடி வந்த இயேசுவே!!
உம்பிள்ளையாக மாற்றும் இயேசுவே!!
தேடினால் கிடைக்கும் இயேசுவே - நான்
தட்டினால் திறக்கும் இயேசுவே!!!

தேவனே நீர் என்றும் வாழ்கவே!!!! - 4

1. ஜெபத்தை கேட்கும் எங்கள் தேவனே
உம் வார்த்தையால் பேசும் தேவனே
அற்புதம் செய்யும் என் தேவனே
ஆசீர்வதிக்கும் எங்கள் தேவனே

2. கடல் மேல் நடந்த என் தேவனே
தண்ணீரை கையில் பிடிக்கும் தேவனே
கடலை குலுக்கும் எங்கள் தேவனே
குன்றுகளை அசைக்கும் என் தேவனே

3. செங்கடலில் வழி திறந்த என் தேவனே
ஜனத்தை வெட்டாந்தரையில் நடத்தனீரே
மோசேயினால் அற்புதங்கள் செய்தவரே
என்னை கொண்டும் அற்புதம் செய்திடுமே

4. மனிதனாய் உலகில் வந்த இயேசுவே
மானிடனை மீட்க வந்த இயேசுவே
மறுபடியும் தெய்வமாக உயிர்தெழுந்தீரே
உலகில் மீண்டும் வேகம் வரப்போகிறீர்

# பாடல் 54

பாரம் சுமந்து தவிக்கின்ற தேவ மனிதனே!
உன் பாரத்தை இறக்கி இயேசுவிடம் வைத்துவிடு -- 2
தேவ மனிதனே! தேவ மனிதனே! தேவ மனிதனே!

1. உன் பாவ சாபத்தை
சிலுவையில் சுமந்து தீர்த்தார்
இதை நீ அறியவில்லையோ -- 2

தேவ மனிதனே! தேவ மனிதனே! தேவ மனிதனே!

2. உன் கண்ணீரெல்லாம்
உனக்காக சுமந்து தீர்த்தார்
இதை நீ அறிந்து துதித்திடு

தேவ மனிதனே! தேவ மனிதனே! தேவ மனிதனே!

3. சிலுவையில் தொங்கும் இயேசுவை நீ பார்!
உன் கவலை கண்ணீர் மாறிவிடும்
நீ மகிழ்ந்து துதித்து பாடிடு

தேவ மனிதனே! தேவ மனிதனே! தேவ மனிதனே!

4. விசுவாசத்தோடு இயேசுவையே பார்
உன் முகம் பரகாசிக்குமே நீ எழும்பி நிற்பாயே
நீயும் தேவனுக்காய் எழும்பி நின்றிடு

தேவ மனிதனே! தேவ மனிதனே! தேவ மனிதனே!

5. என்னிடம் வருவோரை தள்ளேன் என்றாரே
தேவ வாக்கை நம்பி ஓடி வா!
தேவ மனிதனே நீ ஓடி வா! -- 3

நில்லாமல் இயேசுவிடம் ஓடி வா! -- 3
ஓடி வா! ஓடி வா! ஓடி வா!

## பாடல் 55

கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்
மகத்துவத்தை அணிந்தும் இருக்கிறார்
நான் என்றும் கலங்கமாட்டேன்
நான் என்றும் பயப்படேன்
கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்

1. தேவ சிங்காசனம் பூர்வமுதல்
அனாதியாய் என்றும் இருக்கிறது
கர்த்தர் வானத்திலிருந்து நோக்கி பார்க்கிறார்
எல்லார் மேலும் கண்ணோக்கமாய் இருக்கிறார்

2. நதிகளும் எழும்பி வந்தது
பேரும் இரச்சலோடும் எழும்பி வந்தது
அலைகள் திரண்டு எழும்பி வந்தது
உன்னத தேவன் எழும்பி நின்றார்

3. திரளான தண்ணீர் வேகம் வந்தது
கடல் அலைகள் புரண்டு வந்தது
அலைகளை பார்க்கிலும் தேவன் பெரியவர்
தண்ணீரை பார்க்கிலும் தேவன் பெரியவர்

4. கர்த்தரின் சாட்சிகள் சத்தியம் நிறைந்தது
அது என்றென்றும் தேவனில் உள்ளது
பரிசுத்த நித்திய நாளாய் நிலைத்திருக்கும்
ஆலய அலங்காரமாய் என்றும் இருக்கும்

## பாடல் 255

உலகத்தை ஜெயித்த!!
தேவாதி தேவனே!!
எனக்கு இறங்குமே!!
இயேசுவே எனக்கு இறங்குமே!!

1. விக்கினம் கடந்து
போகும் வரையில்
என்னோடு இருந்திடுமே
இயேசுவே என்னோடு-யிருந்திடுமே

2. பாரத்தால் தினமும்
அமிழ்ந்து போகாமல்
என்னை நிறுத்திடுமே
இயேசுவே என்னை நிறுத்திடுமே

3. என் பிராணனை வாங்க
தேடுவோருக்கு தினமும்
விலக்கி நடத்திடுமே
இயேசுவே என்னை காத்திடுமே

4. பயமும் நடுக்கமும்
என்னை பிடித்தது
பயத்தை மாற்றிடுமே
இயேசுவே ஜெயத்தை தந்திடுமே

5. தேவனே உம்மையே
நம்பியே நான் தினம்
உம் பாதம் வந்து விட்டேன்
இயேசுவே எனக்கு இறங்குமே

# பாடல் 256

உம் பாதம் பணிந்திட நான் வந்துள்ளேன்!!
என் வழி மாற்றிட வாரும் தேவனே!!!

1. உலக ஆசை என்னில் மாற்றிடும் தேவா
உம் சித்தம் செய்ய அர்ப்பணிக்கிறேன்
உம் சிலுவை ஒன்றே போதும் எனக்கு
வேறு ஒன்றும் இவ்வுலகில் வேண்டாமே

2. எனக்காய் யார் போவார் என்ற தேவனே
உம் சேவை ஒன்றே எனக்கு போதுமே
கண்களினால் தினம் உம்மை பார்க்கிறேன்
உத்தமனாய் உம் வீட்டில் நடந்திடுவேன்

3. உயிரோடு இருக்கும் நாள் வரையில்
ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்றிடுவேன்
போகும் இடமெல்லாம் இரங்கி வாருமே
ஜனங்கள் அற்புதங்கள் காண செய்திடும்

4. மனிதனை நான் என்றும் நம்பிடேன்
தேவனை என்றும் சார்ந்து இருப்பேன்
நடந்ததை நான் நினைப்பது இல்லை
நம்பும் தேவனை நான் மறப்பதில்லை

# பாடல் 56

பூமியின் குடிகளே நீங்கள் எல்லோரும்
தேவனுக்கு முன்பாக வந்து பாடுங்கள்
அவர் நாமத்தின் மகத்துவத்தை
கெம்பீரமாய் பாடி துதித்திடுங்கள்

அல்லேலூயா -- 8

1. தேவன் பூமியை என்றும் விசாரித்து
தேவ நதியால் செழிப்பாக்குகிறார்
தேவனுடைய கிரியைகள் பெரியவையென்று
சொல்லி தேவனை வாழ்த்தி துதியுங்கள்

2. தேவன் வரப்புகளை தணியதக்கதாய்
படைச்சால்களுக்கு தண்ணீர் விடுகிறார்
தேவன் நன்மையால் பூரிப்பாக்குகிறார் என்று
சொல்லி வாழ்த்தி என்றும் துதியுங்கள்

3. உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது
பள்ளத்தாக்கை தானியத்தால் மூடுகிறார்
வருஷத்தை நன்மையால் முடி சூட்டுகிறார்
என்று சொல்லி வாழ்த்தி துதித்திடுங்கள்

4. என் ஜெபத்தை தேவன் தள்ளாமலும்
கிருபையை என்னை விட்டு விலக்காமலும்
தேவன் ஜெபத்தை கேட்டார் என்று
சொல்லி கெம்பீரமாய் பாடி துதித்திடுங்கள்

## பாடல் 57

தேவனே வாருமே இயேசுவே இறங்குமே – 2

நீரே என் ஆண்டவர் நீரே என் இரட்சகர்

நீரே என் இராஜாவே -- 2

இயேசுவே அழைத்தீர் இயேசுவே இரடசித்தீர்

நீரே என் இராஜாவே -- 2

இயேசுவே போதித்தீர் இயேசுவே மாற்றினீர்

நீரே என் இராஜாவே -- 2

இயேசுவே அபிஷேகித்தீர் இயேசுவே நடத்துகிறீர்

நீரே என் இராஜாவே -- 2

## பாடல் 257

நீதி நிறைந்த தேவனை வணங்கி வாழ்த்துவேன்!!
நியாயம் விசாரிக்கும் தேவனை துதித்து உயர்த்துவேன்!!
இரக்கமுள்ள தேவனை போற்றிப் பாடுவேன்!!
மன உருக்கமுள்ள தேவனை ஆடிப் பாடுவேன்!!

1. ஞானமுள்ள தேவனை தினம் துதிப்பேன்
   வரப்போகும் மேசியாவை வாழ்த்தி வணங்குவேன்
   உண்மையுள்ள தேவனை தினம் பாடிடுவேன் - 2
   உத்தம தேவனை உயர்த்தி பாடிடுவேன் - 2

2. தீங்கான காரியத்தை பார்க்கமாட்டேன்
   வழிவிலகும் செய்கையை நான் வெறுத்திடுவேன்
   உத்தமமான வழியில் தினம் நடந்திடுவேன் - 2
   என்றும் தேவனை முன்நிறுத்தி போற்றிப் பாடிடுவேன்

3. கபடு செய்பவனை என்றும் வெறுத்திடுவேன்
   அக்கிரமகாரன் என்னோடும் இருப்பதில்லை
   என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டது - 2
   என் போஜனத்தை புசிக்கவும் நான் மறந்தேன் - 2

4. அவதூறு பண்ணினால் சங்கரிப்பார்
   மேட்டிமை கண்ணனையும் சங்ரிப்பார்
   உண்மையுள்ளவன் வாசம் பண்ணிடுவான் - 2
   நானும் சேர்ந்து ஆடிப்பாடுவேன் - 2

5. மகிழ்ச்சியோடு ஆராதனை செய்யுங்கள்
   ஆனந்த சத்ததோடு வாருங்கள்
   கர்த்தரே தேவனென்று சொல்லுங்கள் - 2
   ஆலயத்தில் மகிழ்ச்சியோடு பிரவேசியுங்கள் - 2

# பாடல் 258

பாடுவேன்! ஆடுவேன்! இயேசுவின்!!!
இரட்சிப்பை எங்கும் சொல்லிடுவேன்!!! - நான்

1. நடந்து வந்த பாதைகளை
   நினைத்து நினைத்து பார்க்கிறேன்
   கண்ணீரோடு நான் நினைக்கிறேன்
   ஆனந்த களிப்பாய் பாடுகின்றேன்

2. கஷ்டம் நிறைந்த பாதை தான்
   கண்ணீர் நிறைந்த பாதை தான்
   பசி தாகம் நிறைந்த பாதை தான்
   பரன் இயேசு நடத்திய பாதை அது

3. அலைந்து திரிந்த பாதை தான்
   ஆயாசம் வந்த பாதை தான்
   ஆண்டவர் இயேசுவின் பாதை அது
   அற்புதம் நிறைந்த பாதை அது

4. நடுக்கம் நிறைந்த பாதை தான்
   நாதர் இயேசுவின் பாதை தான்
   கால் கடுத்த பாதை அது
   கர்த்தர் நடத்திய பாதை தான்

5. நாற்பது ஆண்டுகள் நடத்தி வந்த
   நல்ல தேவனே நன்றி ஐயா
   உலகம் என்னை ஆழ்த்தாமல்
   என்னை நடத்தினீர் நன்றி ஐயா

# பாடல் 58

தேவன் நமக்கு அடைக்கலம்
தேவன் நமக்கு துணையுமாமே
அல்லேலூயா சொல்லி பாடுவோம் (பாடிடுங்கள்)
அல்லேலூயா சொல்லி துதிப்போம் (துதித்திடுங்கள்)
அல்லேலூயா சொல்லி வாழ்த்துவோம் (வாழ்த்திடுங்கள்)
அல்லேலூயா சொல்லி போற்றுவோம் (போற்றிடுங்கள்)

ஆமென் ஆமென் அல்லேலூயா -- 4

1. பூமி நிலை மாறிப்போனாலும்
   மலைகள் சாய்ந்து போனாலும் கூட
   அரணான தேவன் நமக்குண்டு
   என்று சொல்லி நாம் வாழ்த்திடுவோம்

2. ஜனங்கள் கூடி கொந்தளித்தாலும்
   பர்வதங்கள் அதிர்ந்தாலும்
   சேனைகளின் கர்த்தர் உண்டு
   என்று சொல்லி நாம் துதித்திடுவோம்

3. இரதங்களை முறிக்கிறார்
   யுத்தங்களையும் மாற்றுகிறார்
   தேவன் நம் நடுவில் இருக்கிறார்
   என்று சொல்லி நாம் ஆர்ப்பரிப்போம்

4. சேனைகளின் கர்த்தர் பெரியவர்
   சேனைகளின் கர்த்தர் உயர்ந்தவர்
   தேவன் நம் நடுவில் இருக்கிறார்
   என்று சொல்லி நாம் ஆராதிப்போம்

# பாடல் 59

மனம் மகிழ்ந்து மனம் நிறைந்து
நம் தேவனையே துதிப்போம்
மன்னவர் இயேசு நம்மோடு இருக்கிறார்
ஆலய பண்டிகையை கொண்டாடுவோம்

கொண்டாடுவோம் பாடுவோம் ஆடிப்பாடி கொண்டாடுவோம்

1. மனதுருக்கம் உள்ளவரை
   மகிழ்ந்து துதித்து கொண்டாடுவோம்
   மன்னாதி மன்னவர் இயேசுவை நாம்
   ஆடிப்பாடி கொண்டாடுவோம்
2. வார்த்தையாய் இருப்பவரை
   வணங்கி நின்று கொண்டாடுவோம்
   வானவர் இயேசுவை என்றும்
   போற்றி ஆனந்தமாய் கொண்டாடுவேம்
3. ஆலயத்தில் ஆண்டவரை
   ஆர்ப்பரித்து நாம் கொண்டாடுவோம்
   ஆண்டாண்டு காப்பவரை
   காலமெல்லாம் நாம் கொண்டாடுவோம்
4. பாவங்களை மன்னித்தவரை
   மகிழ்ந்து என்றும் கொண்டாடுவோம்
   மனகலக்கம் மாற்றினவரை
   ஆர்ப்பரித்து நாம் கொண்டாடுவோம்
5. உன்னதமான தேவனையே
   உயர்த்தி என்றும் கொண்டாடுவோம்
   உலகத்தில் வந்தவரை வாழ்த்தி
   வணங்கி வாழ்க என்றும் கொண்டாடுவோம்
6. தாழ்ந்தவரை உயர்த்துகின்ற
   தேவனையே நாம் கொண்டாடுவோம்
   தூக்கியெடுத்து உயர்த்துகின்ற
   இயேசுவை தினம் கொண்டாடுவோம்
7. அனுதினமும் நடத்துகின்ற நம்
   ஆண்டவரை நாம் கொண்டாடுவோம்
   ஆடிப்பாடி ஆனந்தமாய் நம்
   இயேசுவையே நாம் கொண்டாடுவோம்

# பாடல் 259

கானகத்தில் வழி காட்டிட - மா
பாலை வனத்தில் நதிகள் ஓடிட
இயேசு நமக்காய் மரித்து உயிர்த்தெழுந்தாரே!!!
பாவ பாரம் யாவும் நீக்கி மீட்டாரே!!!

1. முந்தினதை நினைக்க வேண்டாமே
   பூர்வ நாளை சிந்திக்க வேண்டாம்
   பாவ சாபம் யாவும் நீக்கிவிட்டாரே - என்
   வியாதியையும் நீக்கி விட்டாரே

2. புதிய காரியம் தோன்றும் என்றாரே
   என் வாழ்க்கையை புதிதாக்குவார்
   நித்திய சந்தோசம் தருவேன் என்றாரே
   எனக்கு நிலையான வாழ்வை தந்திடுவார்

3. இந்த ஜனம் எனக்கு என்றாரே
   என்னை துதித்து வரும் என்றாரே
   அல்லேலூயா பாடி துதிப்போம்
   ஆண்டவரை என்றும் துதிப்போம்

4. கலங்காதே பயப்படாதே என்றார்
   நீ எனக்கு சாட்சி என்றாரே
   அவரை அன்றி கன்மலை உண்டோ
   அவர் சித்தம் நான் நிறைவேற்றுவேன்

## பாடல் 260

மறைவிடம் இயேசுவன்றோ!!!
எதிர் காற்றே பயப்படாதே!!!
காற்றையும் அதட்டிடுவார்!!!
அமைதி நிலவிடுமே!!!

1. யூரோகிலிதோன் கடுங்காற்றே
காரிருள் மூடச்செய்தாய்
தேவ வார்த்தை ஒளி தந்ததே
வல்லமை பெற்றுக்கொண்டேன்

2. பெரு வெள்ளம் மோதினாலும்
புகலிடம் இயேசு அன்றோ
வார்த்தையை பற்றிக்கொள்வேன்
அக்கரை சேர்ந்திடுவேன்

3. கிறிஸ்துவாம் கன்மலையே
நிழலாய் இருப்பதாலே
தாகமும் தீர்ந்திடுதே
சோர்வுகள் மறைந்திடுதே

4. ஜீவ நதி பாய்ந்திடுதே
சமாதானம் பெருகிடுதே
ஆத்துமா செழித்திடுதே
வருகையும் நெருங்கிடுதே

## பாடல் 60

சின்ன சின்னச் செடிகளே!
குட்டி குட்டி மலர்களே! என்
இயேசுவையே துதித்துப் பாடுங்கள்
அழகாக அம்சமாக உங்களை படைத்த நம்
இயேசுவையே போற்றி பாடுங்கள்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா -- 4

1. பெரிய பெரிய பாறைகளே!
கன்மலை சிகரங்களே! - நம்
இயேசுவையே துதித்து பாடுங்கள்
உன்னதமாய் உயரமாய் உங்களையும் படைத்த நம்
இயேசுவையே உயர்த்தி பாடுங்கள்
ஆமேன் ஆமேன் அல்லேலூயா -- 4

2. ஆடுகளே! மாடுகளே!
அலைந்து திரியும் மான்களே! - நம்
இயேசுவையே துதித்துப் பாடுங்கள்
உணவு தந்த உங்களை நடத்தும் நம்
இயேசுவையே வாழ்த்தி தினம் பாடுங்கள்
ஆமேன் ஆமேன் அல்லேலூயா -- 4

3. சூரியனே! சந்திரனே!
பிரகாசமான நட்சத்திரமே! - நம்
இயேசுவையே துதித்து பாடுங்கள்
ஒளி தந்து வெளிச்சமாய் உங்களை பிரகாசிக்கும் நம்
இயேசுவையே என்றும் பாடுங்கள்
ஆமேன் ஆமேன் அல்லேலூயா -- 4

# பாடல் 61

நான் காணாமல் போனவன்
நான் வழிதப்பி நடந்தவன்
கர்த்தரே என்னை தேடி ஓடி வந்தார்
அன்போடு என்னை அரவணைத்து கொண்டார்

1. என்னை மன்னித்த இயேசுவே நன்றி
   என்னை மாற்றின இயேசுவே நன்றி
   என்னை இரட்சித்த இயேசுவே நன்றி
   என்னை அபிஷேகித்த இயேசுவே நன்றி
   - நான் காணாமல்

2. என்னை போஷித்த இயேசுவே நன்றி
   என்னை நிற்க வைத்த இயேசுவே நன்றி
   என்னை நடக்க வைத்த இயேசுவே நன்றி
   என்னை பேச வைத்த இயேசுவே நன்றி
   - நான் காணாமல்

3. எனக்கு அறிவை தந்த இயேசுவே நன்றி
   எனக்கு புத்தி தந்த இயேசுவே நன்றி
   எனக்கு ஞானம் தந்த இயேசுவே நன்றி
   ஞானத்தோடு நடக்க வைத்த இயேசுவே
   - நான் காணாமல்

4. என்னை ஆசீர்வதித்த இயேசுவே நன்றி
   என்னை ஆற்றி தேற்றின இயேசுவே நன்றி
   என்னை அரவணைத்த இயேசுவே நன்றி
   என்னை நடத்துகிற இயேசுவே நன்றி
   - நான் காணாமல்

5. உம் கிருபையால் நிற்க வைத்த இயேசுவே நன்றி
   உம் வல்லமையால் இடைக்கட்டின இயேசுவே நன்றி
   உம் வரங்களால் அலங்கரித்த இயேசுவே நன்றி
   உம் மகிமையால் வெளிப்படுத்தின இயேசுவே நன்றி
   - நான் காணாமல்

# பாடல் 261

ஆபத்து நாளில் தேவன் ஜெபம் கேட்டிடுவார்
யாக்கோபின் தேவனுடைய நாமம் உயர்ந்தது

அல்லேலூயா அல்லேலூயா
ஆமேன் அல்லேலூயா அல்லேலூயா

1. இஸ்ரவேலின் தேவன் உனக்கு உயர்ந்த அடைக்கலம்
   அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உதவி செய்திடுவார்
   நீ செலுத்தும் காணிக்கைகளை நினைத்து நினைத்து
   சர்வாங்க தகனபலியை பிரியமாய் ஏற்றுக்கொள்வார்

2. தேவன் உன் மனவிருப்பம் எல்லாவற்றையும்
   உனக்கு தந்தருளி உன்னை ஆசீர்வதிப்பார்
   தேவன் தாம் அபிஷேகம் பண்ணினவரை
   ஒருபோதும் மறக்கவும் கைவிடவும் மாட்டார்

3. உலகத்தை பார்ப்பவர்கள் முறிந்து விழுந்தார்கள்
   நாங்களோ தேவனால் எழுந்து நிற்கின்றோம்
   பரிசுத்தவானின் துதிகளுக்குள் வாசம் பண்ணும்
   எங்கள் தேவாதி தேவனே நீர் என்றும் வாழ்கவே

## பாடல் 262

ஜெயித்திடுவேன்! நான் ஜெயித்திடுவேன்!!
தேவனுக்குள் என்றும் ஜெயித்திடுவேன்!!
தேவனை தினம் போற்றிடுவேன்!!
தேவனை நான் உயர்த்திடுவேன்!!

அல்லேலூயா நாங்கள் சொல்லிடுவோம்!!!
ஓசன்னா நாங்கள் பாடிடுவோம்!!!

1. தேவனுக்கு நாங்கள் கீழ்ப்படிவோம்
சத்துருவை நாங்கள் ஜெயித்திடுவோம்
தேவனின் கிருபையில் நிலைத்திருப்போம்
சாத்தானின் தந்திரத்தை அழித்திடுவோம்

2. ஓசன்னா சொல்லி வாழ்த்திடுவோம்
அல்லேலூயா பாடி உயர்த்திடுவோம்
தேவனை ஓடோடி சொல்லிடுவோம்
இயேசுதான் ரட்சகரென்று உயர்த்திடுவோம்

3. இயேசுவே தேவனென்று அறியுங்கள்
இயேசுவே தேவாதி தேவன் தாமே
இயேசுவே வரப்போகும் மேசியா
அவரோடு சேர்வதற்கு ஆயத்தமாகு!

4. தேவன் எப்போதும் எங்களையே
வெற்றி சிறக்கப் பண்ணுகிறார்
அவரையே நாங்கள் போற்றுகிறோம்
அவரையே நாங்கள் உயர்த்துகிறோம்

## பாடல் 62

உன் வாழ்க்கையின் சோகங்கள்
உன்னை நெருக்கின்றதோ? - 2
கலங்காதே! நீ திகையாதே! நீ பதறாதே!
உன் தோல்வியை கண்டு நீ துவளாதே!

1. நெறிந்த நாணலை முறிக்காத தேவன்
உன் வாழ்க்கையின் விளக்கை ஏற்றிடுவார் - 2
நீ மீண்டும் எழுந்து தேவனுக்காய் இந்த
உலகில் என்றும் பிரகாசிப்பாய்
- உன் வாழ்க்கையின்

2. உன் தோல்வியை கண்டு பதறாதே
உன் தோல்வி ஜெயமாக மாறிவிடும் - 2
உலகத்தை ஜெயித்த தேவன் தான்
உன் தோல்வியை ஜெயமாய் மாற்றிடுவார்
- உன் வாழ்க்கையின்

3. யோபை தூக்கி நிறுத்தின தேவன்
உன்னையும் தூக்கி நிறுத்திடுவார் -- 2
யோபின் வாழ்க்கையை செழிக்க செய்தவர்
உன் வாழ்க்கையை என்றும் மலர செய்வார்
- உன் வாழ்க்கையின்
-

4. தாவீதை தூக்கி நிறுத்தின தேவன்
உன்னை என்றும் நிறுத்திடுவார் -- 2
தாவீதை ராஜாவாய் மாற்றின தேவன்
உன்னையும் ராஜவாய் மாற்றிடுவார்
- உன் வாழ்க்கையின்

## பாடல் 63

நீர்கால்களின் ஓரமாய்
நாட்டப்பட்ட மனிதனே
நீ செய்வதெல்லாம்
வாய்க்கப்பண்ணுவார் - இயேசு

1. துன்மார்க்கரின் ஆலோசனையில்
   நீ என்றும் நடக்காதே - 2
   பாவிகளின் வழிகளிலே
   நீ என்றுமே நிற்காதே

2. பரியாச காரரோடு நீ
   என்றும் உட்காரதே
   கர்த்தர் மேல் நம்பிக்கையாய்
   அவரில் என்றும் நிலைத்திரு

3. கர்த்தரின் வேதத்தின் மேல்
   நீ என்றும் பிரியமாக
   தியானமாய் இருப்பாயானால்
   புத்திமானாய் நடந்துக்கொள்வாய்

4. இந்த தேசத்தில் நீ என்றும்
   உயிரோடு இருக்கும் வரையில்
   ஒருவரும் உனக்கு விரோதமாய்
   ஆயுதம் வாய்ப்பதில்லையே

5. நீதிமானின் வழிகளெல்லாம்
   தேவன் வாய்க்கப்பண்ணுவார்
   நீ என்றும் இலையுதிராத
   மரத்தை போல் என்றும் இருப்பாய்

## பாடல் 263

இரங்கும் இரங்கும் என் தேவ தேவனே!!
எனக்கு இரங்கும் என் ராஜ ராஜனே!!
என் ஆத்துமா உம்மை அண்டிக்கொள்ளுது!!
உம் நிழலில் நான் வந்து நிற்கின்றேன்!!

1. இஸ்ரவேலை காக்கும் என் தேவனே
   தினம் என்னை காத்துகொள்ளும் என் தேவனே
   என் பாதைக்கு வெளிச்சமாய் வந்த தேவனே
   ஜீவ வழியில் தினம் என்னை நடத்திடுமே

2. என்னை விழுங்க பார்க்கும் மனிதனுக்கு
   விலக்கி என்னை காத்துக்கொள்ளும் என் தேவனே
   உன்னதத்தின் தேவாதி என் தேவனே
   ஒத்தாசை எனக்கு அனுப்பி தாருமே

3. எனக்காக யாவும் செய்யும் தேவனே
   என் பாரங்களை சுமக்கும் நல்ல தேவனே
   உம்மையே நோக்கி நான் பார்க்கிறேன்
   சீக்கிரம் வந்தென்னை தேற்றும் தேவனே

4. என் கால் இடறாமல் காத்துக் கொள்ளுமே
   நல் வழியில் என்னை நடத்தி சென்றிடுமே
   பறந்து காக்கும் பறவை போல என்னை காத்திடும்
   பரலோகம் செல்லும் வரை நடத்தி சென்றிடும்

# பாடல் 264

உன் தேவனாகிய கர்த்தர் தாமே!!
உனக்கு முன்பாக கடந்து போவார்!!
அவரே உனக்கு முன் நின்று!!
அத்தேசத்தாரை அழிப்பாரே! நீ சுதந்தரிப்பாய்!!

1. இந்த தேசத்தில் வாசம் பண்ணு
நான் உன்னோடு இருப்பேன் என்றார்
அந்த தேசத்தில் இருந்து விதைவிதைத்தான்
கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்

2. இனி உன் சூரியன் அஸ்தமிக்காது
இனி உன் சந்திரன் மறையாது
கர்த்தரே உனக்கு வெளிச்சம் உன்
துக்கநாள் நாட்கள் முடிந்தது நீ பயப்படாதே

3. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி
உன்னை என்றும் ஆசீர்வதிப்பேன்
நான் உன் பேரை என்றென்றும்
பெருமைபடுத்தி ஆசீர்வாதமாய் என்றுமிருப்பாய்

4. வெளியின் விருட்சம் கனி தந்திடும்
பூமியும் தன் பலன் கொடுத்திடும்
நான் அளிக்கும் நன்மையினால்
என் ஜனங்கள் திருப்தியாவார்கள்

- கர்த்தர் சொல்கிறார்

# பாடல் 64

இயேசுவே உம் அன்பை போல
எவருமே இல்லையே - 2
அவர் கிருபை என்றும் உள்ளது
தம் ஜனத்தின் மேல் உள்ளது

1. கர்த்தரை துதியுங்கள்
அவர் கிருபை என்றும் உள்ளது - 2
அவர் தயவு என்றும் உள்ளது
என்று சொல்லி துதியுங்கள் - 2

2. ஆத்துமாவே கர்த்தர் உனக்கு
நன்மை என்றும் செய்தாரே - 2
தேவனுக்குள் மகிழ்ந்திரு
அவர் மன உருக்கமானவர் - 2

3. ஜீவனுள்ளோர் தேசத்திலே
கர்த்தருக்கு முன் நடப்பேன் - 2
என் மேல் அவர் நோக்கமாகி
நல்வழியில் நடத்திடுவார் - 2

4. கர்த்தர் எனக்கு செய்த எல்லா
நன்மைக்காக துதித்திடுவேன் - 2
இவரே என் தேவன் என்று
வாழ்த்தி என்றும் பாடிடுவேன் - 2

5. கர்த்தருக்கு முன் செய்த
பொருத்ததையை நான் அவர் - 2
ஜனத்திற்க முன்னிலையில்
செலுத்தி என்றும் மகிழ்ந்திடுவேன் - 2

## பாடல் 65

என் தேவனாகிய கர்த்தாவே
உம்மில் அன்பு கூருவேன்
என் தேவனாகிய கர்த்தாவே
உம்மை துதிப்பேன்

ஆமேன் ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

1. என் புலம்பலை
   களிப்பாக மாறப்பண்ணினீர்
   மகிழ்ச்சி என்னும்
   கட்டினால் இடைகட்டினீர் - 2

2. கை தூக்கி எடுத்த படியால்
   போற்றிடுவேன்
   சத்துருவை மேற்கொண்டிரே
   வாழ்த்திடுவேன் - 2

3. ஆத்துமாவை பாதாளத்திலிருந்து
   ஏறப்பண்ணினீர்
   ஆனந்த களிப்பாய்
   மாறப்பண்ணினீர் - 2

4. நாவினால் என்றும்
   கீர்த்தனம் பண்ணுவேன்
   என் தேவனை
   என்றும் ஆராதிப்பேன் - 2

5. கர்த்தர் தம் ஜனத்திற்கு
   பெலன் கொடுப்பார்
   அவர் தம் ஜனங்களை
   ஆசீர்வதிப்பார் - 2

## பாடல் 265

இயேசு நமக்கு மீட்புமானார்!!!
இயேசு நமக்கு வழியுமானார்!!!
இயேசு நமக்கு துணையுமானார்!!!
இயேசு நமக்கு பெலனானாரே!!!

1. யாக்கோபே நீ பயப்படாதே
   இஸ்ரவேலே நீ திகையாதே
   கானான் தேசம் நீ சேரும்வரை
   உன் தேவன் உன்னை கைவிட்டிடாரே

2. சூரியனைப்போல் நீ பிரகாசிப்பாய்
   சந்திரனைப் போல் நீ உறுதி கொள்வாய்
   பன்னிரெண்டு நட்சத்திரமும்
   உன் சிரசின் மேல் தரித்திருப்பாய்

3. உதிக்கின்ற உன் ஒளியினிடம்
   ராஜாக்களும் நடந்து வருவார்கள்
   கேதாரின் ஆடுகளெல்லாம்
   உன்னிடத்தில் சேர்க்கப்படும்

4. இஸ்ரவேலே உன் இருதயம்
   அதிசயமாய் பூரித்திடும்
   கடல் கறையின் திரளான
   கூட்டம் உன் வசமாக திரும்பும் என்றார்

# பாடல் 266

நன்மையுண்டாகும்! நன்மையுண்டாகும்!!

தேவனை அண்டினால் நன்மையுண்டாகும்!!!

1. உன் வேலையில் உனக்கு நன்மையுண்டாகும்
   உன் வீட்டிலும் உனக்கு நன்மையுண்டாகும்
   நீ செல்லும் இடமெல்லாம் நன்மை வரும்
   கிருபையும் நன்மையும் உன்னை தொடரும்

2. தொழிலில் உனக்கு நன்மையுண்டாகும்
   இழந்ததை திரும்பவும் பெற்றிடுவாய்
   இரட்டிப்பான நன்மை உனக்கு தருவார்
   இயேசுவை நோக்கி அனுதினம் ஜெபித்திடு

3. உனக்காக பரலோகம் துறந்தவர் இயேசு
   உன்னை இரட்சிக்க வந்தவர் இயேசு
   உன் துக்கத்தை மாற்றி சுகம்தர வந்தவர்
   பூமியில் துக்கம் மாறி நீ வாழவும்

4. கலங்கி தவிக்கும் மனுகுலமே
   உன்கலக்கம் மாற்றிட இயேசு வந்தார்
   உன்னை இரட்சித்து பாதுகாத்து
   என்றும் வாழவைக்கும் இயேசு தான்

# பாடல் 66

கர்த்தாவே உமக்கு ஒப்பானவர் யார் ?
என் தேவனே உமக்கு ஒப்பானவர் யார் ?
என் இயேசுவே உமக்கு ஒப்பானவர் யார் ?
என் இராஜாவே உமக்கு ஒப்பானவர் யார் ?

இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே - 2

1. வானத்துக்கு கீழே பூமிக்கு மேலே
   உமக்கு ஒப்பானவர் யாரும் இல்லையே
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

2. கடல் மேல் நடக்க ஒப்பானவர் யார் ?
   கடலை இரண்டாய் பிளக்க ஒப்பனவர் யார் ?
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

3. கடலை குலுக்க ஒப்பானவர் யார் ?
   அலைகளை அடக்க ஒப்பானவர் யார் ?
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

4. புரண்டு வந்த நதியை நிற்க செய்ய ஒப்பானவர் யார் ?
   அதை மேல் நோக்கி ஓடவைக்க ஒப்பானவர் யார் ?
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

5. தண்ணீரை கையில் பிடிக்க ஒப்பானவர் யார் ?
   காற்றையும் கையில் பிடிக்க ஒப்பானவர் யார் ?
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

6. உண்டாக்கின ஜனத்துக்கு ஒப்பானவர் யார் ?
   சிலுவையை சுமக்க ஒப்பானவர் யார் ?
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

7. மனிதனை மாற்றினீரே ஒப்பானவர் யார் ?
   அனைத்தையும் செய்கிறவரே ஒப்பானவர் யார் ?
   இவ்வுலகில் யாரும் இல்லையே யாரும் இல்லையே-2

## பாடல் 67

வருகிறார் வருகிறார் மேசியா வருகிறார்
மேகமீதிலே வேகமாய் வருகிறார்

ஆமேன் ஆமேன் (அல்லேலூயா ) - 2

1. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும்
   பிரதான தூத சத்தத்தோடும்
2. எக்காளத்தொனியோடும் இயேசு வருகிறார்
   ஆயத்தம் உள்ளோரை சேர்க்க வருகிறார்
3. வானத்திலிருந்து இறங்கி வருகிறார்
   கிறிஸ்வுக்குள் மரித்தோரை எழுப்ப வருகிறார்
4. பரிசுத்தவான்களை பரலோகம் சேர்க்க
   வேகமாக இயேசு வருகிறார்
5. வருகிறார் வருகிறார் இயேசு வருகிறார்
   பாவிகளை நரகத்தில் சேர்த்திட வருகிறார்
6. எக்காளம் தொனிக்கும் இமைப்பொழுதுதில்
   மரித்தோர் மகிமையில் எழும்பிடுவார்
7. மறிக்காத நாமும் மருரூபமாய்
   கிறிஸ்துவுக்குள் நாம் எழும்பிடுவோம்
8. இவ்விதமாய் எப்பொழுதும்
   நாம் தேவனோடு ஜீவிப்போம்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா - 6

## பாடல் 267

கர்த்தாவே நீர் என்னை காண்கிற தேவன்!!
என் உட்காருதலையும் நீர் அறிகின்ற தேவன்!!
என் நினைவை தூரத்திலிருந்து அறிகின்றீர்!!
எழுந்தாலும் என்னை அறியும் தேவன்!!!

அகிலத்தையும் படைத்த தேவ தேவனே!!!
நீர் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே!!!

1. நான் நடந்தாலும் என்னை காணும் தேவன்
   நான் இருந்தாலும் என்னை காணும் தேவன்
   நாவில் சொல் பிறக்கும் முன் அறியும் தேவன்
   எல்லாவற்றையும் தினம் தினம் அறிகின்றீர்
2. வானத்தில் ஏறினாலும் அங்கே இருக்கிறீர்
   பாதாளத்தில் படுத்தாலும் அங்கும் இருக்கின்றீர்
   எங்கும் இருக்கும் தேவன் என்னோடு இருக்கிறீர்
   உமக்கு மறைவாய் நான் எங்கே போவேன்
3. இருள் என்னை முடிக்கொள்ள வந்தாலும்
   சுற்றி சுற்றி வெளிச்சமாக இருக்கிறீர்
   இருளும் வெளிச்சமும் உமக்கு ஒன்றே
   உமக்கு மறைவாய் இருள் என்னை அணுகாது
4. நீர் என் உள்ளத்தில் என்றும் இருக்கிறீர்
   தாயின் கர்ப்பத்தில் என்னை காப்பாற்றினீர்
   அதிசயமாக என்னை உண்டாக்கினீர்
   உம் கிரியை எல்லாமே அதிசயம் தானே

## பாடல் 268

ஜாதிகள் கொந்தளித்து எழும்பி வந்தாலும்!!
பரலோக தேவன் தாம் உனக்காய் எழும்பிடுவார்!!
ஆபிரகாமின் தேவனே ஈசாக்கின் தேவனே!!
யாக்கோபின் தேவனே இரங்கி வாருமைய்யா!!

1. பக்தியுடன் கர்த்தரை தினமும் துதித்திடுங்கள்
பரலோகில் வீற்றிருக்கும் தேவன் வந்திடுவார்
சத்துரு எழும்பிவந்து சிங்கம்போல் கெர்ச்சித்தாலும்
யாக்கோபின் தேவன்தாம் உனக்கு ஜெயங்கொடுப்பார்

2. மீறுதலை மேகத்தைப்போல் பாவத்தை கார்மேகம்போல்
நானே அகற்றி விட்டேன் மகிழ்ந்து களிகூரு என்றார்
உன்னை தெரிந்து கொண்ட தேவன் பெரியவர்
உன்னை அழைத்தவர் என்றென்றும் கைவிடார்

3. குமாரன் கோபம் கொண்டு வழியில் அழியாமலும்
ராஜாக்களே நீங்களும் பயத்துடனே துதித்திடுங்கள்
பக்தியுடன் கர்த்தரை என்றென்றும் சேவியுங்கள்
நடுக்கத்துடனே என்றென்றும் களிகூருங்கள்

4. உன்னை ரட்சித்து அபிஷேகித்த தேவனை பார்
உன்னை ஆசீர்வதித்து உயர்த்திய தேவனை பார்
உனக்காய் பாடு பட்ட இயேசுவை நோக்கி பார்
பரலோகம் கொண்டுசெல்லும் இயேசுவை நோக்கிபார்

## பாடல் 68

என் தேவனே எனக்கு இரங்குமே
என் இயேசுவே எனக்கு இரங்குமே

1. உமது இரக்கங்கள் மகா பெரியது
உமது கிருபைகள் ஏராளம்
என் மீறுதல் நீக்கி சுத்திகரியும்
நான் என்றும் சுத்தமாவேன்

2. அக்கிரமம் நீங்க கழுவிடுமே
பாவம் மாற சுத்திகரியும்
எப்பொழுதும் பாவம் முன் நிற்குது
தூக்கி என்னை நிறுத்திவிடும்

3. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக
பாவம் நான் செய்தேனைய்யா
உமது கண்களுக்கு முன்பாக
பொல்லாங்கு நான் செய்தேனே

4. நீர் பேசும் போது உமது நீதிவிளங்க
நியாயம் தீர்க்கும் போது அறிக்கையிடுகிறேன்
பாவத்தல் நான் பிறந்தேனேய்யா
கல்வாரி இரத்தத்தால் கழுகிவிடும்

5. உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்
எனக்கு ஞானத்தை தந்து விடும்
ஈசோப்பினால் என்னை சுத்திகரியும்
அப்பொழுது நான் வெண்மையாவேன்

6. சந்தோஷம் மகிழ்ச்சி கேட்கசெய்யும்
நீர் நொருக்கின எலும்புகள் களிகூரும்
தேவனே சுத்த இருதயத்தை
என்னிலே சிருஷ்டியும்

7. சீயோனுக்கு நன்மை செய்பவரே
எருசலேம் மதில்களை எழுப்பிவிடும்
நன்மையில் என்னை வழிநடத்தும்
விடாமல் உம்மை பின் பற்றவே

## பாடல் 69

விளக்கை ஏற்றினார் விடுதலை கொடுத்தார்
விரும்பின காரியத்தை வாய்க்கப்பண்ணினார்

அல்லேலூயா ஆமேன் அல்லேலூயா -- 2

1. அன்பை பொழிந்தார் அற்புதம் செய்தார்
   ஆலோசனை தந்து ஆளுகை செய்தார்

2. பாட வைத்தார் என்னை மகிழ செய்தார்
   பரலோகில் இருந்து என்னை கண்ணோக்கினார்

3. புது பெலன் தந்தார் கிருபையை பொழிந்தார்
   புதிய காட்சிகள் என்னை காணவும் செய்தார்

4. கரம் பிடித்தார் நம்மை காத்து நடத்தினார்
   கழுகை போல நம்மை சுமந்து செல்கிறார்

## பாடல் 269

வாலிபனே ஓ வாலிபனே! - 2

உன் இளமையிலே சந்தோஷபடு! - 2

சந்தோஷப்படு நீ சந்தோஷபடு!! - 2

உன் இளமையிலே சந்தோஷப்படு!!

1. உன் நெஞ்சின் வழியிலும்
   உன் கண்ணீன் காட்சியிலும்
   நடந்து கொள் நடந்து கொள்
   நீ என்றும் நடந்து கொள்

2. தேவன் உன் கிரியை எல்லாம்
   நியாயத்திலே கொண்டு வருவார்
   உன்னை கொண்டு வருவார்
   தேவன் நியாயந்தீர்ப்பார்

3. உன் இருதயத்தின் நினைவுகளை
   உன்னில் இருந்து நீக்கிபோட்டிடு
   தீங்கையும் பொல்லாப்பையும்
   உன் மனதிலிருந்து எடுத்து போடு

4. உன் இளமையிலே இயேசுவை
   உன் இதயத்தில் ஏற்றுக்கொள்ளு
   உன் வாழ்க்கையை காத்து கொள்ளும்
   இயேசுவிடம் நில்லாமல் நீ ஓடி வா

# பாடல் 270

இஸ்ரவேல் என் ஜனமே!!

நீ கலங்காதே திகையாதே!!
உன்னை நான் உருவாக்கினேன்!!
உன்னை நான் மீட்டுவிட்டேன்!!

1. தண்ணீரை கடக்கும் போது
   நான் உன்னோடு கூடயிருப்பேன்
   ஆறுகளை கடக்கும் போதும்
   நான் உன்னோடு கூட இருப்போன்

2. பெயர் சொல்லி உன்னை அழைத்தேன்
   உன் பெயரை பெருமைபடுத்துவேன்
   நீ அக்கினியில் நடக்கும் போது
   உன்னை அவியாமல் பாதுகாப்பேன்

3. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரே
   நான் இரக்கமுள்ள தேவனும்
   பயப்படாதே நான் உன் தேவன்
   கரம் பிடித்து நடத்திடுவேன்

4. முந்தினதை நினைக்க வேண்டாம்
   நடப்பதையும் நினைக்க வேண்டாம்
   புதிய காரியம் நான் செய்திடுவேன்
   இனி எல்லாமே புதிதாக்குவேன்

# பாடல் 70

பாதை மறந்த பறவை போல நான் இருந்தேனே
தேவா உந்தன் அன்பினால் அணைத்து கொண்டிரே

1. சிறகுடைந்த நிலையில் நான் தவித்திருந்தேனே
   தேவா உந்தன் இரக்கத்தால் சூழ்ந்து கொண்டிரே

2. விசுவாசித்து உம்மை நான் துதித்துப் பாடுவேன்
   வீணையோடும் தம்புரோடும் உயர்த்தி பாடுவேன்

3. நாவினாலே உம்மை நான் போற்றிபாடுவேன்
   நடனத்தாலும் சங்கீதத்தாலும் வாழ்த்தி பாடுவோம்

4. உள்ளத்தாலே உம்மை நான் என்றும் பாடுவேன்
   உயிர்த்தெழுந்த தேவனேயே மகிழ்ந்து பாடுவேன்

5. கரம் பிடித்து நடத்துபவரை கருத்துடன் பாடுவேன்
   என்னை காண்பவரை கருத்துடன் பாடுவேன்

6. இன்ப இயேசுவே உம்மை துதித்து பாடுவேன்
   பரலோகத்தில் சேர்ப்பவரை ஆடிப்பாடுவேன்

## பாடல் 71

பூமியின் குடிகளே
நீங்கள் எல்லோரும்...
கர்த்தரை கெம்பீரமாய் பாடுங்கள்

1. அவர் வாசலில் துதியோடும்
   அவர் ஆலயத்தில் புகழ்ச்சியோடும்
   அவர் நாமத்தை ஸ்தோத்தரியுங்கள் -- 2

2. மகிழ்ச்சியோடே நம் தேவனுக்கு
   ஆனந்த சத்தத்தோடே ஆராதித்து
   அவர் சந்நிதி முன் வாருங்கள் - 2

3. கர்த்தரே தேவன் என்று அறியுங்கள்
   அவரே நம்மை உண்டாக்கினார்
   அவர் மேய்ச்சலின் ஆடுகளாம் -- 2

4. கர்த்தர் நல்லவர் என்று துதியுங்கள்
   அவர் கிருபை என்றும் உள்ளது
   தலைமுறை தலைமுறைக்கு உள்ளது -- 2

5. உத்தமமான வழியிலே நடப்பேன்
   ஞானமாக நான் நடப்பேன்
   உத்தம இருதயத்தோடும் நடந்திடுவேன் --2

6. தேவன் எழுந்தருளி சீயோனுக்கு
   தயை செய்யும் காலம் நேரமும் வந்தது
   அவர் மகிமையில் வெளிப்படுவார் -- 2

7. நம் தேவனாகிய கர்த்தரை உயர்த்தி
   அவருடைய பரிசுத்த நாமத்தை
   என்றும் கொண்டாடி துதித்திடுவோம் -- 2

## பாடல் 271

காலையில் எழுந்து ஒத்தாசை வரும்!!
பர்வத்தின் நேராக நான் தினம்!!
கருத்தோடும் தினம் தொழுதிடுவேன்!!
கர்த்தரை தினம் நான் பாடிடுவேன்!!

1. கால்களை வழுவாமல் காக்கும் தேவன்
   இஸ்ரவேலின் தேவனே என்றும் வாழ்க
   உம் நாமத்தை வாழ்த்தி என்றென்றுமாய்
   உமக்குள்ளே நான் என்றும் வாழ்ந்திருப்பேன்

2. இயேசுவே பாவத்தை மன்னிக்கும் தேவன்
   இவர் தான் என்னை இரட்சித்த தேவன்
   இரவிலும் என்னை காத்திடும் தேவன்
   பகலிலும் பாது காத்திடும் தேவன்

3. அகிலத்தை காக்கும் தேவாவதி தேவன்
   ஆத்துமாவை அழியாமல் பாது காப்பார்
   படுத்தாலும் உன்னை காக்கும் தேவன்
   ஓடினாலும் உன்னை காக்கும் தேவன்

4. நான் நடந்தாலும் என்னை காத்திடுவார்
   நான் இருந்தாலும் என்னை கர்த்திடுவார்
   நான் உள்ளவும் என்னை காத்திருந்து
   வருகையில் சேர்க்கும் தேவன் அவர்

## பாடல் 272

என் தேவனே! என் தேவனே!!

ஏன் என்னை கைவிட்டீர்!!!

எனக்கு உதவி செய்யாமலும்!!

கதறி சொல்லும் வார்த்தை கேளாமல்!!

ஏன் தூரமாய் இருக்கின்றீர்!!! - 2

1. பகலிலும் எனக்கு அமைதி இல்லை
   இரவிலும் எனக்கு அமைதி இல்லை
   தேவனே எனக்கு அமைதி தாரும்
   எனக்காய் இறங்கி வாரும் தேவனே

2. பகலிலும் உம்மை நான் கூப்பிடுகிறேன்
   இரவிலும் உம்மை நான் கூப்பிடுகிறேன்
   என்னை விட்டு தூரம் போகாதிரும்
   தண்ணீரைப் போல ஊற்றுண்டேன்

3. என்னை பார்க்கும் மனிதர் எல்லோரும்
   பரியாசம் பண்ணி நிந்திக்கின்றார்கள்
   என் தேவனே என் இயேசுவே
   இறங்கி என்னை தூக்கி நிறுத்தும்

4. துதிகள் மத்தியில் வாசம் பண்ணும்
   தேவாதி தேவனே இறங்கி வாரும்
   நானோ மனிதரால் நிந்திக்கப்பட்டும்
   மனிதரால் ஒடுக்கபட்டும் இருக்கிறேன்

## பாடல் 72

இந்தியாவை இரட்சியும் இயேசுவே
எங்கள் இந்தியாவை இரட்சியும் இயேசுவே
இந்தியர்களை இரட்சிக்கவே
இறை தோமாவை அனுப்பினீரே -- 2

1. இயேசுவே நீர் நேசிக்கும் எங்கள் இந்தியா
   இயேசுவே நீர் இரட்சிக்கும் எங்கள் இந்தியா
   இயேசுவே நீர் போஷிக்கும் எங்கள் இந்தியா
   இயேசுவே நீர் பாதுகாக்கும் எங்கள் இந்தியா

2. பாவத்தை போக்கவே எங்கள் இந்தியா வந்தீரே
   சாபத்தை மாற்றவே எங்கள் இந்தியா வந்தீரே
   வியாதியை நீக்க எங்கள் இந்தியா வந்தீரே
   சுகத்தை கொடுக்கவே எங்கள் இந்தியா வந்தீரே

3. குடியை மாற்றவே எங்கள் இந்தியா வந்தீரே
   சமாதானத்தை கொடுக்கவே எங்கள்
   இந்தியா வந்தீரே
   வறுமை மாற்றவே எங்கள் இந்தியா வந்தீரே
   வளமையாக்கவே எங்கள் இந்தியா வந்தீரே

4. இயேசுவே நீர் நேசிக்கும் எங்கள் இந்தியா
   தீவீரவாதிக்கு விலக்கி காக்கவேண்டும்
   எங்கள் இந்தியா
   இயேசுவே நீர் நேசிக்கும் எங்கள் இந்தியா
   அழிவுக்கு விலக்கி காக்கவேண்டுமே
   எங்கள் இந்தியா

5. இயேசுவே நீர் நேசிக்கும் எங்கள் இந்தியா
   அன்னிய நாட்டுக்கு விலக்கி காக்கவேண்டும்
   எங்கள் இந்தியா
   இயேசுவே நீர் நேசிக்கும் எங்கள் இந்தியா
   கொள்ளை நோய்க்கு விலக்கி காக்கவேண்டுமே
   எங்கள் இந்தியா

6. பாகாலை அழிக்கவே இந்தியா வந்தீரே
   பரிசுத்தமாக்கவே இந்நியா வந்தீரே
   பரலோகம் சேர்க்கவே இந்தியா வந்தீரே
   நித்திய ஜீவனை கொடுக்கவே இந்தியா வந்தீரே
   பரம இயேசுவே நீர் வாழ்க -- 4

## பாடல் 73

யூதாவில் தேவன் அறியபட்டவர்
இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது
சாலேமில் அவருடைய கூடாரமும்
சீயோனில் அவருடைய வாசலுமுண்டு

அப்பா என் இயேசப்பா
உமக்கு என்றும் ஸ்தோத்திரம் அப்பா

1. சீயோனில் இருந்து வில்லின் அம்புகளும்
ஈட்டிகளும் முறிந்து விழுந்தது
பட்டயத்தையும் முறியடித்தாரே
யுத்த வீரன் என்பது அவர் நாமம்

2. யாக்கோபின் தேவனே நீர் பெரியவர்
உமக்கு முன் குதிரைகளும் உறங்கி விழுந்தது
வானத்தில் நியாயத்தீர்ப்பு வந்தது
சேனைகளின் கர்த்தாவே ஸ்தோத்திரம் என்றும்

3. மனிதனின் கோபம் உமது மகிமையை
என்றுமே விளங்கப்பண்ணுமே
மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர்
ராஜாக்களுக்கு தேவன் பயங்கரமானவர்

4. துன்மார்க்கனின் கொம்பை முறித்தீரே
நீதிமானின் கொம்பை உயர்த்தினீரே
இதை நான் என்றைக்கும் அறிவித்து
யாக்கோபின் தேவனை கீர்த்தனம்பண்ணுவேன்

## பாடல் 273

நல்ல போராட்டம் போராடுவேன்!!

ஓட்டத்தை ஜெயத்துடன் முடித்திடுவேன்!!
ஜெயம் பெற்று நான் என்றும் ஓடிடுவேன்!!
ஜெயம் பெற்று நான் என்றும் வாழ்ந்திடுவேன்!!

ஆமென்! ஆமென்!! அல்லேலுயா!!! - 4

1. எந்நாளும் இயேசுவை பாடிடுவேன்
விசுவாசத்தில் என்றும் நிலைத்திருப்பேன்
உலகத்தில் நான் என்றும் ஜெயித்திடுவேன்
எந்நாளும் இயேசுவை உயர்த்திடுவேன்

2. ஜெபத்தில் என்றும் நிலைத்திருப்பேன்
ஜெபத்தால் போராடி ஜெயம் பெருவேன்
யாக்கோபை போல நான் போராடுவேன்
இஸ்ரவேலாக நான் ஜெயித்திடுவேன்

3. யுத்தங்கள் என் மேல் வந்தாலும்
என்றும் எதற்கும் அஞ்சமாட்டேன்
விழித்திருந்து நான் ஜெபித்திடுவேன்
எந்நாளும் இயேசுவை துதித்திடுவேன்

4. கூப்பிடும் வேளையில் வந்திடுவார்
கன்மலைமேல் கால்களை நிறுத்திடுவார்
ஜெயத்தின் மேல் என்றும் ஜெயம் பெற்று
எந்நாளும் இயேசுவை போற்றிடுவேன்

## பாடல் 274

பிதாவே இவர்களை மன்னித்திடும்!!
இயேசுவே மன்னித்து மறந்திடும்!!
அறியாமல் செய்யும் பாவங்களை!!
அனைத்தும் தயவாய் மன்னித்திடும்!!!!

1. அறியாமல் நடக்கும் ஜனங்களையும்
தெரியாமல் செய்யும் பாவத்தையும்
அறியாமல் செய்வதை மன்னித்திடும்
இவர்களை மன்னித்து அணைத்திடுமே

2. இவர்களை மன்னித்து மாற்றிடுமே
இவர்களை இரட்சித்து அபிஷேகியும்
இவர்களை சபையில் உருவாக்கிடும்
இவர்களை பரலோகில் சேர்த்திடுமே

3. சவுலை பவுலாய் மாற்றின தேவன்
பவுலை மன்னித்து இரட்சித்தீரே
பவுலையும் ஊழியத்தில் தெரிந்தெடுத்தீர்
இவர்களை ஊழியத்தில் தெரிந்திடுமே

4. பாரத தேசத்திற்காய் இரங்கும் தேவா
பரலோக வாசியாக மாற்றும் தேவா
பாரத தேசத்தை பாது காத்திடும்
பரமன் இயேசுவே ஆசீர்வதியும்

## பாடல் 74

அபிஷேகம் பண்ணின கோரேஸ்க்கு முன்
ராஜாவின் கட்டுகளை அவிழ்த்திடவும்
வாசலை திறந்து வைத்திடவும்
வலக்கரம் பிடித்து நடத்திடுவேன்

1. உனக்கு முன் நான் சென்றிடுவேன்
உன்னோடு நான் என்றும் இருந்திடுவேன்
கோணலை செவ்வை ஆக்கிடுவேன்
குறைகளை நிறைவாய் மாற்றிடுவேன்

2. உனக்கு முன்னே போவேன் என்றார்
நானே தேவன் என்று அறியம்படி
வெண்கல கதவை நான் உடைத்து
இருப்பு தாழ்பாளை முறித்திடுவேன்

3. வாக்கு தந்த தேவன் உண்மையுள்ளவர்
தம் வார்த்தையின் படியே நடத்திடுவார்
மறைவில் இருக்கும் பொக்கிஷத்தையும்
மறக்காமல் உனக்கு கொடுத்திடுவார்

4. நானே தேவன் வேறொருவர் இல்லை
என்னை தவிர தேவனும் இல்லையே
பயப்படாதே உன் தேவன் நானே
ஆலோசனை விருப்பம் நிறைவேற்றுவேன்

# பாடல் 75

கோரேசை குறித்து அவன் என் மேய்ப்பன்
எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும்
தேவாலயத்தை நோக்கி நீ அஸ்திபாரபடு என்றும்
எனக்கு பிரியமான யாவற்றையும் செய்வான்

1. உன் மீறுதல்களை மேகத்தைபோலவும்
   உன் பாவங்களை கார் மேகத்தை போலவும்
   அகற்றி விட்டேன் என்றுரைத்த தேவன்
   அவரே இஸ்ரவேலின் தேவன் ஆனார்

2. வானங்களே களிகூர்ந்து பாடுங்களே
   கர்த்தர் இதை செய்தார் ஆர்ப்பரியுங்கள்
   பர்வதமே காடுகளே தேவனை துதியுங்கள்
   மரங்களே கெம்பீரமாய் முளங்குங்கள்

3. உன் மீட்பரும் தாயின் கர்ப்பத்தில்
   உன்னை உருவாக்கின தேவன் நான் என்றார்
   நான் யாவற்றையும் செய்கிற கர்த்தர் என்றாரே
   உன்னை நான் என்றும் மறப்பதில்லை

4. வானத்தையும் நானே விரித்தேன் என்றார்
   பூமியையும் நானே விரித்தேன் என்றார்
   என் ஊழியனின் வார்த்தையை நிலைப்படுத்தி
   என் ஸ்தானாதிபதியின் ஆலொசனையை நிறைவேற்றுவேன்

# பாடல் 275

எங்கள் தேவனை நாங்கள் ஆராதிக்கின்றோம்!!!
எங்கள் இயேசுவை நாங்கள் ஆராதிக்கின்றோம்!!!
உண்மையோடும் நாங்கள் ஆராதிக்கின்றோம்!!!
உருக்கத்தோடும் நாங்கள் ஆராதிக்கின்றோம்!!!

1. மனம்திரும்பி நாங்கள் ஆராதிக்கின்றோம்
   மறக்காமல் நாங்கள் ஆராதிக்கின்றோம்
   மனம் மலர்ந்து நாங்கள் ஆராதிக்கின்றோம்
   மன்னவர் இயேசுவை ஆராதிக்கின்றோம்

2. நியாயாதிபதியை நாங்கள் ஆராதிக்கின்றோம்
   நீதி செலுத்தி நாங்கள் ஆராதிக்கின்றோம்
   ஜெபத்தோடும் நாங்கள் ஆராதிக்கின்றோம்
   ஜெயத்தோடும் நாங்கள் ஆராதிக்கின்றோம்

3. வரப்போகும் மேசியாவை ஆராதிக்கின்றோம்
   பணிந்து குனிந்து நாங்கள் ஆராதிக்கின்றோம்
   பாடி ஆடி நாங்கள் ஆராதிக்கின்றோம்
   பரமன் இயேசுவை ஆராதிக்கின்றோம்

4. அல்லேலூயா சொல்லி ஆராதிக்கின்றோம்
   ஆரவாரத்தோடும் நாங்கள் ஆராதிக்கின்றோம்
   ஆண்டவர் இயேசுவை ஆராதிக்கின்றோம்
   அப்பா! அப்பா!! என்று நாங்கள் ஆராதிக்கின்றோம்

# பாடல் 276

உன்னதத்தில் வீற்றிருக்கும் இயேசைய்யா!!
உன்னதத்தை நோக்கியே பார்க்கிறேன்!!
நான் உம்மை தான் நோக்கியே பார்க்கிறேன்!!
நான் உம்மை தான் நோக்கியே பார்க்கிறேன்!!

வாரும் வாரும் இயேசைய்யா வாருமே!!!
வந்து என் விருப்பத்தை நிறைவேற்றும்!!! - 4

1. உம்மை போல் என்னையும் மாற்றிடும்
உம்மை போல் தாழ்மையும் தந்திடும்
உம்மை போல் பரிசுத்தம் தந்திடும்
உம்மை போல் பேசும் நாவும் தந்திடும்

2. அழைத்தீரே என்னை உம் ஊழியனாய்
ஆரோன் மோசேயை போலவும் அழைத்தீரே
அழைத்த உமக்கு உண்மையாய் நான் இருப்பேன்
அழைத்தவர் பணியை அனுதினம் செய்திடுவேன்

3. ஊழியனின் வார்த்தையை நிலைப்படுத்தினீர்
ஸ்தானாதிபதியாய் என்னையும் வைத்தீரே
மக்கள் மத்தியில் அற்புதம் செய்திடும்
என் மன்னவரே அதிசயம் செய்திடும்

4. உம் வார்த்தையினால் என்னோடு பேசிடும்
உம் வல்லமையால் அற்புதம் செய்திடும்
உம்மை நான் விடாமல் பற்றி வந்திடவும்
உம் கரத்தால் என்னை பிடித்து நடத்திடும்

# பாடல் 76

மாயை மாயை எல்லாமே மாயை
சூரியனுக்கு கீழே மனிதனும் மாயை

1. ஒரு சந்ததி போகிறது மரு சந்ததி வருகிறது
பூமியோ என்றென்றும் நிலைத்திருக்கிறது

2. சூரியன் உதிக்கிறது சூரியன் மறைகிறது
உதித்த இடத்திற்கே திரும்பவும் போகிறது

3. காற்று தெற்கே போய் வடக்கேயும் சுற்றுகிறது
சுற்றின இடத்திற்கே திரும்பவும் வருகிறது

4. நதி எல்லாம் சேர்ந்தாலும் கடல் நிறம்பாது
கடல் எல்லாம் நிறம்பினாலும் எல்லையை மீறாது

5. எல்லாம் வருத்தத்தினால் நிறைந்து இருந்தாலும்
மனுஷரால் சொல்லி தீர்த்திட முடியாது

6. காண்பதினால் கண் திருப்பதி ஆகிறதும் இல்லை
கேட்பதினால் செவி நிறப்ப படுவதும் இல்லை

7. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்
முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்

## பாடல் 77

வானத்தின் கீழ் இருக்கும் மனுகுலமே
இனி காலமும் செல்லாது மனுக்குலமே
இது கடைசி காலம் - 4

1. பிறக்க ஒரு காலம் உண்டு
   இறக்க ஒரு காலம் உண்டு
   நட ஒரு காலம் உண்டு
   நட்டதை பிடுங்க ஒரு காலம் உண்டு
2. கொல்ல ஒரு காலம் உண்டு
   குணமாக்க ஒரு காலம் உண்டு
   இடிக்க ஒரு காலம் உண்டு
   கட்ட ஒரு காலம் உண்டு
3. அழ ஒரு காலம் உண்டு
   நகைக்க ஒரு காலம் உண்டு
   புலம்ப ஒரு காலம் உண்டு
   நடனம் பண்ண ஒரு காலம் உண்டு
4. கற்களை எறிந்து விட ஒரு காலம் உண்டு
   கற்களை சேர்க்க ஒரு காலம் உண்டு
   தழுவ ஒரு காலம் உண்டு
   தழுவாமலிருக்க ஒரு காலம் உண்டு
5. தேட ஒரு காலம் உண்டு
   இழக்க ஒரு காலம் உண்டு
   காப்பாற்ற ஒரு காலம் உண்டு
   காப்பாற்றாமலிருக்க ஒரு காலம் உண்டு
6. கிழிக்க ஒரு காலம் உண்டு
   தைக்க ஒரு காலம் உண்டு
   மவுனமாயிருக்க ஒரு காலம் உண்டு
   பேச ஒரு காலம் உண்டு
7. சிநேகிக்க ஒரு காலம் உண்டு
   பகைக்க ஒரு காலம் உண்டு
   யுத்தம்பண்ண ஒரு காலம் உண்டு
   சமாதானம்பண்ண ஒரு காலம் உண்டு
8. இனி காலம் இல்லை நேரம் இல்லை
   இனி காலமும் செல்லாது
   நீ மனந்திரும்பி தேவ வார்த்தையில்
   என்றென்றும் நிலைத்திரு

## பாடல் 277

எங்கள் தேவனை நாங்கள் ஆராதிக்கின்றோம்!!
எங்கள் இயேசுவை நாங்கள் ஆராதிக்கின்றோம்!!
எங்கள் இராஜாவை நாங்கள் ஆராதிக்கின்றோம்!!
எங்கள் தெய்வத்தை நாங்கள் ஆராதிக்கின்றோம்!!

ஆராதிக்கின்றோம்! ஆராதிக்கின்றோம்!!
துதித்து நாங்கள் ஆராதிக்கின்றோம்!!
ஆமேன் ஆமேன் அல்லேலூயா!! - 4

1. பணிந்து குனிந்து நாங்கள் ஆராதிக்கின்றோம்
   பாடி துதித்து நாங்கள் ஆராதிக்கின்றோம்
   எழுந்து நிமிர்ந்து நாங்கள் ஆராதிக்கின்றோம்
   அசைந்து ஆடி நாங்கள் ஆராதிக்கின்றோம்
2. இரட்சித்தவரை நாங்கள் ஆராதிக்கின்றோம்
   மன்னித்தவரை நாங்கள் ஆராதிக்கின்றோம்
   அபிஷேத்தவரை நாங்கள் ஆராதிக்கின்றோம்
   அற்புதம் செய்தவரை நாங்கள் ஆராதிக்கின்றோம்
3. அதிசய தேவனை நாங்கள் ஆராதிக்கின்றோம்
   அக்கினி தேவனை நாங்கள் ஆராதிக்கின்றோம்
   ஆனந்தமாய் நாங்கள் ஆராதிக்கின்றோம்
   ஆர்ப்பரித்து நாங்கள் ஆராதிக்கின்றோம்
4. எங்கள் தேவனை போற்றி ஆராதிக்கின்றோம்
   எங்கள் தேவனை உயர்த்தி ஆராதிக்கின்றோம்
   எங்கள் தேவனை வாழ்த்தி ஆராதிக்கின்றோம்
   வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என்றும் ஆராதிக்கின்றோம்

## பாடல் 278

பெலன் தாரும் எங்கள் தேவனே!!
சுகம் தாரும் எங்கள் தேவனே!!
வாரும் எங்கள் தேவ தேவனே!!
வந்து தூக்கி நிறுத்தும் தேவனே!!!

அல்லேலூயா! அல்லேலூயா!!!!
ஆமேன்! ஆமேன்!! அல்லேலூயா!!!!

1. மன்னிக்கும் எங்கள் தேவனே
மன்னித்து மாற்றும் தேவனே
மனதுருகும் எங்கள் தேவனே
நாங்கள் மனதார வாழ்த்துகிறோம்

2. ஜீவன் தந்த எங்கள் தேவனே
உம் இரட்சிப்பினால் அலங்கரியும்
என் ஆவி அத்துமா சரீரத்தையும்
உம் பாதத்தில் படைக்கிறேன்

3. பெலன் தந்த தேவனை ஆராதிப்பேன்
எனக்கு சுகம்தந்த தேவனை ஆராதிப்பேன்
என்னை மன்னித்த தேவனை ஆராதிப்பேன்
என்னை இரட்சித்த தேவனை ஆராதிப்பேன்

4. ஆடிப்பாடி என்றும் ஆராதிப்பேன்
உம் வருகை வரை ஆராதிப்பேன்
ஆரவாரத்தோடும் ஆராதிப்பேன்
அல்லேலூயா சொல்லி ஆராதிப்பேன் - நான்

## பாடல் 78

நேர்த்தியான இடத்தில் எனக்கு பங்கு கிடைத்தது
சிறப்பான சுதந்திரம் எனக்கு உண்டு
ஆலோசன தந்த தேவனை நான் துதிப்பேன்
இரா காலத்திலும் தேவனை நான் துதிப்பேன்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா ஓசன்னா!

1. கர்த்தரை எப்போதும் எனக்கு முன்பாக
நிறுத்தியே நோக்கி நான் பார்க்கிறேன்
எதற்கும் நான் அசைக்கவே படுவதில்லையே
ஆகையால் என் உள்ளம் என்றும் பூரிக்கின்றது

2. என் ஆத்துமாவை பாதாளத்தில் விட்டுவிடீர்
பரிசுத்தவானின் அழிவை என்றும் காணவிடீர்
ஜீவ மார்க்கத்தை எனக்கு தெரிய படுத்தினீர்
தேவ சமுகத்தில் பூரண ஆனந்தம் உண்டு

3. கர்த்தாவே நியாயத்தை என்றும் கேளுமே
என் கூப்பிடுதலை கவனித்து தூக்கி நிறுத்துமே
என் ஜெபத்துக்கு செவிசாய்த்து இரங்கி வாருமே
இரங்கி வந்து என்னை உயர்த்தி விடுமே

## பாடல் 79

உத்தமமான வழியில் என்னை நடத்திடுமே
உண்மையான இதயத்தோடு நடத்திடுமே - 2

கர்த்தாவே உம்மையே கீர்த்தனம் பண்ணுவேன்
என் தேவனே உம்மை என்றும் துதித்திடுவேன்

1. மாறுபாடான வழியில் நான் நடக்கமாட்டேன்
   மாறுபடும் இதயத்தை அகற்றிடுமே
   பொல்லாதவனை நான் என்றும் வெறுத்திடுவேன்
   என் தேவனோடு என்றும் நான் நடந்திடுவேன்
2. அயலானை ரகசியமாய் தூஷிக்கமாட்டேன்
   அயலானை என்றும் நான் நேசித்திடுவேன்
   அன்னியனை தேவ சபைக்கு கொண்டு வருவேன் நான்
   அன்பு காட்டி அரவணைத்து நிற்க வைப்பேன் நான்
3. தீங்கான காரியத்தை நான் அகற்றிடுவேன்
   தீங்கு செய்வாரோடு நான் சேரமாட்டேன்
   தீங்குக்கு நான் துணை நிற்கமாட்டேன்
   தீங்கை தேவனாலே நான் மேற்கொள்வேன்
4. அக்கிரமம் நான் என்றும் செய்யமாட்டேன்
   அக்கிரமம் செய்வாரோடு இருக்கமாட்டேன்
   அனுதினமும் வேதத்தை நான் வாசித்திடுவேன்
   அனுதினம் தேவனை நோக்கி ஜெபித்திடுவேன்
5. தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடு
   உத்தமமான வழியிலே நடப்பார்கள்
   தேவனை என்றும் நான் துதித்திடுவேன்
   தேவனை என்றும் நான் உயர்த்திடுவேன்

## பாடல் 279

அல்லேலூயா சொல்லி ஆர்ப்பரிப்பேன்!!
நான் ஓசன்னா சொல்லி உயர்த்திடுவேன்!!
இயேசுவை போல யாரும் இல்லையே!!
அன்புள்ள தெய்வம் வேரு யாருமில்லை!!

தந்தாரே! தந்தாரே! ஜீவனை தந்தாரே!!!
தந்தாரே! தந்தாரே! புதுவாழ்வு தந்தாரே!!!

1. கர்த்தாவே என்னை கை தூக்கியெடுத்தீரே
   உம்மையே நான் என்றும் ஆராதிப்பேன்
   சத்துரு என்னை மேற்கொள்ளாமல்
   அனுதினம் கிருபையால் காத்துகொள்ளும்
2. கர்த்தாவே நீர் என் ஆத்துமாவை
   பாதளத்தில் இருந்து ஏறப்பண்ணினீர்
   எனக்கு செவி சாய்த்து தூக்கியெடுத்தீர்
   உம்மை நான் சாட்சியாய் உயர்த்திடுவேன்
3. என் புலம்பலை ஆனந்த களிப்பாக
   மாறப்பண்ணினீரே நன்றி ஐயா
   நீர் என் இரட்டை களைந்துப்போட்டு
   மகிழ்ச்சியாய் என்னை இடைகட்டினீர்
4. என் தேவனாகிய கர்த்தாவே தினமும்
   உம்மை நான் போற்றி வாழ்த்திடுவேன்
   நீர் எனக்கு போதும் ஐயா
   வேறொன்றும் எனக்கு வேண்டாம் ஐயா

# பாடல் 280

கர்த்தரை என்றும் துதித்திடுங்கள்!!
அவரை என்றும் நீங்கள் மறக்காதிருங்கள்!!
கர்த்தருக்கு எதிராய் போர் செய்யாதே!!!
கர்த்தருக்கு விரோதமாய் எழும்பாதே!!!

1. கர்த்தரின் வல்லமையை தினம் நாடுங்கள்
கர்த்தரின் சமுகத்தை தினம் தேடுங்கள்
கர்த்தரை என்றும் துதித்து பாடுங்கள்
கர்த்தரின் நீதியை நிறைவேற்றுங்கள்

2. கர்த்தரின் ஊழியரே துதித்திடுங்கள்
அவரின் சேனைகளே துதித்து போற்றுங்கள்
பிள்ளைகளே பெரியோரே துதித்திடுங்கள்
வாலிபரே கன்னியரே நீங்களும் துதியுங்கள்

3. கர்த்தரின் வார்த்தையை தினம் தேடுங்கள்
பாவத்தை விட்டு நீங்கள் ஓடிடுங்கள்
நித்தமும் தேவனை நீங்கள் தேடுங்கள்
அனுதினம் இயேசுவை கண்டிடுங்கள்

4. கர்த்தரின் கட்டளையை நிறைவேற்றுங்கள்
நீதியின் வாசலை தினம் தேடிடுங்கள்
கர்த்தரின் சேனையாய் நின்றிடுற்கள்
துதித்து போற்றி தேவனை உயர்த்திடுங்கள்

# பாடல் 80

தாம் உண்டாக்கின ஜனங்களுக்காய்
பரலோகம் விட்டு வந்தவரே
பூமியில் பிறந்த இயேசு
பாவ சாபம் மன்னித்தீரே

இயேசுவே நீர் வாழ்க -- 3

1. பிலாத்துவின் அரண் மனையில்
மூள் முடி சூட்டபட்டவராய்
நியாயம் விசாரிக்கப்பட்டவராய்
சேவகரால் சிட்சிக்கப்பட்டவராய்

2. எருசலேம் வீதி வழியாய்
சிலுவையை சுமந்து சென்றீரே
வேதனை தாங்காமல் குப்புற விழுந்தவரே
போர்சேவகன் கையினால் அடிபட்டீரே

3. கொல்கதா மலை மீதினில்
பார சிலுவையில் அறையபட்டீரே
என் பாவ சாபம் மன்னித்து
என்னை பரலோகம் சேர்த்திடும் தேவா

4. இந்த உலகில் எனக்காக
பாடுபட்ட இயேசுவே நன்றி
நன்றி நன்றி நன்றி ஐயா
வாழ்க வாழ்க இயேசுவின் நாமம்

# பாடல் 81

தியாகம் தியாகம் என்றேன் நான்
தியாகம் தியாகம் என்றேன் -- 2
தியாகம் உள்ளோர் யாரும் இல்லையே -- 4

1. இந்த உலகில் தியாகம் உள்ளோர் யாரும் உண்டோ?
மனிதருக்குள் தியாகம் உள்ளோர் யாரும் உண்டோ?
அதிகாரியில் தியாகம் உள்ளோர் யாரும் உண்டோ?
அரசியல் வாதியல் தியாகம் உள்ளோர் யாரும் உண்டோ?

2. சந்நியாசி தியாகம் நான் என்றேன் - 2
சந்நியாசியில் தியாகம் நான் காணவில்லை - 2
பரிசுத்தவானில் தியாகம் நான் என்றேன் - 2
பரிசுத்தவானில் தியாகம் நான் காணவில்லை - 2

3. இரட்சிக்கப்பட்டோர் தியாகம் நான் என்றேன்
இரட்சிக்கபடடோனில் தியாகம் நான் காணவில்லை
ஊழியம் செய்பவர் தியாகம் நான் என்றேன்
ஊழியம்செய்பவனில் தியாகம் நான் காணவில்லை

4. இவ்வுலகில் தியாகம் உள்ளோர் ஒருவர் தான்
அவர் தான் இயேசு அவர் தான் இயேசு
பரலோகம் துறந்தார் அவர் தான் இயேசு
மனிதருக்காய் வந்தார் அவர் தான் இயேசு

5. பெத்லேகேமில் பிறந்தார் அவர் தான் இயேசு
மனிதனோடு வாழ்ந்தார் அவர் தான் இயேசு
கஷ்டம் பாரம் அறிந்தார் அவர் தான் இயேசு
பாவத்தை மன்னித்தார் அவர் தான் இயேசு

6. பிசாசை துறத்தினார் அவர் தான் இயேசு
வியாதியை மாற்றினார் அவர் தான் இயேசு
மதுபானத்தை மாற்றினார் அவர் தான் இயேசு
என்னை இரட்சித்தார் அவர் தான் இயேசு

7. என் வாழ்க்கையை மாற்றினார் அவர் தான் இயேசு
எனக்கு சமாதானம் தந்தார் அவர் தான் இயேசு
என்னை ஆசீர்வதித்தார் அவர் தான் இயேசு
என்னை பரலோகம் கொண்டு சேர்ப்பார் அவர்தான் இயேசு

# பாடல் 281

என் தேவனே! என் இயேசுவே!!
காலையில் நான் உம்மை துதித்திடுவேன்!!
என் இயேசுவே என் ராஜாவே!!!
காலையில் நான் உம்மை வாழ்த்திடுவேன்!!!

1. உம்மை போல என்னை மாற்றும் என் தேவனே
உம்மை போல விழிப்பை தாரும் என் தேவனே
உம்மை போல வல்லமை தாரும் என் தேவனே
உம்மை போல நடக்க செய்யும் என் தேவனே

2. உம்மை போல தாங்க பெலன் தாரும் என் தேவனே
உம்மை போல சுமக்க பெலன் தாரும் என் தேவனே
உம்மை போல பேச நாவு தாரும் என் தேவனே
உம்மை போல சகிக்க பெலன் தாரும் என் தேவனே

3. உம்மை போல அற்புதம் செய்யவும் என் தேவனே
உம்மை போல ஜனங்கள் மத்தியில் என் தேவனே
உம்மை போல ஆதிசயம் காணவும் என் தேவனே
உம்மை போல தூக்கி நிறுத்திட என் தேவனே

4. உம்மை போல ஆதிகாலையில் ஜெபித்திட என் தேவனே
உம்மை போல கிருபையால் என்னை நிறப்பிடும் என் தேவனே
உம்மை போல பெலத்தால் என்னை நிறப்பிடும் என் தேவனே
உம்மை போல ஆவியால் என்னை நிறப்பிடும் என் தேவனே

# பாடல் 282

திருமணமாம் திருமணம்!!
ஆதியில் கொண்ட திருமணம்!!
ஏதேன் தோட்ட திருமணமாம்!!!
தேவன் நியமித்த திருமணம்!!!

தந்தாரே தேவன் தந்தாரே (2) உனக்கு!!!
துணையை தேவன் தந்தாரே!!! - 2

1. ஆதாம் என்ற மணமகனாம்
ஏவாள் என்ற மணமகளாம்
பரலோக தேவன் தாம்
சேர்த்து வைத்த திருமணம்

2. அன்புடன் ஆதாமும்
ஏவாளும் ஒன்று சேர்ந்து
பூமியில் வாசம் பண்ண
தேவனால் அனுப்பபட்டார்

3. அன்புடன் வாசம் பண்ணி
பிள்ளைகளை பெற்றெடுத்தார்
ஆதாம் ஏவாள் ஒன்று சேர்த்து
சந்ததியை பெருகசெய்தார்

4. மணமகனே! மணமகளே!!
தேவன் இணைத்த மணமக்களே!!!
அன்புடன் கூடிவாழ்ந்து
தேவ சித்தம் நிறைவேற்றுங்கள்

5. எடுக்கப்பட்ட மண்ணையும்
பூமியின் தோட்டத்தையும்
பண்படுத்தி பாதுகாக்க
தேவன் அனுப்பிவிட்டார்

# பாடல் 82

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
என் இயேசுவின் நாமத்தை
வாழ்த்துவேன் வாழ்த்துவேன் வாழ்த்துவேன்
என் இயேசுவின் புகழை

ஆமேன் அல்லேலுயா -- 4

1. போற்றுவேன் (3) என் இயேசுவின் நாமத்தை
உயர்த்துவேன்(3) என் இயேசுவின் அன்பை

2. என் ஆத்துமாவே கர்த்தரை என்றும் நீ துதித்திடு
அவருடைய நாமத்தை என்றும் நீ ஸ்தோத்தரி

3. தேவன் உனக்கு செய்த எல்லா உபகாரத்தையும் மறக்காதே
தேவன் உன்னை மன்னித்து நோய்களெல்லாம் மாற்றினாரே

4. உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு காப்பாரே
நன்மையாலும் கிருபையாலும் உன்னை என்றும் நிறப்பிடுவார்

5. ஒடுக்கப்பட்டோர் யாவருக்கும் தேவன் நியாயம் என்றும் செய்தார்
தம் வழியை மோசேக்கு அவர் ஜனத்துக்கும் தெறிவிப்பாரே

6. பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ
அவ்வளவாய் தேவ கிருபை தம் ஜனத்தின் மேல் இருக்கிறது

7. தேவன் எப்போதும் கடிந்துக் கொள்ளார் என்றெக்கும் கோபம் கொண்டிரார்
அவர் ஆளுகிற எவ்விடத்திலும் கர்த்தரை போற்றிடுங்கள்

# பாடல் 83

எழும்பிடு புறப்படு உன் தேவனுக்காய்
துதித்திடு ஜெபித்திடு ஜெயம் பெற்றிட
வாலிபனே புறப்படு இயேசு முன் செல்கிறார்
சாத்தானை துரத்திட நீ புறப்படு

1. வீரங்கொண்டு எழும்பி நீ புறப்படு
யுத்த வீரனாய் எழும்பி நீ புறப்படு
தேவ சேனையாய் எழும்பி நீ புறப்படு
ஜெய வீரனாய் எழும்பி யுத்தம் செய்திடு

2. திறப்பிலே நின்று ஜெபித்திட வா
சிங்கங்களின் வாய்களை கட்டிட வா
தேசத்தின் கட்டுகளை அறுத்திட வா
தேசத்தில் ஜெயத்தை பெற்றிட வா

3. மோசேயைப் போல் வைராக்ய மூண்டு வா
மோசேயை போல் செங்கடல் பிளந்திட வா
மோசேயை போல் அற்புதம் செய்திட வா
மோசேயை போல் ஜனங்களை நடத்திட வா

4. தெரு தெருவாய் நற்செய்தி சொல்லிட வா
அழியும் ஆத்துமாக்களை மீட்டிட வா
இயேசுவை போல் நீயும் நடந்திட வா
மனத்தாழ்மையை என்றும் அணிந்து வா

5. நம் இயேசுவின் நாமத்தை உயர்த்திட வா
நம் இயேசுவுக்காய் என்றும் வாழ்ந்திட வா
நம் இயேசுவை போல் பாடு சகித்திட வா
நம் இயேசுவை போல் ஜெயம் பெற்றிட வா

# பாடல் 283

இயேசுவின் பிள்ளைகள் நாம் ஒன்று சேர்ந்து!!!
மணமக்கள் வாழ்ந்திட வாழ்க! வாழ்க!! வாழ்த்திடுவோம்!!!

1. கர்த்தர் நல்லவர் என்பதை இவர்களும் ருசித்து
கானாவுர் கலியாணம் நடந்தது போலவும்
இன்றும் அற்புதம் இயேசு ராஜா செய்திட
கர்த்தரை நோக்கி நாம் வாழ்க என்று
வாழ்த்திடுவோம்

2. மன்னனாம் ஈசாக்கு மணமகளோடு
அன்பிலும் பறவை போல் ஒன்றித்து வாழ்ந்திட
இன்றும் ஆண்டவர் இருபேரையும் ஆசீர்வதிக்க
வேண்டுதலோடு நாம் இருபேரையும் வாழ்த்திடுவோம்

3. மணமகள் ரெபெக்காள் இணைபிரியாமல்
மணமகன் ஈசாக்கில் மிக அன்பு கூர்ந்து
மனைவிக்கழகு என்றும் கீழ்ப்படிந்து இவர்கள்
பெற்று பெருகிட நாம் என்றும் வாழ்த்திடுவோம்

4. புத்திர பாக்கியம் புகழும் நன்கு வாழவும்
சத்தியம் சாந்தம் சுத்த நல்ல இருதயத்தோடும்
நித்திய ஜீவனும் பெற்று இருபேருமாய்
பக்தியாய் வாழ்ந்திட வாழ்க என்றும் வாழ்த்திடுவோம்

## பாடல் 284

வானத்தின் கீழே பூமியின் மேலே

இயேசுவின் நாமமே உன்னத நாமம்

இயேசுவின் நாமமே அன்பின் நாமமே

1. இயேசுவின் நாமம் தான் பாவத்தை மன்னிக்கும்
   இயேசுவின் நாமம் தான் உன்னை மாற்றும்
   இயேசுவின் நாமம் தான் மன்னித்து மாற்றும்

2. இயேசுவின் நாமம் தான் உன்னை இரட்சிக்கும்
   இயேசுவின் நாமம் தான் வெறுக்காத நாமம்
   இயேசுவின் நாமம் தான் அணைக்கும் நாமம்

3. இயேசுவின் நாமம் தான் உன்னை நிறுத்தும்
   இயேசுவின் நாமம் தான் உன்னை உயர்த்தும்
   இயேசுவின் நாமம் தான் உன்னை தூக்கியெடுக்கும்

4. இயேசுவின் நாமம் தான் எதையும் செய்யும்
   இயேசுவின் நாமம் தான் நன்மை செய்யும்
   இயேசுவின் நாமம் தான் எல்லாம் செய்யும்

## பாடல் 84

எங்கள் தேவன் ராஜாதி ராஜா
எங்கள் தேவன் கர்த்தாதி கர்த்தர்
ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

1. எங்கள் தேவன் உயர்ந்தவர் - 2
   எங்கள் தேவன் நல்லவர் - 2
   அல்லேலுயா ஓசன்னா - 4

2. எங்கள் தேவன் பெரியவர் - 2
   எங்கள் தேவன் பரிசுத்தர் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

3. எங்கள் தேவன் தேவாதி தேவன் - 2
   எங்கள் தேவன் மகா பெரியவர் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

4. காண்டா மிருகத்தின் கொம்பைப்போலவும்-2
   என் கொம்பை உயர்த்துகின்றார் - 2
   அல்லேலூயா ஓசன்னா - 4

5. புது எண்ணையால் என் தலையை - 2
   அபிஷேகம் செய்கின்றார் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

6. ஜீவனுள்ள நாளெல்லாம் - 2
   நன்மை கிருபை பின் தொடரும் - 2
   அல்லேலூயா ஓசன்னா - 4

7. சத்துரு முன்பாக ஒரு பந்தியை - 2
   தேவன் எனக்கு ஆயத்த படுத்தினார் - 2
   ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

# பாடல் 85

நீதிமானின் கொம்புகளை உயர்த்தும் தேவன்
துன்மார்க்கனின் கொம்புகளை வெட்டிப்போடுவார்
புயல்போல துன்பங்கள் உன்னை சூழ்ந்தாலும்
பறந்து காக்கும் பட்சி போல உன்னை காத்திடுவார்-2

அல்லேலூயா ஓசன்னா - 3

1. உலகமே உன்னை வெறுத்து தள்ளினாலும்
   வெறுக்காத தேவன் உன்னோடிருப்பார்
   ஜெபத்தை விடாமல் பற்றி ஜெபித்திடு
   ஜெயம் கொடுக்கும் தேவன் ஜெயம் தந்திடுவார்

2. நீதிமானே என்றும் நீ கலங்கி நிற்காதே
   தேவனை நோக்கி என்றும் நீ விழித்திரு
   கஷ்டம் கண்ணீர் என்று நீ பதறிவிடாதே
   பதறாமல் இயேசு உன்னை நடத்திடுவார்

3. மனிதனின் நிந்தனைக்கு சோர்ந்து விடாதே
   எழுந்து நீ கர்த்தருக்குள் நிமிர்ந்து நில்லு
   சீயோனுக்கு இரங்கும் தேவன் அவரே
   உனக்கும் இறங்கி ஆறுதல் தருவார்

4. யாக்கோபு என்னும் என் மகனே
   இஸ்ரவேல் என்ற என் சிறுகூட்டமே
   நான் உனக்கு எந்நாளும் துணைநிற்கிறேன்
   சேனைகளின் கர்த்தர் வாக்குரைக்கிறார்

5. போராடிப்பதற்கு நான் உன்னை என்றும்
   புதிதும் கூர்மையான யந்திரமாக்குகிறேன்
   மலைகளை மிதித்து நொருக்கிடுவாய்
   குன்றுகளை பதறுக்கு ஒப்பாக்கிடுவாய்

# பாடல் 285

என் மகனே என் மகளே உனக்கு தெரியுமா ?
மனித வாழ்க்கை மாயை தான் உனக்கு தெரியுமா ?
மனிதனே மனிதனே உன் வாழ்க்கையை நீ
அறிந்துகொள்
மனித வாழ்க்கை மரணத்தோடும் முடிந்து போவதில்லை
ஐயா

1. மனித வாழ்க்கை இவ்வுலகில் மாயையான
   வாழ்க்கைகள்
   மாயை வாழ்க்கை மாறிபோகும் நிலையான
   வாழ்க்கையுண்டு
   மரணத்திற்கு பின்னால் புது வாழ்வு உண்டு
   பரலோகத்தில் வாழ போகும் புது வாழ்வு தான்

2. மனிதனே மனிதனே உன் வாழ்க்கையை நீ
   மறக்காதே
   பரலோக வாழ்க்கை நிரந்தரம் உனக்கு
   இயேசுதருவார்
   பரலோகம் செல்லும் வழி இயேசு வழி தான்
   அவரே அல்லாமல் வழி வேறு இல்லை

3. பரலோகம் செல்ல பரிசுத்த வேதம் வழி காட்டிடும்
   வேதம் சொல்லும் வழியில் நீ நடந்து சென்றிடு
   கற்பனையின் பாதையில் நீ நடந்து செல்
   கட்டளையின் பாதையில் நீ நடந்து செல்

4. பரலோகில் ஆபிரகாமின் மடியில் இருக்கலாம்
   பரலோகில் ஈசாக்கோடு சேர்ந்து பேசலாம்
   பரலோகில் யாக்கோபோடு கூட மகிழலாம்
   பரலோகில் தேவனோடு ஆடி பாடலாம்.

## பாடல் 286

சீமோனே சீமோனே என் ஊழியனே
நேசிக்கின்றாயா என்னை நேசிக்கின்றாயா
சோதனைகள் வரும் போதெல்லாம்
விழித்திருந்து ஜெயம் பெற்றிடு நீ

1. ஆரோனைப்போல் உன்னை அழைத்தேன்
ஆடுகளை சிதறாமல் நீ மேய்ப்பாயா?
விழித்திருந்து ஆடுகளை நீ மேய்த்திடு
உலகத்திற்காய் நீ சேவை செய்யாதே - இந்த

2. என் சேவையில் என்றும் நிலைத்து நின்றிடு
சீக்கிறமாய் நான் இதோ வேகம் வருகின்றேன்
உலகில் உனக்கு உபத்திரவம் உண்டு
இவ்வுலகை நான் தினம் ஜெயித்தேன்

3. மோசே போன்ற என் ஊழியனே
என் சேவையில் நிலைத்து நின்றிடு
உலகத்தை நம்பி நீ செய்யாதே
என்னை நம்பி என் சேவை நீ செய்திடு

4. பாறையான பேதுருவே பதறாமல் சேவைசெய்
உலக பாசம் வெறுத்து சிலுவை சுமந்து செல்
சேவையில் போராடி வெற்றி பெற்றிடு
ஜெயத்தின் மேல் ஜெயம் உன்னை தேடி வந்திடும்

5. அவரோடு கூட பாடு சகித்தால்
அவரோடு கூட ஆழுகை செய்வாய்
அவரை நீ மறுதலித்தால்
உன்னை அவர் மறுதலிப்பார்.

## பாடல் 86

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ
எவனுடைய பாவங்கள் மூடப்பட்டதோ
எவனுடைய அக்கிரமத்தை தேவன் எண்ணாரோ
அவனே இவ்வுலகில் பாக்கியவானாவான்

1. நீதிமானே கர்த்தருக்குள் களிகூருங்கள்
சுரமண்டலத்தால் கர்த்தரை துதித்துப் பாடுங்கள்
வாத்தியங்களை ஆனந்தமாய் வாசித்திடுங்கள்
புதுப்பாட்டை தேவனுக்கு என்றும் பாடுங்கள்

2. நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்
செம்மையானவர் வம்சம் ஆசீர்வதிப்பார்
தேவனுடைய வார்த்தையினால் வானங்களும்
கர்த்தருடைய காருண்யத்தால் நிறைந்திருக்கும்

3. பூமியெல்லாம் கர்த்தருடைய காருண்யத்தால்
எப்போதும் நிறைந்து இருக்கின்றது
தேவன் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்
நீதிமான் ஆனந்த முளக்கமிடுவான்

4. தேவனுடைய ஆலோசனை நித்தியமாகவும்
அவருடைய நினைவுகள் தலைமுறையாகவும்
அது நித்திய நித்திய காலம் உனக்குள் இருக்குமே
அது என்றும் உனக்கு நன்மையாக மாறிவிடுமே

5. தேவனை தங்களுக்கு தெய்வமாகவும்
சுதந்திரமாக தெரிந்து கொண்ட ஜனங்களும்
இவ்வுலகில் பாக்கியவானாய் இருப்பார்கள்
தேவன் எல்லா ஜனத்தையும் காண்கின்றாரே

6. தேவனுக்கு பயந்திருக்கும் தேவ மனிதனை
கர்த்தருடைய கிருபை என்றும் காக்குமே
அவரே எந்நாளும் காக்கும் தேவன்
அஞ்சாதே எந்நாளும் உன்னோடிருப்பார்

# பாடல் 87

துதியுங்கள் துதியுங்கள் நம் தேவனையே
அல்லேலூயா ஓசன்னா சொல்லி துதியுங்கள்

1. சேனைகளின் கர்த்தரை சேர்ந்து துதியுங்கள்
சேனாதிபதியை உயர்த்தி துதியுங்கள்
மன்னாதி மன்னவரை மகிழ்ந்து துதியுங்கள்
மகிமையின் தேவனை என்றும் துதியுங்கள்

2. தேவாதி தேவனை தினமும் பாடுங்கள்
தேசமெல்லாம் சொல்லி துதித்துப் பாடுங்கள்
இராஜாதி இராஜாவை இசைத்துப் பாடுங்கள்
கர்த்தாதி கர்த்தரை கருத்தோடு பாடுங்கள்

3. தூதர்களின் கூட்டமே சேர்ந்து பாடுங்கள்
கர்த்தரின் சேனைகளே நீங்களும் பாடுங்கள்
சூரிய சந்திரரே தேவனை பாடுங்கள்
சகல நட்சத்திரமே நீங்களும் பாடுங்கள்

4. வானாதி வானங்களே வாழ்த்திப் பாடுங்கள்
ஆகாய மண்டலமே ஆடிப்பாடுங்கள்
பூமியின் குடிகளே புகழ்ந்து பாடுங்கள்
மகா மச்சங்களே மகிழ்ந்து பாடுங்கள்

5. அக்கினியே கல் மழையே தேவனை பாடுங்கள்
ஆகாயத்தில் உள்ளவயே நீங்களும் பாடுங்கள்
கர்த்தர் சொன்னபடி செய்யும் பெருங் காற்றே
வானாதி வானவரை துதித்துப் பாடுங்கள்

6. மலைகளே குன்றுகளே தேவனைப் பாடுங்கள்
கனி மரங்களே கேதுருக்களே துதித்துப் பாடுங்கள்
வாலிபரே கன்னியரே உயர்த்திப் பாடுங்கள்
பெரியோரே பிள்ளைகளே வாழ்த்திப் பாடுங்கள்

7. கர்த்தருக்கு பயந்தோரே சேர்ந்து துதியுங்கள்
தேவனுடைய நாமமே மகா உயர்ந்தது
கர்த்தர் தம் ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்
தேவ அன்பு எல்லாவற்றிற்கும் மேலானது

# பாடல் 287

பத்மூ என்னும் தீவினிலே தீவினிலே

நான் இருக்கும் இடத்தில் இயேசு வந்தார்
என் பின்னால் எக்காள சத்தம் கேட்டது
நான் அல்பா ஓமேகா என்றும் சொன்னது

ஆடுவோம் பாடுவோம் ஒன்று கூடுவோம்
நம் தேவனை துதித்து என்றும் உயர்த்திடுவோம்

1. முந்தினவரும் பிந்தினவரும் நானே என்றார்
ஆசியாவின் சபைகளுக்கு எழுது என்றார்
தேவன் சொன்னபடி யோவானும் எழுதினான்
ஏழு சபைகளுக்கும் அனுப்பிவிட்டான்

2 ஏழு பொன் குத்துவிளக்கு மத்தியிலே
நிலையங்கி தரித்தவராயும் மார்பருகே
பொற்கச்சை கட்டியிருந்த மனித குமாரன்
இயேசு ராஜாவை நான் கண்டேன்

3. தேவனின் சிரசுமயிரும் வெண்மையானது
பஞ்சைப்போலவும் உறைந்த வெண்மையானது
அவருடைய பாதங்கள் பிரகாசமானது
அவருடைய சத்தம் இறைச்சல் போன்றது

4. தேவனின் கண்கள் அக்கினி சுவாலைப்போன்றது
பாதங்கள் பிரகாசமான வெண்கலம் போன்றது
வலது கரத்தில் ஏழு நட்சத்திரம் இருந்தது
வாயில் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டு வந்தது.

# பாடல் 288

எபேசு சபையின் தூதனுக்கு நீ
எழுதவேண்டிய வார்த்தை என்னவெனில்
ஏழு நட்சத்திரத்தை வலது கரத்தில்
ஏந்தி நிற்கும் தேவன் சொல்கிறார்

1. குத்துவிளக்கின் மத்தியில் உலாவுகின்றவர்
உன் குறைகளை இயேசு சொல்லுகின்றார்
கிரியைகளையும் உன் பொருமைகளையும்
பொல்லாததை சகிக்க கூடாதிருப்பதையும் - நீ

2. அப்போஸ்தலர்களை நீ சோதித்ததையும்
சகலத்தையும் தேவன் அறிந்திருக்கின்றார்
உன் சகிப்புதன்மையும் பொருமைகளையும்
பிரயாசயாசத்தையும் தேவன் அறிந்திருக்கிறார்

3. நீ ஆதியிலிருந்த அன்பை விட்டுவிட்டாய்
ஆதியில் கொண்ட அன்பில் நீ நிலைத்திரு
சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்திடுவேனே
திருந்தாவிட்டால் விளக்குதண்டை நீக்கிடுவேனே

4. ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகின்றதை
காதுள்ளவன் கேட்டு ஜெயம் பெற்றிடுவான்
தேவனுடைய பரதேசியின் மத்தியிலிருக்கின்ற
ஜீவ விருட்ச கனியை புசிக்க கொடுப்பேன்.

# பாடல் 88

என்னை தேடி இயேசு வந்தார்
என் பாவத்தை மன்னித்து விட்டர் - 2

1. இவரே தேவன் இவரே இரட்சகர்
இவரே அதிசயங்களை காணச் செயபவர் - 3

2. என்னை தேடி இயேசு வந்தார்
என் வியாதியை மாற்றி விட்டார் - 2

3. என்னை தேடி இயேசு வந்தார்
என் பாரத்தை மாற்றி விட்டார் - 2

4. என்னை தேடி இயேசு வந்தார்
என் வாழ்க்கையை மாற்றி விட்டார் - 2

5. என்னை தேடி இயேசு வந்தார்
என்னை இரட்சிப்பால் அலங்கரித்தார் - 2

6. என்னை தேடி இயேசு வந்தார்
என்னை வரங்களால் அலங்கரித்தார் - 2

7. என்னை தேடி இயேசு வந்தார்
என்னை ஊழியனாய் மாற்றி விட்டார் - 2

# பாடல் 89

ஆதியில் வார்த்தை இருந்தது
அந்த வார்த்தை தான் தேவனாயிருந்தது
அந்த வார்த்தையிலே ஜீவன் இருந்தது
அந்த வார்த்தையிலே சுகம் இருந்தது

சகலமும் தேவன் மூலமாய்
இந்த உலகமும் உண்டானது
அவர் இல்லாமல் உண்டாகவில்லை
தேவனாலே உலகம் உண்டானது

அவருக்குள் ஜீவன் இருந்தது
அந்த ஜீவன் தான் ஒளியாய் இருந்தது
ஒளி இருளிலே பிரகாசித்தது
இருளானது ஒளியை பற்றிக் கொள்ளவில்லை

பாவத்தை மன்னிக்கும் இயேசுவின் ஒளி
உன் வியாதியை மாற்றிடும் இயேசுவின் ஒளி
உன் வாழ்க்கையை மாற்றிடும் இயேசுவின் ஒளி
உன்னை வாழ வைத்து பார்க்கும் இயேசு

துன்பத்தை மாற்றிடும் இயேசுவின் ஒளி
உன் துயரங்களை மாற்றிடும் இயேசுவின் ஒளி
உன் கலக்கங்களை மாற்றிடும் இயேசுவின் ஒளி
உன் கண்ணீரை துடைத்திடும் இயேசுவின் ஒளி

உலகில் உன்னை உயர்த்திடும் இயேசுவின் ஒளி
பரிசுத்தம் ஆக்கிடும் இயேசுவின் ஒளி
நித்திய ஜீவன் தந்திடும் இயேசுவின் ஒளி
பரலோகம் கொண்டு சேர்க்கும் இயேசுவின் ஒளி

# பாடல் 289

தேவ சபையில் தேவனை பாடுங்கள்
தேவ ஜனங்கள் சேர்ந்து பாடுங்கள்
கர்த்தர் வருகிறார் கர்த்தர் வருகிறார்
சாந்த குணமுள்ளோரை உயர்த்திடுவார்

1. தேவனின் நாமத்தை என்றும் துதியுங்கள்
   தம்புரோடும் நடனத்தோடும் தேவனை பாடுங்கள்
   புது பாட்டை உமக்கு நான் என்றும் பாடுவேன்
   பத்து நரம்பு வீணையினாலும் போற்றி துதிப்பேன்

2. பரிசுத்த தேவனை போற்றி துதியுங்கள்
   பரிசுத்த ஸ்தலத்தில் அவரை துதியுங்கள்
   பரிசுத்த உள்ளத்தோடு தேவனை துதியுங்கள்
   பாடி ஆடி தேவனை போற்றிடுங்கள்

3. சேனைகளின் கர்த்தரை என்றும் வாழ்த்துங்கள்
   சேனாதிபதியை சேர்ந்து துதியுங்கள்
   நம் சபையோரே நீங்கள் ஒன்று சேருங்கள்
   நம் இராஜாதி ராஜா இயேசுவை துதியுங்கள்

4. அற்புதத்தின் தேவனை ஆடி துதிப்போம்
   மகிமையின் தேவனை மகிழ்ந்து துதிப்போம்
   அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
   அல்லேலூயா
   ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா!.

# பாடல் 290

இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்து பாடுவேன்
கர்த்தாவே உம்மை நான் கீர்த்தனம் பண்ணுவேன்
உத்தம வழியில் நான் தினம் சென்றிடுவேன்
விவேகமாய் நான் என்றும் நடந்து செல்லுவேன்

1. உண்மையான இருதயத்தோடும் நடந்திடுவேன்
   தீங்கான காரியத்தை செய்யவும் மாட்டேன்
   வழிவிலகும் மனிதரோடு சேரவும் மாட்டேன்
   பொல்லாத காரியத்தில் நிற்கவும் மாட்டேன்

2. பிறனை இரகசியமாய் தூசிக்கவும் மாட்டேன்
   அவதுராய் நடப்பவனை பொருக்கவும் மாட்டேன்
   மேட்டிமையானவனையும் வெறுத்திடுவேன்
   பெருநெஞ்சுள்ளவனை பொருக்க மாட்டேன்

3. தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடும்
   உத்தமமான வழியில் தேவனை சேவிப்பார்கள்
   கர்த்தரை தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்
   மகிழ்ச்சியோடு தேவனுக்கு ஆராதனை செய்யுங்கள்

4. கர்த்தரை கெம்பீரமாய் நீங்களும் பாடுங்கள்
   ஆனந்த சத்தத்தோடு ஆராதனை செய்யுங்கள்
   அல்லேலூயா அல்லேலூயா போற்றிப் பாடுங்கள்
   அல்லேலூயா அல்லேலூயா என்றும் வாழ்த்துங்கள்

# பாடல் 90

என் தேவனைப் போல ஒரு தேவனும் இல்லையே
என் தேவனைப் போல உயர்ந்தவரும் இல்லையே
என் தேவனைப் போல பரிசுத்தரும் இல்லையே
என் தேவனைப் போல நல்ல தேவனும் இல்லையே

1. உம்மைப் போல தேவனும் இல்லையே
   உம்மைப் போல உயர்ந்தவரும் இல்லையே
   உம்மைப் போல பரிசுத்தரும் இல்லையே
   உம்மைப் போல நல்ல தேவனும் இல்லையே

2. உம்மைப் போல இரட்சகரும் இல்லையே
   உம்மைப் போல மீட்பரும் இல்லையே
   உம்மைப் போல பாடு சகித்தவரும் இல்லையே
   உம்மைப் போல சிலுவை சுமந்தவரும் இல்லையே

3. உம்மைப் போல அன்புள்ள தேவனும் இல்லையே
   உம்மைப் போல உருக்கம் நிறைந்தவரும் இல்லையே
   உம்மைப் போல அணைக்கும் தேவனும் இல்லையே
   உம்மைப் போல தேற்றும் தேவனும் இல்லையே

4. உம்மைப் போல மகிமை உள்ளவரும் இல்லையே
   உம்மைப் போல மாட்சிமை நிறைந்தவரும் இல்லையே
   உம்மைப் போல மாசற்றவரும் இல்லையே
   உம்மைப் போல மன்னிப்பவரும் இல்லையே

5. உம்மைப் போல இரக்கமுள்ளவரும் இல்லையே
   உம்மைப் போல இனிமை உள்ளவரும் இல்லையே
   உம்மைப் போல வாக்குரைத்தவரும் இல்லையே
   உம்மைப் போல வாக்குமாறாதவரும் இல்லையே

# பாடல் 91

பரிசுத்த அலங்காரத்துடனே
கர்த்தரை நாம் தொழுதிடுவோம்
அவர் நாமம் பரிசுத்தமுள்ளது
என்று சொல்லி நாம் தொழுதிடுவோம்

ஹ..ஹ..ஹ..ஹல்லேலுயா ஓ..ஓ..ஓ..ஓசன்னா - 2

1. பூலோகத்தாரே நீங்களும் என்னோடு
சேர்ந்து தொழுதிடுங்கள்
தேவனுக்கு முன்னாலே நாம்
நடுங்கி தொழுதிடுவோம்

2. கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்
காட்டு விருட்சங்கள் கெம்பீரிக்கும்
இயேசு வருகிறார் வருகிறார்
பூமியை நியாயம் தீர்க்க வருகிறார்

3. பூலோகத்தை நியாயம் தீர்ப்பார்
சத்தியத்தோடும் நியாயம் தீர்ப்பார்
வானங்களும் மகிழ்ந்திடுமே
பூமி பூரிப்பாகி கெம்பீரிக்கும்

4. கர்த்தர் நல்வர் பயப்படத்தக்கவரும்
எல்லா தேவர்களிலும் உயர்ந்தவர்
கனம் மகிமை அவர் சமுகத்தில்
வல்லமை மகத்துவமும் உள்ளது

5. எல்லா ஜனங்களே கர்த்தருக்கு
காணிக்கையை கொண்டு வாருங்கள்
தேவ பிரகாரங்களில் பிரவேசியுங்கள்
கர்த்தர் அதிசயம் காணச்செய்வார்

6. வருகிறார் வருகிறார் இயேசு
வேகமாய் வருகிறார்
மேகமீதிலே வருகிறார்
ஆரவாரத்தோடும் வருகிறார்

8. தேவ எக்காள சத்ததோடும்
பிரதான தூதரோடும்
இயேசு மேகமீதினிலே
வேகமாய் வருகிறார்

# பாடல் 291

எனக்கு இரங்கும் எனக்கு இரங்கும்
என் தேவனே எனக்கு இரங்கும்
இராக்காலத்தில் நான் உம்மை பார்க்கின்றேன்
காருண்யத்தால் என்னை சூழ்ந்துகொள்ளும் - 2

1. எனக்காக யாவும் செய்யும் தேவனே
எனக்காய் இரங்கி வாரும் தேவனே
உம் நிழலில் வந்து நிற்கின்றேன்
செட்டைக்குள் என்னை மறைத்துக் கொள்ளும்

2. உன்னத தேவனே இரங்கி வாரும்
மனிதன் என்னை விழுங்க பார்க்கின்றான்
அகங்கரித்து என்னோடு போர் செய்கிறான்
உம்மையே நம்பி நான் இருக்கின்றேன்

3. தேவனை முன் நிறுத்தி நோக்கிடுவேன்
தேவனை நம்பி என்றும் இருப்பேன்
மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்
தேவனை நோக்கி தினம் ஜெபிப்பேன்

4. இஸ்ரவேலின் தேவனே இரங்கி வாரும்
தூக்கி என்னை நிறுத்தும் தேவனே
தேவனே கிருபையால் என்னை காத்திடும்
என் வாழ்க்கையில் என்னை உயர்த்திடும்.

## பாடல் 292

இயேசு நல்லவர் உனக்கு  நல்லவர்
இயேசு நல்லவர் எனக்கு  நல்லவர்
இயேசுவின் வழி சத்தியம் ஜீவன்
இயேசுவின் வழியில் நடந்து சென்றிடு

1. ஆவியில் இரக்கம் உள்ளோர் பாக்கியவான்கள்
   அவர்கள் இவ்வுலகில் இரக்கம் பெருவார்கள்
   இதயத்தில் சுத்தமுள்ளோர் பாக்கியவான்கள்
   தேவனை பாடி துதித்து ஆராதிப்பார்கள்

2. சாந்தகுணம் உள்ளோர் பாக்கியவான்கள்
   அவர்கள் இப்பூமியை சுதந்தரிப்பார்கள்
   நீதியில் தாகம் உள்ளோர் பாக்கியவான்கள்
   அனுதினம் அவர்கள் திருப்தியடைவர்கள்

3. ஆவியிலே துயரப்பட்டோர் பாக்கியவான்கள்
   ஆருதல் அவர்களுக்கு உண்டாகும் என்றார்
   ஜெயத்தின் மேல் ஜெயம் அவர்கள் பெற்றிடுவார்
   அனுதினம் அவர்கள் உயர்ந்திடுவார்கள்

4. ஆவியல் கபடு இல்லாதோர் பாக்கியவான்கள்
   கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்றிடுவார்கள்
   இதுவே தேவனை தேடிவிசாரிக்கும்
   இஸ்ரவேல் என்ற தேவ ஜனங்கள்.

## பாடல் 92

என் தேவனே இயேசு இராஜனே
எனக்கு இரங்கும் ஐய்யா
என் தேவனே நீர் மனதுருக்கம் நிறைந்தவரே
மன்னிக்கும் தயை பெருத்தவரே
உமக்கே நன்றி ஐய்யா -  2

1. மரண வியாதியில் எனக்காய் இரங்கி வந்தவரே
   ஒரு நிமிடத்தில் என்னை தூக்கி நிறுத்தினீரே
   உமக்கே நன்றி ஐய்யா -  2

2. என் தேவனே இறங்கி என் பாவத்தை எல்லாம் மன்னித்தீரே
   நீரே எனக்கு நல்ல தேவனானீர்
   உமக்கே நன்றி ஐய்யா -  2

3. என் தேவ இரட்சிப்பால் என்னை அலங்கரித்தீர்
   தேவ மகிமையால் என்னை அபிஷேகம் செய்தீரைய்யா
   உமக்கே நன்றி ஐய்யா -  2

4. தேவ ஊழியனாய் என்னை தூக்கி நிறுத்தினீரே
   நான் தினமும் என்னை அடிமையாகவே அற்பணிக்கின்றேன்
   உமக்கே நன்றி ஐய்யா -  2

5. என் தேவனே என்னை என்றும் எடுத்து பயன்படுத்தும்
   தினம் அற்புதம் அதிசயம் காணச்செய்யும்
   உமக்கே நன்றி ஐய்யா -  2

6. ஆராதனை வேளையில் சபையை ஆசீர்வதியுமைய்யா
   ஜெபிக்கும் வேளையில் இறங்கி பேசும் ஐய்யா
   உமக்கே நன்றி ஐய்யா -  2

7. ஆராதனை வேளையில் சபையில் ஜனங்கள் பெருகச்செய்யும்
   ஜனங்கள் மகிழ்ந்து களிகூறச் செய்யும்
   உமக்கே நன்றி ஐய்யா -  2

## பாடல் 93

கர்த்தரை துதியுங்கள் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது
நம் தேவனை துதியுங்கள் அவர் நல்லவர்
அவர் தயவு என்றுமுள்ளது

துதிக்கின்றோம் துதிக்கின்றோம் எங்கள்
தேவனையே நாங்கள் என்றும் துதிக்கின்றோம்

நம் கர்த்தாதி கர்த்தரை துதியுங்கள்
அவர் கிருபை என்றும் பெரியது
ஒருவராய் பெரிய அதிசயங்களைசெய்பவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

வானங்களை ஞானமாய் படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
தண்ணீர் மேலே பூமியைப் பரப்பினவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

பெரிய சுடரை படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பகலை ஆள சூரியனை படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

இரவில் ஆள சந்திரனை படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பிரகாசிக்கும் நட்சத்திரங்களை படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

பார்வோன் சேனையை அழித்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அவர்கள் நடுவிலிருந்து புறப்பட பண்ணினார் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

நம்முடைய தாழ்வில் நினைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
நம்மை விடுதலைபண்ணினவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

எல்லாருக்கும் ஆகாரம் கொடுக்கிறவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பரலோகத்தின் தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

## பாடல் 293

அல்லேலூயா அல்லேலூயா சொல்லி பாடுங்கள்
ஓசன்னா! ஓசன்னா! என்றும் பாடுங்கள்
கர்த்தரின் ஊழியரே நீங்களும் பாடுங்கள்
கர்த்தரின் சேனைகளே சேர்ந்து பாடுங்கள்

பாடுங்கள் பாடுங்கள் கர்த்தரை பாடுங்கள்
தேடுங்கள் தேடுங்கள் தேவனை தேடுங்கள்

1. இஸ்ரவேல் குடும்பத்தாரே நீங்களும் பாடுங்கள்
லேவியின் குடும்பத்தாரே தேவனை பாடுங்கள்
ஆரோனின் குடும்பத்தாரே ஆடி பாடுங்கள்
அல்லேலூயா அல்லேலூயா சொல்லி பாடுங்கள்

2. பிள்ளைகளே பெரியோரே நீங்களும் பாடுங்கள்
வாலிபரே கன்னியரே சேர்ந்து பாடுங்கள்
கர்த்தரின் வீட்டாரே ஆடி பாடுங்கள்
ஆலயத்தில் நிற்போரே துதித்து பாடுங்கள்

3. தேவனே உம் நாமம் என்றும் உயர்ந்தது
தேவனே உம் நாமம் மகா பெரியது
தேவனே உம் நாமம் அதிசயமானது
தேவனே உம் நாமம் அற்புதமானது

4. மன்னாதி மன்னவரை மகிழ்ந்து பாடுங்கள்
மாறாத நேசரை போற்றி பாடுங்கள்
மன்னிக்கும் தேவனை உயர்த்தி பாடுங்கள்
மாரநாதா மாரநாதா என்று பாடுங்கள்.

# பாடல் 294

மனதுருகும் என் தேவனே நீர் இரங்கி வாருமே
மனவிருப்பம் நிறைவேற்றிட நீர் இரங்கி வாருமே
அனுதினம் உம் பாதம் வந்து நிற்கின்றேன்
என் விருப்பம் நிறைவேற்றிட தேவா இறங்கி வாருமே

உன் ஆலோசனை எல்லாமே நிறைவேற்றுவேன் என்றீரே
வாக்குறைத்த தேவனே இரங்கி வந்து நிறைவேற்றிடும்
அனுதினம் இரட்சிப்பால் என்றும் மகிழ்ந்திருப்பேன்
சீக்கிரமாய் இரங்கி வந்து என்னை ஆசீர்வதியும்

கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணினவரை கைவிடாரே
இரட்சிக்கிறார் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன்
அவர்கள் எல்லோரும் முறிந்து விழுந்து விட்டார்கள்
எழுந்து நான் கர்த்தருக்குள் நிமிர்ந்து நிற்கின்றேன்

தேவனின் நாமத்தையே நான் என்றும் உயர்த்திடுவேன்
மேன்மையாக உயர்த்தி என்றும் நான் பாராட்டிடுவேன்
ஜெயத்தின் மேல் ஜெயமாக நான் ஜெயம் பெற்றிடுவேன்
பரலோக தேவனையே நான் வாழ்த்தி உயர்த்திடுவேன்

செல்லும் இடமெல்லாம் இயேசுவையே நான் சொல்லுவேன்
என் வீட்டிலும் தேவனை புகழ்ந்து நான் சொல்லுவேன்
என் சபையின் மத்தியிலும் சாட்சி சொல்லி வாழ்த்துவேன்
தேவனின் வார்த்தையில் அனுதினம் நான் மகிழ்ந்திடுவேன்

# பாடல் 94

எங்கள் ஆண்டவர் பூமியெங்கும் மேன்மையுள்ளவர்
தேவ நாமம் பூமியெங்கும் மகிமையால் நிறைந்திருக்கு
ஆமேன் (5) அல்லேலூயா - 2

1. எங்கள் தேவன் மகத்துவத்தை அணிந்து இருக்கிறார்
   பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போடுவார்
2. கர்த்தாவே உம்மை தேடுவோரை கைவிடுவதில்லை
   உமது நாமத்தை அறிந்தவர்களை பாதுகாப்பீரே
3. தேவனே அவர்களை என்றும் காத்துக்கொள்வீரே
   அவர்கள் என்றும் உம்மையே துதித்து மகிழ்வார்கள்
4. சிங்காசனத்தில் வீற்றிருக்கும் எங்கள் தேவனே
   ஜாதிகளை கடிந்து கொண்டு சாத்தானை அழித்தீரே
5. நீதிமானின் வழிகளெல்லாம் செம்மையாக்குகின்றீர்
   நீதியாலும் நியாயத்தாலும் நடத்தி செல்லுகிறீர்
6. சிறுமையானோருக்கு கர்த்தர் நீரே அடைக்கலமானீர்
   ஆண்டவர் நீரே அவர்களுக்கு தஞ்சமானீரே
7. எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை
   சிறுமைபடுவோர் நம்பிக்கை ஒருபோதும்
   கெடுவதில்லை
8. துன்மார்க்கரும் தேவனை மறக்கிற யாவரும்
   எல்லா ஜாதியும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்

## பாடல் 95

பரிசுத்த தேவனே பரலோக இராஜாவே
இஸ்ரவேலை என்றும் மேய்த்து நடத்தினீர்

உமக்கே நன்றி ஐய்யா - 4

1. இஸ்ரவேலின் மேய்ப்பரே நோக்கி பாருமைய்யா
   யோசேப்பை என்றும் நடத்தி சென்றீரே
2. கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுபவரே
   எழும்பி எங்களை இரட்சிக்க வாருமைய்யா
3. பென்யமீன் மனாசே என்பவருக்கு முன்பாக
   உமது வல்லமையால் சத்துருவை முறியடியும்
4. சேனைகளின் தேவனாகிய எங்கள் கர்த்தாவே
   உமது ஜனத்தின் விண்ணப்பத்தை கேளும்
5. வானத்திலிருந்து கண்ணோக்கி பார்த்து
   உமது ஜனத்ததை விசாரித்து நடத்துமைய்யா
6. இஸ்ரவேலை பயப்படாமல் பத்திரமாய் நடத்தினீர்
   அவர்கள் சத்துருவை கடல் மூடிப்போட்டது
7. அவர்களை தமது பரிசுத்த ஸ்தலத்தில்
   பர்வதம் வரை நடத்தி வந்தீரே ஐய்யா
8. யூதா கோத்திரத்தை தமக்கு பிரியமான
   சீயோன் பர்வதத்தை தெரிந்து கொண்டீரே
9. பரிசுத்த ஸ்தலத்தை மலைகளைப் போலவும்
   என்றும் நிற்கும் படி அஸ்திபாரப் படுத்தினீர்

## பாடல் 295

கர்த்தர் வருகிறார் கர்த்தர் வருகிறார்
அவர் கோபத்தின் ஆயுதம் கூடவருகிறது
இயேசு வருகிறார் இயேசு வருகிறார்
அவர் கோபத்தின் ஆயுதம் கூடவருது

1. மனிதனே மனிதனே மனம்திரும்பிடு
   இயேசுவின் இரட்சிப்பை நீ பெற்றிடு
   அழிவுக்கு தப்புவிக்கும் வழி இயேசுவே
   மரணத்துக்கு விலக்கி காத்திடுவார் -உன்னை
2. சேனைகளின் கர்த்தர் வேகம் வருகிறார்
   யுத்த ராணுவத்தை இலக்கம் பார்க்கிறார்
   தேசத்தை அழிக்க வானம் கவிழ்ந்த
   தேசத்திலிருந்து வேகம் வருகிறார்
3. அலறுங்கள் கர்த்தரின் நாள் சமீபம்
   சர்வ வல்லவரிடம் இருந்து வருகிறது
   வாதைகளும் அவர்களை நாசப்படுத்தும்
   சங்காரத்தின் மேல் சங்காரம் வருகிறது
4. தேசத்தை பாழாக்கின பாவிகளையும்
   அதிலிருந்து அழித்திட வேகம் வருகிறார்
   பாவத்தின் மிகுதியாலே வேகம் வருகிறார்
   அந்நாளில் எவருமே தப்பிக்க முடியாது
5. அடையாளம் போடப்பட்டோர் தப்பிடுவார்கள்
   கிறிஸ்தவ சபையோரே விழித்து எழும்பிடு
   முத்திரை பெற்றோரே கதறி ஜெபியுங்கள்
   இயேசு மகாராஜா இதோ வேகம் வருகிறார்

## பாடல் 296

கர்த்தரையே நோக்கி நான் பார்க்கின்றேன்
கர்த்தரையே உயர்த்தி நான் துதிக்கின்றேன்
கர்த்தரையே நோக்கி நான் ஜெபிக்கின்றேன்
இயேசுவையே தினம் தினம் நான் அறிவிப்பேன்

அல்லேலூயா அல்லேலூயா மாரநாதா
அல்லேலூயா அல்லேலூயா கர்த்தர் வருகிறார்

1. கர்த்தர் என்றும் நல்லவர் சொல்லி துதியுங்கள்
   கர்த்தர் என்றும் வல்லவர் வாழ்த்தி வணங்குங்கள்
   கர்த்தர் என்றும் நல்லவர் சொல்லி போற்றிடுங்கள்
   கர்த்தர் அற்புதம் செய்கிறார் சொல்லி உயர்த்துங்கள்

2. அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள்
   நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்த்து விடுங்கள்
   நெருக்கத்தோடு இருப்போரை விசாலம் ஆக்குங்கள்
   பசியோடு இருப்போரை திருப்தி படுத்துங்கள் - நீங்கள்

3. கர்த்தர் உன்னை நித்தமும் நடத்தி சென்றிடுவார்
   வறட்சியான காலத்திலும் செழிக்க செய்திடுவார்
   சிறுமைபட்ட ஆத்துமாவை திருப்தியாக்கிடுவார்
   இருளில் உனக்கு வெளிச்சம் என்றும் உதித்திடும்

4. நீதியையும் நியாயத்தையும் கைகொண்டிருந்தால்
   உன் ஆத்துமாவை தேவன் தினம் தேற்றிடுவார்
   நீ செய்கின்ற நீதி உனக்கு முன்னே செல்லும்
   கர்த்தரின் மகிமை உன்னை பின்னால் காத்திடும்.

## பாடல் 96

துதிக்கிறோம் உம்மை மனதார துதிக்கிறோம்
துதிக்கிறோம் முழு பெலத்தோடும் துதிக்கிறோம் - 2

1. நம் தேவன் பெரியவர் நம் தேவன் பரிசுத்தர்
   நம் தேவன் நல்லவர் நம் தேவன் வல்லவர் - 2
   நம் தேவன் ராஜாதி ராஜா நம் தேவன் கர்த்தாதி கர்த்தர் - 2
   நம் தேவன் நமக்காவே என்றும் எதையும் செய்வாரே-2

2. பலவானின் புத்திரரே நீங்கள் தேவனை துதியுங்கள்
   கனம் மகிமை அவருக்கே தினம் செலுத்தி போற்றிடுங்கள்
   நம் தேவன் வல்லமையுள்ளவர் அவர் மகத்துவமானவர்
   நம் தேவன் நமக்காகவே என்றும் எதையும் செய்வாரே

3. நம் தேவனின் சத்தம் தண்ணீர் மேலே தொனிக்கிறது
   நம் தேவனின் சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது
   நம் தேவனின் சத்தம் அது மகத்துவம் உள்ளது
   நம் தேவன் நமக்காகவே என்றும் எதையும் செய்வாரே

4. தேவனின் சத்தம் பெண்மான்களை ஈணச்செய்யும்
   தேவனின் சத்தம் காடுகளை வெளியாக்கும்
   நம் தேவன் உலகத்தில் ராஜாவாக இருக்கிறார்
   நம் தேவன் நமக்காவே என்றும் எதையும் செய்வாரே

5. கர்த்தர் தமது ஜனத்திற்கு என்றும் பெலன் கொடுப்பார்
   கர்த்தர் தமது ஜனங்களை என்றும் ஆசீர்வதிப்பார்
   என் புலம்பலை ஆனந்த களிப்பாக என்றென்றும் மாற்றினாரே
   நம் தேவன் நமக்காகவே என்றும் எதையும் செய்வாரே

6. கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன் அவர் என்மேல் இறக்கமானார்
   தேவனடைய நாமத்தை ஆலயத்தில் கீர்த்தனம் பண்ணுவேன்
   தேவனுடைய நாமத்தை என்றென்றும் போற்றிடுவேன்
   நம் தேவன் நமக்காவே என்றும் எதையும் செய்வாரே

# பாடல் 97

ஸ்துதி கரோ ஸ்துதி கரோ
ஸ்துதி கரோ மேரே ஈயேசு கே நாம் கோ - 2
தன்ய கஹோ தன்ய கஹோ
தன்ய கஹோ மேரே ஈயேசுக் கே நாம் கோ-2

ஹாமேன் ஹல்லேலுயா - 2

1. ஜெய் ஹஹோ ஜெய் ஹஹோ
ஜெய் ஹஹோ மேரே ஈசுக்கே நாம் கோ - 2
உன்ச்சா ஹோ உன்ச்சா ஹோ
உன்ச்சா ஹோ மேரே ஈசுக்கே நாம் கோ - 2

2. மேரே பிராண் யகோவா கோ
ஹமேஸா ஸ்துதி காரோ - 2
உன்க்கே நாம்க் கோ ஹர்தம்
(மகிமா ஹோ) - 2

3. பிரபு னே துஜே கியா
உப்க்காரோக் கோ நா பூல் - 2
பிரபு துஜே ஷமா கர்க்கே
ரோஹோ கோ சங்கா கியா - 2

4. தேரே ஜீவன் கோ நாஷ் ஸே
ஹட்டாக்கர் பச்சாலியா - 2
பலாயீ அவுர் கிருபா ஸே
துஜே ஹர்தம் பர் தேஹ - 2

5. போஜ் உட்டானே வாலோக் கோ
பிரபு நியாய் கரே ஹா - 2
மூஸா அவுர் லோகோக் கோ
அப்னே மார்க் திக்காய ஹா - 2

6. பிருத்வி ஸே ஆகாஷ்
கித்னா கீ உன்ச்சா ஹோ - 2
உத்தனா கீ பிரபுக்கி
கருணா ஹம் பர் பி ஹை - 2

# பாடல் 297

ஆதியில் கொண்ட அன்பை விட்டாய்!!
என் கட்டளையை தள்ளி விட்டாய்!!
என் வார்த்தைகளை ஏற்றக்கொண்டால்!!
உன் ஆயுசின் நாட்களும் அதிகமாகும்!!

அல்லேலூயா! அல்லேலூயா!! - 8

1. என் கற்பனையை ஏற்றக்கொண்டல்
நித்திய ஜீவன் உனக்கு உண்டே
கர்த்தரில் நீ நிலைத்திருந்தால்
ஆயுசின் நாட்களும் அதிகமாகும்

2. என் வார்த்தைபடி நடந்து வந்தால்
இடுக்கண் உனக்கு வருவதில்லை
என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்
கர்த்தர் உன்னை நடத்திடுவார்

3. ஜீவவழியை நான் போதித்தேன்
அதை விடாதே காத்துகொள்ளும்
கேள் என் மகனே என் மகளே
சத்தியத்தை தினம் மேய்ந்திடு

4. நீதிமானின் வழிகளை கர்த்தர் காப்பார்
நீதிமானின் கண்கள் கர்த்தரை நோக்கிடும்
நீதிமானின் குறைகள் எல்லாம் நிறைவாகும்
நீதிமான் நித்திய கீர்த்தி உள்ளோன்

# பாடல் 298

என் மகனே! என் மகளே!!

என் வார்த்தையை நீ ஏற்றுக்கொள்!!
உன் நண்பனுக்காய் நீ சிறையாகாதே!!
அந்நியனுக்காய் நீ சிக்கிகொள்ளாதே!!!

நன்றி! நன்றி!! நன்றி ஐயா!!! - 4

1. சோம்பேரியே நீ எவ்வளவு நேரம்
   படுத்து தூங்கி இளைப்பாருவாய்
   தூக்கத்திலிருந்து விழித்தெழும்பிடு
   காலையில் நீ எழும்பி ஜெபித்திடு

2. உலக வழியில் சிக்கிகொள்ளாதே
   தேவ வழியில் நடந்து சென்றிடு
   பாவம் உன்னை பாதாளம் சேர்த்திடும்
   பரிசுத்தம் உன்னை பரலோகம் சேர்த்திடும்

3. மனுஷனின் பாதைகள் எல்லாமே
   கர்த்தரின் கண்கள் பார்க்கின்றது
   தேவனுக்கு மறைவாய் எங்குபோவாய்
   அவர் உன்னை என்றும் தப்ப விடாரே

4. நீதிமானின் வழியை அறிகின்றார்
   நீதிமானை ஒருபோதும் கைவிடாரே
   ஆமேன்! ஆமேன்! அல்லேலூயா!
   அல்லேலூயா! ஆமேன்! அல்லேலூயா!

# பாடல் 98

என்னை காண்கின்ற தேவனுக்கு - நன்றி
என்னை கவனிக்கும் தேவனுக்கு - நன்றி
என்னை நோக்கி பார்க்கும் தேவனுக்கு - நன்றி
என்னை ஆராயும் தேவனுக்கு - நன்றி

நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி – 2

1. என் சிறுமையை நோக்கிபார்த்தீர் - நன்றி
   எனக்காக இறங்கி வந்தீர் - நன்றி
   என்னை தூக்கி எடுத்து நிறுத்தினீரே - நன்றி
   என்னை தேவ அன்பால் நிறப்பினீரே -நன்றி

2. என் பாவத்தை மன்னித்தீரே - நன்றி
   என்னை பரிசுத்த படுத்தினீரே - நன்றி
   என் சாபங்களை மாற்றினீரே - நன்றி
   என்னை சாட்சியாய் நிறுத்தினீரே - நன்றி

3. என் கண்ணீரை மாற்றினீரே - நன்றி
   என் கலக்கங்களை மாற்றினீரே - நன்றி
   என் வேதனையை மாற்றினீரே - நன்றி
   என் வியாதியை மாற்றினீரே - நன்றி

5. என் பாதைகளை மாற்றினீரே - நன்றி
   என்னை நல் வழியில் நடத்துகிறீர் - நன்றீ
   என்னை அரவணைத்து காத்தீரே - நன்றி
   என்னை ஆசீர்வதித்தீரே - நன்றி

6. என்னை இரட்சிப்பால் அலங்கரித்தீர் -நன்றி
   தேவ வரங்களால் அலங்கரித்தீர் - நன்றி
   தேவ தரிசனங்களை தருகின்றீர் - நன்றி
   தேவ வல்லமையால் நிறப்புகின்றிர் - நன்றி

## பாடல் 99

என் தேவனே (2) நான் என்றும் உம்மை துதிப்பேன்
என் இயேசுவே (2) நான் என்றும் உம்மை போற்றுவேன்

என் தேவனே நீர் எனக்கு போதுமைய்யா
என் இராஜாவே நீர் எனக்கு போதுமைய்யா

உமது ஆலயத்தின் முன்பாக
எப்போதும் பணிந்து உம்மை துதிப்பேன்
என் தேவனின் கிருபையால் என்றும் துதிப்பேன்
என் தேவனின் தயவால் என்றும் போற்றுவேன்

சத்துருக்களுக்கு என்னை தப்புவித்தீர்
உமக்கே என்றும் நன்றி ஐய்யா
செம்மையான வழியில் என்னை நடத்தும்
என் ஆத்துமாவை இடுக்கத்தில் நீக்கிவிடும்

கர்த்தாவே உமது நீதியின் படி
தினமும் என்னை நடத்துமைய்யா
என் கன்மலையான தேவனுக்கு நன்றி ஐய்யா
எனக்கு தயை செய்யும் தேவனை போற்றிடுவேன்

தேவனுக்கு முன் என் சஞ்சலத்தை
தினமும் ஜெபத்தோடு ஊற்றுகிறேன்
என் ஜெபத்தை கேட்ட தேவனக்கு நன்றி ஐய்யா
என்னை தூக்கி நிறுத்தினீரே நன்றி ஐய்யா

நான் கூப்பிட்ட நாட்களிலே
எனக்கு பெலன் தந்து தைரிய படுத்தினீர்
என் ஆத்துமாவை கிருபையால் நிறப்பினீரே
என் பாத்திரம் நிரம்பி வழிகிறது

## பாடல் 299

ஆசீர்வாதம்! ஐசுவரியம்!! கர்த்தர் தந்திவார்!!
அதோடு வேதனையை கூட்டவும் மாட்டார்!!
தீவினை மூடனுக்கு விளையாட்டாயிருக்கும்!!
ஞானவான் ஞானத்தோடு நடந்து கொள்ளுவான்!!

1. நீதிமான் விரும்பும் காரியம் கிடைத்திடுமே
துன்மார்க்கன் பயந்த காரியம் வந்து நேரிடுமே
நீதிமான் புத்தியோடு நடந்து கொள்வான்
துஷ்டனின் விளைவில் பாவம் உண்டாகும்

2. நீதிமான் திட அஸ்திபாரம் உள்ளவன்
மாறுபாடுள்ளவன் அறுப்புண்டு போய்விடுவான்
நீதிமான் ஞானத்தை வெளிப் படுத்திடுவான்
துன்மார்க்கனின் வழியோ மாறுபாடுள்ளது

3. நீதிமானின் உதடுகள் கர்த்தருக்கு பிரியம்
கண்டிப்பை வெறுக்கிறவன் மோசம் போவான்
நீதிமானின் பிரயாசம் ஜீவனை தந்திடும்
மதிகேடன் பாவத்தில் நிலைத்திருப்பேன்

4. நீதிமானின் வாய் என்றும் ஜீவ ஊற்றாகும்
உத்தமமாய் நடக்கிறவன் காக்கபடுவான்
கண்சாடை காட்டினால் நோயால் வாடுவான்
நீதியோ மரணத்துக்கு அவனை தப்புவிக்கும்

## பாடல் 300

கர்த்தருக்குள் நிதானமாய் நடந்து சென்றிடு!!
தாறுமாராய் வழிகளில் நீ நடக்காதே!!
மூடன் வழியில் அகந்தை உண்டாகுமே!!
ஞானமுள்ளவன் வழியை காத்திடுவான்!!

1. புத்தி உள்ளவள் தன் வீட்டை கட்டிடுவாள்
   புத்தி இல்லாதவள் தன் வீட்டை இடித்திடுவாள்
   புத்தியோடு நீ நடந்து சென்று கொண்டால்
   உன் குடும்பத்தை கட்டி எழுப்பிடுவாய்

2. கர்த்தருக்கு பயப்பட்டால் ஞானம் தந்திடுவார்
   உன் ஆயுசின் வருஷங்கள் நீடித்திடுமே
   கர்த்தர் உன்னை நித்தம் ஆசீர்வதிப்பார்
   கிருபையும் நன்மையும் உன்னை தொடருமே

3. நீதிமான் புசித்து திருப்தியாய் இருப்பான்
   துன்மார்க்கனோ வருமையால் வாடிபோவான்
   நீதிமானின் வீட்டில் பொக்கிஷம் உண்டு
   நீதிமான் நிலைத்திருந்து கனி கொடுப்பான்

4. புத்திமதியை அவமதித்தால் நாசமடைவான்
   கற்பனைக்கு பயந்திருந்தால் பலன்கள் வருமே
   புத்திமானின் வாய் என்றும் அறிவை பேசுமே
   நீதியின் பாதையிலே ஜீவன் உண்டாகுமே

## பாடல் 100

என் மகனே! என் மகளே!
என் போதகத்தை என்றும் மறக்காதே
உன் இருதயம் என் வார்த்தைகளை
என்றென்றும் காத்துக்கொள்ளட்டும்

1. என் வார்த்தைகளே நீடித்த நாட்களையும்
   தீர்காயுசும் பெருகபண்ணும்
   கிருபையும் சத்தியமும் என்றும் விலகாமல்
   அதை காத்துக்கொள்ளு

2. உன் சுய புத்தியின் மேல் நீ சாயமல்
   முழு இதயத்தோடும் நம்பியிரு
   உன் வழிகளெல்லாம் நீ நினைத்து கொள்ளு
   உன் பாதைகளை செவ்வை படுத்திடுவார்

3. உன்னை ஞானியென்று நீ எண்ணாதே
   கர்த்தருக்கு பயந்து தீமையை விடு
   அது உன் நாபிக்கு ஆரோக்கியமாகும்
   உன் எலும்புக்கு ஊனுமாகும்

4. தேவ கரத்தில் தீர்க்காயுசும்
   தேவன் கையில் செல்வம் உண்டு
   அவர் வழிகளெல்லாம் இனிமைகளாம்
   அவர் பாதை எல்லாம் சமாதானமாம்

5. தேவ வழியில் நீ நடக்கும் போது
   உன் நடைகளுக்கு கேடு வருவதில்லை
   அவர் வழிகளிலே நீ ஓடும்போது
   உன் பாதையிலே இடறி விழுவதில்லை

6. நல் யோசனை உன்னை காப்பாற்றும்
   புத்தி உன்னை என்றும் பாதுகாக்கும்
   அதை விட்டுவிடாதே என்றும் பிடித்துகொள்ளு
   தேவ வார்த்தை உன்னை என்றும் நடத்திடுமே

## பாடல் 101

சேனைகளின் கர்த்தாவே நீர் பெரியவர்
சேனைகளின் கர்த்தாவே நீர் உயர்ந்தவர் - 2

அல்லேலூயா ஆமேன் தேவ ஆவியே
வாரும் வாரும் எங்களை தேற்ற வாருமே
தூய ஆவியே தேற்ற வாருமே - 2

என் ஆத்துமா உம்மை துதிக்கின்றது
என் ஆத்துமா உம்மை போற்றுகின்றது

சேனைகளின் கர்த்தாவே நீர் நல்லவர்
சேனைகளின் கர்த்தாவே நீர் பரிசுத்தர்

என் ஆத்துமா உம்மை வாழ்த்துகின்றது
என் ஆத்துமா உம்மை உயர்த்துகின்றது

அழுகை பள்ளத்தாக்கை மாற்ற வாருமே
தூக்கி என்னை எடுத்து நிறுத்த வாருமே

எங்கள் கேடகமாகிய எங்கள் தேவனே
அபிஷேகம் பண்ணினவரின் முகத்தை பாருமே

உம்மில் பெலன் கொள்ளும் மனிதர்களும்
செம்மையான வழியில் நடப்பவர்களும்

கண்ணோக்கமாயிருந்து பாதுகாத்துக் கொள்ளும்
தேவ நன்மையால் என்றும் நிறப்பி காத்துக்கொள்ளும்

## பாடல் 301

கர்த்தரின் புத்தியை கேட்டு ஞானமடையுங்கள்!!
ஜீவனுக்கு போகும் வழியை தெரிந்து கொள்ளுங்கள்!!
ஞானம் தன் வீட்டை கட்டி நிலை நிறுத்திடும்!!
ஏழு தூண்களை சித்திரம் தீர்த்து முடித்திடுமே!!

1. பேதைகளே பேதமையை விட்டு விலகுங்கள்
   புத்தியின் வழிகளில் நடந்து சென்றிடுங்கள்
   புரியாசகாரனை நீ கடிந்து கொள்ளாதே
   புத்திமதி மூடனுக்கு விசனம் உண்டாக்குமே

2. கர்த்தருக்கு பயந்திருந்தால் ஞானம் தந்திடுவார்
   உன் ஆயுசின் வருஷங்களை அதிகரித்திடுவார்
   புத்திமதியை உறுதியாய் நீ பிடித்துகொண்டிரு
   அதுவே உனக்கு நித்திய ஜீவனை தரும்

3. பாவிகளுக்கு பரலோக வழியை சொல்லிடு
   அக்கிரம காரனுக்கு அறிவை போதித்திடு
   அநியாய காரனுக்கு கர்த்தரை சொல்லிடு
   துயர படுவோனுக்கு ஆறுதல் சொல்லிடு

4. நீதிமானின் விருப்பங்களை நிறைவேற்றுவார்
   துன்மார்க்கனின் ஆசைகளோ அழிந்திடுமே
   நீதிமான் பேர்பெற்று என்றும் விளங்குவான்
   நீதிமான் கர்த்தரால் கீர்த்தி அடைவான்

## பாடல் 302

மனிதனின் யோசனைகள் மனிதனுடையது!!
நாவின் பிரதியுத்திரம் கர்த்தரால் வந்திடுமே!!
மனித வழியெல்லாம் தன் பார்வைக்கு சுத்தமே!!
கர்த்தர் ஆவிகளை நிறுத்துப் பார்க்கின்றார்!!!

1. தேவைகள் எல்லாமே கர்த்தரிடம் சொல்லிடு
உன் தேவைகளை தினம் கர்த்தர் தந்திடுவார்
கர்த்தர் அனைத்தையும் தமக்காக படைத்தாரே
தீங்கு நாளுக்காக துஷ்டனையும் உண்டாக்கினார்

2. மேட்டிமை உள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பு
கையடித்து நடந்தாலும் தண்டனைக்கு தப்பானே
கிருபையும் சத்தியமுமே பாவம் நிவிர்த்தியாகும்
கர்த்தருக்கு பயந்தவன் தீமைவிட்டு விலகிடுவானே

3. மனிதனின் இருதயம் அவன் வழியை யோசிக்குமே
அவன் நடைகள் கர்த்தரால் என்றும் உறுதிபடும்
ராஜாவின் உதடுகளில் திவ்விய வாக்கு உண்டாகும்
ராஜாவின் முககளையில் ஜீவன் சுகம் வந்திடும்

4. பொன் முத்தை பார்க்கிலும் ஞானத்தை சம்பாதி
ஞானியின் இருதயம் அறிவை உண்டாக்குமே
நீதியின் வழிகளில் மகிமையின் கீரிடம் உண்டு
மனதை அடக்குபவன் உத்தமனாய் இருப்பான்

## பாடல் 102

கிருபை கிருபை கிருபை அது தேவ கிருபை
தேவ கிருபையை என்றென்றும் பாடுவேன்
பாடுவேன் பாடுவேன் நான் பாடுவேன்
தேவ கிருபையை தினம் தினம் பாடுவேன்

1. ஆகாய மண்டலம் தேவனை துதிக்கும்
நம் தேவனுக்கு நிகர் யாரும் இல்லையே
எல்லா தேவர்களில் நம் தேவன் பெரியவர்
நம் தேவனைப் போல் தேவன் இல்லையே

2. நம் தேவனைப் போல் நல்ல தேவனும் இல்லையே
நம் தேவனைப் போல் பரிசுத்தரும் இல்லையே
நம் தேவனை உயர்த்தி உயர்த்தி துதியுங்கள்
நம் தேவனை வாழ்த்தி வாழ்த்தி பாடுங்கள்

3. வானத்துக்கு கீழே பூமிக்கு மேலே
நம் தேவனை போல் தேவனும் இல்லையே
எல்லா அதிகாரமும் கொண்டவர் தேவன்
நமக்காக எதையும் செய்யும் நம் தேவன்

4. நம் தேவன் என்றும் மாறாதவர்
அவர் இருக்கிறவராகவே இருக்கிறார்
நம் தேவன் எப்போதும் நம் தேவன்
அவர் நமக்கு துணையாய் நின்றிடுவார்

5. நம் தேவன் இராஜாதி இராஜாவானவர்
சகல பூமிக்கும் தேவனானவர்
ஜனங்களே அவரை தொழுதிடுங்கள்
மகிமையை செலுத்தி வாழ்த்திடுங்கள்

6. நம் தேவன் நல்லவர் வல்லவரே
புது வாழ்வை கொடுத்து நடத்துவாரே
அவர் மன்னாவை தந்து போஷிப்பவர்
மறக்காமல் நம்மை காத்திடுவார்

## பாடல் 103

நீ அறியாத பெரிய காரியம்
கர்த்தர் செய்திடுவார் உனக்கு
எட்டாத உயரத்தில் உன்னை உயர்த்திடுவார்
மாராவின் கசந்த நீரை மதுரமாக மாற்றிடுவார்
மாறாமல் உன் வாழ்வை வசந்தமாக மாற்றிடுவார்

1. வேதனை துன்பம் நீக்கிடுவார்
வேண்டிடும் விண்ணப்பம் கேட்டிடுவார்
மன விருப்பத்தின் படி தந்திடுவார்
மனதார உன்னை ஆசீர்வதிப்பார்

2. வாழ்நாளெல்லாம் உன்னோடிருப்பார்
வாக்குதத்ததை என்றும் நிறைவேற்றுவார்
நீ வெட்கபடாமல் உன்னை காத்திடுவார்
வேதத்தின் வெளிச்சத்தில் நடத்திடுவார்

3. தம் உள்ளங்கையில் உன்னை வரைந்திடுவார்
உன்னோடு என்றும் இசைந்திருக்கிறார்
உருக்கமாய் உனக்காய் இறங்கிடுவார்
ஜெயத்தை உனக்கு என்றும் தருவார்

4. தம் பிள்ளையாக உன்னை மாற்றிவிட்டார்
அவர் சித்தத்தை செய்ய தெரிந்தெடுத்தார்
அவர் மகிமைக்காய் நீ என்றும் ஜீவிப்பாய்
அனுதினமும் உன்னை பயன்படுத்துவார்

5. சகல தீமைக்கு உன்னை விலக்கிடுவார்
முடிவுபரியந்தம் உன்னை பாதுகாப்பார்
மகத்தான சமாதானம் உனக்கு உண்டாகும்
மலரைபோல மலர்ந்து சந்தோஷிப்பார்

## பாடல் 303

நல்லவன் தேவனிடம் தயை பெருவான்
துர்சிந்தனை உடையவன் ஆக்கினையடைவான்
புத்தி உள்ளவன் தேவனுக்கு பயந்து நடப்பான்
லச்சை உண்டாக்கினால் லச்சை அடைவான்

1. நீதிமானின் நினைவுகள் நியாயமானவை
துன்மாக்கன் ஆலோசனை சூதானவை
நீதிமான் ஜீவ விருட்சம் போலிருப்பான்
துஷ்டனின் ஆலோசனை ரத்தம் சிந்திடும்

2. நீதிமான் இவ்வுலகில் மேன்மை உள்ளவன்
துஷ்டனின் வழிகளில் மோசம் நேரிடும்
நீதியின் வழிகளில் ஜீவன் உண்டாகும்
அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்

3. நீதிமானுக்கு ஒருபோதும் கேடுவராது
தீங்கை பிணைத்தால் தீங்கில் விழுவான்
விவேகி அறிவோடு என்றும் நடப்பான்
மாருபாடு மனமுள்ளவன் இகழப்படுவான்

4. நீதிமானின் வீடுகள் நிலைத்திருக்கும்
துஷ்டனின் வீடுகள் நிலைப்பதில்லை
நீதிமானாய் மாறிவிட்டால் செழித்திடுவாய்
நீமானின் வீட்டில் பொக்கிஷம் வரும்

# பாடல் 304

பரியாசம் பண்ணாதே நீ பரியாசம் பண்ணாதே
தேவன் நேசிக்கிறார் உன்னை தேவன் நேசிக்கிறார்
பிறரை குறை கூறாதே நீ குற்றம் சொல்லாதே
ஆராய்ந்துபார் உன்னை நீ ஆராய்ந்துபார் உன்னை

ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

1. பரியாசம் பண்ணுபவனை தேவன் தண்டிக்கிறார்
திருந்தி வந்துவிட்டால் தேவன் அணைத்திடுவார்
மன்னித்து உன்னை தம் பிள்ளையாய் ஏற்றிடுவார்
இரட்சித்து உன்னை தம் மகிமையால் நிரப்பிடுவார்

2. ஆனந்தம் ஆனந்தமே ஆனந்தம் ஆனந்தமே
என்ன சந்தோஷம் இரட்சிப்பின் சந்தோஷம்
உலகம் தர கூடாத உன்னத சந்தோஷம்
ஓடிவா என் மகனே நில்லாமல் ஓடி வந்திடு

3. கலங்காதே திகையாதே கஷ்டத்தை மாற்றிடுவார்
கர்த்தருக்கு பயந்திருந்தால் தூக்கி நிறுத்திடுவார்
உலகின் முடிவுவரை தேவனோடு வாழ்ந்திடுவாய்
வாழ்க வாழ்கவே இயேசுவின் நாமம் வாழ்கவே

4. தேவ ஊழியனை எதிர்க்காதே நஷ்டம் வந்திடும்
தேவ ஊழியனை குறைகூறாதே பயந்து நடந்திடு
ஆத்துமாவின் உத்தரவாதியை அற்பமாய் எண்ணாதே
தீமை செய்கிறவன் மேல் தேவ கோபம் வந்திடும்

# பாடல் 104

கர்த்தருக்கு என்றும் பயந்திடுங்கள்
அவர் வழியில் என்றும் நடந்திடுங்கள்
தேவ வார்த்தைக்கு என்றும் நடுங்குங்கள்
அவர்களை என்றும் நோக்கி பார்ப்பார்

1. உன் கையின் பிரயாசம் நீ சாப்பிடுவாய்
பாக்கியமும் நன்மையும் உண்டாகுமே
கர்த்தர் வார்த்தையில் நீ நடந்தால்
உன் பிள்ளைகள் பந்தியை சுற்றியிருப்பார்கள்

2. கர்த்தருக்கு பயந்து நீ நடந்தால்
சீயோனில் இருந்து ஆசீர்வதிப்பார்
எருசலேம் வாழ்வை நீ காண்பாய்
இஸ்ரவேல் சமாதானம் பெற்றிடுவாய்

3. உன் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்படும்
உன் சந்ததி பூமியில் பலத்திருக்கும்
கட்டளையில் பிரியமாய் நீ நடந்தால்
உன் வம்சம் என்றும் ஆசீர்வதிப்பார்

4. சிறியவனை தாழ்மையில் தூக்கிவிடுவார்
எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்
அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்
இப்பூமியில் என்றும் உயர்ந்திருப்பான்

## பாடல் 105

என் பெலனாகிய என் கர்த்தாவே
நான் என்றும் உம்மை துதிப்பேன்
நீர் என் தேவன் நம்பியிருக்கும் கன்மலை
நீர் எனக்கு அடைக்கலமானீர்

ஆஹா…ஆஹா…ஒஹோ…ஒஹோ…
லாலா..லால்ல லா…லாலல…. 2

1. கர்த்தர் என் கன்மலையும் என்
கோட்டையும் என் இரட்சகருமானார்
என் தேவனும் நான் நம்புகின்ற
என் இரட்சண்ய கொம்புமானார்

2. துதிக்கு பாத்திரமான என் கர்த்தரை
நான் என்றும் நோக்கி கூப்பிட்டேன்
அதினால் உலகத்திற்கு நீங்கலாகி
என் தேவனோடு இசைந்திருப்பேன்

3. மரண கட்டு என்னை சுற்றிக்கொண்டது
துர்ச்சனம் என்னை பயப்படுத்தினது
பாதாள கட்டு என்னை சூழ்ந்து கொண்டது
மரண கண்ணிகள் என் மேல் விழுந்தது

4. எனக்கு உண்டான நெருக்கத்தில்
கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன்
தேவனை நோக்கி நான் அபயமிட்டேன்
ஆலயத்தில் இருந்து என் சத்தம் கேட்டார்

5. அப்பொழுது பூமி அசைந்து
பர்வதங்களும் குலுங்கி அசைந்தது
வானத்தின் பட்சிக்கும் அக்கினி வந்தது
கேருபீன் மேல் ஏறி வேகமாய் வந்தார்

6. உயரத்தில் இருந்து கரம் நீட்டி
என்னை பிடித்து தூக்கிவிட்டார்
என்னை கன்மலை மேல் நிறுத்தி
என் அடிகளை உறுதி படுத்தினார்

## பாடல் 305

நீங்கள் விரும்பும் ஆசீர்வாதம்
உலகம் வரும்பும் ஆசீர்வாதம்
ஆயிரம் மடங்கு ஆசீர்வாதம் தேவன் தருவார்
தேவன் உனக்கு நிச்சயம் தந்திடுவார்

1. பரலோகம் கொடுக்கும் ஆசீர்வாதம்
உலகம் கொடுக்காத ஆசீர்வாதம்
சிட்சை கொடுக்கும் ஆசீர்வாதம் தேவன் தந்திடுவார்
உனக்கு வேண்டுமா தேவன் தந்திடுவார்

2. எவ்வித ஆசீர்வாதம் உனக்கு வேண்டும்
என்பதை நீயும் தெரிந்து கொள் மகனே
நீ கேட்கும் ஆசீர்வாதம் தேவன் தருவார்
இரண்டில் ஒன்றை தெரிந்து கொள் என் மகனே

3. பரலோகம் உனக்கு வேண்டுமா சொல் மகனே
நரகம் உனக்கு வேண்டுமா சொல் மகனே
சிட்சை - ஆசீர்வாதம் சேர்த்து தேவன் தந்திடுவார்
பரலோக வாசல் உனக்கு அதுவே தானே

4. அனேக உபத்திர வழியாய் தானே
பரலோக ராஜ்யம் பிரவேசிப்பாய்
கலங்காதே திகையாதே தேவன் கூட இருக்கிறார்
பரலோக ராஜ்யத்தில் உன்னை கூட்டி சேர்த்திடுவார்

# பாடல் 306

உயர உயர ஏறிப்போகும் மனித ஆவியையும் பார்
தாழதாழ பூமியில் இரங்கும் மிருகத்தின் ஆவியையும் பார்
மனிதனே மனிதனே நீ அறிகின்றாயோ எல்லாம்
தேவனின் செயல்

நீரே மன்னித்தீர் நீரே மாற்றினீர் உமக்கு நன்றி ஐயா
நீரே குணமாக்கி நீரே ரட்சித்தீர் உமக்கு நன்றி ஐயா
நீரே அபிஷேகித்து நீரே அலங்கரித்தீர் உமக்கு
நன்றி ஐயா
நீரே அனுப்பினீர் நீரே நிறுத்தினீர் உமக்கே நன்றி ஐயா

நீரே என் தேவன் நீரே என் இராஜா உமக்கு நன்றி ஐயா
நீரே என் இயேசு நீரே என் அற்புதர் உமக்கு நன்றி ஐயா
நீரே என் இராஜா கர்த்தாதி கர்த்தர் உமக்கு நன்றி ஐயா
நீரே வரப்போகும் மேசியா இயேசு உமக்கு நன்றி ஐயா

என் தேவனைப் போல யாருமில்லை உமக்கு நன்றி ஐயா
என் தேவனைப் போல அன்புமில்லை உமக்கு நன்றி ஐயா
என் தேவனைப் போல துணையுமில்லை நன்றி நன்றி ஐயா
என் தேவனைப் போல அணைப்போரில்லை நன்றி
நன்றி ஐயா

என் சத்தம் கேட்ட தேவாதி தேவனே உமக்கு
நன்றி ஐயா
இரங்கி வந்து என்னை தூக்கினீரே உமக்கு நன்றி ஐயா
என்னை ஆசீர்வதித்து உயர்த்திய தேவனுக்கு நன்றி ஐயா
என்னை பரலோகம் சேர்க்கும் தேவனுக்கு நன்றி
நன்றி ஐயா

# பாடல் 106

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே
என் இயேசுவின் சந்நிதியில் ஆனந்தமே
சந்தோசம் சந்தோசம் சந்தோசமே
என் இயேசுவின் சந்நிதியில் சந்தோசமே - 2

கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கூடி ஆடி நாம் கொண்டாடுவோம்
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
பாடி மகிழ்ந்து நாம் கொண்டாடுவோம் - 2

1. தேவன் நல்லவரென்று கொண்டாடுவோம்
தேவன் பெரியவரென்று கொண்டாடுவோம்
தேவன் பரிசுத்தரென்று கொண்டாடுவோம்
தேவனை பாடிப்போற்றி கொண்டாடுவோம் - 2

2. கடந்த ஆண்டை காத்தவரை கொண்டாடுவோம்
புதிய ஆண்டு தந்தவரை கொண்டாடுவோம்
ஆண்டு முழுதும் காக்கும் படி கொண்டாடுவோம்
ஆசீர்வாதம் பொழிந்திட கொண்டாடுவோம் - 2

3. வருடம் முழுதும் காப்பவரை கொண்டாடுவோம்
வாரிகொடுக்கும் வள்ளலை கொண்டாடுவோம்
வாழவைக்கும் வள்ளலை கொண்டாடுவோம்
வானவர் இயேசுவை கொண்டாடுவோம் - 2

4. சேனைகளின் கர்த்தரை கொண்டாடுவேம்
சேர்ந்து சபையாக கொண்டாடுவோம்
வாலிபரே கன்னியரே கொண்டாடுவோம்
பெரியோரே சிறியோரே கொண்டாடுவோம் - 2

5. தேவனை ஆராதித்து கொண்டாடுவோம்
துதித்துப் பாடி நாம் என்றும் கொண்டாடுவோம்
மகிழ்ந்து பாடி போற்றி கொண்டாடுவோம்
நம் மன்னவர் மகிழ நாம் கொண்டாடுவோம்- 2

6. வாக்குத்தத்தம் தந்தவரை கொண்டாடுவோம்
வாக்குத்தத்தம் நிறைவேற்ற கொண்டாடுவோம்
வாய்களை திறந்து நாம் கொண்டாடுவோம்
வாழ்க வாழ்கவென்று கொண்டாடுவோம் - 2

# பாடல் 107

மனம் இரங்கும் மனம் இரங்கும் என் இயேசைய்யா
மனம் இரங்கும் மனம் இரங்கும் என் இயேசைய்யா- 2
நினிவேக்கு மனம் இரங்கின என் தேவனே
எனக்கும் மனம் இரங்கி உதவி செய்யுமைய்யா - 2

மஹாராஷ்டிரா மாநிலத்துக்கு என்னை அழைத்தீரே
மஹாராஷ்டிரா விடுவிக்கபட மனமிரங்குமைய்யா
மஹாராஷ்டிரா இரட்சிக்கபட மனமிரங்குமைய்யா
மஹாராஷ்டிராவில் ஆலயம் கட்ட மனமிரங்குமைய்யா

மஹாராஷ்டிரா மாநிலத்துக்கு மனமிரங்குமைய்யா
மஹாராஷ்டிரா தலைவர்களை பாதுகாக்கணுமே
மஹாராஷ்டிரா மாநிலத்தில் அன்பு கூருமைய்யா
மஹாராஷ்டிரா மாநிலத்தை ஆசீர்வதிக்கணுமே

இஸ்ரவேலுக்கு மனம் இரங்கின என் தேவனே
என் தேசத்திற்கு மனம் இரங்கி வாருமைய்யா
நான் வாழும் தேசத்திற்கு மனமிறங்குமைய்யா
நான் வாழும் தேசத்தை மன்னித்து மாற்றுமைய்யா

என் தேசத்தில் வாழும் ஜனங்கள் மனம் மாறவேண்டுமே
என் தேசத்தில் வாழும் ஜனங்களை பாதுகாக்கணுமே
என் தேசத்தில் வாழும் ஜனங்கள் பரிசுத்தமாக்கணுமே
என் தேசத்தில் வாழும் ஜனங்களை ஆசீர்வதிக்கணுமே

என் தேசத்தை தீவிரவாதிக்கு விலக்கி காக்கணுமே
என் தேசத்தை கொள்ளை நோய்க்கு விலக்கி காக்கணுமே
என் தேசத்தை அழிவுக்கு விலக்கி காக்கணுமே
என் தேசத்தை கைவிடாமல் காக்க வேண்டுமே

# பாடல் 307

அல்லேலுயா சொல்லி பாடிடுவோம்
ஓசன்னா என்று பாடிடுவோம்
வாழ்க வாழ்க வாழ்த்தி பாடுவோம்
நம் தேவனை என்றும் பாடிடுவோம்

1. அழைத்த தேவனை பாடிடுவோம்
ஆட்கொண்ட தேவனை உயர்த்திடுவோம்
ஆர்ப்பரித்து என்றும் பாடிடுவோம்
ஆனந்தமாய் துதித்து பாடிடுவோம்

2. வானத்தை நோக்கி பாடிடுவோம்
வார்த்தையை சொல்லி பாடிடுவோம்
வானாதி வானவரை துதித்து பாடுவோம்
வாய்களை திறந்து வாழ்த்தி பாடுவோம்

3. மரணத்தை ஜெயித்தவரை பாடிடுவோம்
மன்னாதி மன்னவரை பாடிடுவோம்
மகிழ்ச்சியோடு மகிழ்ந்து பாடுவோம்
நாம் ஆடிப்பாடி என்றும் பாடுவோம்

4. சேனைகளின் தேவனை பாடிடுவோம்
சேனாதி பதியை நாம் பாடுவோம்
பறந்து காப்பவரை தினம் பாடுவோம்
பரலோக தேவனை என்றும் பாடிடுவோம்

# பாடல் 308

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் தேவ தேவனுக்கே
கோடி ஸ்தோத்திரம் எங்கள் ராஜ ராஜனுக்கே
எங்கும் ஸ்தோத்திரம் எப்போதும் ஸ்தோத்திரம்
என்றும் ஸ்தோத்திரம் எந்நாளும் ஸ்தோத்திரம்

1. தேவ தேவனை நாங்கள் துதிக்கின்றோம்
இயேசு ராஜாவை நாங்கள் வாழ்த்துகின்றோம்
அற்புதம் செய்பவரை நாங்கள் போற்றுகின்றோம்
அதிசயமான தேவனை நாங்கள் உயர்த்துகின்றோம்

2. மன்னாதி மன்னவரை நாங்கள் வாழ்த்துகின்றோம்
மகிமையின் தேவனை நாங்கள் துதிக்கின்றோம்
ராஜாதி ராஜனை நாங்கள் உயர்த்துகின்றோம்
மகத்துவ தேவனை நாங்கள் துதிக்கின்றோம்

3. வானத்தை படைத்தவரை நாங்கள் துதிக்கின்றோம்
மேகத்தையும் படைத்தவரை நாங்கள் துதிக்கின்றோம்
கார்மேகத்தை படைத்தவரை நாங்கள் துதிக்கின்றோம்
காருண்ய தேவனை நாங்கள் துதிக்கின்றோம்

4. அரவணைத்து காப்பவரை நாங்கள் துதிக்கின்றோம்
ஆகாரம் தருபவரை நாங்கள் துதிக்கின்றோம்
அற்புதர் அற்புதரை நாங்கள் துதிக்கிறோம்
அனுதினம் நடத்துவோரை நாங்கள் துதிக்கிறோம்

# பாடல் 108

ஆராதிப்போம் ஆராதிப்போம் ஆராதிப்போம்
வானம் பூமி படைத்தவரை ஆராதிப்போம்
ஆராதிப்போம் ஆராதிப்போம் ஆராதிப்போம்
அகிலத்தையும் படைத்தவரை ஆராதிப்போம்

1. பணிந்து குனிந்து நாம் ஆராதிப்போம்
பாடிப்போற்றி நாம் ஆராதிப்போம்
பாசத்தோடு நாம் என்றும் ஆராதிப்போம்
ஆடிப்பாடி நாம் என்றும் ஆராதிப்போம்

2. தேவனை என்றும் நாம் ஆராதிப்போம்
இயேசுவை என்றும் நாம் ஆராதிப்போம்
இராஜாவை என்றும் நாம் ஆராதிப்போம்
கர்த்தாவை என்றும் நாம் ஆராதிப்போம்

3. ஆகாயத்தை படைத்தவரை ஆராதிப்போம்
மண்டலத்தை படைத்தவரை ஆராதிப்போம்
தண்ணீரை சேர்த்தவரை ஆராதிப்போம்
வெட்டாந்தரையை உண்டாக்கினார் ஆராதிப்போம்

4. புல் பூண்டை முளைக்க செய்தார் ஆராதிப்போம்
விருட்சத்தை முளைக்க செய்தார் ஆராதிப்போம்
சூரியனை வைத்தவரை ஆராதிப்போம்
சந்திரனை வைத்தவரை ஆராதிப்போம்

5. இரவு பகலை படைத்தவரை ஆராதிப்போம்
ஆகாயத்தை படைத்தவரை ஆராதிப்போம்
சுடர்களை வைத்தவரை ஆராதிப்போம்
பிரகாசிக்க செய்தவரை ஆராதிப்போம்

6. பறவைகளை படைத்தவரை ஆராதிப்போம்
மிருகங்களை படைத்தவரை ஆராதிப்போம்
மனிதனை படைத்தவரை ஆராதிப்போம்
தம்மை போல் படைத்தவரை ஆராதிப்போம்

7. மனிதனை படைத்தரை ஆராதிப்போம்
மனுகுலத்துக்காய் வந்தவரை ஆராதிப்போம்
மரித்து உயிர்த்தவரை ஆராதிப்போம்
வரப்போகும் மேசியாவை ஆராதிப்போம்

# பாடல் 109

சேனைகளின் கர்த்தாவே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
இஸ்ரவேலின் தேவனே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா-2

1. வானத்தையும் படைத்தவரே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   பூமியையும் படைத்தவரே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

2. அகிலத்ததையும் படைத்தவரே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   சர்வத்தையும் ஆள்பவரே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

3. வானாதி வானங்கள் துதிக்கின்ற பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   தேவ தூதர்கள் துதிக்கின்ற பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

4. கேருபீன்கள் போற்றும் தேவனே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   சேராபீன்கள் போற்றும் ராஜாவே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

5. சூரிய சந்திரன் துதிக்கின்ற பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   நட்சத்திரங்கள் துதிக்கின்ற பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

6. நாங்கள் ஆராதிக்கும் எங்கள் தேவன் பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   நாங்கள் துதிக்கும் எங்கள் தேவன் பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

7. நாங்கள் ஜெபிக்கும் எங்கள் தேவன் பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   நாங்கள் போற்றும் எங்கள் தேவன் பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

8. எங்கள் தேவன் கர்த்தாதி கர்த்தர் பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
   எங்கள் தேவன் ராஜாதி ராஜா பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

# பாடல் 309

தாழ்மையும் சாந்தமாய் இருக்கின்றேன்
என்றுரைத்த என் தேவா தேவனே
சாந்த நுகத்தை எனக்கு தாருமே
என்னையும் உம்மைபோல் மாற்றிட வாருமே

1. வருத்தப்பட்டு பாரம் சுமப்பவரே
   வாருங்கள் என்னண்டைக்கு என்றீரே
   வந்து நாங்கள் உம்மைண்டை நிற்கின்றோம்
   எங்களை தாழ்மையாய் மாற்றிட வாரும்

2. சகலமும் செய்ய உம்மால் கூடும்
   சகித்து நிற்க பெலன் தாருமே
   உம் தாழ்மை எங்களுக்கு கற்றுதாரும்
   உம்மை போல் நடந்து செல்லட்டும்

3. உருக்கமான இரக்கத்தை தந்திடும்
   ஒருவரை ஒருவர் தாங்கி நடந்திட
   கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பிடும்
   எப்போதும் உம் சமாதானம் ஆளட்டும்

4. என் இருதயத்தை அன்பினால் நிரப்பிடும்
   கிருபையாலும் உம் தயவால் நிரப்பிடும்
   உலகிற்கு வெளிச்சமான மனிதனாய்
   இயேசுவின் ஊழியனாக மாற்றிடும்

## பாடல் 310

நீதிமானே நீ தேவனை நோக்கி கூப்பிடு
தேவன் உன் சத்தம் தினம் கேட்கின்றார்
பறந்து காக்கும் பட்சிகளை போல தினம்
பறந்து வந்து காத்திடுவார் இயேசு இராஜா

1. நீதிமானை கர்த்தர் நோக்கி பார்க்கின்றார்
அவன் கூப்பிடுகைக்கு தேவன் இரங்குவார்
நீதிமானுக்கு இவ்வுலகில் துன்பம் உண்டு
அவனுக்காக தேவன் வந்து நிற்கின்றார்

2. பொல்லாதவனின் மேல் பெறாமை கொள்ளாதே
அவனோடு இருக்க ஒருபோதும் விரும்பாதே
நீதிமானே உனக்கு நிச்சயமான முடிவுண்டு
உன் நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது

3. அவனின் இருதயம் கேடு நிறைந்தது
அவன் கேடு செய்ய எத்தனிப்பான்
உன்னையோ தேவன் தினம் காண்கிறார்
உன் விருப்பம் தினம் நிறைவேற்றுவார்

4. உத்தமமான மனிதனை தினம் காண்கிறார்
பரியாசக்காரனையும் தேவன் காண்கிறார்
உண்மையுள்ள மனிதன் பரிபூரண ஆசி பெருவான்
பரியாசகாரன் தன் பலனை அனுபவிப்பான்

## பாடல் 110

ஆவியானவரே எங்கள் ஆவியானவரே - 2
விடுவிக்கும் ஆவியானவரே – எங்கள்
மத்தியில் இரங்கி வாருமைய்யா

1. பெந்தேகோஸ்தே நாள்தனிலே இரங்கி வந்தீரே
இன்று எங்கள் மத்தியிலே இரங்கி வாருமைய்யா

2. ஆராதனையில் ஆவியானவர் அசைவாடுமைய்யா
அற்புதங்கள் நடைபெற அதிசயம் காணணுமே

3. ஞானத்தின் ஆவியே ஞானத்தால் நிரப்புமைய்யா
கிருபையின் ஆவியே கிருபையால் நிரப்புமைய்யா

4. வைராக்கிய ஆவியே வைராக்கிய ஆவியால் நிரப்புமைய்யா
ஆலோசன ஆவியே தேவ ஆலோசனையால் நிரப்புமைய்யா

5. பணிவான ஆவியே பணிவான ஆவியால் நிரப்புமைய்யா
சாந்தமுள்ள ஆவியே சாந்தமான ஆவியால் நிரப்புமைய்யா

6. உற்சாக ஆவியே உற்சாகத்தால் நிரப்புமைய்யா
நிலைவரமான ஆவியே நிலைவரமான ஆவியால் நிரப்புமைய்யா

7. கனிகொடுக்கும் ஆவியே உம் கனிகொடுக்கும் ஆவியால் நிரப்புமைய்யா
அசைவாடும் ஆவியே எப்போதும் எங்களில் அசைவாடணுமே

## பாடல் 111

ஜீவ நதி ஜீவ நதி ஓடி வருகுது
புதிய ஆண்டை செழிக்க வைக்க ஓடி வருகுது

1. இந்த நதி போகும் இடமெல்லாம் ஜீவன் வருமே
   இது செல்லும் இடமெல்லாம் தூய்மையாகுமே

2. அது பைசோன் நதியாக ஓடி வருகுது
   அது மனம் திரும்பி இரட்சிப்போடு ஓடி வருகுது

3. அது இந்தியா தேசத்தை சுற்றி வருகுது
   அது எத்திசையும் சுற்றி ஓடி வருகுது

4. தேவ வார்த்தையை நாம் ஏற்றுக்கொண்டால்
   நாம் கையின் பலனெல்லாம் பொன் விளையுமே

5. அது கீகோன் நதியாக ஓடி வருகுது
   அது மஹாராஷ்டாவை சுற்றி ஓடி வருகுது

6. அது வேகமாக பொங்கி ஓடி வருகுது
   மகிழ்ச்சியோடு துள்ளி குதித்து ஓடி வருகுது

7. அது இதெக்கேல் நதியாக ஓடி வருகுது
   ஆசீர்வாதத்தை அள்ளி கொண்டு ஓடி வருகுது

8. அது ஐபிராத்து நதியாக ஓடி வருகுது
   அது வேகமாக புரண்டு திரண்டு ஓடி வருகுது

## பாடல் 311

என்னில் வரும் கோபத்தை மாற்றிடுமே
உம்மை போல என்னை மாற்றிடுமே
போகும் இடம் கோபத்தை மாற்றிடுமே
வேலையிலும் என் கோபத்தை மாற்றிடுமே

1. என் வீட்டிலும் கோபத்தை மாற்றிடுமே
   என் வழியிலும் கோபத்தை மாற்றிடுமே
   சாந்தமுள்ளவனாய் மோசையை மாற்றினீரே
   மோசையைபோல் என்னையும் மாற்றிடுமே

2. தேவா இரக்கத்தால் என்னை மாற்றிடுமே
   தேவ மகிமையால் என்னை நிரப்பிடுமே
   உம் சேவையில் நிலைத்து நிற்க
   என்னை தாழ்மையாய் நடத்திடும் தேவா

3. வாழ்நாளெல்லாம் உம் பாதம் அமர்ந்திட
   அனுதினம் சேவையை நான் செய்திட
   சோர்ந்திடாமல் நான் தினம் ஜெபித்திடவும்
   ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்று நிற்பேன்

4. உத்தமனாய் நான் உமக்குள் நடந்திடவும்
   உம் வீட்டில் நான் உண்மையுள்ளவனாய்
   ஆலயத்தில் ஒலிவ மரத்தைபோல் நிறுத்தும்
   உம் ஆலயத்தை விட்டு பிரியாதிருப்பேன்

## பாடல் 312

உயிர்த்த இயேசு வல்லமையை நாடிடுங்கள்
உண்மையோடு நீங்கள் தினம் நாடுங்கள்
உபவாசித்து ஜெபத்தோடு நீங்கள் நாடுங்கள்
போராடி ஜெபித்து நீங்கள் நாடிடுங்கள்

வல்லமை தாருமே வல்லமை தாருமே
வல்லமை எனக்கு தாருமே - 4

1. வல்லமை தாரும் எங்கள் தேவனே
வல்லமையால் எங்களை தினம் நிரப்பும்
உம்மைபோல என்னையும் மாற்றிடும் தேவனே
பரிசுத்தமாய் என்னை என்றும் நடத்தி சென்றிடும்

2. நீர் விரும்பும் பரிசுத்தம் எனக்கு தாருமே
பரிசுத்த அக்கினியால் என்னை நிரப்பிடும்
தேசத்தில் சாட்சியாய் என்னை நிறுத்திடும்
உமக்காக நான் வாழ்ந்து செழித்திருப்பேன்

3. உம் வல்லமை தவிர எனக்கு வேறு வேண்டாமே
சத்துருவை தினம் ஜெயிக்க வல்லமை தாருமே
தாவீது சிங்க கரடியை கிழித்துப் போட்டானே
சாத்தானை ஜெயித்து நிற்க வல்லமை தந்திடும்

4. கேதுரு மரங்களை முறிக்கும் தேவனின் வல்லமை
காடுகளை அதிரச் செய்யும் தேவ வல்லமை
காண்டா மிருக குட்டிகளை போலவும் நான்
துள்ளி குதித்து உம்மையே நான் ஆராதிப்பேன்

## பாடல் 112

ஆபிரகாமே ஆபிரகாமே நான் உன் தேவன்
என்று வாக்குரைத்த தேவனுக்கு கீழ்ப்படிந்தானே
ஆபிரகாம் தேசத்தையும் விட்டு விட்டானே
தேவன் காண்பித்த தேசத்துக்கு வந்து விட்டானே

அல்லேலுயா ஆமென் ஆமென் - 4

ஆபிரகாமே உன்னை பெரிய ஜாதியாக்குவேன்
தேவன் சொன்னபடி அவனை பெரிய ஜாதியாக்கினார்
நான் உன் பேரை என்றும் பெருமைப்படுத்துவேன் - என்று
தேவனும் ஆபிரகாமுக்கு வாக்குரைத்தாரே

வாக்குரைத்த தேவன் வாக்கை நிறைவேற்றினார்
ஆபிரகாம் சென்ற தேசம் ஆசீர்வாதமாய் மாற்றி
விட்டானே
உன்னை ஆசீர்வதிப்பவனை ஆசீர்வதிப்பேன் என்றார்
உன்னை சபிப்போனை சபிப்பேன் என்று வாக்குறைத்தாரே

பூமியின் வம்சமெல்லாம் உனக்குள்ளே என்றும்
ஆசீர்வதிக்கப்படும் என்று கர்த்தர் சொன்னாரே
நீயும் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால்
தேவன் உன்னையும் ஆசீர்வதித்து உயர்த்திடுவாரே

ஆபிரகாம் தேசத்தையும் சொந்தமாக்கி கொண்டான்
ஆபிரகாம் பரதேசிக்கு மடியும் தலைவனுமானான்
ஆபிரகாமை போல நீயும் பாடு சகித்தால்
தேவனோடு சதா காலமும் ஆழுகை செய்வாய்

## பாடல் 113

இயேசு பிறந்தார் இயேசு பிறந்தார்
உலகத்தை விடுவிக்கவே - 2
உலகத்தை விடுத்து இரட்சிக்கவே
நம் இயேசு பிறந்தாரே - 2

ஆமேன் அல்லேலுயா ஆமேன் அல்லேலுயா
ஆமேன் அல்லேலுயா - 2

1. பெத்லேகேம் ஊரில் மரியாள் வயிற்றில்
இயேசு உருவானார் - 2
ஏற்ற வேளையில் இயேசு ராஜா
மனிதனாய் பிறந்தாரே - 2

2. ஏழையாய் பிறந்தார் மனிதனாய் வாழ்ந்தார்
மனிதரோடு இசைந்திருந்தார் - 2
முப்பது வயதில் யோர்தான் நதியில்
யோவானால் ஸ்ஞானம் பெற்றார் - 2

3. மூன்றரை வருடம் உலகத்தில்
தன்னை பிரஸ்தாபமாக்கினார் - 2
பாவத்தை மன்னித்தார் சாபத்தை மாற்றினார்
வியாதி எல்லாம் நீக்கினார் - 2

4. மரித்தோரை எழுப்பி மரண பயத்தை
மாற்றிடவே வந்தார் - 2
மனந்திரும்பி நீ இயேசுவை அண்டினால்
பரலோகம் சென்றிடலாம் - 2

5. மனிதனே உனக்கு கிடைத்த இந்நாளில்
மனம் திரும்பி நீ வா - 2
மன்னித்து உன்னை இரட்சித்து இயேசு
பரலோகம் கொண்டு சேர்ப்பார் - 2

## பாடல் 313

கேளுங்கள் தேவனிடம் கிடைக்கும் என்றார்
தட்டுங்கள் தேவனிடம் திறக்கும் என்றார்
கேட்கிறவன் தேவனிடம் பதில் பெறுவான்
உண்மையோடு கேட்டால் பெற்றிடுவான்

1. எதை கேட்டாலும் இயேசு செய்வேன் என்றார்
விசுவாசித்தால் என்றும் மகிமையை காண்பாய்
வாருங்கள் தேவனிடம் ஒன்று சேருவோம்
சபையோரே ஒன்று சேர்ந்து கேட்டிடுவோம்

2. சபையார் ஒன்று கூடி ஜெபிக்கும் போது
பூட்டப்பட்ட சிறைச்சாலை திறவுண்டது
கைதியான பேதுரு வெளியே வந்தான்
தேவாலயம் சென்று பிரசிங்கித்தான்

3. உங்கள் இருதயம் கலங்க வேண்டாம்
தேவனிடம் விசுவாசத்தில் நிலைத்திருங்கள்
பிதாவின் வசஸ்தலம் நோக்கிப் பாருங்கள்
இயேசுவிடம் விசுவாசம் நிலைத்திருங்கள்

4. கிறிஸ்துவுக்குள் நீங்கள் எழுந்ததினால்
மேலானதையே நீங்கள் நாடிடுங்கள்
கீழானதை என்றும் தேடிடாதே
மேலானதை அனுதினமும் தேடுங்கள்

## பாடல் 314

ஆராதனையை மறக்காதே நீ ஆராதிக்க மறக்காதே
ஆராதிக்க மறந்தால் தேவன் உன்னை மறப்பார்
சபை கூடுகையை மறக்காதே கூடிவருதலை மறக்காதே
கூடுகையை நீ மறந்தால் தேவன் உன்னை மறப்பார்

நீதியை பின்பற்றிடு நியாயங்களை கைக்கொண்டிடு
கற்பனையை பின்பற்றிடு அவர் கட்டளையை காத்திடு
அதுவே உனக்கு ஜீவன் நீ உபதேசத்தை விட்டிடாதே
உன் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமாகும்

புத்திமதியை விட்டுவிடாதே உபதேசத்தை பற்றிக்கொள்
அவைகளில் நீ நடக்கும் போது இடரல்கள் வருவதில்லை
செம்மையான பாதையிலே தேவன் நடத்தி செல்வார்
நீ அவைகளில் ஓடினாலும் இடறாமல் நடந்து செல்வாய்

காலையில் நீ எழுந்து ஜெபிப்பதை விட்டுவிடாதே
அனுதினம் வேதம் வாசிக்க நீ ஒருபோதும் மறவாதே
வேதமே வழிகாட்டி வேத வசனமே உனக்கு ஜீவன்
அதை நீ தழுவி கொண்டால் உன்னை கனம்பண்ணும்

தேவனை நீ மறந்தால் தேவன் உன்னை மறப்பார்
கர்த்தரை கனம்பண்ணினால் உன்னை கனம்பண்ணுவார்
தேவனோடு நீ பேசினால் அவர் உன்னோடும் பேசிடுவார்
அவரோடு நீ சேர்ந்தால் அவர் உன்னோடு சேர்ந்திடுவார்

## பாடல் 114

புதிய ஆண்டை காணச் செய்தாரே
ஆசிர்வாதத்தால் செழிக்க செய்வாரே
தேவனே நீர் என்றும் வாழ்க வாழ்கவே
தேவனே நீர் என்றும் வாழ்க வாழ்கவே

1. கடந்த ஆண்டு எம்மை காத்த தேவனே
புதிய ஆண்டு எங்களை ஆசிர்வதியும்
புதிய நன்மை கிருபை என்னை தொடருமே
எங்களை ஆண்டு வழிநடத்தும் தேவனே

2. இந்த வருடத்தை தேவ நன்மையால்
தேவன் நம்மை நடத்த என்றும் துதிப்போம்
மன விருப்பங்கள் என்றும் நிறைவேறுமே
என் ஆலோசனை எல்லாம் நிறைவேற்றுவார்

3. வருசத்தை தேவன் என்றும் முடி சூட்டுகிறார்
வருசத்தை தம் நன்மையால் நிறைத்திடுவார்
ஆண்டு முழுதும் நம்மை காக்கும் படி
அவரை துதித்து பாடி என்றும் போற்றிடுவோம்

4. வருசத்தின் துவக்க முதல் முடிவு வரையிலும்
தேவ கண்கள் நம்மேல் வைத்திடுவார்
பாதுகாக்கும் தேவனுக்கு நன்றி சொல்வோம்
உயர்த்துகின்ற தேவனுக்கு நன்றி சொல்வோம்

5. அல்லேலூயா சொல்லி துதித்து பாடுவோம்
அல்லேலூயா சொல்லி வாழ்த்தி பாடுவோம்
அல்லேலூயா சொல்லி மகிழ்ந்து பாடுவோம்
அல்லேலூயா சொல்லி உயர்த்தி பாடுவோம்

## பாடல் 115

அப்பா அப்பா இயேசப்பா
நீங்க இல்லாமல் நாங்கயில்ல
அப்பா அப்பா இயேசப்பா
எங்களை கொஞ்சம் பாருங்கப்பா - 2

1. மனதுருகும் இயேசப்பா
மன்னிக்கும் தயை பெருத்தப்பா
மன்னித்து எங்களை பாருமப்பா - 2

2. ஆண்டாண்டாக காக்கும் தேவன்
இஸ்ரவேல் தேவன் எங்கள் தேவன்
எங்களை காத்து நடத்தும் அப்பா - 2

3. வருடத்தை நன்மையால் முடிசூட்டும்
பாதைகள் நெய்யாய் பொழியட்டுமே
அது கெம்பீரித்து என்றும் பாடட்டும் - 2

4. வனாந்திர வாழ்க்கை செழிக்கட்டுமே
அது பூரித்து களிப்புடன் பாடட்டுமே
தளர்ந்த கைகளும் திடபடட்டுமே - 2

5. குருடரின் கண்களும் திறக்கட்டுமே
செவிடரின் காதுகளும் கேட்கட்டுமே
முடவர் எல்லாரும் எழும்பட்டுமே - 2

6. முரடரும் திருடரும் மாரட்டுமே
குடிப்போரும் உதைப்போரும் மாரட்டுமே
எல்லோரும் பரிசுத்தமாகட்டுமே - 2

7. எல்லோரின் பாதைகள் மாரட்டுமே
பரிசுத்த வழிகளில் நடக்கட்டுமே
அது ஜீவ வழியாக செல்லட்டுமே - 2

## பாடல் 315

எழும்பு எழும்பு சீயோனே
உன் வல்லமையை நீ தரித்துகொள்
பரிசுத்த நகரமாகிய எருசலேமே
உன் வஸ்திரத்தை எடுத்து உடுத்திக்கொள்

தந்தானே தந்தானே தந்தனை தந்தானே

1. அலங்கார ஆடையை கழற்றி போடாதே
இரட்சிப்பின் வஸ்திரத்தை இழந்து விடாதே
கோபத்தில் வஸ்திரத்தை நீ கிழித்தால்
சாத்தான் உன்னை கீழே விழத்தள்ளுவான்

2. தூசியை உதறிவிட்டு எழுந்து வந்திடு
கர்த்தருக்காய் எழுந்து நிமிர்ந்து நின்றிடு
கட்டுகளை அவிழ்த்து வெளியே வந்திடு
கட்டிலிருந்து உன்னை நான் மீட்டுவிட்டேன்

3. சத்தியத்தை கூறிட நீ எழுந்து ஓடிவா
சாந்தத்தின் தேவன் உன்னோடு இருப்பார்
புறப்படுங்கள் புறப்படுங்கள் தேவன் வருகின்றார்
சுவிசேஷத்தை அறிவித்திடு இயேசு வருகின்றார்

4. பாழான இடங்களுக்கு சென்று சொல்லுங்கள்
பரமனுக்காய் தேவராஜியத்தை கட்டிவிடுங்கள்
உன்னோடு அனுதினம் தேவன் வருகின்றார்
உன்னை விட்டு தேவன் விலகவே மாட்டார்

## பாடல் 316

இயேசு வந்தால் என்ன ஆகுமோ
அவர் இன்று வந்தால் என்ன ஆகுமோ
எக்காள சத்தம் கேட்க செய்வாரோ
என் செவியை அடைத்தும் விடுவாரோ

1. என்னை பேர் சொல்லி அழைப்பாரோ
என்னை அழைக்காமல் விட்டுவிடுவாரோ
நள்ளிரவில் வந்து என்னை அழைப்பாரோ
பகல் வேளையில் வந்து என்னை அழைப்பாரோ

2. திருடனைப்போல் வருவேன் என்றாரே
என் மேல் திருடனைப்போல் வந்திடுவாரோ
மணவாட்டியே மணவாளியே ஆயத்தப்படு
திருடனைப்போல் இயேசு வேகம் வருகிறார்

3. ஜீவ கிரீடம் எனக்கு கிடைக்குமோ
ஜீவ கிரீடத்தை நான் இழந்து விடுவேனோ
மருரூபமாக என்னை மாற்றிவிடுவாரோ
என்னை வெறுத்து தள்ளிவிடுவாரோ

4. என்னை நியாயத்தீர்ப்பில் விட்டுவிட்டால்
என்னை நியாயம் எப்படி தீர்ப்பாரோ
பரலோகில் என்னை சேர்ப்பாரோ
நரகத்தில் என்னை போட்டுவிடுவரோ

## பாடல் 116

நான் தெரிந்து கொண்ட என் மகனே
நானே உன்னை உண்டாக்கினேன்
நான் தெரிந்து கொண்ட என் மகளே
நானே உன்னை உண்டாக்கினேன் - 2

1. தண்ணீரை நீ கடக்கும் போது
உன்னோடு நான் இருப்பேன் என்றீர்
ஆறுகளை கடக்கும் போது
உன்னோடு நான் இருப்பேன் என்றீர் - 2

2. அக்கினியில் நீ நடக்கும் போது
அக்கினி உன்னை பற்றாது
அக்கினி ஜீவாலை உன்னை
தினம் எரிக்காதிருக்கும் என்றீர் - 2

3. நான் குருடர் எல்லோரையும்
அறியாத வழியிலே நடத்துவேன்
அவர்கள் தெரியாத பாதையிலும்
முன்னால் வெளிச்சம் கொடுக்கிறேன் - 2

4. தாகம் உள்ளவன் தண்ணீரையும்
வரண்ட நிலத்தில் ஆறுகளையும்
உன் சந்ததி மேல் என் ஆவியையும்
உன் சந்ததியை ஆசீர்வதிப்பேன் - 2

5. கர்த்தருக்கு தினம் வழியை
ஆயத்தபடுத்து என்றுரைத்தார்
பள்ளமெல்லாம் உயர்த்தபடும்
மலைகள் குன்றுகளும் தாழ்த்தப்படும் - 2

# பாடல் 117

ஜாதிகள் கொந்தளித்து எழும்பி வந்தாலும்
ஜனங்கள் விருதாவாக சிந்தித்தாலும்
யாக்கோபே நீ என்றும் பயப்படாதே
இஸ்ரவேலே நீ என்றும் கலங்காதே

1. பரலோகத்தில் வீற்றிருக்கும் தேவன் தாம்
   உனக்காக என்றும் யுத்தம் பண்ணிடுவார்
   பயத்துடனே கர்த்தரை தினம் துதியுங்கள்
   நடுக்கத்துடனே தேவனில் களிகூருங்கள்

2. தேவகுமாரன் கோபம் கொள்ளாமல்
   வழியில் நீங்கள் அழியாமலும்
   தேவனை என்றும் அண்டிக்கொள்ளுங்கள்
   அண்டிகொள்ளும் யாவரும் பாக்கியவான்கள்

3. நான் கர்த்தரை நோக்கி கூப்பிடுவேன்
   தேவன் எனக்கு செவி கொடுப்பார்
   பரலோகில் இருந்து என் சத்தம் கேட்பார்
   கை தூக்கி என்னை தூக்கி விடுவார்

4. என் நீதியின் என் தேவனே
   இரங்கி என் விண்ணப்பத்தை கேட்டிடும்
   நீதியின் பலிகளை தினம் செலுத்துவேன்
   கர்த்தரை தினம் நான் நம்பி இருப்பேன்

5. பக்தியுள்ளவனை கர்த்தர் தமக்காகவே
   தெரிந்து கொண்டார் என்று அறியுங்கள்
   கர்த்தரை நோக்கி நான் கூப்பிடுவேன்
   என் சத்தம் கேட்டு என்னை காத்திடுவார்

# பாடல் 317

உன்னை அழைக்கின்றார்
இயேசு உன்னை தான் அழைக்கின்றார்

1. வீடு இல்லை என்கின்றாயோ
   இயேசு உன்னை தான் அழைக்கின்றார்
   கர்த்தர் வீட்டை கட்டினால்
   உனக்கு வீடும் கட்டப்படும்

2. பிள்ளை இல்லை என்கின்றாயோ
   இயேசு உன்னை தான் அழைக்கின்றார்
   அன்னாளைப் போல் ஜெபித்திடு
   உனக்கு ஏழுபிள்ளை தந்திடுவார்

3. படிப்பு தான் இல்லை என்கின்றாயோ
   இயேசு உன்னை தான் அழைக்கின்றார்
   தேவன் கல்விமானின் நாவை தந்திடுவார்
   உன்னை அதிசயமாக நடத்திடுவார்

4. பணம் இல்லை என்கின்றாயோ
   இயேசு உன்னை தான் அழைக்கின்றார்
   என் நாமத்தில் நீ எதை கேட்டாலும்
   நான் அதை செய்வேன் என்றார்

5. கலங்காதே மகனே திகையாதே
   இயேசு உன்னை தான் அழைக்கின்றார்
   உன் தேவனிடம் ஓடி வந்திடு
   அணைத்து உன்னை உயர்த்திடுவார்

## பாடல் 318

வாழவேண்டும் நீ வாழவேண்டும்
வாழ்ந்து சுகித்து வாழவேண்டும்
ஓடிவா! இயேசுவண்டை ஓடிவா!
வாழவைப்பார் உன்னை வாழவைப்பார்

1. நோவாவை தேவன் வாழவைத்தார்
கடைசி வரையும் காத்துக் கொண்டார்
உன்னையும் தேவன் வாழவைத்து
கடைசிவரையும் காத்துக் கொள்வார்

2. விசிவாசியே நீ வாழ வேண்டும்
விசுவாசத்தில் வாழ்ந்து செழிக்க வேண்டும்
ஆபிரகாம் விசுவாசித்து வாழ்ந்தானே
இம்மையிலும் மறுமையிலும் வாழ்கின்றான்

3. ஆபிரகாம் விசுவாசத்தில் நிலைத்து நின்றான்
வாக்குதத்தம் பெற்று அனுபவித்தான்
நீயும் விசுவாசத்தில் நிலைத்து நின்றால்
இம்மையிலும் மறுமையிலும் வாழ்ந்திடுவாய்

4. கலங்காதே திகையாதே விசுவாசியே
விசுவாசத்தின் தேவன் நம் தேவன்
சாரிபாத் விதவை விசுவாசித்தாள்
காலமெல்லாம் புசித்து வாழ்ந்தாள்

## பாடல் 118

கர்த்தாவே என் முழு உள்ளத்தோடும்
உம்மையே தினம் தினம் நான் துதிப்பேன்
நீர் செய்த நன்மை தினம் நினைத்து
நான் உமக்குள் என்றும் களிகூறுவேன

வாரும் வாரும் எங்கள் இயேசு நாதா
எங்களை கண்ணோக்கி பாரும் தேவா

1. உமது நாமத்தை கீர்த்தனம் பண்ணுவேன்
என் சத்துரு பின்னாக திரும்பிடுவார்
சீயோனில் வாசம் பண்ணும் கர்த்தாவே
நீர் செய்த அற்புதத்தை சொல்லி வருவேன்

2. கன்மலையும் என் கோட்டையும்மானீர்
கேடகமும் என் துருகமும் நீரே
நான் நம்பும் என் கோட்டையும் நீரே
புகலிடமும் என் தேவனும் நீரே

3. வானங்களை தாழ்த்தி இரங்கி வந்தீரே
தேவன் எனக்கு நியாயம் செய்திட்டாரே
அவர் முன்பாக மன உண்மையாக நான்
துர்குணத்தை விலக்கி காத்துகொண்டேன்

4. தயையுள்ளவனுக்கு நீர் தயை உள்ளவர்
உத்தமனுக்கு நீர் உத்தமரானீர்
புனிதனுக்கு நீர் புனிதரானீர்
மாறுபாடு உள்ளவனுக்கு மாறுகிறவர்

5. தேவனுடைய வழி உத்தமமானது
தேவனுடைய வசனம் புடமிடப்பட்டது
கர்த்தரே அல்லாமல் தேவன் யாருமில்லை
தேவனை அன்றி கன்மலையும் இல்லை

## பாடல் 119

இயேசுவே நீர் என் தேவன்
இயேசுவே நீர் என் இரட்சகர் - 2

1. உம்மை போல யாரும் இல்லை
நீர் இல்லாமல் நானும் இல்லை
நீரே எனக்கு போதும்மைய்யா
வேரே ஒன்றும் வேண்டாம்மைய்யா

2. நீரே எந்தன் நல்ல மேய்ப்பர்
பச்சையான வயல் வெளிலும்
அமர்ந்த தண்ணீர் அண்டையிலும்
மறக்காமல் என்னை நடத்தும் தேவன்

3. என் ஆத்துமாவை தேற்றும் தேவன்
நீதியின் பாதையில் நடத்தும் தேவன்
நீரே எனக்கு போதும்மைய்யா
வேரே ஒன்றும் வேண்டாம்மைய்யா

4. நீரே எந்தன் நல்ல மீட்பர்
நீரே என்னை நடத்தும் தேவன்
பொல்லாப்புக்கு நான் பயப்படேன்
உமது கோலும் தடியும் தேற்றும்

5. கர்த்தரின் வீட்டிலே நீடித்த நாட்கள்
நான் என்றும் நிலைத்திருப்பேன்
உண்மையோடு சேவை செய்வேன்
உத்தமனாய் நடந்திடுவேன்

## பாடல் 319

துதி கனம் மகிமை எல்லாமே
என் இயேசு ராஜாதி ராஜாவுக்கே
ஜனங்களின் வம்சங்களே கர்த்தருக்கு
அவர் நாமத்திற்கு மகிமை செலுத்திடுங்கள்

1. கர்த்தரையும் அவருடைய வல்லமையும்
நித்தமும் நீங்கள் தேடிடுங்கள்
தேவனின் தாசன் இஸ்ரவேலே
யாக்கோபின் புத்திரரே ஆர்ப்பரியுங்கள்

2. தேவன் செய்த அற்புதம் பெரியது
அவர் செய்த அதிசயம் மகா பெரியது
தேவனால் தெரிந்து கொண்ட யாக்கோபே
தேவனின் நியாத்தீர்ப்பை நினைத்துகொள்

3. அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர்
அவர் கட்டளையான வார்த்தையை நினைத்திடு
ஆபிரகாமோடு பண்ணின உடன்படிக்கையும்
உனக்கும் நிச்சயம் நிறைவேற்றிடுவேன்

4. கர்த்தரின் நாமத்தினால் மகிமை செலுத்தி
காணிக்கை களையும் கொண்டு வந்திடுங்கள்
பூலோகத்தாரே நீங்களும் நடுங்கிடுங்கள்
பூச்சக்கிரத்தை அசையாமல் உறுதிபடுத்தினார்

# பாடல் 320

என் தேவனே என் தேவனே
உம்மை நோக்கி பார்க்கின்றோம்

1. வேலைக்காரன் கண்களைப் போல்
வேலைக்காரி கண்களைப் போல்
எங்கள் கண்கள் தேவ கரத்தை
தினம் நோக்கி பார்க்கின்றது
என் தேவனே

2. உம்மை நோக்கி ஜெபிக்கின்றோம்
உம்மை நோக்கி துதிக்கின்றோம்
உம்மை நோக்கி நிற்கின்றோம்
உம்மை நோக்கி பார்க்கின்றோம்
என் தேவனே

3. எங்களை கண் ணோக்கி பாரும்
எங்களை நீர் ஆராய்ந்து பாரும்
எங்களை நீர் சோதித்து பாரும்
எங்களை நீர் பரீட்சித்து பாரும்
என் தேவனே

4. நாங்கள் உம்மை பார்க்கின்றோம்
நாங்கள் உம்மை விடமாட்டோம்
நாங்கள் உம்மை துதிக்கின்றோம்
நாங்கள் உம்மை போற்றுகின்றோம்
என் தேவனே

5. நாங்கள் உம்பாதம் நிற்கின்றோம்
எங்கள் விருப்பம் நிறைவேற்றும்
எங்கள் யோசனை நிறைவேற்றும்
நாங்கள் கெஞ்சி கேட்கின்றோம்
என் தேவனே

# பாடல் 120

என்னை தெரிந்த தேவனுக்கு நன்றி ஐய்யா
என்னை அழைத்த தேவனுக்கு நன்றி ஐய்யா
என்னை மன்னித்த தேவனுக்கு நன்றி ஐய்யா
என்னை இரட்சித்த தேவனுக்கு நன்றி ஐய்யா

நன்றி நன்றி நன்றி என்று
நன்றி சொல்லுகிறோம் - 4

1. என்னை மாற்றின தேவனுக்கு நன்றி ஐய்யா
என் பாதையை மாற்றின தேவனுக்கு நன்றி ஐய்யா
எனக்கு போதித்த தேவனுக்கு நன்றி ஐய்யா
என்னை அபிஷேகித்த தேவனுக்கு நன்றி ஐய்யா

2. படிக்கவைத்த தேவனுக்கு நன்றி ஐய்யா
ஜெபிக்கவைத்த தேவனுக்கு நன்றி ஐய்யா
தினம் பேசும் தேவனுக்கு நன்றி ஐய்யா
தினம் நடத்தும் தேவனுக்கு நன்றி ஐய்யா

3. தரிசனம் தரும் தேவனுக்கு நன்றி ஐய்யா
சொப்பனத்தில் பேசும் தேவனுக்கு நன்றி ஐய்யா
நல் வழியில் நடத்தும் தேவனுக்கு நன்றி ஐய்யா
நன்மையால் நிறப்பும் தேவனுக்கு நன்றி ஐய்யா

4. என்னை ஆசீர்வதிக்கும் தேவனுக்கு நன்றி ஐய்யா
என்னை அரவணைக்கும் தேவனுக்கு நன்றி ஐய்யா
தினம் தேடிவரும் தேவனுக்கு நன்றி ஐய்யா
தினம் தேற்றும் தேவனுக்கு நன்றி ஐய்யா

5. தம்மை போல் மாற்றும் தேவனுக்கு நன்றி ஐய்யா
பேச வைக்கும் தேவனுக்கு நன்றி ஐய்யா
பாட வைக்கும் தேவனுக்கு நன்றி ஐய்யா
பரலோகம் சேர்க்கும் தேவனுக்கு நன்றி ஐய்யா

## பாடல் 121

என் இயேசு எனக்காவே

தெரிந்தெடுத்த சிலுவை - 2

அது கோர சிலுவையாக

என்னை மீட்கும் சிலுவையாக - 2

அவர் தெரிந்தெடுத்தார் வெற்றி சிறந்தார் - 2

நீயும் வெற்றி பெற்று வாழ்ந்திருக்க - 2

1. மனிதனே உனக்காக
   நம் தேவாதி தேவனும்
   சிலுவையை ஏன் சுமந்தார்
   பாவ சாபத்தை சுமந்து தீர்க்க – அவர்

2. தாம் உண்டாக்கின மக்களுக்காய்
   தம் ஜீவனை ஈந்தாரே
   நீயும் மனந்திரும்பி வாழ்ந்திருக்க
   இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்–அவர்

3. உன் வியாதியெல்லாம் மாற்றி
   உன்னை இரட்சிப்பால் அலங்கரித்து
   நீ பரிசுத்தமாய் வாழ
   கோர சிலுவையை சுமந்தாரே – அவர்

4. மனிதனே சிலுவையை பார்
   கோர காட்சியை நோக்கி பார்
   உன் வேதனை மாறும் சாபங்கள் மாறும்
   வாழ்ந்து நீ சுகித்திருப்பாய் – அவர்

5. இயேசு வேகமாய் வருகிறார்
   அவரோடு நீயும் செல்ல
   நீ பரலோகில் வாழ்திருக்க
   கோர சிலுவையை தெரிந்தெடுத்தார் – அவர்

## பாடல் 321

கர்த்தரின் நாள் வருகின்றது

அது வேகமாக வருகின்றது

சீயோனில் எக்காளம் ஊதிடுங்கள்

பரிசுத்த பர்வதத்தில் சத்தமிடுங்கள் - நீங்கள்

வருகின்றார் வருகின்றார் மஹா ராஜா

பராக்கிரம சாலியாய் வருகின்றார்

1. இருளும் அந்தகார நாளுமாகும்
   எல்லோரும் தத்தளித்து நடுங்குவார்கள்
   பரிசுத்த உபவாசத்தை கூட்டிடுங்கள்
   விசேஷித்த ஆசரிப்பை நியமியுங்கள்

2. வெளியின் மிருகங்கள் நோக்கி கூப்பிடும்
   நதிகளில் தண்ணீரும் வற்றிபோய்விடும்
   அக்கினி மேய்ச்சலை பட்சித்திடும்
   விருட்சம் எல்லாமே எரிந்து விடும்

3. கர்த்தரின் ஆசாரியர் துக்கிக்கிறார்கள்
   வயல்வெளி பாழாயிற்று அலரிடுங்கள்
   பயிரிடும் குடிகளே தேவனிடம் சேருங்கள்
   அறுப்புகள் எல்லாமே அழிந்துவிடும்

4. தேவனின் ஆலயத்தில் கூடிவாருங்கள்
   உபவாச கண்ணீரோடு கதறிடுங்கள்
   கர்த்தர் எழும்பி ஜனத்திற்காய்
   வைராக்கியம் கொண்டு கடாட்சிப்பார்

## பாடல் 322

பெத்தேலையும் தேட வேண்டாம்
கில்காலையும் நீங்கள் தேடவேண்டாம்
கர்த்தரையே என்றும் தேடிடுங்கள்
பிழைக்கவே நீங்கள் பிழைப்பீர்கள்

1. பெயர்சேபா போக வேண்டாம்
தீமையும் நீங்கள் செய்ய வேண்டாம்
நியாயத்தை என்றும் நிலைநிறுத்தி
நன்மையை தேடி நாடிடுங்கள்

2. தந்த கட்டிலை தேட வேண்டாம்
சுகபோக வாழ்க்கை உனக்கு வேணடாம்
உலக போக்கில் போகவேண்டாம்
குடித்து வெறித்து ஆட வேண்டாம்

3. யாக்கோபின் மேன்மை வெறுக்கிறார்
இஸ்ரவேலின் மேட்டிமை அருவருக்கிறார்
பெரிய வீட்டை திறப்பாக்குவேன்
சிறிய வீட்டை வெடிப்பாக்குவேன்

4. நியாயத்தை நீ மாற்ற வேண்டாம்
நீதியின் கனியை எட்டியாக்காதே
கன்மலையை நீ மறப்பாயானால்
கர்த்தர் உன்னை மறந்திடுவார்

5. ராஜா இயேசு வருகின்றார்
உன்னை தானே அழைக்கின்றார்
நீ ஆயத்தமாய் என்று இருந்தீடு
பரலோக இராஜ்யம் சென்றிடுவாய்

## பாடல் 122

சிலுவையின் அண்டையில் ஓடிவா என்று
இயேசு உன்னை அழைக்கிறார்
கலங்கி தவித்து பாரம் சுமக்கும்
உன்னை இயேசு அழைக்கிறார்

1. அன்போடு கரங்களை விரித்தவராய்
இயேசு உன்னை அழைக்கிறார்
தோல்வியை மாற்றி ஜெயத்தை தரவே
இயேசு உன்னை அழைக்கிறார்

2. இன்றும் கரங்களை விரித்தவராய்
இயேசு உன்னை அழைக்கிறார்
தீராத வியாதியை மாற்றிடவே
இயேசு உன்னை அழைக்கிறார்

3. பாரத்தை மாற்றி சமதானம் தரவே
இயேசு உன்னை அழைக்கிறார்
கலக்கம் எல்லாம் மாற்றிடவே
இயேசு உன்னை அழைக்கிறார்

4. மரண பயத்தை மாற்றிடவே
இயேசு உன்னை அழைக்கிறார்
ஆயுசின் நாட்களை அதிகமாக்கவே
இயேசு உன்னை அழைக்கிறார்

5. உலகத்தில் தேவனோடு வாழ்ந்திருக்க
இயேசு உன்னை அழைக்கிறார்
பரலோகில் நிரந்தரம் வாழ்ந்திடவே
இயேசு உன்னை அழைக்கிறார்

# பாடல் 123

ஆசீர்வாத ஊற்றாய் என்னை மாற்றும் தேவனே
என்னை மாற்றும் தேவனே

உலகம் உம்மை காணும்படி ஊற்றாய் என்னை மாற்றுமே
தேசம் உம்மை பருகிக்கொள்ள ஜீவ ஊற்றாய் மாற்றுமே
தேசத்திற்கும் ஜனத்திற்கும் ஆசீர்வாதமாக நான்
தேவ ஊற்றாய் என்னை எடுத்து பயன்படுத்தும் தேவனே

- ஆசீர்வாத ஊற்றாய்

கோதுமை நிலத்தில் விழுந்து செத்தால் தானே
பலன் கொடுக்கும் என்றுரைத்த என் தேவனே
குயவன் கையில் களிமண்ணாய் என்னை நான் படைக்கிறேன்
தேவ ஊற்றாய் என்னை எடுத்து பயன்படுத்தும் தேவனே

- ஆசீர்வாத ஊற்றாய்

இஸ்ரவேலுக்காய் பரிந்து பேச பவுலை பிரித்து எடுத்தீரே
திறப்பில் நின்று ஜெபித்திட தானியேலை நிறுத்தினீர்
ஊழியத்தில் என்னையும் பிரித்து எடுத்து நிறுத்தினீர்
ஜனங்களுக்கு ஆசீர்வாத ஊற்றாய் என்னை மாற்றிடும்

- ஆசீர்வாத ஊற்றாய்

பவுலை கொண்டு அற்புதம் அதிசயம் செய்தீரே
என்னை கொண்டும் அற்புதம் அதிசயம் செய்திடும்
என் ஜனங்கள் எழும்பி களிகூர்ந்து வளம் பெறவே
என்னை உமக்கு ஜீவ பலியாய் அற்பணிக்கிறேன்

- ஆசீர்வாத ஊற்றாய்

ஆராதனை வேளையில் இரங்கி வாரும் தேவனே
துதிகளின் மத்தியில் அசைவாடிடும் தேவனே
சபை நடுவில் அற்புத அதிசயங்கள் நடந்திட
ஆசீர்வாத ஊற்றாய் என்னை மாற்றும் தேவனே

- ஆசீர்வாத ஊற்றாய்

# பாடல் 323

இறைவன் என்னை சோதிப்பாரோ

சாத்தானும் என்னை சோதிப்பானோ

நான் பயந்த காரியம் வந்திட்டது

நான் அஞ்சினதெல்லாம் வந்தது

1. என் சம்பத்து எல்லாம் அழிந்திடுமோ
   என் சந்ததி அறுப்புண்டு போய் விடுமோ
   என் ஆட்டுமந்தையும் அழிந்திடுமோ
   என் மாட்டுமந்தையும் அழிந்திடுமோ
   - நான் பயந்த

2. என் சொந்தங்களும் விட்டு போய்விடுமோ
   என் பந்தங்களும் விட்டு போய்விடுமோ
   என் நண்பர்களும் விட்டு போய்விடுமோ
   என் ஊராரும் விட்டு போய்விடுமோ
   - நான் பயந்த

3. என் அழகெல்லாம் விட்டு போய்விடுமோ
   என் மேனியெல்லாம் விட்டு போய்விடுமோ
   என் ஆஸ்தியெல்லாம் விட்டு போய்விடுமோ
   என் ஆடம்பரமும் விட்டு போய்விடுமோ
   - நான் பயந்த

4. என் துணைவியும் விட்டு போய்விடுமோ
   என் வேலைக்காரனும் விட்டு போய்விடுமோ
   நான் நினைத்தெல்லாம் வந்து நேர்ந்தது
   நான் பயந்தெல்லாம் வந்து சேர்ந்தது
   - நான் பயந்த

5. எல்லாமே எனக்கு அழிந்த போதிலும்
   என்னை தேவன் கைவிடவே இல்லை
   இன்னும் அவரை வாழ்த்தி போற்றுவேன்
   என் மீட்பர் உயிரோடு இருக்கின்றார்
   - நான் பயந்த

# பாடல் 324

பரிசுத்தர் பரிசுத்தரே எங்கள் தேவன் பரிசுத்தரே
அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே
இரட்சகர் இரட்சகரே எங்கள் தேவன் இரட்சகரே
அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே

1. உன்னதர் உயர்ந்தவரே எங்கள் தேவன் உயர்ந்தவரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே
   உத்தமர் உத்தமரே எங்கள் தேவன் உத்தமரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே

2. அற்புதர் அற்புதரே எங்கள் தேவன் அற்புதரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே
   ஆலோசனையில் வல்லவரே எங்கள் தேவன் நல்லவரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே

3. அதிசயர் அதிசயரே எங்கள் தேவன் அதிசயரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே
   அதிசயம் செய்வதில் எங்கள் தேவன் வல்லவரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே

4. மன்னவரே மன்னவரே எங்கள் மன்னாதி மன்னவரே
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே
   மன்னிப்பதில் வள்ளலவர் எங்கள் இயேசு மகாராஜா
   அல்லேலூயா (2) எங்கள் தேவன் பரிசுத்தரே

5. அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
   ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா!
   எங்கள் இராஜாதி இராஜா வாழ்க - 2
   எங்கள் தேவாதி தேவன் வாழ்க - 2

# பாடல் 124

என் தேவனே என் இராஜனே
என் இயேசுவே என் நண்பனே
என் இயேசுவே என் சிநேகிதரே
என் இயேசுவே என் இரட்சகா

1. உம்மை போல தேவனும் இல்லை
   உம்மை போல நண்பரும் இல்லை
   தேவ ஸ்நேகம் என்றும் மாறாது
   விலை கொடுத்தாலும் அது ஈடாகாது

2. ஏழையாக பிறந்த என் இயேசு
   ஏழையாக வளர்ந்த இயேசுவே
   ஏழை மேல் மனதுருகினார் என் இயேசு
   ஏழ்மையை மாற்றிய என் இயேசு

3. பசியுள்ளவர் மேல் மனதுருகி
   பசியாற்றி போஷித்த இயேசு
   குஷ்டரோகியின் சத்தம் கேட்டு
   மனதுருகி சுத்தமாக்கின இயேசு

4. வனாந்திரத்தில் கள்ளர் கையில்
   அடிபட்டு மரிக்கும் வேளையில்
   இயேசு கண்டு சுகப்படுத்தி
   பாதுகாப்பில் சேர்த்த இயேசு

5. மனிதனே உனக்கு இரங்கி
   உன் பாவங்களை மன்னித்த இயேசு
   உன்னை இரட்சித்து பாதுகாத்து
   உன்னை ஆசீர்வதித்து உயர்த்தும் இயேசு

## பாடல் 125

இஸ்ரவேலின் தேவன் நம் தேவன்
கலங்காதே நீ திகையாதே
யாக்கோபின் தேவன் முன் செல்கிறார்
எப்போதும் உனக்கு துணை இருப்பார்

பயப்படாதே நான் உன்னுடனே
திகையாதே நான் உன் தேவன்

1. சத்துரு முன் உன்னை உயர்த்திடுவார்
சாத்தானை என்றும் அழித்திடுவார்
எரிகோ போன்ற தடைகளையும்
இஸ்ரவேலின் தேவன் தகர்த்திடுவார்

2. ஒரு வழியில் சத்துரு எதிர்த்தாலும்
ஏழு வழியாய் என்றும் ஓட வைப்பார்
இரவானாலும் பகலானாலும் உன்னை
இஸ்ரவேலின் தேவன் காத்திடுவார்

3. தேவன் உனக்கு விதித்த கட்டளையில்
நித்தமும் கருத்தாய் நிலைத்திரு
உண்மையாய் கர்த்தரில் நிலைத்திருந்தால்
உன்னை என்றும் தேவன் உயர்த்திடுவார்

4. நீ வருகையிலும் உன்னை ஆசீர்வதிப்பார்
நீ போகையிலும் உன்னை ஆசீர்வதிப்பார்
உன் கர்ப்ப கனியையும் ஆசீர்வதிப்பார்
உன் மிருக ஜீவனையும் ஆசீர்வதிப்பார்

## பாடல் 325

காப்பார் உன்னை காப்பார்

கர்த்தர் உன்னை காப்பார்
தீங்குக்கு விலக்கி உன்னை காப்பார்
தினம் தினம் உன்னை காத்திடுவார்

1. உன் போக்கையும் வரத்தையும் காத்திடுவார்
உன் வேலை ஸ்தலத்தையும் காத்திடுவார்
உன் கைகளின் பலனை தினம் காப்பார்
உன் பாதம் இடராமல் விலக்கி காப்பார்
- காப்பார் உன்னை

2. தீமைக்கு விலக்கி தினம் காப்பார்
துன்பத்துக்கு விலக்கி தினம் காப்பார்
ஆபத்து காலத்தில் உன்னோடு இருப்பார்
தூதனை கொண்டு உன்னை காப்பார்
- காப்பார் உன்னை

3. விசுவாசியே உன்னை தேவன் காப்பார்
உன் விசுவாச பாதையை காத்திடுவார்
நீ விழுந்திடாமல் உன்னை காத்திடுவார்
தூக்கியெடுத்து உன்னை தினம் காப்பார்
- காப்பார் உன்னை

4. உன் வீட்டை சுற்றி உன்னை காப்பார்
என்றென்றும் தேவன் உன்னை காப்பர்
உன் ஆஸ்திகளெல்லாம் தேவன் காப்பார்
கிருபையும் நன்மையும் தொடர்ந்து வரும்
- காப்பார் உன்னை

5. சமாதனம் தந்து உன்னை காப்பார்
சுகபெலன் தந்து உன்னை காப்பார்
சீயோனிலிருந்து உன்னை காப்பார்
சிறையிருப்பை மாற்றி தினம் காப்பார்
- காப்பார் உன்னை

## பாடல் 326

வாரும் எங்கள் நல்ல போதகரே
வந்து எங்களிடம் தங்கி இருமையா
கருணையுள்ள எங்கள் போதகரே
எங்களோடு தங்கி இருக்கணும்

1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
   எங்கள் போதகரே வாருமைய்யா
   எங்களில் நிலைத்திருக்கும் நல்லபோதகரே
   எங்களுக்கு அற்புதம் செய்யுமைய்யா

2. என் ஜீவனோடு ஜீவனாக கலந்தவரே
   காலையில் கிருபையால் திருப்தியாக்கும்
   இரவிலும் சத்தியத்தை நான் அறிந்திட
   காலையில் மகிமையால் நிரம்ப செய்திடும்

3. ஜீவனுள்ளோர் தேசத்தில் நான் நடப்பேன்
   மகிழ்ந்து பாடி தினம் களிகூர்ந்திடுவேன்
   உத்தமமான வழியில் நான்தினம் நடப்பேன்
   எப்போது என்னிடத்தில் வருவீரைய்யா

4. இரட்சிக்கப் பட்டோர் சபையில் நிறைந்திட
   என்னோடிருந்து அற்புதங்கள் செய்திடும் தேவா
   சபையில் ஜனம் அனுதினம் வந்துபெருகிட
   வரங்களால் சபையை நிரப்பிடும் தேவா

## பாடல் 126

இயேசுவே என் ராஜாதி ராஜாவே என்றைக்கு வருவீரோ - 2
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா- 2
மேசியாவே மணவாளனாய் என்றைக்கு வருவீரோ - 2
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா -2

மேகமீதில் எக்காளத்தோடும் என்றைக்கு வருவீரோ - 2
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா- 2
ஆரவாரத்தோடும் தூத சத்தத்தோடும் என்றைக்கு வருவீரோ- 2
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா- 2

பிரதான தூதன் சத்தம் முழங்க என்றைக்கு வருவீரோ
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா
கர்த்தருக்குள் மரித்தவர் எழும்பிட என்றைக்கு வருவீரோ
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா

மரிக்காதிருப்பவர் மறுரூபமாக என்றைக்கு வருவீரோ
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா
தேவ ராஜ்யத்தில் உம்மோடு வாழ்ந்திட என்றைக்கு வருவீரோ
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா

ஜீவ தண்ணீரை பருகிகொள்ள என்றைக்கு வருவீரோ
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா
என் ஆவல் அடங்க நான் மகிழ்ந்திட என்றைக்கு வருவீரோ
எப்போது வருவீர் எப்போது வருவீர் எப்போது வருவீரைய்யா

# பாடல் 127

வாரும் வாரும் எங்கள் யேகோவாயீரே
வந்து எங்கள் கண்ணீரை மாற்றிவிடுமே
உம்மையே நம்பி வந்து இருக்கின்றோம்
உம் கிருபையால் எங்களை தாங்கி நடத்திடும்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
எங்கள் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரமே

1. ஆபிரகாமின் துயரத்தை மாற்றின தேவன்
   என் துயரத்தை இன்று மாற்றிவிடுமே
   ஆபிரகாமை ஆசீர்வதித்த என் தேவனே
   என்னையும் ஆசீர்வதித்து நடத்திடுமே

2. தானியேலின் ஜெபத்தை கேட்டு இரங்கினீர்
   சிங்கத்தின் வாய்க்கு விலக்கி காத்தீரே
   என்னையும் பாவவழிக்கு விலக்கி காத்து
   உம் கிருபையால் தாங்கி வழி நடத்திடும்

3. சங்கீத ஆவியால் தாவீதை நிறப்பினீர்
   சங்கீத பாட்டினால் சத்துருவை துரத்தினீர்
   சங்கீத ஆவியால் என்னை நிறப்பிடும்
   சங்கீத இசையால் சத்துருவை துரத்திடும்

# பாடல் 327

விழித்திருப்பேன் நான் விழித்திருப்பேன்
தேசத்திற்காய் என்றும் ஜெபித்திடுவேன்
இரவு பகலுமாய் நான் விழித்திருந்து
கண்ணிரோடு என்றும் ஜெபித்திடுவேன்

1. இந்தியா இரட்சிப்பினால் நிலைத்து நின்றிட
   கிறிஸ்துவுக்குள் எங்களை அற்பணிக்கிறோம்
   தேச தலைவர்களை காக்க ஜெபிக்கின்றோம்
   அதிகாரிகளையும் காக்க ஜெபிக்கின்றோம்

2. இரங்கும் இரங்கும் எங்கள் தேவ தேவனே
   பாரத தேசத்துக்கு பரலோகவாசல் திறக்கட்டும்
   பரலோகம் செல்லும் வாழி எல்லோரும் அறியட்டும்
   ஜீவவழியில் எங்களை நடத்தி செல்லும் தேவா

3. ஜெப வரத்தால் என்னை நிரப்பிடும் தேவா
   ஜெப ஆவி என்மேல் ஊற்றிடும் தேவனே
   தேசத்தின் மேலும் ஜெபஆவி ஊற்றிடும் தேவா
   ஜனத்தின் மேலும் ஜெபஆவி ஊற்றிடும் தேவனே

4. இரங்கும் இரங்கும் பரலோக தேவனே இரங்கும்
   எங்கள் தேசத்தை காத்திட இரங்கி வாருமே
   அழிவு வேண்டாம் கொள்ளை நோயும் வேண்டாமே
   எங்கள் தேசம் பரலோக ராஜ்யம் வந்துசெரணுமே

## பாடல் 328

நான் இயேசுவால் அழைக்கப்பட்டவன்
நான் பாவம் மன்னிக்கப்பட்டவன்
நான் பாவம் மூடப் பட்டவன்
நான் பாவம் கழுவப் பட்டவன்

1. நான் இயேசுவால் இரட்சிக்க பட்டவன்
   நான் இயேசுவால் மாற்றப் பட்டவன்
   இயேசு என்னை அபிஷேகித்தார்
   என்னை வரங்களால் அலங்கரித்தார்

2. நான் இயேசுவால் நீதிமானானேன்
   நான் இயேசுவால் ஞானியானேன்
   நான் இயேசுவால் நடத்தப்படுகிறேன்
   நான் இயேசுவால் பேசப்படுகிறேன்

3. அவர் நீதியில் நடந்து செல்வேன்
   அவர் நீதியை நிறை வேற்றுவேன்
   அவர் கற்பனை கை கொள்ளுவேன்
   அவர் கட்டளையில் நடந்து செல்வேன்

4. இயேசு என்றும் என்னில் வாழ்வதால்
   நான் இயேசுவோடு நடந்து செல்வேன்
   என் வாழ் நாள் எல்லாமே
   ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்றிடுவேன்

## பாடல் 128

உம்மை போல தேவன் இல்லையே
உம்மை போல யாரும் இல்லையே

1. உம்மை போல இரக்கம் இல்லையே
   உம்மை போல அன்பு இல்லையே
   உம்மை போல தேற்றுபவர் இல்லையே
   உம்மை போல அணைப்பவர் இல்லையே

2. பாவிகளை நேசிக்கும் தேவன்
   பாவிகளை மன்னிக்கும் தேவன்
   பாவிகளை இரட்சிக்கும் தேவன்
   பாவிகளை அணைக்கும் தேவன்

3. வியாதிகளை குணமாக்கும் தேவன்
   பரம வைத்தியராய் எங்கள் தேவன்
   கண்ணீர் யாவையும் துடைக்கும் தேவன்
   மரண பயத்தை மாற்றிடும் தேவன்

4. பயில்காட்டி அழைக்கும் தேவன்
   பரம சந்தோசம் அளிக்கும் தேவன்
   சமாதானம் தந்திடும் தேவன்
   சதா காலம் வாழும் தேவன்

5. வருவேன் என்று உரைத்த தேவன்
   மேக மீதினில் வரும் தேவன்
   பரிசுத்தரை சேர்க்கும் தேவன்
   பரம ராஜ்யத்தில் சேர்க்கும் தேவன்

## பாடல் 129

என்னை நோக்கி பாரும் தேவனே

என்னை நோக்கிபாரும் தேவனே
செல்லும் இடமெங்கும் கூட வாரும் தேவனே
செய்வதெல்லாம் ஆசீர்வதியும் என் தேவனே

வாரும் தேவனே வாரும் தேவனே
என்னோடு வாரும் தேவனே - 2

1. உம்மை போல என்னை மாற்றும் தேவனே
   நான் செய்யும் வேலையிலும் என்னோடிரும்
   ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்றிட
   என் கூடவே வாரும் தேவனே

2. மோசேக்கு முன் சென்ற தேவனே
   நான் போகும் இடமெங்கும் முன் செல்லும்
   யோசுவாவுடன் இருந்த தேவனே
   என்னோடிருந்து அற்புதம் செய்திடும்

3. ஆபிரகாமுக்கு வாக்குரைத்த தேவனே
   வார்த்தையை எல்லாம் நிறைவேற்றினீர்
   எனக்கும் வாக்குரைத்த தேவனே
   வார்த்தை எல்லாம் நிறைவேற்றிடும்
4. இஸ்ரவேலை அழைத்த என் தேவனே
   கானான் தேசம் கொண்டு சென்றிடும்
   எங்களையும் அழைத்து செல்லும்
   பரலோகத்தில் கொண்டு சேர்த்திடும்

## பாடல் 329

அப்பா அப்பா இயேசு அப்பா
நீங்க எனக்கு போதும் அப்பா
இவ்வுலகில் இருக்கும் மட்டும்
எனக்கு நீங்க போதும் அப்பா

1. பாவத்துக்கு விலக்கி என்னை
   காத்து கொள்ளுங்க இயேசப்பா
   உலகத்துக்கும் விலக்கி என்னை
   பரிசுத்தமாய் நடத்தி செல்லுங்கப்பா

2. என் கஷ்டம் துன்பம் எல்லாம்
   என்னை விட்டு மாற்றினீரே
   என்னை தூக்கி நிறுத்தின தேவா
   கடைசிவரை என்னை காத்திடுமே

3. என் ஜீவன் உள்ளவரையிலும்
   நான் உம்மை விட்டு விலகாமல்
   தேவா நீர் என்னை காத்து நடத்தும்
   அனுதினம் உம் பின்னால் ஓடிவருவேன்

4. தேவனே நீர் என்றும் வாழ்க!
   தேவனே உம் நாமம் வளர்க!
   தேவனே நீர் என்றும் உயர்ந்தவர்
   தேவனே நீர் என்றும் பெரியவர்

## பாடல் 330

மாமிசத்தில் வந்த இயேசு
உமக்கே நன்றி நன்றி ஐயா
மனிதனோடும் வாழ்ந்தவரே
உமக்கே நன்றி நன்றி ஐயா

1. என்னை மாற்ற வந்தவரே
உமக்கே நன்றி நன்றி ஐயா
எனக்கு ஜீவன் தந்தவரே
உமக்கே நன்றி நன்றி ஐயா

2. என் வழியை மாற்ற வந்தவரே
உமக்கே நன்றி நன்றி ஐயா
என்னை தூக்கி நிறுத்தினவரே
உமக்கே நன்றி நன்றி ஐயா

3. பரிசுத்தனாய் என்னை மாற்றினீரே
உமக்கே நன்றி நன்றி ஐயா
பரலோ ராஜ்யத்தை தந்தவரே
உமக்கே நன்றி நன்றி ஐயா

4. உம்மை போல என்னையும்
மாற்ற வந்தவரே நன்றி ஐயா
உம்மை போல மாற்றி என்னை
பரலோகம் சேர்க்கும் தேவா நன்றி

## பாடல் 130

கர்த்தருக்கு பயந்து நீ நடந்தால்
நன்மை கிருபையும் உன்னை தொடரும்
தேவனின் வீட்டில் நிலைத்திருப்பாய்
சீயோனின் ஆசீர்கள் பெற்றிடுவாய்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

1. கர்த்தருக்கு பயந்து வழி நடந்தால்
பாக்கியம் உனக்கு பாக்கியமே
கைகளின் கிரியையை ஆசீர்வதிப்பார்
நீடித்த நாட்கள் வாழ்ந்திருப்பாய்

2. கர்த்தரின் சித்தம் நீ செய்தால்
ஒருபோதும் தாழ்ச்சி அடையமாட்டாய்
பாதைகள் நெய்யாய் பாய்ந்தோடும்
பாத்திரம் நிரம்பி வழிந்தோடும்

3. கர்த்தரால் மீட்கப்பட்டவரே
ஆனந்த சத்ததோடே கெம்பீரிப்பாய்
சஞ்சலம் தவிப்பு ஓடிப்போகும்
சந்தோசம் மகிழ்ச்சி அடைந்திடுவாய்

4. கர்த்தரின் சித்தம் செய்யும் போது
உன் மனவிருப்பம் யாவும் செய்திடுவார்
உன் பிள்ளைகள் கர்த்தரில் வளர்ந்திடுவார்
உன் எல்லையெங்கும் சமாதானம் உண்டு

5. உன் கையின் பிரயாசம் சாப்பிடுவாய்
உன் பிரயாசம் அன்னியர் புசிப்பதில்லை
கர்த்தர் சீயோனில் இருந்து அசீர்வதிப்பார்
எருசலேம் வாழ்வை நீ காண்பாய்

## பாடல் 131

உலகத்தை பார்க்கிலும் தேவன் பெரியவர்

செல்வத்தை பார்க்கிலும் தேவன் பெரியவர்

மனிதனே மனிதனே தேவனை நீ அறிந்த கொள் - 4

1. மனிதனாய் வந்த ஒரே
   தேவன் இயேசு தான்
   உனக்குள் ஜீவனாக
   இயேசு இருக்கிறார்

2. தந்தை அன்பை பார்க்கிலும்
   தேவ அன்பு பெரியது
   தாயின் அன்பை பார்க்கிலும்
   தேவ அன்பு பெரியது

3. தந்தை அணைப்பை பார்க்கிலும்
   தேவ அணைப்பு பெரியது
   தாயின் அணைப்பை பார்க்கிலும்
   தேவ அணைப்பு பெரியது

4. தந்தை பாசத்தை பார்க்கிலும்
   தேவ பாசம் பெரியது
   தாயின் பாசத்தை பார்க்கிலும்
   தேவ பாசம் பெரியது

5. உன் நாசில் விடும் சுவாசம்
   தேவன் தந்த தீபம்
   உன் நாசில் இழுக்கும் சுவாசம்
   இயேசுவாக இருக்கிறார்

6. மனிதனுக்கு நல்வழி
   காண்பித்தவர் இயேசு தான்
   மனிதனை மன்னித்து
   இரட்சித்தவர் இயேசு தான்

## பாடல் 331

உம்மை போல் யாருண்டு என் இயேசைய்யா
உம்மையன்றி யாரும் எனக்கு இல்லையே
இவ்வுலகில் இயேசுவே நீர் எனக்கு போதுமே
உம்மையன்றி வேறு எனக்கு வேண்டாமே

இயேசையா இயேசையா என் இயேசையா - 2
இயேசுவே இயேசுவே நீர் போதுமே

1. என் பாவத்தை மன்னித்த என் தேவனே
   சாபத்தையும் மாற்றிட்ட என் இயேசுவே
   உம்மை போல் யாருண்டு என் இயேசையா
   உம்மையன்றி வேறு ஏதும் வேண்டாமே

2. பெயர் சொல்லி என்னை அழைத்தீரே
   என் வழிகளெல்லாம் மாற்றி விட்டிரே
   இருளை வெளிச்சமாக மாற்றி விட்டீர்
   நான் நடக்கும் பாதைகளை செவ்வையாக்கினீர்

3. கண்ணீர் கஷ்டம் எல்லாம் மாற்றினீரே
   துக்கம் துயரம் எல்லாம் மாற்றி விட்டீர்
   உயிருள்ள வரைக்கும் உம்மை உயர்த்துவேன்
   நான் என்றென்றும் தேவனை பாடி துதிப்பேன்

4. நான் நடந்தாலும் என் கூட நடக்கின்றீர்
   நான் இருந்தாலும் என்னை சூழ்திருக்கின்றீர்
   என் போக்கிலும் வரத்திலும் என்னோடிருக்கிறீர்
   தேவனே உம்மை நான் போற்றிடுவேன்

# பாடல் 332

மண்ணான மனிதனின் வாழ்வு மாயையே

வாழும் வாழ்க்கை எல்லாம் மாயை மாயையே

எல்லார் வாழ்க்கையும் மாயை மாயையே

உலகமே மாயையான உலகம் தான்

தந்தானே தந்தானே தந்தனை தந்தானே

இயேசு இந்த வாழ்க்கையை நமக்கு தந்தாரே - 2

1. ஒரு சந்ததி பிறந்து மறிக்கின்றது பார்
   மறு சந்ததி பிறந்து மறிக்கின்றது பார்
   இது தான் மனிதனின் வாழ்க்கைகள்
   மனிதனே வாழ்க்கையை ஆராய்ந்து பார்

2. மனிதனே உலக வாழ்வில் மயங்காதே
   நித்திய வாழ்வு உனக்கு பரலோகில்லுண்டு
   நித்திய வாழ்க்கை உனக்கு வேண்டுமானால்
   பரிசுத்த வேதம் காட்டும் வழியே சென்றிடு

3. தேவனின் வழிகள் உத்தமமானது
   கற்பனை கட்டளையும் கைகொண்டிடு
   பரலோக ராஜ்யத்தில் உன்னை சேர்த்திடுவார்
   எந்த வழி வேண்டுமென்று தெரிந்து கொண்டிடு

4. உலகில் வாழும் மனிதனே சோதித்துன்னை பார்
   இயேசு வழி தான் பரலோகம் செல்லும் வழி
   ஜீவ வழி வேண்டுமானால் பரலோகம் சென்றிடுவாய்
   பாவ வழி வேண்டுமானால் நரகம் சென்றிடுவாய்

# பாடல் 132

ஓ மை லார்டு! ஓ மை லார்டு! ஓ மை லார்டு!
உம்மை ஆராதிக்கின்றோம்
ஓ! ஜீஸஸ் ஓ! ஜீஸஸ் ஓ! ஜீஸஸ்
உம்மை ஆராதிக்கின்றோம் - 2

1. பணிந்து குனிந்து ஆராதிக்கின்றோம்
   பாடிப்போற்றி உம்மை ஆராதிக்கின்றோம்
   முழங்கால் படியிட்டு ஆராதிக்கின்றோம்
   முழுமனதோடு உம்மை ஆராதிக்கின்றோம் -2
   ஓ மை லார்டு!

2. காண்பவரே உம்மை ஆராதிக்கின்றோம்
   கண்ணீரோடு உம்மை ஆராதிக்கின்றோம்
   கருத்தோடு உம்மை ஆராதிக்கின்றோம்
   காப்பவரே உம்மை ஆராதிக்கின்றோம் -2
   ஓ மை லார்டு!

3. ஆனந்தமாய் உம்மை ஆராதிக்கின்றோம்
   ஆசீர்வதிக்க உம்மை ஆராதிக்கின்றோம்
   ஆடிப்பாடி உம்மை ஆராதிக்கின்றோம்
   ஆர்ப்பரித்து உம்மை ஆராதிக்கின்றோம் -2
   ஓ மை லார்டு!

4. இரக்கத்தின் தேவனே ஆராதிக்கின்றோம்
   இரக்கத்தின் ஐசுவரியமே ஆராதிக்கின்றோம்
   இரங்கி வருபவரை ஆராதிக்கின்றோம்
   இணையில்லா தேவனே ஆராதிக்கின்றோம் -2
   ஓ மை லார்டு!

5. அன்பு நிறைந்தவரை அராதிக்கின்றோம்
   ஆரவாரத்தோடு உம்மை ஆராதிக்கின்றோம்
   ஆத்தும நேசரே ஆராதிக்கின்றோம்
   அல்லேலூயா சொல்லி ஆராதிக்கின்றோம் -2
   ஓ மை லார்டு!

## பாடல் 133

என் தேவனே என்னோடிரும்
என் இயேசுவே என்னோடிரும்

1. நான் செல்லும் இடமெல்லாம் (கூட வாரும்) - 2
நான் செய்வ-தெல்லாம் (வாய்க்க செய்திடும்) - 2

2. தாவீது செய்த-தெல்லாம் (வாய்க்க செய்தீரே) - 2
நான் செய்யும் வேலை எல்லாம் (வாய்க்க செய்யுமே) - 2

3. தானியேலை பிரியமாய் (ஏற்றுக் கொண்டீரே) - 2
என்னையும் பிரியமாய் (ஏற்றுக் கொள்ளுமே) - 2

4. தானியேலை சிங்கத்துக்கு (தப்புவித்தீரே) - 2
என்னையும் தீமைக்கு (தப்புவியுமே) - 2

5. தம் தாசர்களை அக்கினிக்கு (தப்புவித்தீரே) - 2
என்னையும் சோதனைக்கு (தப்புவித்திடும்) - 2

6. தாவீது போகும் இடம் (பாதுகாத்தீரே) - 2
நான் போகும் இடமெல்லாம் (பாதுகாத்திடும்) - 2

7. தானியேலை ஜெயமாக (மாற்றின தேவனே) - 2
என்னையும் ஜெயமாக (மாற்ற வேண்டுமே) - 2

## பாடல் 333

இயேசுவுக்காய் நான் அனுதினம் எழுந்து
பாரங்கள் வந்தாலும் பாடுகள் வந்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் (நான்) - 4

1. துன்பங்கள் வந்தாலும் தொல்லைகள் வந்தாலும்
சோதனை வந்தாலும் வேதனை வந்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

2. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
கண்ணீர்கள் வந்தாலும் கலக்கங்கள் வந்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

3. உற்றார் மறந்தாலும் உறவினர் மறந்தாலும்
பெற்றோர் மறந்தாலும் பிறவிகள் பிரிந்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

4. கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
நன்மைகள் வந்தாலும் தீமைகள் வந்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

5. வியாதிகள் வந்தாலும் வருமைகள் வந்தாலும்
மரணமே வந்தாலும் வருத்தங்கள் வந்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

6. உலகமே என்னை தூசித்தாலும்
ஊழியன் என்னை கண்டித்தாலும்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

7. இயேசுவுக்காய் நான் அனுதினம் ஓடுவேன்
தேசத்திற்காய் நான் அனுதினம் ஜெபிப்பேன்
தேவனின் சேவைக்காய் முன் செல்லுவேன் - நான் - 4

## பாடல் 334

வாரும் எங்கள் தேவ தேவனே
எங்களிடம் தங்கி இரும்மையா
உம்மை நாங்கள் நம்பி இருக்கின்றோம்
தினம் நம்பிக்கையை நிறைவாக்கிடும்

1. நம்பினோரை கைவிடா தேவன்
காத்து நடத்தும் என் தேவனே
உம்மை நம்பி வந்து இருக்கின்றோம்
கைவிடாமல் எங்களை நடத்தும் ஐயா

2. எங்கள் வழியை செம்மைப்படுத்திடும்
நாங்கள் உமக்குள் வாழ்ந்திடுவோம்
எங்கள் தேவன் பரிசுத்த தேவன்
பரிசுத்தமாய் எங்களை மாற்றிடும் தேவா

3. உலகில் ஏழையாய் வாழ்ந்தாலும்
உமக்குள் வாழ்ந்து செழித்திடுவோம்
நாங்கள் உம்மையே நினைத்து வாழ்கின்றோம்
நாங்கள் உமமையே போற்றி துதிக்கின்றோம்

4. எங்கள் தேவாதி தேவன் பெரியவர்
எங்கள் கர்த்தாதி கர்த்தர் பரிசுத்தர்
எங்கள் தேவன் மகா பரிசுத்தர்
எங்கள் தேவன் ராஜாதி ராஜா

## பாடல் 134

என் தேவனே என் இயேசுவே
மன்னித்து எனக்கு இரங்குமையய்யா

1. உலக பாரங்கள் என்னை நெருக்குது
குடும்ப பாரமும் என்னை ஒடுக்குது - 2
கடத்தின் பாரத்தால் அமிழ்ந்து போகிறேன்
கலங்கி தவித்து கண்ணீர் வடிக்கிறேன் - 2

2. நிற்கவும் எனக்கு முடியவில்லை
நடக்கும் போது சோர்ந்து போகிறேன்
உம்மில் நிற்க பெலன்தாருமே
உமக்குள் வாழ என்னை நிறுத்துமே

3. காத்திருந்து நான் காத்திருந்து
பதறி உம்மை நோக்கின்றேன்
வேலைக்காரன் கண்கள் போலவும்
என் கண்கள் உம்மை நோக்கின்றது

4. தாவீதை தூக்கி நிறுத்தின தேவன்
என்னையும் தூக்கி நிறுத்திடுமே
தாவீதின் கால்களை உறுதி படுத்தினீர்
என் கால்களையும் உறுதிபடுத்திடும்

5. என் இயேசுவே எனக்கு இரங்கினீர்
தூக்கி என்னையும் நிறுத்தினீரே
உம் சேவை தினமும் செய்திடுவேன்
உமக்குள்ளே என்றும் வாழ்ந்திடுவேன்

## பாடல் 135

இந்தியா இயேசுவை (அறியவேண்டும்) - 2
இந்தியா இயேசுவை (அறிந்து கொள்ளுமே) - 2
நான் அதற்கு (முன் நடப்பேன்) - 2

ஆமேன் அல்லேலுயா அல்லேலுயா - 2

1. இந்தியா இயேசுவை அறிய (தினம் ஜெபிப்பேன்)
   இந்தியா இரட்சிக்க (தினம் ஜெபிப்பேன்)
   இந்தியா சத்தியம் அறிய (தினம் ஜெபிப்பேன்)

2. இந்தியா சத்தியம் அறிய (தினம் சொல்லுவேன்)
   இந்தியாவில் ஓடேடி (சத்தியம் சொல்லுவேன்)
   தினம் சொல்லிடுவேன் (சத்திய வார்த்தையை)

3. என் வீட்டிலும் சத்தியத்தை (சொல்லிடுவேன்)
   என் வேலையில் சத்தியத்தை (சொல்லிடுவேன்)
   நான் போகும் இடம் சத்தியத்தை (சொல்லிடுவேன்)

4. இந்தியாவின் ஆட்சிக்காக (தினம் ஜெபிப்பின்)
   தலைவர்களை காக்க (தினம் ஜெபிப்பேன்)
   இந்தியா காக்கப்பட (தினம் ஜெபிப்பேன்)

5. இந்தியாவை ஆசீர்வதிக்க (தினம் ஜெபிப்பேன்)
   இந்தியாவை அபிஷேகிக்க (தினம் ஜெபிப்பேன்)
   இந்தியா பரலோகம் நிரப்ப (தினம் ஜெபிப்பேன்)

## பாடல் 335

என் தெய்வமே என் இயேசுவே
நீர் என்றும் வாழ்க வாழ்கவே
உம்மை போல தியாகம் இல்லையே

1. என் இயேசுவே என் தெய்வமே
   உம்மை போல யாருண்டு
   உம்மை போல தியாகம் இல்லையே

2. மாமிசத்தில் உருவாகினீர்
   ஏழ்மையாக பிறந்தவரே
   உம்மை போல தியாகம் இல்லையே

3. மனிதனுக்காய் இரத்தம் சிந்தினீர்
   மரித்து உயிர்த்து எழுந்தீர்
   உம்மை போல தியாகம் இல்லையே

4. பரலோகில் இடம் ஆயத்தமாக்கி
   மீண்டும் வருவேன் என்றீரே
   உம்மை போல தியாகி இல்லையே

5. மீண்டும் வரப்போகும் இயேசுவே
   நீர் என்றென்றும் வாழ்கவே
   உம்மை போல தியாகி இல்லையே

## பாடல் 336

பரலோக தேவன் ஆபிரகாமை அழைத்தார்
பரலோக தேவன் ஆபிரகாமில் அன்புகூர்ந்தார்
அழைத்த தேவனுக்கு கீழ்ப்படிந்து சென்றானே - 2
அன்போடு உன்னையும் தேவன் அழைக்கிறார்

ஆபிரகாமின் வழியெல்லாம் பாதுகாத்தவர்
உன் வழிகளையும் பாதுகாத்திடுவார்
ஆபிரகாமை ஆசீர்வதித்து பெருமைபடுத்தியவர் - 2
உன்னையும் ஆசீர்வதித்து பெருமைபடுத்திடுவார்

ஆபிரகாமை அழைத்தவர் பரிசுத்த தேவனவர்
உன்னையும் அழைப்பவர் பரிசுத்தம் செய்திடுவார்
கலங்காதே திகையாதே மகிழ்ந்து களிகூர்ந்திடு - 2
பரிசுத்த பாதையில் உன்னையும் நடத்திடுவார்

ஆபிரகாமை நேர்வழியாய் நடத்தி சென்ற தேவன்
உனக்கும் போதித்து நல்வழி நடத்திடுவார்
ஆபிரகாமை சிட்சித்தவர் உன்னையும் சிட்சிப்பார் - 2
சிட்சிக்கும் தேவன் உன்னையும் உயர்த்திடுவார்

இவ்வுலகிலும் ஆபிரகாம் தேவனால் உயர்த்தப்பட்டான்
பரலோகிலும் ஆபிரகாம் தேவனால் உயர்த்தப்பட்டான்
உன்னையும் இவ்வுலகில் தேவன் உயர்த்திடுவார் - 2
பரலோகில் தேவன் உன்னையும் உயர்த்திடுவார்

## பாடல் 136

உலகம் ஓடுது வேகமாய் ஓடுது - 2
ஓடிக்கொண்டே இருக்கிறது - 3 - அது

1. உலகம் நமக்கு சொந்தமில்லை
   வாழ்க்கை உலகில் முடிவதுமில்லை
   நண்பனே நண்பனே நீ அறிவாயோ
   நண்பனே நண்பனே நீ அறிந்து கொள்

2. மரணத்தின் பின்னால் வாழ்க்கையுண்டு
   என்பதை நீயும் அறிந்துகொள்
   நண்பனே நண்பனே நீ அறிவாயோ
   நண்பனே நண்பனே நீ அறிந்து கொள்

3. உலகத்தை நம்பி நீ வாழாதே
   தேவனை நம்பி நீ வாழ்ந்திடு
   நண்பனே நண்பனே நீ அறிவாயோ
   நண்பனே நண்பனே நீ அறிந்து கொள்

4. உலகத்தின் பாதை நரகத்தில் சேர்க்கும்
   இயேசுவின் பாதை நன்மையுண்டாகும்
   நண்பனே நண்பனே நீ அறிவாயோ
   நண்பனே நண்பனே நீ அறிந்து கொள்

5. இயேசுவை அண்டினால் ஜீவன் உண்டாகும்
   இயேசுவின் பாதை பரலோகம் சேர்க்கும்
   நண்பனே நண்பனே நீ அறிவாயோ
   நண்பனே நண்பனே நீ அறிந்து கொள்

## பாடல் 137

ஆபிரகாமின் தேவன் உன்னோடு இருக்கிறார்
ஈசாக்கின் தேவன் உன்னோடு இருக்கிறார்
யாக்கோபின் தேவன் உன்னோடு இருக்கிறார்
உலகம் முடியும் வரை உன்னோடு இருப்பார்

என் மகனே நீ பயப்படாதே – திகையாதே
என் மகளே நீ கலங்காதே – பதறாதே

1. நீ போகும் இடமெல்லாம் உன்னோடிருப்பார்
   நீ செய்வதெல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணுவார்
   இவரே ஆபிரகாமின் தேவனானவர்
   இவரே பரலோகத்தின் நம் தேவன்

2. இஸ்ரவேலுக்கு வார்த்தையை நிறைவேற்றினார்
   உனக்கும் தம் வார்த்தையை நிறைவேற்றுவார்
   வாக்குத்தத்தம் தந்தவர் உண்மையுள்ளவர்
   வார்த்தையை தவராமல் நிறைவேற்றுவார்

3. கீழான பாதாளத்தை விட்டு விலகு
   விசுவாசத்தோடு உன்னதத்தை நோக்கிப்பார்
   பரலோகில் இருந்து ஓத்தாசை வரும்
   நீ என்றும் கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பாய்

4. நீ போகும் போதும் உன்னை ஆசீர்வதிப்பார்
   நீ வரும் போதம் உன்னை ஆசீர்வதிப்பார்
   உன் எல்லை எங்கும் தேவன் ஆசீர்வதிப்பார்
   உனக்கு விரோதிகள் என்றும் இல்லாதிருக்கும்

5. உன் கர்ப்ப கனியும் தேவன் ஆசீர்வதிப்பார்
   உன் மிருக ஜீவனும் தேவன் ஆசீர்வதிப்பார்
   உண்மையாக கர்த்தருக்குள் நீ நடந்தால்
   இந்த ஆசீர்வாதம் பெற்று நிலைத்திருப்பாய்

## பாடல் 337

எலியாவின் தேவனை கூப்பிடுவேன் நான்
எலிசாவின் தேவனை கூப்பிடுவேன்
வீரமுடன் நான் கூப்பிடுவேன்
எலியாவின் தேவன் எங்கே என்று கூப்பிடுவேன்

எலியாவின் தேவனே வாருமையா - எனக்கு
அக்கினி அபிஷேகம் தாருமையா

1. எசேக்கியாவை போல கதறி கூப்பிடுவேன்
   யாக்கோபை போல போராடி கூப்பிடுவேன்
   ஈசாக்கை போல கவனித்து கூப்பிடுவேன்
   சத்தத்தோடும் கண்ணீரோடும் கூப்பிடுவேன்

2. சத்தமிட்டு நான் தினம் கூப்பிடுவேன்
   வியாகுலத்தோடு நான் கூப்பிடுவேன்
   வியாதிகள் வந்தாலும் நான் கூப்பிடுவேன்
   வேதனை வந்தாலும் கூப்பிடுவேன்

3. என் ஜெபத்தை கேட்பவரை கூப்பிடுவேன்
   விடாமல் நான் அவரை கூப்பிடுவேன்
   தேசத்திற்காய் நான் என்றும் ஜெபிப்பேன்
   தேசம் காக்கப்பட அனுதினம் ஜெபிப்பேன்

4. தேசம் இரட்சிக்க நான் ஜெபித்திடுவேன்
   தேசம் ஆசீர்வதிக்கபட நான் ஜெபித்திடுவேன்
   தேசம் செழிக்க நான் ஜெபித்திடுவேன்
   தலைவர்கள் காக்கவும் ஜெபித்திடுவன்

# பாடல் 338

ஈசாக்கே உன்னை நான் அழைத்த தேவன்
ஆபிரகாம் என் சொல்லுக்கு கீழ்ப்படிந்தான்
என் கற்பனை நியாயங்கள் கைகொண்டான்
நான் அவனை ஆசீர்வதித்து உயர்த்தினேன்

ஈசாக்கே நீ இந்த தேசத்தில் வாசம்பண்ணு
உன்னோடு கூட நான் இருப்பேன் என்றார்
உன்னை நான் கரம்பிடித்து நடத்திடுவேன்
உன்னை ஆசீர்வதிப்பேன் என்றும் சொன்னார்

ஈசாக்கு அத்தேசத்தில் வாசம் பண்ணினான்
தேவன் அவனோடு இருந்து அற்புதம் செய்தார்
ஈசாக்கு வாழ்க்கையில் வளர்ச்சி அடைந்தான்
நூறு மடங்கு ஆசீர்வாதம் பெற்று கொண்டான்

தரித்திரத்தில் வாழும் என் பிரிய மகனே
உன் வறுமை கஷ்டம் தேவன் மாற்றிடுவார்
ஈசாக்கை போல் நீயும் நடந்து சென்றால்
உன்னதத்தின் தேவன் உன்னை உயர்த்திடுவார்

வியாபாரத்தில் நஷ்டம் என்று சொல்லும் மகனே
உன் வியாபாரத்தின் நஷ்டத்தை மாற்றும் தேவன் அவர்
ஈசாக்கை போல் நீயும் நிலைத்திருந்தால்
தேவன் உன் வியாபாரத்தை உயர்த்திடுவார்

வாழ்க்கையில் நிம்மதி இல்லையா மகனே
உன் வாழ்க்கையில் நிம்மதி தந்திடும் தேவன்
உன் வாழ்க்கையை தேவனிடம் அர்ப்பணித்திடு
எல்லையில்லா சந்தோஷம் தேவன் தந்திடுவார்

# பாடல் 138

மழையும் பெய்யவில்லை
அறிகுறியும் தெரியவில்லை
வாய்க்காலை நிரப்பிடுவார்
வாக்குரைத்த தேவனவர்

சோர்ந்து போகாதே அதிசயம் காணசெய்வார் - 4

1. மவுனம் காத்திடுவார்
   மருமொழியும் சொல்லி விடார்
   காரியத்தை வாய்க்கப்பண்ணும்
   கருணையுள்ள தேவனவர்

2. கையளவு காட்டிடுவார்
   கடலளவு தந்திடுவார்
   எல்லையற்ற தேவன் - இவர்
   நமது துணையாளர்

3. ஜெபிக்க தொடங்கும் போதே
   தூதர்களை அனுப்பிவைப்பார்
   ஜெபத்தை கேட்டிடுவார் - தெய்வீக
   இயேசு ராஜன்

4. விரைவில் வந்திடுவார்
   வெகுகாலம் காக்கவையார்
   எக்காளம் கேட்க வைப்பார்
   அழைத்து சென்றிடுவார்

5. சோர்ந்து போன விசுவாசியே
   விழித்தெழுந்து நில்
   வேதனை மாற்றிட
   வேகம் வருகிறார்

# பாடல் 139

மலை போல் வருவதை
பனிபோல் மாற்றுவார்
மன்னாவை தந்திடுவார்
மன்னாதி மன்னனவர்

அல்லேலூயா ஆமேன் அல்லேலூயா – 4

1. சர்வ வல்ல தேவனவர்
   சகலத்தையும் செய்திடுவார்
   சத்துவத்தை அளித்திடுவார்
   சகலத்தையும் காத்திடுவார்

2. மழையாலும் சேதமில்லை
   வெயிலாலும் சேதமில்லை
   கூன் குருடு ஒன்றுமில்லை
   குறையெதும் உனக்குயில்லை

3. எண்ணையும் குறைவதில்லை
   மாவும் முடிவதில்லை
   அடுப்பும் அணைவதில்லை
   அனுகூலம் உனக்குண்டு

4. பரலோகம் ஞானம் உண்டு
   பரிபூரண அறிவுண்டு
   பகலில் நடப்பது போல்
   என்னாளும் நடத்திடுவார்

5. குற்றம் காண முடியாது
   குறையும் காண முடியாது
   எல்லாமே நிறைவாகும்
   எந்நாளும் நன்மை செய்

# பாடல் 339

[illegible] - [illegible]
[illegible] - 2
[illegible]
[illegible] - 2

1. [illegible]
   [illegible] - 2
   [illegible]
   [illegible] - 2

2. [illegible]
   [illegible] - 2
   [illegible]
   [illegible] - 2

3. அப்பா பிதாவே உமக்கு ஆராதனை
   அருமையானவரே உமக்க ஆராதனை -2
   கன்மலையே உமக்கு ஆராதனை
   காண்பவரே உமக்கு ஆராதனை - 2

4. அதிசயரே உமக்கு ஆராதனை
   அடைக்கலமே உமக்கு ஆராதனை - 2
   அற்புதரே உமக்கு ஆராதனை
   வெற்றிவேந்தரே உமக்கு ஆராதனை - 2

# பாடல் 340

பரலோக அக்கினி பரிசுத்த அக்கினி
இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்
இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்

1. பாவத்தை மன்னிக்கும் பரிசுத்த அக்கினி
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்

2. சாத்தானை அழிக்கும் பரிசுத்த அக்கினி
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்

3. வியாதியை மாற்றும் பரிசுத்த அக்கினி
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்

4. ஜனங்களை இரட்சிக்கும் பரிசுத்த அக்கினி
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்

5. ஜனங்களை மீட்கும் பரிசுத்த அக்கினி
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்
   இரங்கட்டும் இரங்கட்டும் தேவ சபையில்

6. தேசத்தில் இரங்கட்டும் பரிசுத்த அக்கினி
   இரங்கட்டும் இரங்கட்டும் தேசம் மாறட்டும்
   இரங்கட்டும் இரங்கட்டும் தேசம் மாறட்டும்

7. எலியாவை காத்திட்ட பரிசுத்த அக்கினி
   என் தேசத்தை காத்திட கெஞ்சுகிறேன்
   என் தேசத்தை காத்திட கெஞ்சுகிறேன்

# பாடல் 140

சர்வத்தையும் படைத்த தேவனை பார்
அகிலத்தையும் ஆளும் தேவனிடம் வா - 2

1. கடலை பாரு அலையை பாரு
   திரண்டு வரும் இரைச்சலை பாரு - 2
   கர்த்தரின் படைப்பை நோக்கி பாரு
   அவர் செய்த அற்புதம் பாரு - 2

2. மலையைப் பாரு பள்ளத்தைப் பாரு
   மலையின் மேலே மரத்தைப் பாரு - 2
   பள்ளத்தின் ஊடே பனியைப் பாரு
   மலை மேல் வரும் நதியை பாரு - 2

3. மலரை பாரு கனியைப் பாரு
   மலரின் அழகு மணத்ததை பாரு - 2
   கனியின் இனிமை சுவைத்து பாரு
   கர்த்தரின் கிரியை ருசித்து பாரு - 2

4. மழையை பாரு வெயிலை பாரு
   தேவன் செய்த இயற்கை பாரு - 2
   வெயிலில் வாழும் உயிரினம் பாரு
   கர்த்திரின் படைப்பு அற்புதம் பாரு - 2

5. பறவை பாரு மிருகம் பாரு
   பறவை பாடும் அழகை பாரு - 2
   மிருகம் உண்ணும் நிலையை பாரு
   மிருகம் படுக்கும் அழகை பாரு - 2

6. கர்த்தரை பாரு கவலை தீரும்
   கர்த்தரின் பாதம் நித்தமும் தேடு - 2
   கவலை கண்ணீர் மாறும் பாரு
   வாழ்க்கை என்றும் செழிக்க பாடு - 2

## பாடல் 141

எருசலேமே உன்னை பார்த்து
இன்றும் கண்ணீர் வடிக்கின்றேன்
இஸ்ரவேலே உன்னிடமாய் வந்தேன்
இன்று வரை என்னை அறியவில்லை

நான் உன்னை என்றும் மறப்பதில்லை - 4

1. உன்னை எந்தன் சொந்த ஜனம் என்றேன்
   நீ என்னிடமாய் உன்னை சேர்க்க வில்லை
   பேலியாளின் மகன் என்றாய் என்னை
   உன் பேதமையை என்னவென்று சொல்வேன்

2. முடவன் தான் நடப்பதை கண்டாய்
   உன் மூடத்தனம் உன்னிடமே கொண்டாய்
   ஊமையன் பேசுவதை கேட்டாய்
   உன் உள்ளத்தை மூடிவைத்து கொண்டாய்

3. இஸ்ரவேலே உன்னோடு பேச
   உள்ளத்தை எனக்காய் திறந்திடு
   உன் இதய கதவை நான் தட்டுகிறேன்
   திறந்தால் உள்ளே நான் வந்திடுவேன்

4. என்னிடமாய் திரும்பினால் பிழைப்பாய்
   இல்லையெனில் இறுதியில் திகைப்பாய்
   உன்னை நான் கண்டதில்லை என்பேன்
   உள்ளே வரும் கதவை நான் அடைப்பேன்

## பாடல் 341

யாக்கோபை பார்த்து தேவன் சொன்னார்
பெத்தேலுக்கு எழுந்து போ என்றார்
யாக்கோபும் தேவனின் வார்த்தை கேட்டு
குடும்பத்தோடும் பெத்தேலுக்கு சென்றுவிட்டான்

1. யாக்கோபின் குடும்பம் கீழ்ப்படிந்து
   பெத்தேலில் பலிபீடம் கட்டி தொழுதான்
   உன்னத தேவன் யாக்கோபை பார்த்து
   உன் சந்ததியை பெருக செய்வேன் என்றார்

2. பன்னிரெண்டு சந்ததி பெற்று வளர்த்தான்
   பன்னிரெண்டு கோத்திரமாய் ஆசீர்வதித்தார்
   தேசமுழுதும் யாக்கோபு பலுகி பெருகினான்
   ராஜாக்களும் ஆசாரியரும் எழும்பினார்கள்

3. பாடுபட்டால் பலன் தருவார் தேவன்
   நீயும் குடும்பத்தோடு தேவனிடம் வா
   பாடுகளில் வாழும் என் தேவ ஜனமே
   உன்னையும் அணைத்து ஆசீர்வதிப்பார்

4. சீக்கிரமாய் தேவனிடம் ஓடி வாருங்கள்
   யாக்கோபை போலவும் குடும்பத்தோடு
   உன்னையும் தேவன் அணைத்திடுவார்
   ஆசீர்வதித்து உன்னை உயர்த்திடுவார்

# பாடல் 342

இயேசு மஹா ராஜா நமக்காக
சரீரத்தில் பாடுபட்டு மரித்தாரே
உயிர்த்த இயேசுவின் சிந்தையை
ஆயுதமாக தரித்து கொள்வோம்

1. பாவத்துக்கு நாம் மரித்து உயிர்த்து
நீதிக்கு அனுதினம் உயிர்பெருவோம்
சரீரத்தில் பாடு அனுபவிக்கும் நாம்
அனுதினம் நீதிக்கு பிழைத்திருப்போம்

2. பாடுபடும் இனிவரும் நாட்களெல்லாம்
ஆவிக்குள் நடந்து சென்றிடுவோம்
ஆவிக்குள் பிழைத்து பெருகிடுவோம்
ஆவியின் கனிகள் கொடுத்திடுவோம்

3. எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று
ஒருவருக்கொருவர் அன்பாய் இருப்போம்
கர்த்தரின் அன்பை வெளிப்படுத்துவோம்
அவரின் அன்பிலே நடந்திடுவோம் நாம்

4. உங்கள் நடுவில் வரும் சோதனைகளை
உதறி தள்ளிவிட்டு அன்பில் நடந்திடுவோம்
உங்கள் மூலம் இயேசுவின் மகிமை
தேசத்தில் அனுதினம் வெளிப்பட்டிடும்

# பாடல் 142

சுத்தியலும் தேவையில்லை
கடப்பாறையும் தேவையில்லை
சுற்றி சுற்றி துதித்திடு
எரிகோ மதிலும் தகர்ந்து விழும்

துதித்திடு நீ ஜெபித்திடு - 4

1. கடலும் எதிர்ப்பதில்லை
முரடரும் நிற்பதில்லை
என் மன்னவர் இயேசு முன்னே
எதுவும் எதிர்ப்பதில்லை

2. மதிலாய் தெரிந்திடுதோ
மலையாய் தெரிந்திடுதோ
இயேசுவின் நாமத்தினால்
எந்நாளும் வெற்றி உண்டு

3. சத்துரு சோதிக்கின்றான்
சகலத்தையும் வாதிக்கின்றான்
நிச்சயமாய் முடிவு உண்டு
நெடுங்காலம் ஆகிடாது

4. உயிர்த்தெழுந்த இயேசு உண்டு
உயிருள்ள பாதை உண்டு
சத்தியமாய் பதிலளிப்பார்
சத்தியத்தை நீ மீறாதே

5. சத்திய வார்த்தை உண்டு
நித்தமும் படித்து விடு
சத்துரு ஓடிடுவான்
சத்தியத்தில் நிலைத்திரு

# பாடல் 143

கோலை நீட்டச் சொன்னார்
நீட்டினான் மோசே
கீழ் காற்றை வீச சொன்னார்
கீழ் காற்றும் வீசியது

வருகிறார் வருகிறார் ஜெய வீரர் வருகிறார்
வருகிறார் வருகிறார் கடலை பிரிக்க வருகிறார்

1. இரா முழுதும் நீட்டி நின்றான்
   கடலும் பிரிய வில்லை
   கீழ் காற்றும் நிற்க வில்லை
   ஆதவனும் வெளுக்க வில்லை

2. பொழுதும் விடிந்தது
   புது வாழ்வும் மலர்ந்தது
   காற்றும் அமர்ந்தது
   கடலும் பிரிந்தது

3. சேரும் சகதியும் இல்லை
   கல்லும் கரடும் இல்லை
   வெட்டாந்தரையாய் மாறினது
   பெருங் கூட்டம் நடந்தது

4. குழந்தைகள் நடந்தனர்
   முதியவர் நடந்தனர்
   பயமும் அடயவில்லை
   தாகமும் எடுக்கவில்லை

5. கடலை பிரித்த இயேசு
   கவலைகள் போக்குவார்
   கலங்காமல் முன்னேறு
   உன் கூட இயேசு உண்டு

# பாடல் 343

மனம் பொருந்தி செவி கொடுத்தால்
தேசத்தின் நன்மை புசித்து வாழ்வீர்கள்
மாட்டோம் என்று எதிர்த்து நின்றால்
பஞ்சம் யுத்தம் வந்து சேர்ந்திடும்

அல்லேலூயா அல்லேலூயா
ஆமேன் அல்லேலூயா அல்லேலூயா

1. உண்மை நகரம் பாழாய் போச்சுதே
   நியாயம் நிறைந்தது மாறிவிட்டதே
   முரடரும் திருடருமாய் மாரிவிட்டார்கள்
   ஒவ்வொருவனும் பரிதானம் வாங்குகிறானே

2. திக்கற்றவர்களுக்கு உதவி யார் செய்வார்?
   விதவையின் வழக்கை யார் விசாரிப்பார்?
   எழும்பி வாருங்கள் நன்மை செய்வோம்
   நியாயத்தை விரும்பி நன்மை செய்வோம்

3. திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து
   தேவ ஆலயத்துக்கு வாருங்கள் என்பார்
   தேவ வழிகளை நமக்கு போதிப்பார்
   தேவ பாதையில் நடப்போம் என்பார்கள்

## பாடல் 344

ஊத்ஸ் தேசத்திலே யோபு வாழ்ந்தான்
அவன் தேவனுக்கு பயந்து நடந்து வந்தான்
பொல்லாப்பை கண்டு விலகி நடந்தான்
தேவன் பார்வைக்கு உத்தமன் ஆனான் அவன்

அல்லேலூயா ஓசன்னா!
அல்லேலூயா ஓசன்னா!

1. யோபை தேவன் சோதனைக்கு ஒப்புகொடுத்தார்
சத்துரு அவனை எடுத்து சோதித்தான்
யோபின் குடும்பத்தை சாத்தான் சங்கரித்தான்
உண்டான அனைத்தையும் சங்கரித்து விட்டான்

2. யோபு எழுந்து சால்வையை கிழித்தான்
குப்புற விழுந்து பணிந்து கொண்டு
நிர்வாணியாய் நான் பிறந்து வளர்ந்து
நிர்வாணியாய் நான் தேவனிடம் செல்வேன்

3. யோபை பார்த்து தேவன் மனதுருகினார்
யோபின் சிறையிருப்பை மாற்றி விட்டார்
முன்தினதைவிட பின் இரு மடங்காய்
தேவன் யோபை ஆசீர்வதித்து உயர்த்தினார்

## பாடல் 144

கர்த்தருக்கு புதுப்பாட்டை பாடுங்கள்
அவர் அதிசயங்களை செய்திருக்கிறார்
அவர் அற்புதத்தின் தேவன் என்று சொல்லுங்கள்
அவர் அதிசயம் செய்தார் என்ற சொல்லுங்கள்

லா லா லல் லல் லா - 4

1. பூமியின் குடிகளே நீங்களும்
கர்த்தரை நோக்கிப் பாருங்கள்
நம்பிக்கையாய் அவரை தேடுங்கள்
கர்த்தரை துதித்து பாடுங்கள்

2. இயேசு எல்லோருக்கும் தேவனானவர்
இயேசு எல்லாரையும் அணைப்பவர்
இயேசு புறம்பே தள்ளாதவர்
இயேசு எல்லோரையும் இரட்சிப்பவர்

3. உன் பாவத்தை மன்னிக்கும் இயேசு
உன் வியாதிகளை மாற்றும் இயேசு
உன்னை இரட்சிப்பால் அலங்கரிப்பார்
உன்னை உயர்த்தி நிறுத்தும் இயேசு

4. அவர் பூமியை நியாயம் தீர்க்க
இயேசு சீக்கிரம் வருகின்றார்
நீதியோடும் நியாயம் தீர்ப்பார்
நிதானத்தோடும் நியாயம் தீர்ப்பார்

5. உன் மரணம் பின்னாலே
உனக்கு புதுவாழ்வு தரும் தேவன்
நீ தேவனோடு வாழ்ந்திருக்க
உன்னை அன்போடு அழைக்கின்றார்

# பாடல் 145

கர்த்தாவே ஏன் தூரத்தில் நிற்கிறீர்
கர்த்தாவே ஏன் தூரத்தில் நிற்கிறீர்
தினம் உம்மை கூப்பிடுவேன்
தினம் உம்மை கெஞ்சுகிறேன்

நோக்கி பாரும் கர்த்தாவே
நோக்கி பாரும் இயேசுவே

1. துன்மார்க்கன் என் மேல் எழும்புகிறான்
விரோதமாய் என் மேல் வருகிறான்
அவன் சதி மோசம் எல்லாம் மாற்றிடுமே
என்னை தூக்கி என்றும் நிறத்தி விடும்

2. அவன் வழி எல்லாமே கேடுள்ளவை
நியாயத்தீர்ப்பு வருமென்று அறியானே
அவன் பார்வைக்கு எட்டாத உயரமாக
செல்வத்தின் மேலே ஓடுகிறான்

3. நான் அசைக்க - படுவதில்லை என்றான்
எனக்கு தீங்கு ஒருபோதும் இல்லை என்றான்
அவன் நாவின் கீழே தீவினையும்
எல்லார் மேலும் சீறுகிறான்

4. மறைவிடங்களில் ஒளித்திருப்பான்
குற்றமற்றவனை கொல்லுகிறான்
கர்த்தாவே அவனை தூரப்படுத்தி
ஏழைகளை என்றும் காத்து கொள்ளும்

# பாடல் 345

அன்னாள் மனம் கசந்து மிகவும் அழுதாள்
தேவனை நோக்கி கெஞ்சி ஜெபம் பண்ணினாள்
சேனைகளின் கர்த்தாவே எனக்கு இரங்கி
அடியாளின் ஜெபத்தை கண்ணோக்கி பாரும்

இரங்கும் இரங்கும் என் தேவனே இரங்கிவாருமே
இரங்கி வந்து துக்கத்தை மாற்றும் தேவனே

1. தேவனே உம் அடியாளை மறக்காமல்
ஒரு ஆண்பிள்ளை தேவன் எனக்கு தந்தால்
நான் அவனை உமக்கே ஒப்பு கொடுப்பேன்
சவரகன் கத்தி அவன் தலையின் மேல் படாது

2. பொருத்தனை பண்ணி அன்னாள் ஜெபம் பண்ணினாள்
ஜெபம் கேட்ட தேவன் ஆண் குழந்தை கொடுத்தார்
அன்னாள் பொருத்தனை செய்தபடியே
ஆலயத்தில் பிள்ளையை கொண்டு விட்டாள்

3. ஆலயத்தில் சாமுவேல் என பெயர் வைத்தார்கள்
சாமுவேல் வளர்ந்து பெரிய தீர்க்கதரிசியானான்
இஸ்ரவேலை நியாயந்தீர்க்கும் தீர்க்கனான்
இஸ்ரவேலை பெலிஸ்தியர் கைக்கு விலக்கி நடத்தினான்

# பாடல் 346

தூங்குகிற நீ விழித்து எழுந்து வா! வா! வா!
மரித்தோரை விட்டு எழுந்து வா! வா! வா!
அப்பொழுது கிறிஸ்து உன்னில் உதித்து எழும்பிடுவார்
உன்னில் இயேசு பிரகாசிக்க நீ வா! வா! வா!

என் ஊழியனே புத்தி கெட்டு நீ போகாமல்
பத்திமதியை பற்றிகொண்டு நீ நடந்து செல்
கர்த்தரின் சத்தம் கேட்டு சேவை செய்திடு
தேவ சித்தம் செய்து நீ ஜெயித்து நின்றிடு

ஆத்துமாவை திருடாமல் புத்திமானாய் நடந்துசெல்
திருடாதே என்கிற நீ திருட்டு வேலைசெய்யலாமா
பொய் சொல்லாதே என்கிற நீ பொய் சொல்லலாமா
நீதிமானாய் தேவனிடம் நிலைத்து நின்றிடு

கெட்டவார்த்தை பேசாதே என்கிற நீ தானே
மற்றவர்க்கு பக்திவிருத்தி உண்டாக பேசிடு
மற்றவர் எழும்பி நிற்க்கும் வார்த்தை பேசிடு
பக்தி விருத்திக்கு ஏதுவான வார்த்தை பேசிடு

புதிய மனிதனாய் வாழ்ந்து நீ நடந்து சென்றிடு
வெளிச்சத்தின் ஊழியகாரனாய் நடந்து சென்றிடு
அப்பொழுது தேவன் உன்னில் அன்பாய் இருந்திடுவார்
நீ செய்வதெல்லாம் வாய்க்கும்படி தேவன் செய்திடுவார்

# பாடல் 146

நான் கூப்பிட்ட நாட்களிலே
தேவன் பதில் தந்தார்
நான் நடந்தாலும் சூழ்ந்திருக்கிறீர்
நான் படுத்தாலும் சூழ்ந்திருக்கிறீர்

என்ன சந்தோஷம் சந்தோஷமே - 4

1. நீர் என்னை அறிந்திருக்கிறீர்
என் நினைவை அறிந்திருக்கிறீர்
என் முன்னும் பின்னுமாக
நெருக்கி கரத்தை வைக்கிறீர்

2. உம் ஆவிக்கு மறைவாக
நான் எங்கே போய்விடுவேன்
நான் வானத்தில் ஏறினாலும்
நீர் அங்கேயும் இருக்கின்றீர்

3. இருள் என்னை மூடவந்தாலும்
நீர் வெளிச்சமாய் இருக்கின்றீர்
என்னை இருளும் மறைக்காது
நீர் எனக்கு ஒளியானீர்

4. கர்ப்பத்தில் என்னை கண்டீரே
இதுவரை காத்து கொண்டீர்
அதிசயமாய் என்னை படைத்தீர்
ஆயுள் முழுதும் உம்மை துதிப்பேன்

5. தேவனே உம் அலோசனைகள்
எனக்கு எத்தனை நல்லது
நித்திய வழியில் என்னை நடத்தும்
உம்மில் என்றும் நான் நடப்பேன்

## பாடல் 147

இயேசுவின் வழியெல்லாம் சத்தியமானது
இயேசுவின் அன்பெல்லாம் நித்தியமானது
உம் வார்த்தை எனக்கு என்றும் ஆறுதலே
உம் வார்த்தையில் என்றும் ஜீவன் உண்டே

உம் வார்த்தை பொன்னிலும் பொன்னானது
உம் வார்த்தை தேனிலும் தெளி தேனானது
உம் வார்த்தை பாவத்தை மன்னிக்கின்றது
உம் வார்த்தை மனிதனாக மாற்றுகின்றது

உம் வார்த்தையில் சாபங்கள் மாறுகின்றது
உம் வார்த்தையில் வியாதிகள் மாறுகின்றது
உம் வார்த்தையில் மரித்தவன் எழும்புகிறான்
உம் வார்த்தையில் குருடன் பார்க்கின்றான்

உம் வார்த்தையில் முடவன் நடக்கின்றான்
உம் வார்த்தையில் குஷ்டரோகி சுத்தமாகிறான்
உம் வார்த்தையில் ஊமையன் பேசுகின்றான்
உம் வார்த்தையால் அகிலத்தையும் ஆளுகின்றீர்

உம் வார்த்தையால் பேய்கள் ஓடுகின்றது
உம் வார்த்தையால் கட்டுகள் உடைகின்றது
உம் வார்த்தையால் கூனனும் நிமிருகிறான்
உம் வார்த்தையால் தேசம் செழிக்கின்றது

உம் வார்த்தையில் என்றும் ஆசீர்வாதமே
உம் வார்த்தையில் என்றும் ஆனந்தமே
உம் வார்த்தையில் சமாதானம் உண்டாகுதே
உம் வார்த்தையில் மகிழ்ச்சியும் உண்டாகுதே

## பாடல் 347

தேசத்தில் பஞ்ச நாட்கள் வந்திடுமே
ஆகாரம் கிடையா பஞ்சம் அல்ல
தண்ணீர் கிடையா பஞ்சமும் அல்ல
கர்த்தரின் வார்த்தை கிடையாத பஞ்சம் வரும்

1. வடக்கு தெற்க்கு திசைகளில் தேடிடுவார்
   கிழக்கு மேற்க்கு திசைகளில் அலைவார்கள்
   கடல் கடந்தும் வசனத்தை தேடிடுவார்கள்
   கர்த்தரின் வசனம் கண்டடையார்கள்

2. பாதாள பரியந்தம் தோண்டிடுவார்கள்
   வான பரியந்தமும் ஏறிடுவார்கள்
   கர்மேலின் கொடு முடியில் ஒழிந்திடுவார்கள்
   சமுத்திர ஆழத்திலும் மறைந்து கொள்வார்கள்

3. கர்த்தர் வானத்திலே மேலறை கட்டுவார்
   பூமியில் தமது கீழறை கட்டுவார்
   கர்த்தர் சமுத்திரத்தின் தண்ணீரை வரவழைப்பார்
   பூமியின் விசாலத்தில் ஊற்றுவார் தண்ணீரை

4. கர்த்தராகிய ஆண்டவரின் கண்களும்
   பாவமுள்ள தேசத்துக்கு விரோதமாகும்
   பாவமுள்ள தேசத்தை அழித்திடுவார்
   தேவ ஜனத்தின் வாசஸ்தலத்தை காத்திடுவார்

## பாடல் 348

சூரியனும் சந்திரனும் இருண்டு போகும் போய்விடும்
நட்ச்சத்திர கூட்டமெல்லாம் ஒளிமங்கும் மங்கி போகும்
கர்த்தர் சீயோனில் கெர்ச்சிப்பார்
எருசலேமில் வந்திரங்கி சத்தமிடுவார் -- அவர்

1. வானமும் பூமியும் அதிர்ந்துவிடும் அழிந்துவிடும்
   ஆனாலும் நமக்கு தேவன் அரணும் கோட்டையாவார்
   எருசலேம் இனிமேல் பரிசுத்தமாகும்
   அன்னியரும் கடந்து போவதில்லை --அதில்

2. பர்வத்தில் திராட்ச்சரசம் நதியாய் ஓடசெய்வார்
   மலைகளில் பாலாக வற்றாமல் ஓட செய்வார்
   யூதாவின் ஆறுகள் பிறவாகித்து ஓடிடும்
   கர்த்தரின் ஆலயத்தில் ஊற்று புறப்படும்

3. யூதாவோ சதா காலத்துக்காய் குடியேற்றப்படும்
   எருசலேம் தலைமுறை தலைமுறையிருக்கும்
   கர்த்தரின் ஜனங்கள் களிகூருவார்கள்
   சீயோனில் ஜனங்கள் மகிழ்ந்திருப்பார்கள்

## பாடல் 148

மண்ணுயிரே காப்பவரே
மங்காத பிரகாசமே
என்னுயிரை காத்துக்கொள்ளும்
என் இயேசு ராஜாவே - 2

1. உம்மையன்றி யாருமில்லையே
   இவ்வுலகில் யாருமில்லையே - 2
   கண்ணைப் போல் காத்திடுமே
   கருணையுள்ள இயேசு ராஜாவே - 2

2. காட்டுப் பறவை கூட்டமெல்லாம்
   கலங்காமல் வாழ்ந்திடுதே - 2
   கர்த்தாவே உம் ஜனம் தான்
   கவலையொடு வாழவேண்டுமோ - ஐயா - 2

3. மகத்துவம் அணிந்தவரே
   சகலமும் படைத்தவரே - 2
   மண்ணாலே மனிதனையும்
   உண்டாக்கி தீர்த்தவரே - 2

4. மண்ணுலகில் வந்தவரே
   எனக்காய் மறித்தவரே - 2
   என் பாவம் போக்கினீரே
   எனக்காய் உயிர்த்தீரே - 2

5. கலங்கி வாழுகின்றேன்
   என் கலக்கத்தை மாற்றி விடும் - 2
   மறக்காமல் காத்துக் கொள்ளும்
   மண்ணுலகில் வாழும் மட்டும் - 2

## பாடல் 149

வானம் உமது சிங்காசனம்

பூமி உமது பாதபடி

வானம் பூமி யாவும் படைத்த

வல்ல தேவன் நீரே ஐயா - என் இயேசையா

1. நீர் சொன்னால் ஆகும் ஐயா
   நீர் சொன்னால் நிற்கும் ஐயா
   உமது வாக்கை காற்றும் கேட்கும் - என் இயேசையா
   உமது சொல்லை கடலும் கேட்கும் - வானம்

2. உமது வசனம் நடுங்க வைக்கும்
   உமது வார்த்தை உயிர்கொடுக்கும்
   தாயைப் போல தேற்றுவீரே - என் இயேசையா
   நடுங்குபவனை நோக்கி பார்ப்பீர் - வானம்

3. கஷ்டம் கண்ணீர் மாறிடுமே
   கடன் கவலை மறைந்திடுமே
   நோய்கள் எல்லாம் மாறிவிடும் - என் இயேசையா
   பேய்கள் எல்லாம் மறைந்து விடும் - வானம்

4. புதிய வானம்! புதிய பூமி!
   படைக்க வருவீர் படைத்திடுவீர்
   உமக்கு நாங்கள் ஜனங்கள் ஐயா - என் இயேசையா
   உயர்த்திடுவீர் வெகு வரைவில் - வானம்

5. வானில் நாங்கள் மகிழ்ந்திருப்போம்
   வறுமை நீங்கி சுகித்திருப்போம்
   விரைந்து வாரும் கூட்டி சேரும் - என் இயேசையா
   விரைவில் வந்து அழைத்து செல்லும் - வானம்

## பாடல் 349

வல்லமை வல்லமை தேவை தேவா

வல்லமை எனக்கு தாரும் தேவா

பெந்தேகோஸ்த்தே அபிஷேகம் தேவை தேவா

அக்கினி அபிஷேகம் தாரும் தேவா

1. அக்கினிமயமான நாவுகள் போல்
   பிரிந்திருக்கும் நாவுகள் தேவை தேவா
   பரிசுத்த அக்கினியால் நிறப்பும் தேவா
   சுட்டெரிக்கும் அக்கினியால் நிறப்பும் தேவா

2. பல பல பாசைகள் பேசுகின்ற
   அபிஷேக ஆவியால் நிறப்பும் தேவா
   சாத்தானை அழிக்கும் அக்கினியால்
   சபைகள் எல்லாம் நிறப்பும் தேவா

3. இரங்கட்டும் அபிஷேக அக்கினி
   சபைகளில் அனுதினம் இரங்கட்டுமே
   ஜனங்களை பரிசுத்த படுத்துகின்ற
   பரலோக அக்கினி இரங்கட்டுமே

4. பேதுரு யோவானில் இருந்து
   புறப்பட்ட வல்லமை இரங்கட்டுமே
   முடவர் குருடர் மாறுகின்ற
   அபிஷேகத்தால் என்னை நிறப்பும் தேவா

## பாடல் 350

மாரிகாலத்து வீட்டையும் கோடைகாலத்து வீட்டையும்
கர்த்தர் ஒரு நாள் அழிப்பார் கர்த்தர் ஒரு நாள் அழிப்பார்
யானை தந்த வீட்டுக்கும் அரண்மனை வீட்டுக்கும்
முடிவு ஒருநாள் வந்திடும் அது சீக்கிரமாய் வந்திடும்

1. இந்த பூமியில் வாழுகின்ற ஜனத்துக்குள்ளே
உன்னை தான் தேவன் தெரிந்து கொண்டார்
உந்தனின் பாவத்தை மன்னித்து மாற்றி
உன்னை இரட்சிப்பால் அலங்கரிப்பார்

2. இறை இன்றி காட்டிலே சிங்கம் கெர்ச்சிக்குமே
பால சிங்கம் கெபியிலே சத்தமிட்டு மகிழுமோ
சுருக்கு இன்றி பறவை கண்ணியில் சிக்குமோ
ஒன்றும் அகப்படாமல் கண்ணிவெடி வெடிக்குமோ

3. தேவனாகிய கர்த்தர் தம் ஊழியர்களுக்கு
ரகசியத்தை அறிவியாமல் ஒன்றும் செய்திடார்
தேவனாகிய கர்த்தர் பேசும் போதெல்லாம்
தீர்க்கதரிசனம் சொல்லாமல் இருப்பவன் யார்

## பாடல் 150

கர்த்தருக்கு புது பாட்டை பாடுங்கள்
ஆனந்த சத்தத்தோடு பாடுங்கள்
நீதியின் தேவனை என்றும் பாடுங்கள்
நியாயதிபதியை உயர்த்தி பாடிடுங்கள்

1. தேவனை போற்றிப் பாடுங்கள்
கர்த்தரை துதித்துப் பாடுங்கள்
கர்த்தர் பூமிக்கு ராஜாதி ராஜா
கருத்துடன் போற்றிப் பாடுங்கள்

2. பூமியின் குடிகளே பாடுங்கள்
கெம்பீர சத்தமாய் பாடுங்கள்
ஆதி முதலாய் இருப்பவரை பாடுங்கள்
வானாதி வானங்களே பாடுங்கள்

3. தம்புரு வாசித்து பாடுங்கள்
வீணையோடு என்றும் பாடுங்கள்
யாக்கோபின் தேவனை பாடுங்கள்
இஸ்ரவேலின் தேவனை பாடுங்கள்

4. இரட்சித்த தேவனை பாடுங்கள்
மகிமையை செலுத்தி பாடுங்கள்
தீவின் குடிகளே பாடுங்கள்
சமுத்திர பயணிகளே பாடுங்கள்

5. வானங்களே களித்து பாடுங்கள்
காடுகளே மேடுகளே பாடுங்கள்
யாவரின் தேவனை பாடுங்கள்
வரப்போகும் தேவனை பாடுங்கள்

## பாடல் 151

கர்த்தரை துதியுங்கள் கர்த்தரை துதியுங்கள்
யாக்கோபின் வம்சமே கர்த்தரை துதியுங்கள்
இஸ்ரவேல் வம்சமே கர்த்தரை துதியுங்கள்
அல்லேலூயா சொல்லி கர்த்தரை துதியுங்கள்

1. கர்த்தரின் ஊழியரே கர்த்தரை துதியுங்கள்
   கர்த்தரின் நாமத்தை உயர்த்தி துதியுங்கள்
   சகல ஜாதிகளே கர்த்தரை துதியுங்கள்
   பெரியோரே சிறியோரே கர்த்தரை துதியுங்கள்

2. அதிசயம் செய்கிற கர்த்தரை துதியுங்கள்
   அற்புதம் செய்கிற கர்த்தரை துதியுங்கள்
   அகிலத்தை படைத்த கர்த்தரை துதியுங்கள்
   ஆரவாரத்தோடு கர்த்தரை துதியுங்கள்

3. கர்த்தரின் வீட்டிலே கர்த்தரை துதியுங்கள்
   கர்த்தரின் சபையோரே கர்த்தரை துதியுங்கள்
   தேவாதி தேவனை போற்றி துதியுங்கள்
   கர்த்தாதி கர்த்தரை வாழ்த்தி துதியுங்கள்

4. சீகோனை அழித்த கர்த்தரை துதியுங்கள்
   ஓகை அழித்த கர்த்தரை துதியுங்கள்
   நம் தாழ்வில் நினைத்த கர்த்தரை துதியுங்கள்
   நம்மை வாழவைக்கும் என்றும் கர்த்தரை துதியுங்கள்

5. பரலோக தேவனை பாடி துதியுங்கள்
   பரிசுத்த தேவனை பக்தியோடு துதியுங்கள்
   வரப்போகும் மேசியாவை வாழ்த்தி துதியுங்கள்
   பரிசுத்த அலங்காரத்தோடு தேவனை துதியுங்கள்

## பாடல் 351

இயேசுவே என் வழிகள் எல்லாம்
உம் வழிகாளாய் மாறட்டுமே
இயேசுவே என் நினைவெல்லாம்
உம் நினைவாய் மாறட்டும்

1. நானே வழி சத்யம் ஜீவன் என்றீரே
   உம் வழியில் என்னை நடத்தி செல்லும் தேவனே
   என் வழி மாறாமல் உம் வழியில் நடத்திடும்
   நீரேயன்றி வேறு எனக்கு வழிவேண்டாம்

2. நான் நடக்கும் வழிகளில் தினம் என்னை நடத்திடும்
   செவ்வையான வழியில் என்னை நடத்தும் தேவனே
   கரம்பிடித்து அனுதினம் நடத்தி சென்றிடும்
   கைவிடாமல் அனுதினம் என்னை காத்திடும்

3. என் பாவத்தை மன்னித்து தூக்கி நிறுத்தினீர்
   தம் இரட்சிப்பால் என்னை மீட்டிரே
   வரங்களால் என்னை அலங்கரித்து உயர்த்தி
   அற்புதம் அதிசயம் தினம் செய்யும் தேவனே

4. நான் காண்பதெல்லாம் என் முன்னால்
   உம் கற்பனை கட்டளையாக நிற்கட்டும்
   என் நாட்களெல்லாம் கைகொள்ள
   என்னை நடத்தி செல்லும் தேவா

# பாடல் 352

நான் தேவனை தினம் பாடுவேன்
தேவன் மகிமையாய் வெற்றி சிறந்தார் - 2
குதிரை வீரனையும் கடலில் தள்ளினார்
கர்த்தர் என்பது அவர் நாமம் - 2

1. பார்வோனின் இரதங்களை கடலில் தள்ளினார்
எகிப்தின் சேனைகளை மூழ்கடித்தார் - 2
பார்வோனின் அதிபதியை கடலில் தள்ளினார்
கல்லைப் போல் ஆழங்களில் ஆமிழ்ந்து போனார்கள்

2. தொடருவேன் பிடிப்பேன் என்று தொடர்ந்தான்
கொள்ளையடித்து பங்கிடுவேன் என்று தொடர்ந்தன்
என் ஆசை அவனிடம் திருப்தியாகும் என்றார்
கர்த்தர் யுத்தத்தில் வல்லவர் முறியடித்தார்

3. கர்த்தர் காற்றை வீசப்பண்ணீனார்
ஆழி அவர்களை மூடிப்போட்டது
செங்கடலில் மூழ்கி போனார்கள்
துதிகளில் பயப்பட தக்கவர் நம் தேவன்

4. கர்த்தர் என் பெலன் ஆனவர்
கர்த்தரே என் கீதமும் ஆனவர்
கர்த்தரே என் தேவனானவர்
கர்த்தரே என் தகப்பனானவர்

# பாடல் 152

மாட மாளிகை உண்டு!
கூட கோபுரம் உண்டு!
பாடும் பறவை உண்டு! - ஓடி
விளையாட மைதானம் உண்டு!

என்ன சந்தோஷம்!!! என்ன சந்தோஷம்!!!
என் அப்பாவின் நகரத்தில் - என்ன சந்தோஷம்!!!

1. வசிக்க வீடு உண்டு!
பசிக்கு உணவு உண்டு!
ருசிக்க பழங்கள் உண்டு!
குடிக்க தண்ணீர் உண்டு!

2. பெருவெள்ள இரைச்சல்போல்
துதிக்கும் தூதர் உண்டு!
எக்காள தொனியோடு
பாடும் பாடல் உண்டு!

3. சூரியன் உதிப்பது இல்லை!
சந்திரன் தேவையில்லை!
எப்போதும் ஒளி உண்டு! - என்
இயேசு இருப்பதால்!

4. நோய் நொடிகள் இல்லை!
கடன் தொல்லை இல்லை!
எப்பொழுதும் சந்தோஷம்!
எப்போது செல்லுவோம்

5. அங்கே அப்போஸ்தலர் உண்டு!
முற்பிதாக்களுமுண்டு!
நம் முன்னோர்களும் உண்டு!
ஆடல் பாடல் எப்போதுமுண்டு!

## பாடல் 153

வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே!
வாருங்கள் என் அண்டை என்றீரே!
வந்து உம் அண்டை நிற்கிறோம்!
மனம் இறங்கும் என் தேவனே!

1. தாகமாய் இருக்கின்றாயோ
தண்ணீர் அண்டை ஓடி வா
பசியாய் இருக்கின்றாயோ
உன் பசி ஆற்ற ஓடி வா

2. எலியாவை போஷித்த தேவன்
உன்னையும் போஷித்திடுவார்
தேவ சத்தம் கேட்டு ஓடி வா
அன்போடு உன்னை அணைப்பாரே

3. உன் செவி சாய்த்து ஓடி வா
கீழ்ப்படிந்து வசனம் கேட்க ஓடி வா
உன் ஆத்துமாவில் வாழ்ந்திருக்க
தம் நன்மையால் நிறப்பிடுவார்

4. கர்த்தரை நோக்கி காத்திரு
காத்திருந்து பெலனை பெற்றிடு
சுவாசம் விடும் ஜீவன்களுக்கும்
தம் கைதிறந்து போஷிக்கின்றாரே

5. ஆகாயத்தின் பறவைகள் எல்லாம்
தேவனை நோக்குகின்றது
ஆகிலத்தையும் போஷிக்கும் தேவன்
உன்னை தினம் போஷித்திடுவார்

## பாடல் 353

ஆதியிலே தேவன் வானத்தையும்
பூமியும் வார்த்தையால் சிருட்டித்தார்
பூமியானது வெருமையாய் இருந்தது
ஆழத்தின் மேல் இருள் இருந்தது

1. ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடினார்
தேவன் வெளிச்சம் உண்டாவது என்றார்
வெளிச்சம் நல்லது என்று கண்டார்
வெளிச்சம் இருளை தேவன் பிரித்தார்

2. வெளிச்சத்துக்கு பகல் என பேரிட்டார்
இருளுக்கு இரவு என பேரிட்டார்
சாயங்காலம் விடியற்காலம் முதலாம் நாள் ஆனது
தேவன் தம் வார்த்தையால் சிருட்டித்தாரே

3. ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரி உண்டாக்கினார்
ஜலத்தில் இருந்து ஜலத்தை பிரிகக்க செய்தார்
ஆகாய விரிவை உண்டு பண்ணினார்
ஆகாய விரிவுக்கு கீழே ஜலம் இருந்தது

4. ஆகாய விரிவுக்கு மேலே இருந்த
ஜலத்தை பிரிக்கவும் செய்தாரே
ஆகாய விரிவுக்கு வானம் என பேரிட்டார்
சாயங்காலம் விடியற்காலம் இரண்டாம் நாள் ஆனது

## பாடல் 354

தாயைப் போல் தேற்றும் தேவன்
தந்தைப் போல் அணைக்கும் தேவன்
எந்நேரமும் உன்னை தாங்குவார்
எப்போதும் உன்னை சுமப்பார் - அவர்

1. கஷ்ட நேரத்தில் தாங்குவார்
   வியாதி நேரத்தில் தேற்றுவார்
   சோதனையில் பெலன் தருவார்
   விழும் நேரம் தூக்கி நிறுத்துவார்

2. தாயைப்போல் கண்ணீர் துடைப்பார்
   தந்தைபோல் தோளில் சுமப்பார்
   ஆபத்தில் உன் கூட இருப்பார்
   அனுதினம் உன்னை காத்திடுவார்

3. கண்ணீர் துடைக்கும் என் தேவனே
   என் கஷ்டம் வருமை மாற்றிடுமே
   என் விருப்பமெல்லாம் நிறைவேற்றிடும்
   வாழ் நாள் எல்லாம் பின் செல்லுவேன்

## பாடல் 154

தாயின் அன்பை பாாக்கிலும் இயேசு அன்பு பெரியது!
தந்தை அன்பை பார்க்கிலும் தேவ அன்பு பெரியது!
உலகின் அன்பை பார்க்கிலும் இயேசு அன்பு பெரியது!
உன் நண்பன் அன்பை பார்க்கிலும் தேவ அன்பு
பெரியது!

தேற்றும் அன்பு இயேசு அன்பு
உன்னை அணைக்கும் அன்பு தேவ அன்பு

1. பாவத்தை மன்னிக்கும் இயேசு அன்பு
   உன் வியாதியை மாற்றும் இயேசு அன்பு
   உன் வழியை மாற்றிடும் இயேசு அன்பு
   உன்னை பரிசுத்தமாய் மாற்றிடும் இயேசு அன்பு

2. உன்னை தூக்கிநிறுத்தும் இயேசு அன்பு
   உன்னை வாழ வைக்கும் இயேசு அன்பு
   உன்னை உயர்த்திவைக்கும் இயேசு அன்பு
   உன்னை மகிமைபடுத்தும் இயேசு அன்பு

3. உன் கோபத்தை மாற்றும் இயேசு அன்பு
   வரும் பொறமையை மாற்றும் இயேசு அன்பு
   உன் வார்த்தையை மாற்றும் இயேசு அன்பு
   உன்னை சாந்த படுத்தும் இயேசு அன்பு

4. உன்னை பரிசுத்தமாக்கும் இயேசு அன்பு
   இரட்சிப்பால் அலங்கரிக்கும் இயேசு அன்பு
   ஆசீர்வதித்து உயர்த்தும் இயேசு அன்பு
   சாட்சியாய் நிறுத்தும் இயேசு அன்பு

5. உன் மூலம் இரட்சிக்கும் இயேசு அன்பு
   உன்னால் ஆசீர்வதிக்கும் இயேசு அன்பு
   உன் மூலம் அபிஷேகிக்கும் இயேசு அன்பு
   உன் மூலம் அற்புதம் செய்யும் இயேசு அன்பு

## பாடல் 155

அற்புத தேவன் என் இயேசு ராஜன்
அதிசயம் செய்பவர் என் இயேசு ராஜன்
தேடும் யாவருக்கும் அற்புதம் செய்பவர்
தேடி வருவோரை அணைக்கும் தேவன் - 2

மனுக்குலமே நீ விசுவாசி!!!!!!
மனுக்குலமே நீ ஜெபித்து பார்! - 2

ஜனத்தின் மேல் மனதுருகும் என் இயேசு ராஜா
உங்களிடம் என்ன இருக்கு? - என்று கேட்டார் - 2
ஐந்து அப்பம்! இரண்டு மீன்! உண்டென்று சொன்னான்
அவைகளை என்னிடம் கொண்டு வா என்றார் - 2

ஜனங்களை வரிசையாய் உட்கார வைத்தார்
அப்பத்தையும் மீனையும் எடுத்து ஆசீர்வதித்தார் - 2
சீஷரிடம் கொடுத்து எல்லோரையும் போஷித்தார்
அனைவரும் புசித்து மீதமும் வந்தது - 2

புசித்த புருஷர்கள் ஐயாயிரம் பேர்கள்
பனிரெண்டு கூடைகள் மீதமும் எடுத்தார்கள் - 2
இவரே அற்புதர் இவர் தான் இயேசு
இவர் தான் உனக்கும் அற்புதம் செய்பவர் - 2

சீஷர்களின் உள்ளம் புத்துயீர் பெற்றது
அற்புதத்தை பார்த்து கண்களும் திறந்தன - 2
இவர் தேவ குமாரன் இயேசுவே என்றனர்
இயேசுவை போற்றி மகிழ்ச்சியும் அடைந்தனர் - 2

கஷ்டபட்டு கலங்கி தவிக்கும் மனமே
நில்லாமல் இயேசுவிடம் ஓடி வா - 2
உன் கலக்கம் கஷ்டம் மாற்றிடுவார்
உனக்கும் அற்புதம் செய்திடுவார் - 2

## பாடல் 355

ஜனங்களே என் ஜனங்களே
என் போதகத்தை நீங்கள் கேளுங்கள்
புத்திமதியை கேட்டு பெற்றுகொள்ளுங்கள்
கவனித்தால் உங்களுக்கு வழிகாட்டிடும்

1. நல்ல போதகத்தை நான் தந்திடுவேன்
   என் உபதேசத்தை விடாதிருங்கள்
   என் தகப்பனுக்கு நான் பிரியமானவன்
   என் தாய்க்கு மிகவும் அருமையானவன்

2. போதித்து எனக்கு கர்த்தர் சொன்னார்
   என் வார்த்தையை உன் செவி கேட்கட்டும்
   என் கட்டளை கைகொண்டால் நீ பிழைப்பாய்
   ஞானத்தை சம்பாதி புத்தியையும் சம்பாதி

3. அதை விடாதே அது உன்னை காத்திடும்
   அதின் மேல் பிரியமாய் நீ இருந்திடு
   ஞானமே முக்கியம் ஞானத்தை சம்பாதி
   மேன்மை படுத்து உன்னை மேன்மைபடுத்தும்

4. நீ தழுவிகொண்டால் அது கனம்பண்ணும்
   தலைக்கு அழகான கிரீடத்தை கொடுக்கும்
   என் மகனே என் வார்த்தையை ஏற்றுக்கொள்
   உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்

## பாடல் 356

பொல்லாத மனிதன் மேல் கோபம் கொள்ளாதே
துன்மார்க்கனோடு நீ இருக்கவும் விரும்பாதே
அவர்கள் இதயம் கொடுமையை யோசிக்கும்
அவர்கள் உதடுகள் தீவினை செய்யும்

1. வீடு ஞானத்தினாலே கட்டப்படும்
விவேகத்தினாலே நிலை நிறுத்தப்படும்
அறிவினால் வீடுகளில் அறுமையும்
இனிமையான சகலவித பொருள் பெருகும்

2. நல்ல யோசனை செய்து யுத்தம் பண்ணு
அனேக ஆலோசகரால் ஜெயம் கிடைக்கும்
மூடனுக்கு ஞானம் எட்டாத உயரமாம்
நியாய ஸ்தலத்தில் வாய் திறக்கமாட்டான்

3. என் மகனே தேனை நீ சாப்பிடு நல்லது
அது உன் வாய்க்கு மதுரமாயிருக்கும்
அப்படியே ஞானத்தை நீ அறிந்து கொள்
உன் ஆத்துமாவுக்கு இன்பமாய் இருக்கும்

4. நீதிமான் ஏழுதரம் விழுந்து போனாலும்
எழுந்து நிலைத்து நின்றிடுவான்
துன்மார்க்கரோ தீங்கிலே கிடப்பார்கள்
பொல்லாதவர்களை குறித்து எரிச்சலாகாதே

## பாடல் 156

அந்தி சந்தி மத்தியான வேளையிலும்
என் தேவனை நோக்கி கூப்பிடுவேன்
என் ஜெபத்தை தேவன் கேட்டிடுவார்
விடாமல் நான் அவரின் பின் செல்வேன்

இயேசுவே நீர் வாருமே
இயேசுவே என்னை மாற்றுமே (தேற்றுமே)

1. இஸ்ரவேலின் ஜெபத்தை கேட்ட தேவன்
என் ஜெபத்தையும் தேவன் கேட்டிடுவார்
இஸ்ரவேலை இரங்கி விடுவித்த தேவன்
என் ஜெபத்தையும் கேட்டு விடுவிப்பாரே

2. நீதியின் கனிகளை தினம் செலுத்தி
கர்த்தரை நோக்கி நான் கூப்பிடுவேன்
என் ஜெபத்தையும் தவறாமல் கேட்டிடுவார்
இரங்கி என்னை தூக்கியெடுத்து நிறுத்துவார்

3. அந்தி சந்தி மத்தியான வேளையிலும்
தானியேல் தவறாமல் ஜெபித்தானே
தானியேலின் ஜெபத்தை கேட்ட தேவன்
சிங்க கெபியில் தானியேலை காத்துகொண்டார்

4. ஜெபத்தில் தளர்ந்து போன விசுவாசியே
தளராமல் ஜெபத்தில் நீ விழித்திரு
உன் ஜெபம் தேவனிடம் கேட்கப்பட்டது
தவறாமல் சீக்கிரம் பதில் தருவார்

5. வாக்குரைத்த தேவன் வாக்கு மாறாரே
தம் வார்த்தையில் என்றும் உண்மையுள்ளவர்
கேட்பவருக்கு கொடுக்கும் நல்ல தேவன் - அவர்
தம் ஆசீர்வாதத்தால் உன்னை நிறப்பிடுவார்

# <u>பாடல் 157</u>

வாழ்வே ஆராதனை!!!!!!
வாழ்ந்தே ஆராதிப்போம்!

1. நோவா வாழ்ந்தே ஆராதித்தான்!!
   தேவனுக்கு கீழ்படிந்து ஆராதித்தான்!!

2. ஆபிரகாம் வாழ்ந்து ஆராதித்தான்!!
   விசுவாச தகப்பன் என்று பேரு பெற்றான்!!

3. யோசேப்பு வாழ்ந்தே ஆராதித்தான்!!
   பாவத்தை தள்ளிவிட்டு ஆராதித்தான்!!

4. மோசே வாழ்ந்து ஆராதித்தான்!!
   தேவ வீட்டில் உண்மையாய் ஆராதித்தான்!!

5. யோபு வாழ்ந்தே ஆராதித்தான்!!
   அனைத்தையும் இழந்த போதும் ஆராதித்தான்!!

6. தாவீது வாழ்ந்து ஆராதித்தான்!!
   தேவ இதயத்துக்கு ஏற்றவனாய் ஆராதித்தான்!!

7. லாசர் வாழ்ந்தே ஆராதித்தான்!!
   மரித்து உயிர்த்தெழுந்து ஆராதித்தான்!!

8. தானியேல் வாழ்ந்து ஆராதித்தான்!
   தேவனுக்கு பிரியமாய் ஆராதித்தான்!!!!!!!!

# <u>பாடல் 357</u>

இஸ்ரவேல் என் ஜனமே

வார்த்தை என்றும் காத்துக்கொள்
இருதயத்தில் காத்துக் கொண்டால்
நீடித்த நாட்கள் உனக்குண்டாகும்

1. சத்தியத்தை காத்து நீ நடந்தால்
   தீர்காயுசு உனக்கு பெருகப்பண்ணும்
   இருதய பலகையில் எழுதி கொண்டால்
   தேவ பார்வையில் தயை உனக்குண்டாகும்

2. சுய புத்தியின் மேல் நடக்காதே
   தேவனை நீ நினைத்துகொள்
   ஞானியென்று நீ எண்ணாதே
   தீமையை விட்டு விலகிடு

3. உன் நாவுக்கு ஆரோக்கியம் வந்து சேர்ந்திடும்
   எலும்புக்கு ஊனும் வந்து சேர்ந்திடும்
   தேவனை என்றும் கனம் பண்ணு
   உன் களஞ்சியம் நிரம்பி வழியுமே

4. ஞானத்தை கண்டடைகிற மனிதனும்
   புத்தியை சம்பாதிக்கிற மனிதனும்
   முத்துகளை பார்க்கிலும் விலைபெற்றது
   அதின் வலது கையில் தீர்க்காயுசு செல்வமுண்டு

# பாடல் 358

நீதிமான்கள் பெருகினால் மகிழ்ச்சியுண்டாகும்
துன்மார்க்கர் ஆழும்போது தவிப்புண்டாகும்
அக்கிரமத்தால் ஆஸ்திகள் அழிந்துபோகும்
நியாயத்தினால் ராஜாவும் தேசம்காப்பான்

ஆமேன் ஆமேன் ஆமேன் அல்லேலூயா

1. மனிதனின் அகந்தை அவனை தாழ்த்தும்
மனத்தாழ்மை உள்ளவனோ கனம்பெருவான்
கர்த்தரை நம்பினால் உயர்த்தப்படுவான்
தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவான்

2. உண்மையுள்ள மனிதன் ஆசி பெறுவான்
ஆசீர்வாதத்துக்கு தீவிரித்தால் ஆக்கினையடைவான்
வன்கண்ணன் செல்வத்துக்கு பதறுகிறான்
தனக்கு வறுமை வருவதை அறியானே

3. வேதத்தை காக்கிறவன் கனமடைவான்
வேதத்தை கைகொண்டால் பாக்கியவானவான்
கர்த்தரின் பார்வைக்கு நல்லவனாவான்
கர்த்தர் அவனில் அன்பு கூர்ந்திடுவார்

# பாடல் 158

கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் தோல்வி உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் பயமும் உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் கவலை உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் துயரம் உனக்கில்லை

பாரம் சுமக்கும் என் மகனே
பாரம் அகல நீ ஓடி வா - 2
உன் பாரத்தை அகற்றிடுவார்
உன்னை அன்போடு அணைத்திடுவார்

1. கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் வெற்றி உனக்குண்டு
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் கலக்கம் உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் சதிகள் உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் எதிர்ப்புகள் உனக்கில்லை

2. கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் ஜெயம் உனக்குண்டு
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் பேதமை உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் வாக்குவாதம் உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் வழக்குகள் உனக்கில்லை

3. கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் வேதனை உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் கொடுமை உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் ஆபத்து உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் பாரசுமை உனக்கில்லை

4. கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் குறைவுகள் உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் வறுமைகள் உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் பிரிவினை உனக்கில்லை
கர்த்தருக்குள் நீ வாழ்ந்தால் பரலோகம் உனக்குண்டு

## பாடல் 159

கர்த்தருக்கு ஊழியம் செய்திடுவோம்
கர்த்தருக்காய் மனிதரை சேர்த்திடுவோம்
கர்த்தரின் பணியை செய்திடுவோம்
கர்த்தருக்கு சாட்சியாய் வாழ்ந்திடுவோம் - நாங்கள்

தேவனுக்கு சேவை செய்திடுவோம்
தேவனுக்காய் என்றும் வாழ்ந்திடுவோம் - 4

1. கர்த்தருக்காய் வாழ்ந்து செழித்திடுவோம்
   கர்த்தருக்காய் வாழ்ந்து மகிழ்ந்திடுவோம்
   கர்த்தருக்காய் வாழ்ந்து உயர்ந்திடுவோம்
   கர்த்தருக்காய் வாழ்ந்து நிலைத்திருப்போம் - நாங்கள்

2. கர்த்தரின் நாமத்தை சொல்லிடுவோம்
   விதைக்காத இடங்களில் விதைத்திடுவோம்
   சொல்லாத இடங்களை தேடிடுவோம்
   சொல்லுவோம் இயேசுவின் நாமத்தையே - நாங்கள்

3. கர்த்தரின் நாமத்தில் சென்றிடுவோம்
   கர்த்தர் நடத்திடுவார் தொடர்ந்திடுவோம்
   பரலோகில் கூட்டமாய் சேர்ந்திடுவோம்
   பாதாள கதவை மூடிடுவோம் - நாங்கள்

4. கர்த்தரின் சேனையாய் கிளம்பிடுவோம்
   கர்த்தரின் வல்லமையை சொல்லிடுவோம்
   கர்த்தரின் சேனையாய் நின்றிடுவோம்
   கர்த்தரின் சமூகத்தில் சேர்ந்திடுவோம் - நாங்கள்

## பாடல் 359

மெதுவான வார்த்தை உக்கிரத்தை மாற்றும்
கடுமையான வார்த்தை கோபத்தை எழுப்பிடும்
ஞானிகளின் வாய்கள் அறிவை உபயோகிக்கும்
மூடனின் வாய்கள் புத்தியீனத்தை கக்கிடும்

நீதியை பின்பற்றிடு அழிவுக்கு நீ தப்பலாம்

1. கர்த்தரின் கண்கள் எல்லா இடத்திலிருந்து
   நல்லோரையும் தீயோரையும் பார்க்கின்றது
   ஆரோக்கியநாவு ஜீவ விருட்சம்போலிருக்கும்
   நாவின் மாறுபாடோ ஆவியை நொருக்கிவிடும்

2. மூடன்! தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான்
   விவேகி! கடிந்துகொள்ளுதலை கவனித்து நடக்கிறான்
   நீதிமானின் வீட்டில் அதிக பொக்கிஷம் உண்டு
   துன்மார்க்காரின் வருமானத்தில் துன்பமுண்டாகும்

3. துன்மார்க்கரின் பலியோ தேவனுக்கு அருவருப்பு
   நீதிமானின் ஜெபமோ தேவனுக்கு பிரியமாகும்
   துன்மார்க்கனின் வழியோ கர்த்தருக்கு அருவருப்பு
   நீதியை பின்பற்றினால் தேவன் உன்னை நேசிப்பார்

# பாடல் 360

என் இயேசைய்யா என் இயேசைய்யா
நீர் இல்லாமல் நான் இல்லை ஐயா
இயேசுவே நீர் என்னோடிரும்
இயேசுவே நீர் என்னோடிரும்

ஆமேன் ஆமேன் என்னோடிரும் - 4

1. உம்மை நம்பி நான் இருக்கின்றேன்
உம்மை நம்பி நான் நடக்கின்றேன்
உம்மை நம்பி நான் பேசுகின்றேன்
உம்மை நம்பி நான் செல்லுகின்றேன்

2. நான் மண்ணான இந்த மண்ணிலே
நான் மனிதனாய் வாசம் செய்கின்றேன்
நான் விழாமல் என்னை நடத்தும்
என் கரம் பிடித்து என்னை நடத்தும்

3. நான் செல்லும் இடம் எங்கிலும்
நீர் என்னோடு வாரும் தேவனே
பேசும் வார்த்தை ஜீவ வார்த்தையாய்
ஜனங்களை என்றும் விடுவிக்கட்டும்

# பாடல் 160

பரலோகில் வாழ்ந்து வந்தார் இயேசுராஜன்
பூலோகம் இரங்கி வந்தார் இயேசுராஜன்
தம் இரத்தத்தை தந்திடவே இரங்கி வந்தார்
இரத்தத்தால் மீட்டிடவே இரங்கி வந்தார்

அல்லேலூயா ஓசன்னா - 4

1. பாவத்தில் மரித்துபோன மனிதனை கண்டார்
மனிதனை மீட்டெடுக்க பரமன் வந்தார்
பாவத்தையே அறியாத பரமன் இயேசு
பவத்தில் மரித்துபோன மனிதனை மீட்டார்

2. பரலோகம் இனி எனக்கு தூரம் இல்லை
பரலோகில் இயேசு உண்டு பயமும் இல்லை
பரபாஸ்களுக்காக அவர் மரித்தார்
பரலோக கதவை நமக்காக திறந்து விட்டார்

3. பரலோகம் சென்றிடவே பாடி துதிப்பேன்
கேட்டிடுவார் மகிழ்ந்திடுவார் பாடிடுவேன்
வந்திடுவார் விரைவில் கூட்டி சேர்ப்பார்
திருடனைபோல் வந்திடுவார் விழித்திருப்பேன்

4. எந்த நேரம் பரலோகம் செல்வேன் அறியேன்
என் இயேசு அழைப்புடன் எழுந்து செல்வேன்
இவ்வுலகில் எனக்காக ஒன்றும் இல்லையே
கூப்பிட்டதும் சென்றிடவே பயமும் இல்லை

## பாடல் 161

நோவா சொன்னபடி செய்தான் என்மகனே
நீயும் அப்படியே செய்யணும் என்மகளே
தேவனுக்கு புத்தி சொல்ல அல்ல மகனே
தேவ வார்த்தையை சொல்வதற்கு நீ வா

1. நோவாவை உத்தமனாய் தேவன் கண்டார்
   நீயும் உத்தமனய் நிற்பாயானல் வா மகனே
   நோவா பேழைதனை செய்ய சொன்னார்
   நோவா கீழ்ப்படிந்து பேழையை செய்தான்

2. அனைத்தையும் உள்ளே விட்டு கதவை அடைத்தார்
   உலகத்தார் உள்ளே போக முடியவில்லையே
   உத்தமனாய் நோவவை போல் இருப்பாயனால்
   சதா காலம் தேவனொடு வாழ்ந்திருப்பாய்

3. கொண்டலும் கொடுத்தலும் புரிந்தனர் - உலகம்
   கொள்ளை கொண்டு போவதை மறந்து ஜீவித்தனர்
   நோவாவின் வார்த்தையை அலட்சியம் செய்தனர்
   நொடி நேர பொழுதில் அனைத்தும் மடிந்தனர்

4. தேவனுக்கு உத்தமனாய் நீ வாழ்ந்திடு
   உண்மையாய் தேவனுக்குள் ஆராதனை செய்திடு
   நோவாவை காத்தவர் உன்னையும் காப்பார்
   இதோ சீக்கிரமாய் இயேசு வரப்போகிறார்

5. உலகம் பொய்யிலும் புரட்டிலும் புதைகிறது
   உலகம் செல்வத்திலும் பணத்திலும் புதைகிறது
   உலகம் இச்சையிலும் குடியிலும் அழிகிறது
   வரும் அழியை சொல்வதற்கு நீ ஓடி வா

## பாடல் 361

நடக்கப்போவதை உலகில் பாட்டாக
பாடுகின்றேன் நான் பாடுகின்றேன்

1. மேய்ப்பனையும் மந்தையும் நொறுக்குவேன் என்றார்
   உழவனையும் காளையும் நொறுக்குவேன் என்றார்
   அதிபதி அதிகாரியும் நொறுக்குவேன் என்றார்
   இவைகளை நானே செய்திடுவேன் என்றார்

2. உன்னையும் ராஜ்ஜியங்களையும் நொறுக்குவேன் என்றார்
   குதிரையும் வீரனையும் நொறுக்கவேன் என்றார்
   இரதத்தையும் வீரனையும் நொறுக்குவேன் என்றார்
   புருஷனையும் ஸ்திரியையும் நொறுக்குவேன் என்றார்

3. தேசத்தில் நீங்கள் கொடியேற்றிடுங்கள்
   ஜாதிகளுக்குள் நீங்கள் கொடியேற்றிடுங்கள்
   கேடான பர்வதத்துக்கு விரோதமாக
   வந்து கன்மலையிலிருந்து உருட்டிவிடுவேன்

4. யாக்கோபின் பங்கான தேவன் அவர்
   சர்வத்தையும் உண்டாக்கின தேவன் அவர்
   சேனைகளின் கர்த்தர் அவர் நாமம்
   ஜாதிகளை நொறுக்குவேன் என்றாரே

## பாடல் 362

எங்கள் போதகரே வாருமைய்யா
எங்கள் நல்ல போதரே வாருமைய்யா
வருந்தி அழைக்கின்றோம் - ஐயா
வருந்தி அழைக்கின்றோம்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஐயா உமக்கு

1. உம்மை பார்க்க வந்து இருக்கின்றோம்
   உம்மை பார்க்க வந்து இருக்கின்றோம்
   உம்மோடு பேச இருக்கின்றோம்
   உம்மோடு பேச இருக்கின்றோம்

2. இரங்கி வாரும் எங்கள் தேவனே
   இரங்கி வாரும் எங்கள் தேவனே
   வந்து எங்கள் விருப்பம் நிறைவேற்றும்
   வந்து எங்கள் விருப்பம் நிறைவேற்றும்

3. சோதனை மாற்றிடும் தேவா
   சோதனை மாற்றிடும் தேவா
   சோர்ந்திடாமல் ஜெயத்தை தாரும்
   சோர்ந்திடாமல் ஜெயத்தை தாரும்

## பாடல் 162

வாலிபனே! வாலிபனே!! நீயும் கொஞ்சம் நில்லு
உன் வாலிபத்தில் என் பெயரை சொல்லு
உன் வாலிபம் வீணாய் போக இடம் கொடாதே
என் வார்த்தையை கைகொண்டால் நீ பிழைப்பாய்

1. உன் வாலிபத்தில் நீ என்னை தேடினால்
   உன் வாழ்நாளை நான் காத்துகொள்வேன்
   என் வார்த்தையை உன்னிடத்தில் வைத்தாயானால்
   உன் வழியில் இடறாமல் சென்றிடுவாய்

2. என் வார்த்தையை நீ ஆராய்ந்து பார்
   என் வார்த்தையை கொண்டு செல்ல நீ வா
   அருவடை மிகுதி ஆட்களோ கொஞ்சம்
   அருவடை செய்திட விரைந்து வந்திடு

3. கல்வாரியில் சிந்திய இரத்தத்தை பார்
   கருத்துடன் ஜெபித்து போராடு
   அழிகின்ற ஆத்துமாக்களை தேடு
   அன்புடன் என்னைபற்றி கூரு

4. உன்னை தானே அழைக்கின்றேன்
   உன்னோடு இருக்கிறேன் நீ அறியவில்லை
   உன் வழி என் வழியும் அல்ல
   என் வழி உன் வழி ஆகட்டும்

# பாடல் 163

கர்த்தரின் வல்லமையை நாடுங்கள்
அவரின் சமுகத்தை தேடுங்கள்
கர்த்தரை என்றும் பாடிடுங்கள்
அவரின் நீதியை நிறைவேற்றுங்கள்

அல்லேலுயா அல்லேலுயா - 4

1. கர்த்தரை என்றும் துதியுங்கள்
அவரை என்றும் மறவாதிருங்கள்
கர்த்தருக்கு எதிராய் போர் செய்யாதிருங்கள்
உங்கள் தலையை துலுக்காதிருங்கள்

2. கர்த்தரின் ஊழியரே துதியுங்கள்
அவரின் பிள்ளைகளே துதியுங்கள்
கர்த்தரின் வாலிபரே துதியுங்கள்
அவரின் முதியோரே துதியுங்கள்

3. எல்லோரும் தேவனை துதியுங்கள்
எல்லோரும் தேவனை போற்றுங்கள்
நீதியின் வாசலை தேடுங்கள்
அவரின் கட்டளையை நிறைவேற்றுங்கள்

4. கர்த்தரின் வார்த்தையை தேடுங்கள்
பாவத்தை விட்டு ஓடுங்கள்
நித்தமும் தேவனை தேடுங்கள்
அனுதினமும் இயேசுவை கண்டிடுங்கள்

# பாடல் 363

காலை தேவனை தேடுவேன்
மதியம் தேவனை வாழ்த்துவேன்
மாலை தேவனை நான் போற்றுவேன்
எக்காலமும் நான் துதிப்பேன்

அல்லேலூயா ஓசன்னா !
அல்லேலூயா ஓசன்னா ! - 4

1. காலை வேதம் வாசிப்பேன் !
மதியம் வேதம் தியானிப்பேன் ! 2
மாலை பாடல் நான் பாடுவேன் !
எந்நாளும் விழித்து நின்றிடுவேன் ! 2

2. காலை எழும்பி துதித்திடுவேன் !
மதியம் தேவனை போற்றிடுவேன் !
மாலைநேரம் வாழ்த்தி பாடிடுவேன் !
எந்நேரமும் உயர்த்தி துதிப்பேன் !

3. இயேசு என்னை விடுவித்தார் !
இயேசு என்னை இரட்ச்சித்தார் !
இயேசு என்னை தூக்கி நிறுத்தினார் !
இயேசு என்றும் என்னோடிருக்கிறார் !

# பாடல் 364

நீர் எனக்கு செவிகொடும் தேவா
நான் ஜெபிக்கும் ஜெபம் கேட்டிடுமே
நான் கெள்வி கேட்டிடுவேன்
நீர் எனக்கு பதில் தாரும் தேவா

1. நீர் சகலத்தையும் செய்ய வல்லவர்
   செய்ய நினைத்தது தடைபடாது நீர்
   ஆலைசனையில் மிகவும் பெரியவர்
   செயல்களில் மகத்துவமானவர்

2. நான் என்னை அறுவருத்து
   மனஸ்தாபம் படுகின்றேன்
   எனக்காய் இறங்கி வந்து
   என்னை தூக்கி நிறுத்தினீரே

3. கர்த்தர் யோபின் முன் நிலமையிலும்
   பின் நிலமை இருமடங்கு ஆசீர்வதித்தார்
   ஆயிரம் ஆயிரமாய் பெருகசெய்தாரே
   அவன் அனேகருக்கு ஆசீர்வாதமானனே

4. உம்மை போல் தேவன் இல்லையே
   தேற்றும் தேவன் யாரும் இல்லையே
   அணைக்கும் தேவன் யாரும் இல்லையே
   உயர்த்தும் தேவனும் யாரும் இல்லையே

# பாடல் 164

உன் கஷ்டத்தை மாற்றும் தேவன்
உன் கண்ணீரை துடைக்கும் தேவன்
தடுமாறும் உன்னை தாங்கிடுவார்
விழுகின்ற உன்னை தூக்கிவிடுவார் - அவர் - 2

1. எருசலேம் நகரத்தை கட்டுகிறார்
   இஸ்ரவேலை தேவன் கூட்டி சேர்ப்பார்
   நொருங்குண்டோரை குணமாக்கிடுவார்
   சாந்த குணமுள்ளோரை உயர்த்திடுவார் - அவர்

2. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
   வாருங்கள் இயேசு அழைக்கின்றார்
   தம்மண்டை வருவோரை தள்ளாதவர்
   அணைத்து உன்னை ஆசீர்வதிப்பார் - அவர்

3. துன்மார்க்கனை இயேசு கவிழ்த்திடுவார்
   நீதிமானை ஒரு போதும் கைவிடார்
   எக்காலமும் தேவன் அரசாளுவார்
   தலைமுறை தலைமுறை ஆண்டிடுவார் - அவர்

4. எளியவனை தூக்கி உயர்த்துகின்றார்
   தேவன் பரதேசிகளையும் காத்திடுவார்
   திக்கற்ற பிள்ளைகளை ஆதரிக்கின்றார்
   விதவைகளையும் போஷிக்கின்றார் - அவர்

# பாடல் 165

இயேசு சிறியவனை புழுதிலிருந்து தூக்கிவிடுகிறார்
எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்
விழுகின்ற யாவரையும் தாங்குகின்றார்
மடங்கடிக்க பட்டோரை தூக்குகின்றார்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா - 4

1. இயேசு குருடரின் கண்களை திறக்கின்றார்
செவிடரின் செவிகளை திறக்கின்றார்
இயேசு பரதேசிகளையும் காக்கின்றார்
திக்கற்ற பிள்ளைகளை ஆதரிக்கின்றார்

2. இயேசு துன்மார்க்கனை கவிழ்த்துபோடுகிறார்
நீதிமான்களையோ நேசிக்கின்றார்
எக்காகாலமும் தேவன் அரசாழுகின்றார்
தலைமுறை தலைமுறை ஆழுகின்றார்

3. இயேசு எருசலேம் நகரத்தை கட்டுகிறார்
இஸ்ரவேலை கூட்டி சேர்கின்றார்
நொருங்குண்டோரை குணமாக்குகிறார்
சாந்த குணவான்களை உயர்த்துகின்றார்

4. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே நீங்கள்
வாருங்கள் என்று இயேசு அழைக்கின்றார்
தம்மண்டை வருவோரை தள்ளாதவர்
அணைத்து உன்னை ஆசீர்வதிப்பார்

# பாடல் 365

என்னில் நீங்கள் நிலைத்திருந்தால்
நான் உங்களில் நிலைத்திருப்பேன்
திராட்சை செடியில் நிலைத்திருந்தால்
முதிர்வயதிலும் கனி தந்திடும்

ஆமேன் ஆமேன் அல்லேலூயா
ஆமேன் ஆமேன் அல்லேலூயா

1. என்னை நீங்கள் அறியவில்லை
நான் உங்களை அறிந்து கொண்டேன்
என் நாமத்தில் எதை கேட்டாலும்
அதை நான் தருவேன் என்றார்

2. தினம் நீங்கள் கனி கொடுங்கள்
உங்கள் கனி நிலைக்கட்டுமே
உங்களை நான் ஏற்படுத்தினேன்
ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்

3. மிகுந்த கனி நீங்கள் கொடுப்பதால்
உங்களில் நான் அன்பாய் இருப்பேன்
என் அன்பிலே என்றும் நிலத்திருங்கள்
என்றென்றும் பிதா உன்னில் மகிமைபடுவார்

## பாடல் 366

கண்ணீரோடு நீ விதைத்தால்
கெம்பீரத்தோடு அறுப்பாய்
கண்ணீரோடு நீ ஜெபித்தால் - உன்
கண்ணீரை துடைப்பார் இயேசு

தேவனை சார்ந்து கொண்டால்
தேவன் உன்னை கைவிடமாட்டார்

1. கர்த்தர் வீட்டை கட்டாராகில்
   கட்டுபவரின் பிரயாசம் விருதா
   கர்த்தர் நகரத்தை காவாராகில்
   காப்பவனின் பிரயாசம் விருதா

2. மனிதர் நமக்கு விரோதமாய்
   எழும்பி வந்த போதிலும்
   கர்த்தர் தாமே இல்லாவிட்டால்
   உயிரோடு விழுங்கி இருப்பார்கள்

3. கர்த்தருக்கு பயந்து நடந்தால்
   அவன் இவ்வுலகில் பாக்கியவான்
   நன்மை கிருபை உன்னை தொடரும்
   எருசலேமின் வாழ்வை காண்பாய்

## பாடல் 166

மலை துதிக்கும்! குன்று துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!
காடு துதிக்கும்! மேடு துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!

துதிக்கும்! துதிக்கும்!! நம் தேவனை துதிக்கும்!!!
போற்றும்! போற்றும்!! நம் தேவனை போற்றும்!!! - 2

பனை துதிக்கும்! தென்னை துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!!
காய் துதிக்கும்! கனி துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!! - துதிக்கும்! துதிக்கும்!!

மரம் துதிக்கும்! ஓலை துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!!
ஆடு துதிக்கும்! மாடு துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!! - துதிக்கும்! துதிக்கும்!!

செடி துதிக்கும்! மலர் துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!!
கொடி துதிக்கும்! காய் துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!! - துதிக்கும்! துதிக்கும்!!

நதி துதிக்கும்! ஆறு துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!!
பிராணிகள் துதிக்கும்! பறவைகள் துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!! - துதிக்கும்! துதிக்கும்!!

சூரியன் துதிக்கும்! சந்திரன் துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!!
வானம் துதிக்கும்! பூமி துதிக்கும்!!
நம் தேவனை துதிக்கும்!!! - துதிக்கும்! துதிக்கும்!!

## பாடல் 167

வாருங்கள் வாருங்கள்! திருச்சபையோரே!!
தேவசன்னதியில் நாம் ஒன்று கூடுவோம்
எழுந்து வாருங்கள்! நம் தேவனை ஆராதப்போம்!!
ஓடி வாருங்கள் நாம் மகிழ்ந்து ஆராதிப்போம்

நமக்காய் பிறந்த! நம் இயேசுவை ஆராதிப்போம்!!
நமக்காய் மரித்த! நம் இயேசுவை ஆராதிப்போம்!!
நமக்காய் உயிர்த்த! நம் இயேசுவை ஆராதிப்போம்!!
நமக்காய் வரப்போகும்! இயேசுவை ஆராதிப்போம்!!

சத்தத்தை உயர்த்தி! தேவனை ஆராதிப்போம்!!
பேரிரச்சலோடு! இயேசுவை ஆராதிப்போம்!!
தேவர்களின் கூட்டம்! தேவனை ஆராதிக்கும்!!
தேவனின் படைப்பாம்! நாமும் ஆராதிப்போம்!!

செடி கொடிகள்! தேவனை ஆராதிக்கும்!!
வனவிலங்கு கூட்டமும்! ஓடி ஆராதிக்கும்!!
மனிதர் கூட்டமும்! மகிழ்ந்து ஆராதிக்கும்!!
மன்னர் இயேசு மகிழ்வார்! ஆராதிப்போம்!!

மிருக கூட்டமும்! நம் தேவனை ஆராதிக்கும்!!
பறைவை கூட்டமும்! நம் தேவனை ஆராதிக்கும்!!
கல் கூட்டமும்! நம் தேவனை ஆராதிக்கும்!!
பனி மூட்டமும்! நம் தேவனை ஆராதிக்கும்!!

காற்றும் மழையும்! நம் தேவனை ஆராதிக்கும்!!
கடலும் அலையும்! நம் தேவனை ஆராதிக்கும்!!
குன்றும் மலையும்! நம் தேவனை ஆராதிக்கும்!!
சர்வ சிருஷ்டிகளும்! நம் தேவனை ஆராதிக்கும்!!

## பாடல் 367

ஏழைகளின் தெய்வம் இயேசு தான்
ஏழையாக பிறந்தவர் இயேசு தான்
ஏழைகளோடு வாழ்ந்தவர் இயேசு தான்
ஏழையின் கண்ணீரை துடைத்திடுவார்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. மனிதனை நேசிப்பவர் இயேசு தான்
   மனிதனுக்காய் ரத்தம் சிந்தினவர் இயேசு தான்
   மனிதனை மன்னிப்பவர் இயேசு தான்
   மனிதனை இரட்சிப்பவர் இயேசு தான்

2. மனிதனை மாற்றுபவர் இயேசு தான்
   அவனை வாழவைப்பதும் இயேசு தான்
   ஜனத்தை ஆசீர்வதிப்பவர் இயேசு தான்
   சமதானத்தை தருபவரும் இயேசு தான்

3. தம் ஜனத்துக்காய் வரப்போவதும் இயேசு தான்
   அழைத்து செல்பவரும் இயேசுவே தான்
   பரலோகம் சேர்ப்பவர் இயேசுவே தான்
   மேசியா வருகிறார் ஆயத்தமாகு

# பாடல் 368

நீங்கள் என் கட்டளையை கைகொண்டு
என்கற்பனையின் வழியில்நடந்து சென்றால்
ஏற்ற காலத்தில் மழை பெய்திட செய்வேன்
பூமி பலனை என்றும் தந்திடும் என்றார்

இயேசுவில் என்றும் நீ நிலைத்திருந்தால்
இயேசு உன்னில் என்றும் நிலைத்திருப்பார்

1. திராட்சைபழம் பறிக்கும் காலம் வந்து சேரும்
போரடிக்கும் காலமும் வந்து சேரும் என்றார்
விதை விதைக்கும் காலமும் வந்திடும் என்றார்
அருப்பு காலமும் வந்து சேர்ந்திடும் என்றார்

2. வெளியின் விருட்சம் ஏற்ற காலம் கனிதந்திடும்
தேசம் மகிழ்ந்து களிகூரும் என்று சொன்னாரே
சமாதானம் தேசத்தில் உண்டு என்றாரே
உன் தேவனாகிய கர்த்தர் நானே என்றார்

3. துஷ்டமிருகம் தேசத்தில் வருவதில்லை
தேசத்தில் பட்டயமும் வருவதில்லை
உன் சத்துருவை நீங்களே அழிப்பீர்கள்
அவன் மடிந்தே என்றும் போய் விடுவான்

# பாடல் 168

நன்றி! நன்றி!! நன்றி!!!
என்று நான் சொல்லுவேன்!
என் ஆண்டவரை எந்நாளும் வாழ்த்திடுவேன்!

நன்றி ஐய்யா! உமக்கு நன்றி!! - 2

1. நீர் செய்த நன்மைகள் சொல்லி முடியாது!
நீர் செய்த அற்புதங்கள் எண்ணி முடியாது!

2. மனிதர் என்னை கைவிட்டபோதும்!
கைவிடாமல் என்னை காத்துவந்தீரே!

3. எப்பக்கம் சத்துரு நெருக்கும் போது!
இயேசுவே நீர் எனக்கு அடைக்கலமானீர்!

4. இருளின் பள்ளத்தாக்கில் நடந்தபோதும்!
உம் கோலும் தடியும் என்னை தேற்றினது!

5. தேவைகள் எத்தனையோ இருந்த போதும்!
என் தேவைகளை சந்தித்தீரே நன்றி ஐய்யா!

6. ஆபத்துக்கள் அனேகம் வந்தபோதிலும்!
எல்லாவற்றிலும் என்னை தப்புவித்தீரே!

7. எதிரிக்கு முன்பாக என் தலையையும்!
புது எண்ணையால் என்னை நிரப்பினீரே!

# பாடல் 169

களவு செய்யாதே!

கர்த்தரின் வார்த்தை மீறிபோகாதே!!

ஆகானைப்போல நீயும் மறைத்து வைக்காதே!

ஆகானைப்போல நீயும் மீறி நடக்காதே!

ஆகானைப்போல நீயும் மறைந்து போகாதே!

கானான் போக - கர்த்தரின் வழியை நீ பற்றிகொள்ளு!!!

பொய் சொல்லாதே! சபையில் பொய் சொல்லாதே!
பொய் சொல்லி தேவனைவிட்டு மறைந்து போகாதே!
தேவ சபையில் என்றும் நீ உண்மையாயிரு!
உண்மையாய் என்றும் நீ நிலைத்திரு!

வஞ்சனை பண்ணாதே! நீ வஞ்சனை பண்ணாதே!
வஞ்சனை பண்ணி சாபத்தை வாங்கி கொள்ளாதே!
அணியாயம் செய்யாதே! நீ தேவ கட்டளை மீறாதே!
அணியாயம் செய்து நீ சாபத்தை வாங்கி காள்ளாதே!

மேட்டிமையாக நீ இருக்காதே!
மேட்டிமையாக நீ பேசாதே!
மேட்டிமை உன்னை அழித்து விடும்!
மேட்டிமை உன்னை நரகம் சேர்த்து விடும்!

உன்னை நீயே ஆராய்ந்து பார்!
உன்னை நீயே சோதித்தும் பார்!
தேவ கட்டளையை நீ காத்து நட!
தேவ கட்டளைக்கு நீ பயந்திரு!

இயேசுவின் மரணத்தை மறக்காதே!
வேதத்தை அனுதினமும் படித்து நிலைத்திரு!
தேவனை தினம் துதித்து நிலைத்திரு!
தேவ சபையில் நீ வளர்ந்து பெருகிடு!

# பாடல் 369

தேவ ஆலயத்துக்கு போவோம் வருங்கள்

எனக்கு அவர்கள் சொன்ன போது தான்

போவோம் வாருங்கள் மகிழ்ந்திருப்போம்

தேவன் வந்து நம்மை ஆசீர்வதிப்பார்

தேவாலயத்துகு ஓடி வாருங்கள்

சமதானம் பெற்று சென்றிடுங்கள்

1. எருசலேம் சமாதனம் பெரிதாயிருக்கும்

   எங்கள் கால்கள் நிற்கலாயிற்று

   கர்த்தரை நாம் ஸ்தோத்தரிப்போம்

   உம்மை நேசிப்பவன் சுகித்திருப்பான்

2. உன் அலங்கத்துக்குள் சமாதானமும்

   அரண்மனைக்குள் சுகம் வந்திடுமே

   எங்கள் தேவனாகிய கர்த்தராலே

   நன்மைகள் என்றும் வந்து சேர்ந்திடும்

3. வானத்தையும் பூமியையும் படைத்த

   தேவனிடம் இருந்து ஒத்தாசை வரும்

   கர்த்தர் உன்னை தினமும் காத்திடுவார்

   உன்பக்கத்திலே உனக்கு நிழலாய் இருப்பார்

# பாடல் 370

யாக்கோபு தேவனோடு போராடினான் என்னை
ஆசீர்வதித்தால்தான் நான் போவேன் என்றான்
தேவனை நோக்கி அழுது கெஞ்சினான்
யாக்கோபின் பெயரை தேவன் மாற்றினார்

தந்தானே தந்தானே தந்தனை தந்தானே

1. இஸ்ரவேல் என்று அவன் பெயரை மாற்றினார்
   இஸ்ரவேலை தேவன் அங்கே ஆசீர்வதித்தார்
   அந்த ஸ்தலம் பெனியேல் என்றும் பேரிட்டான்
   யாக்கோபு பயம் மாறி பெலன் அடைந்தான்

2. இஸ்ரவேல் பெனியேலை கடந்து போகையில்
   இஸ்ரவேலுக்கு சூரியன் உதயமானது
   இஸ்ரவேலுக்கு முன்பாக தேவன் சென்றார்
   இஸ்ரவேலுக்கு தேவன் சமாதனம் தந்தார்

3. கடந்து வந்த பாதைகளை காத்த தேவனுக்கு
   பெத்தேல்சென்று தேவனுக்கு பலிபீடம் கட்டினான்
   குடும்பத்தோடு சென்று தேவனுக்கு பலிசெலுத்தினான்
   தேவன் வந்து இஸ்ரவேலை ஆசீர்வதித்தார்

# பாடல் 170

என் கைகள் என்றும் குறுகவில்லையே!
என் செவிகள் என்றும் மந்தமில்லையே!!
நீயே என் கையை குறுக வைத்தாயே!
நீயே என் செவியை மந்தமாக்கினாய்!!

திரும்பு திரும்பு மனதிரும்பு!!!!

1. உன் உதடு என்றும் பொய்யாச்சுதே!
   உன் கை என்றும் இரத்தமாச்சுதே!
   நீதியை ஒரு போதும் தேடவில்லையே!
   பொய்யை நீ பேசுகின்றாயே!!

2. சமாதன வழியை நீ நாடவில்லையே!
   உன் நடைகளில் நியாயம் இல்லையே!
   உன் பாதை எல்லாம் கோணலாச்சுதே!
   நீதியம் நியாயமும் உனக்கு துாரமாச்சுதே!!

3. பொல்லாப்பை விட்டு நீ விலகவில்லையே!
   சத்தியத்தை தேடி நீ அலையவில்லையே!
   பாவத்தை விட்டு நீ ஓய வில்லையே!
   இரட்சிப்பை தேடி நீ பார்க்க வில்லையே!!

4. என்னை தேடி நீ வருவாயானால்!
   என் நீதியை தேடி நீ பார்ப்பாயானால்!
   என் வசனத்தை நீ ஏற்றுக் கொண்டால்!
   இரட்சிப்பினால் உன்னை அலங்கரிப்பேன்!!

5. உன் மேல் என் ஆவியை ஊற்றிடுவேன்!
   உன் உள்ளத்தில் என்றும் உன்னோடிருப்பேன்!
   உன்னை கொண்டு அற்புதம் செய்திடுவேன்!
   உன் மூலம் அதிசயம் காணசெய்வேன்!!

## பாடல் 171

தாகமாய் இருக்கிறாயோ?
தண்ணீரண்டை ஓடி வா!
பசியாய் வாடுகிறாயோ? பசியாற்ற ஓடி வா!
எலியாவை போஷித்த தேவன் உன்னையும்
போஷிப்பாரே?
நில்லாமல் ஓடி வா தேவனிடம் ஓடி வா!!

1. உன் செவி சாய்த்து என்னிடம் ஓடி வா!
நீ கீழ்ப்படிந்து என் வார்த்தை கேட்க வா!
உன் ஆத்துமா வாழ்ந்து சுகித்திருக்கும்!
நீ அமைதியாய் வாழ வழி பிறக்கும்!!

2. இது தருணம் தேவனை விடாதே!
இதுவே காலம் அவரை நோக்கி கூப்பிடு!
தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்!
தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்!!

3. என் நினைவு அல்ல உன் நினைவு!
உன் வழி அல்ல என் வழி!
விதையை கொடுப்பேன் விதைப்பவனுக்கு!
ஆகாரம் கொடுப்பேன் புசிப்போனுக்கு!!

4. முட்செடி அல்ல தேவதாரு முளைக்கும்!
காஞ்சொரி அல்ல மிருது செடி எழும்பும்!
கர்த்தருக்கு காத்திருந்தால் சகலமும் நடக்கும்!
கருத்துடன் ஜெபிக்க பதிலும் கிடைக்கும்!!

## பாடல் 371

எவர்களை தேவன் முன்குறித்தாரோ
அவர்களை மறக்காமல் அழைத்திருக்கிறார்
யார் யாரை அழைத்தாரோ அவர்களை
மகிமை படுத்தியும் இருக்கின்றார்

இயேசு ராஜன் வருகின்றார் ஜெய வீரனாய்
ஓடிவா இயேசுவிடம் அழைக்கின்றார்

1. அன்றியும் தேவனின் தீர்மானத்தினால்
அழைக்கப்பட்டவர் தேவனையே அன்புகூர்ந்தார்
நம் தேவன் பெரியவர் நம் தேவன் நல்லவர்
தேவாதி தேவன் இவர் ராஜாதி ராஜா

2. முன்னே நீங்கள் தேவ ஜனம் இல்லை என்றார்
இப்போ நீங்கள் என் ஜனம் என்றாரே
ஆச்சிரியமான ஒளியினிடம் அழைத்தவரின்
புண்ணியங்களை நீங்கள் அறிவித்திடுங்கள்

3. முன்னே நீங்கள் தேவ இரக்கம் இல்லாதவர்
இப்போது தேவ இரக்கம் பெற்ற ஜனங்களாம்
முன்னே தேவனின் சொந்த ஜனம் இல்லை
இப்பம் நீங்கள் தேவனின் சொந்த ஜனமென்றார்

## பாடல் 372

ஆயக்காரனுக்கு தலைவனாம் இவன்
வரி வசூல் செய்பவனாம்
ஆஸ்திகளில் உயர்ந்தவனாம்
சகேயு என்பது இவன் பெயராம்

உலகமே மனம் திரும்பு
இயேசு ராஜா வருகின்றார்

1. இயேசு ராஜா எப்படி இருப்பார்
அவரை நான் பார்க்க வேண்டும்
வரி வாங்கினாலும் குள்ளனாயிருந்தானே
இயேசுவை பார்க்க ஆவல் கொண்டானே

2. ஆத்திமரத்தில் ஒளித்திருந்தான்
இயேசுவை மறைந்து பார்த்தான்
இயேசு வந்து கீழே நின்று
அண்ணாந்து சகேயுவே என்றார்

3. சீக்கிரமாய் இறங்கி வா என்றார்
உன் வீட்டில் நான் தங்கவேண்டும்
இயேசுவை அழைத்து சென்றான்
சொத்தில் பாதி ஏழைக்கு கொடுத்தான்

## பாடல் 172

கர்த்தரின் வேதத்தில் நடக்கும் - நாம் பாக்கியவான்கள்!!
உத்தம மார்க்கம் செல்லும் - நாம் பாக்கியவான்கள்!!

1. தேவ சாட்சியை கைகொள்ளும் - நாம் பாக்கியவான்கள்!
முழு இருதயத்தோடு தேடும் - நாம் பாக்கியவான்கள்!!

2. கட்டளை ஆராய்ந்து பார்க்கும் - நாம் பாக்கியவான்கள்!
அதை கருத்தாய் கைகொள்ளும் - நாம் பாக்கியவான்கள்!!

3. கற்பனை கருத்தாய் பார்க்கும் - நாம் பாக்கியவான்கள்!
கற்பனையில் நிலை நிற்பவனே - நாம் பாக்கியவான்கள்!!

4. தினம் வேதம் வாசிப்பவன் - நாம் பாக்கியவான்கள்!
தினம் தவராமல் ஜெபிப்பவர்களும் - நாம் பாக்கியவான்கள்!!

5. கருத்தாய் தேவனை தேடுகிறவர்கள் - நாம் பாக்கியவான்கள்!
வேதத்தை இருதயத்தில் பதிப்பவர்கள் - நாம் பாக்கியவான்கள்!!

## பாடல் 173

நீதி! நியாயங்கள்!! அறிந்த நாமே
பாக்கியவான்கள்! நாம் பாக்கியவான்கள்!!
நீதி! நியாயங்களை!! நிறைவேற்றினால்
பாக்கியவானாய் என்றும் இருப்பாய்!!

ஆமென் ஆமென் அல்லேலூயா

1. கர்த்தருக்கு பயந்து அவர் கட்டளைகளில்
   பிரியமாய் இருப்பவன் பாக்கியவான்!!
   ஆஸ்தியும்! ஐசுவரியம்!! அவனில் இருக்கும்
   அவன் செய்த நீதி என்றைக்கும் நிற்கும்!!

2. செம்மையானவற்கு இருளிலே
   வெளிச்சம் என்றும் உதிக்கும்!
   அவன் என்றைக்கும் அசைக்கபடான்
   நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்!!

3. இரக்கமும் மனவுருக்கம் உள்ளவன்
   இரங்கி கடன்கொடுத்து வாங்குபவன்!
   நியாயமானபடி நடப்பவனும்
   என்றும் பாக்கியவானாயிருப்பான்!!

4. அவன் இருதயம் என்றும் உறுதி இருக்கும்
   சத்துரு சரிகட்டுதலை காணுமட்டும்!
   என்றும் பயப்படாதிருப்பான்
   அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்!!

5. வாரியிறைத்து ஏழைக்கு கொடுப்பவன்
   அவனுடைய நீதி என்றைக்கும் இருக்கும்!
   அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும்
   செம்மையானவான் ஆசீர்வாதமாய் இருப்பான்!!

## பாடல் 373

ஆதியாகமம் படித்து நீ பார்த்திடு
தேவனின் சிருஷ்டிப்பை பார்த்திடு
தேவனின் படைப்பு ஆச்சரியமானது
தேவனின் செயல்கள் மகத்துவமானது

அண்டினோருக்கு அற்புதர் அற்புதர்
அற்புதர் இயேசு அற்புதர்

1. யாத்திராகமம் படித்து நீ பார்த்திடு
   தேவனின் அதிசய கிரியைகளை
   செங்கடலை இரண்டாய் பிளந்த தேவன்
   உலகில் உண்டோ ஆராய்ந்து நீ பார்

2. இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது ஆண்டு
   வனாந்திர வழியாய் நடத்தின தேவன்
   நாற்பது ஆண்டுகள் போஷித்த தேவன்
   குறைகள் வராமல் காத்து நடத்தினார்

3. எதிர்த்த துஷ்ட மிருகத்தை அழித்தார்
   எதிர்த்த யோர்தான் நதியை பிரித்தார்
   எதிர்த்த எகிப்தின் தேசத்தை அழித்தார்
   கானன் தேசம் நடத்தி சென்றார்

# பாடல் 374

கன்மலையான என் இயேசு தேவனே
இரவும் பகலுமாய் உம்மை தேடுகின்றேன்
உம்மை நோக்கி தினமும் கூப்பிடுகிறேன்
மவுனமாய் இருக்காமல் இறங்கி வாருமே

ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமய்யா
துதிகளுக்கு பாத்திரரே ஸ்தோத்திரமய்யா - 2

1. நீர் மவுனமாய் இருந்தால் விழுந்துபோவேன்
நான் ஒரு பாவியான மனிதன் தானைய்யா
என் பாவத்தை மன்னித்து தூக்கி நிறுத்திடும்
உம்மை நான் மறக்காமல் பின்சென்றிடுவேன்

2. உலக கவலை என்னை நெருக்கிடாமல்
நான் போகும் இடமெல்லாம் கூடவந்திடும்
மறுபடியும் பாவத்தில் நான் விழுந்துவிடாமல்
என்னை என்றும் உம் வழியில் நடத்திடுமே

3. அப்பா அப்பா இயேசப்பா நீர் போதுமப்பா
ஜீவ பாதையில் என்னை தினம் நடத்திடும்
அற்புத தேவனே அற்புதம் செய்திடும்
அனுதினமும் உம்மை நம்பி வாழ்ந்திடுவேன்

# பாடல் 174

எழும்பு! எழும்பு!! சீயோனே எழும்பு!!!
எழும்பு! எழும்பு!! எருசலேமே எழும்பு!!!

1. உன் வல்லமையை தரித்துகொள்ள எழும்பு!
உன் கிரீடத்தை காத்துகொள்ள எழும்பு!!
உன் தூசியை உதரிவிட்டு எழும்பு!!!
கட்டுகளை அவிழ்த்து விட்டு எழும்பு!!!!

2. விலையின்றி விற்கப்பட்டுப் போனாய்!
பணமின்றி மீட்கப்பட்டாய் எழும்பு!!
கர்த்தரின் சமாதானம் கூரிட எழும்பு!!!
கர்த்தரின் சுவிசேஷம் அறிவிக்க எழும்பு!!!!

3. உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார் - எழும்பு!
என்றுதான் சுவிசேஷம் சொல்லிட எழும்பு!!
எருசலேமின் குடிகள் எல்லோரையும்!!!
கெம்பீரித்து பாட சொல்ல எழும்பு!!!!

4. கர்த்தர் உன் முன்னே போவார் எழும்பு!
இஸ்ரவேலின் தேவன் காத்திடுவார் எழும்பு!!
ராஜாக்கள் வாயை மூடிகொள்வார் எழும்பு!!!
சொல்லாத இடங்களில் சொல்லிட எழும்பு!!!!

# பாடல் 175

உன்னை போல யாருமில்லையே!!!
உன்னை போல எவருமில்லையே!!!

நீ தேவதூதரிலும்! சற்றே தான் சிறியவனாம்!!
மகிமை கனத்திலும்! முடிசூட்டப்பட்டவனாம்!!
தேவனின் சாயலால்! உண்டாக்கப்பட்டவனாம்!!
தேவனின் சுவாசத்தால்! உயிர்ப்பிக்கப்பட்டவனாம்!!

ஐந்தறிவு படைத்தவனாம்! ஆறாமறிவு கொண்டவனாம்!!
சிந்திக்கவும் தெரிந்தவனாம்! செயல்படுத்த வல்லவனாம்!!
எல்லா உயிரிலும் மேலாக உன்னை படைத்தாரே!!
எல்லாமே உனக்காய் தேவன் படைத்தாரே!!

தேவனை போற்றி! உயர்த்திட பிறந்தவனாம்!!
எல்லாமே சுதந்தரிக்க! ஆளுகை பெற்றவனாம்!!
எல்லா நாளும் பெலன்! கொண்டு முன்னேற வேண்டும்!!
சாத்தனும் வஞ்சிப்பான்! கவனமாய் வாழவேண்டும்!!

ஏதேன் தோட்டமும்! ஜீவ விருட்சமும்!!
காட்டு விலங்குகள்! வானத்து பறவைகள்!!
காலை! மாலை! வேளையும் பாலைவன சோலையும்!!
எல்லாமே உனக்காம் எல்லாமே உனக்காம்!!

நீ ஆபிரகாம் சந்ததியாம்! யூதா கோத்திரமாம்!!
வாக்குத்தத்த புத்திரனாம்! ஆவியால் பிறந்தவனாம்!!
தேவனின் கிரியை மேல் ஆளுகை பெற்றவனாம்!!
சீயோனில் வாசம் பண்ணும் கர்த்தரிடம் செல்பவனாம்!!

# பாடல் 375

தேவனின் வார்த்தையில் என்றும் நடந்தால்
தேவனின் வார்த்தையில் ஜீவன் உண்டாகும்
மனிதனுக்கு தேவன் மோசேயின் மூலம்
எழுதி கொடுத்த வார்த்தையை கைக்கொள்ளணும்

1. தேவனின் சட்ட திட்டங்களும் உண்டு
   பரிசுத்த வேதத்தில் எழுதி இருக்கிறார்
   வேதத்தை வாசித்து கேட்டு அறிந்து
   கைக்கொண்டு நடந்தால் நீ பிழைப்பாய்

2. உலகத்தில் முடிவு காலம் நெருங்கி விட்டது
   இயேசு ராஜா வேகமாய் வருகின்றார்
   நீ தப்பிக்க வழி ஒன்று இயேசுவே தான்
   இயேசுவின் வழியை நீ பற்றிக்கொண்டிடு

3. தேவ ஜனமே நீ கலகம் செய்யாதே
   கலகம் செய்தால் நிம்மதியாய் வாழ முடியாது
   மனம்திரும்பி இயேசுவிடம் வந்து சேர்ந்திடு
   உன் கோபத்தை மாற்றி ஆசீர்வதிப்பார்

4. உன் வாழ்க்கையும் தேவன் மாற்றிடுவார்
   உன்னை இரட்சித்து பரிசுத்தம் ஆக்கிடுவார்
   பரிசுத்தம் இல்லாமல் ஆராதனை இல்லை
   பரிசுத்தம் இல்லாமல் பரலோகம் இல்லை

## பாடல் 376

பிள்ளைகளே வந்து எனக்கு செவிகொடுங்கள்
கர்த்தருக்கு பயப்படுதலை நான் போதிப்பேன்
நன்மை காணும் வழியை நான் போதிப்பேன்
ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை தருவேன்

1. கர்த்தரை அனுதினம் நான் தேடினேன்
எல்லா பயத்துக்கும் என்னை மாற்றி விட்டார்
என் வழிகளையும் தேவன் மாற்றி விட்டார்
என் வாழ்க்கையும் தேவன் மாற்றி விட்டார்

2. கர்த்தரை தங்களுக்கு தெய்வமாகவும்
தெரிந்துகொண்ட ஜனங்கள் பாக்கியமுள்ளது
அவர்களின் வழிகள் எல்லாவற்றையும்
கர்த்தர் வானத்திலிருந்து நோக்கி பார்க்கின்றார்

3. நான் உனக்கு நல்வழியை போதிப்பேன்
நானே வழி சத்தியம் என்றவர் நடத்திடுவார்
நீதிமானே கர்த்தருக்குள் நீ மகிழ்ந்திரு
தேவன் உனக்கு பெரிய காரியங்கள் செய்திடுவார்

4. பஞ்சத்தில் உன்னை அவர் காத்திடுவார்
மரணத்துக்கும் விலக்கி உன்னை காத்திடுவார்
உன் போக்கையும் வரத்தையம் காத்திடுவார்
உன் ஆத்துமாவை தீமைக்கு விலக்கி காப்பார்

## பாடல் 176

மனுஷனால் பெற்றதும் இல்லை!
மனுஷனால் கற்றதும் இல்லை!! - 2
இயேசுவே எனக்கு கற்று தந்தார்!!! - 2

1. உழுதிட நிலமும் இல்லை!
விதைத்திட விதையும் இல்லை!!
தேவனே என்னை போஷிக்கிறார்!!!

2. மாட மாளிகை இல்லை!
கூட கோபுரம் இல்லை!!
இயேசுவே எனக்கு அடைக்கலம்!!!

3. படித்திட பணமும் இல்லை!
போதிக்க யாரும் இல்லை!!
இயேசுவே எனக்கு ஞானமானார்!!!

4. பந்தங்கள் யாரும் இல்லை!
சொந்தங்கள் ஏதும் இல்லை!!
இயேசுவே எனக்கு துணையானார்!!!

5. பட்டம் பதவி எனக்கு இல்லை!
சொத்து சுகம் எனக்கு இல்லை!!
தேவனே என்னை போஷிக்கிறார்!!!

6. மடியிலே கனமும் இல்லை!
வழியிலே பயமும் இல்லை!!
இயேசுவே என்னை நடத்துவார்!!!

7. பொக்கிஷம் இங்கே இல்லை!
புழு பூச்சி அறிப்பது இல்லை!!
பரலோகில் எந்நாளும் சேர்கிறேன் (சேர்க்கிறேன்)!!!

## பாடல் 177

கடலில் இரங்கி முத்தெடுத்தாலும்
கர்த்தரின் வார்த்தைக்கு ஈடாகுமா
மலை உடைத்து பொன் எடுத்தாலும்
கர்த்தர் சொன்ன சொல் போலாகுமா

நன்றி ஐயா! நன்றி ஐயா! நன்றி நன்றி ஐயா!!! - 2

1. கடலை பிரித்து நடத்தினீரே
   மலை உடைத்து தாகம் தீர்த்தீரே
   ஒரு போதும் நீர் கைவிடவில்லை
   ஒரு நாளும் விலகினதில்லை

2. உமக்கெதிராய் பாவம் செய்தேன்
   உம் மனதை உடைத்தெறிந்தேன்
   எனக்காக நீர் இரங்கி வந்தீர்
   தூக்கி என்னை நிறுத்தி விடும்

3. வேதனை தரும் வழி மாற்றிடும்
   மாற்றி என்னை நடத்தி செல்லும்
   நீரே எந்தன் நல் வழி காட்டி
   இறுதி வரை அழைத்து செல்லும்

4. நீரே எந்தன் துணையாளர்
   நீரே என் வழியுமானீர்
   நீரே எனக்கு ஜீவனுமானீர்
   வார்த்தை என்னை உயிர்பிக்குதே

## பாடல் 377

குருடனுக்கு நான் என்றும் கண்ணாயிருப்பேன்
அவன் அறியாத வழியிலும் நடத்திடுவேன்
அவனுக்கு முன் வெளிச்சம் கொடுத்திடுவேன்
கைவிடாமல் அவனை காத்து கொள்ளுவேன்

1. அவன் தெரியாத அறியாத பாதையிலும்
   இருளை வெளிச்சமாக்கும் தேவன் என்றார்
   தண்ணீரை கடந்தாலும் உன்னோடு இருப்பேன்
   அக்கினியில் நடந்தாலும் வேகமாட்டாய்

2. தேவனுக்கு மகிமை செலுத்திடுங்கள்
   அவரின் துதியை மகிமை படுத்துங்கள்
   கோணலை செவ்வையாக்கி நேராகவும்
   ஒரு போதும் நான் அவனை கைவிடமாட்டேன்

3. சப்பாணிக்கு காலாய் நான் என்றும் இருப்பேன்
   நான் கூட இருந்து அவனை நடத்திடுவேன்
   ஏழைக்கு தகப்பனாய் நான் இருப்பேன்
   ஏழையின் வழக்கை ஆராய்ந்து பார்ப்பேன்

## பாடல் 378

அதிகரிகளை நம்பாதே நீ நம்பாதே
அரசியல்வாதியை நம்பாதே நீ நம்பாதே
தேவனை நம்பி நீ நன்மை செய்திடு
தேவனை நம்பி அவர் பின் சென்றிடு - நீ

1. அதிகாரிகள் நல்ல காரியம் செய்ததுமில்லை
அதிகாரிகள் நன்மை செய்ய போவதுமில்லை
அவர்கள் தேவனுக்கு பயந்து நடப்பதுமில்லை
பாவசாபம் வரும் என்று பார்ப்பதும் இல்லை

2. தேவனால் அல்லாமல் அதிகாரமில்லை
ஆழுகை எல்லாம் தேவனால் வரும்
தேவ ஜனமே ஒருபோதும் பயப்படாதே
இயேசு ராஜா சீக்கிரம் வருகின்றார்

3. ஆயத்தமாய் எப்போதும் நீ இருந்திடு
கர்த்தரில் உண்மையாய் என்றும் இருந்திடு
கர்த்தரின் வழியை பற்றிக் கொண்டிரு
கடைசிவரை வழுவாமல் காத்துகொள்வார்

4. அனுதினம் உலகில் நன்மை செய்திடு
நன்மை செய்வதில் நீ சோர்ந்து போகாதே
உலக ஆசை முற்றும் நீ வெறுத்து தள்ளிடு
பொக்கிஷத்தை பரலோகில் சேர்த்து வைத்திடு

## பாடல் 178

அல்லேலூயா அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

1. வல்லமை விளங்கும் ஆகாய விரிவை பார்த்து
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

2. அவருடைய வல்லமையுள்ள கிரிகைளுக்காக
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

3. மாட்சிமை பொரிந்திய மகத்துவத்துக்காக
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

4. எக்களா தொனியோடு வீணையோடு
சுரமண்டலத்தோடும்
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

5. தம்புரோடும் நடனத்தோடும் யாழோடும் தீங்குழலோடும்
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

6. ஓசையுள்ள தாளத்தோடும் பேரோசையுள்ள
தாளத்தோடும்
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

7. நாசியில் சுவாசமுள்ள ஜீவராசி எல்லாமே
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

8. கிறிஸ்துவின் சபையோரே எல்லோரும் சேர்ந்து
தேவனை போற்றி போற்றி துதியுங்கள்

## பாடல் 179

பெலனற்று போனேன்! நான் பெலனற்று போனேன்!!
குணமாக்கும் இயேசுவே! குணமாக்கும் இயேசுவே!!
என்னை குணமாக்கும் என் இயேசுவே!!!

கோபத்தில் என்னை கடிந்து கொள்ளாதீர்
உக்கிரத்தில் என்னை தண்டியாதேயும்

என் எலும்புகள் எனக்குள் நடுங்குகிறது
என் ஆத்துமாவில் நான் சோர்ந்து போனேன்

நீர் எதுவரைக்கும் இரங்காதிருப்பீரோ
திரும்பி என்னை நோக்கி பாரும் தேவனே

என் ஆத்துமாவை அழிவுக்கு மீட்டுவிடும்
கிருபையால் என்னை ரட்சித்து விடும்

பெருமூச்சால் நான் இளைத்து போனேன்
இராமுழுதும் கண்ணீரால் நனைக்கிறேன்

என் கண்களில் கண்ணீரும் இல்லை கர்த்தாவே
என் தலையில் தண்ணீரும் இல்லை என் தேவனே

நீதிமானை என்றும் காத்துகொள்ளாதிருப்பீரோ
நீதியுள்ள தேவன் இரங்காதிருப்பீரோ

## பாடல் 379

பரலோகம் வேண்டுமா ? உனக்கு
நரகம் வேண்டுமா ?
சொல் மனமே நீ சொல் மனமே - 2
பரலோகம் வேண்டும் பரலோகம் வேண்டும் - 2

1. பரலோக வழி உனக்கு தெரியுமா
   நரகம் வழி உனக்கு தெரியுமா
   பரலோகம் வழி உனக்கு தெரியணும்
   நரக வழி உனக்கு தெரியணும்

2. நரகத்தில் எப்போதும் அந்தகாரமே
   நரகத்தில் எப்போதும் அக்கினி எரியும்
   நரகத்தில் எப்போதும் ஐயோ ஐயோ தான்
   நரகத்தில் ஒருபோதும் சாவு இல்லையே

3. பரலோகில் புசிக்கமன்னா கனிகள் உண்டு
   பரலோகில் அமர்ந்த தண்ணீர் உண்டு
   பரிசுத்தரோடு தினம் ஆடி பாடலாம்
   பரலோகில் எப்போதும் பரமானந்தமே

4. இயேசுவின் வழி சத்யம் ஜீவன் இல்லாமல்
   பரலோகம் ஒருபோதும் செல்ல முடியாது
   பரலோகம் செல்ல வழி ஒன்றே தான்
   இயேசு இல்லாமல் பரலோகம் இல்லையே

## பாடல் 380

பிறரை குறை நீ கூறாதே
அக்குறை உன்னை அழித்துவிடும்
பொறாமை என்றும் நீ கொள்ளாதே
அப்பொறாமை உன்னை அழித்துவிடும்

1. தேவ ஊழியனை குறை கூறாதே - நீ
தேவ மனிதனை ஒன்றும் சொல்லாதே
தானியேல் மேல் பொறாமை கொண்டார்கள்
பொறாமை அவர்களை அழித்து விட்டது

2. யோசேப் மேல் பொறாமை கொண்டவர்கள்
அடித்து உதைத்து விற்றுப் போட்டார்கள்
தேவன் யோசேப்பின் மேல் அன்பு கூர்ந்து
எகிப்தின் தலைவனாய் உயர்த்தி விட்டார்

3. பேதுரு மேல் பொறாமை கொண்டார்கள்
அடித்து சிறையில் போட்டார்கள்
நடு சாமத்தில் சிறையின் கதவை
தேவதூதன் திறந்து அழைத்து சென்றான்

4. பவுலின் மேல் பொறாமை கொண்டவர்கள்
கொல்ல முயற்சியும் செய்தார்கள்
பவுலை காத்த தேவன் கைவிடாமல்
ரோம் தேசம் தேவன் அனுப்பி வைத்தார்

## பாடல் 180

ஆவியின் கனியோ அன்பாகுமே!
ஆவிக்குறிய மனிதனாக நடக்கவேண்டுமே!!
ஆவியின் கனியோ சந்தோஷமே!
அனைவரிடமும் சந்தோஷமாய் இருக்க வேண்டுமே!!

ஆமென் ஆமென் அல்லேலூயா!!!
ஆமென் ஆமென் அல்லேலூயா!!!

1. ஆவியின் கனியோ சமாதானமே
சமாதான மனிதனாக மாறவேண்டுமே
ஆவியின் கனியோ நீடிய பொறுமையே
அனைத்திலும் பொருமையாக நடக்கவேண்டுமே

2. ஆவியின் கனியோ தயவாமே
எல்லாரிடமும் தயவாக இருக்கவேண்டுமே
ஆவியின் கனியோ நற்குணமே
அனைவரிடமும் அமைதியாக நடக்கவேண்டுமே

3. ஆவியின் கனியோ விசுவாசமே
அனைத்திலும் விசுவாசியாக இருக்கவேண்டுமே
ஆவியின் கனியோ சாந்தமாமே
அனைவரிடமும் சாந்தமாக இருக்கவும்

4. ஆவியின் கனியோ இச்சையடக்கமாமே
எல்லாவற்றிலும் அடக்கமாய் இருக்கவேண்டுமே
நமக்காய் சிலுவையை இயேசு சமந்தாரே
ஆவியில் பிழைத்து அதன்படி நடப்போம்

5. இயேசு சீக்கிரம் வேகம் வருகிறார்
அவரோடு பரலோகம் செல்ல ஆயத்தமாகு
இயேசுவோடு கூட பாடுபட்டால்
அவரோடு கூட ஆளுகையும் செய்வாய்

<u>**பாடல் 181**</u>

உன்னத தேவனே! உம்மை
ஆராதனை செய்கிறோம்!!
பரிசுத்த தேவனே! உம்மை
ஆராதனை செய்கிறோம்!!

ஆராதனை செய்கிறோம்!! - உம்மை
ஆராதனை செய்கிறோம்!!

பரலோக ராஜனே உம்மை ஆராதனை செய்கிறோம்
பரிசுத்த ராஜனே உம்மை ஆராதனை செய்கிறோம்

உன்னதத்தில் வாழ்பவரே உம்மை ஆராதனை செய்கிறோம்
உண்மையுள்ள தேவனே உம்மை ஆராதனை செய்கிறோம்

ஆராதனைக்கு உரியவரே உம்மை ஆராதனை செய்கிறோம்
மகத்தும் நிறைந்தவரே உம்மை ஆராதனை செய்கிறோம்

சர்வலோகத்தின் தேவனே உம்மை ஆராதனை செய்கிறோம்
சர்வ வல்லவரே உம்மை ஆராதனை செய்கிறோம்

ஆபிரகாமின் தேவனே உம்மை ஆராதனை செய்கிறோம்
யாக்கோபின் தேவனே உம்மை ஆராதனை செய்கிறோம்

மகா பெரிய தெய்வமே எங்கள் மகா பெரிய ராஜனே
சொன்ன வார்த்தை மாறாத எங்கள் பரிசுத்த ராஜனே

<u>**பாடல் 381**</u>

ஆபிரகாமின் தேவனே நீர் எனக்கு போதுமைய்யா
ஈசாக்கின் தேவனே நீர் எனக்கு போதுமைய்யா
யாக்கோபின் தேவனே நீர் எனக்கு போதுமைய்யா
திரியேக தேவனே என்னை நோக்கி பாருமைய்யா

ஆமேன் ஆமேன் அல்லேலூயா
சீக்கிறமாய் வாருமைய்யா

எலியாவின் தேவனே என்னை நோக்கி பாருமைய்யா
எலிசாவின் தேவனே அற்புதங்கள் செய்யுமைய்யா
யோசேப்பின் தேவனே பஞ்சங்களை மாற்றுமைய்யா
தேசத்தின் வறுமையை மாற்றி விடும் என் தேவனே

யோனாவிலும் பெரியவரே என்னை நோக்கி பாருமைய்யா
சாலமனிலும் பெரியவரே எனக்கு இரங்கி வாருமைய்யா
தேவாலயத்திலும் பெரியவரே எனக்கு இரங்கி வாருமைய்யா
என்னிலிருக்கும் என் தேவனே நீர் எனக்கு போதுமைய்யா

மோசேயோடு இருந்தவரே என்னோடும் நீர் இருந்திடும்
யோசுவாவோடு இருந்தவரே என்னோடும் நீர்இருந்திடும்
அற்புதங்கள் அதிசயங்கள் தேசம் காண செய்தவரே
இந்நாளிலும் அற்புதஅதிசயம் காண செய்யும் தேவனே

# பாடல் 382

நான் கடந்து வந்த வழியெல்லாம் முள் வழிகள்
நான் நடந்து வந்த பாதையெல்லாம் கரடுமேடுகள்

நடக்க முடியல இயேசப்பா நடக்க முடியல
தாங்கி கொள்ளுங்க இயேசப்பா ஏந்தி கொள்ளுங்க

என் சுய பெலத்தால் நடந்து பார்த்தேன்
முடியவில்லையே
என் கால் பெலத்தால் ஓடிப்பார்த்தேன்
முடியவில்லையே
என் மன பெலத்தால் சுமந்து பார்த்தேன்
முடியவில்லையே
என் தோள் பெலத்தால் தாங்கிபார்த்தேன்
முடியவில்லையே

இயேசுவால் என் வழி எல்லாம் மாற்றப்பட்டது
இயேசுவால் என் வாழ்க்கையும் மாற்றப்பட்டது
இயேசு என்னை இரட்சித்து அபிஷேகித்தார்
இயேசு எனக்கு ஆவியின் பெலன் தந்தார் - நான்

என் தேவனால் நடந்து பார்த்தேன் நடக்க முடிந்தது
என் தேவனால் ஓடிப்பார்த்தேன் ஓட முடிந்தது
என்ன சந்தோஷம் என் இயேசு தந்தார்
என்ன ஆனந்தம் என் இயேசு தந்தார் - நடக்க

என் தேவனின் பெலத்தால் நான் வாழ்கிறேன்
என் தேவனின் பெலத்தால் நான் ஆழுவேன்
என் தேவனின் பெலத்தால் நான் ஜெயித்திடுவேன்
என் தேவனின் கிருபையால் பரலோகம் சென்றிடுவேன்

# பாடல் 182

கூப்பிடு மகனே! நீ கூப்பிடு மகளே!!
சத்தமிட்டு நீ என்றும் கூப்பிடு மகனே!!
என் ஜனத்திடம் பாவத்தை எடுத்து சொல்லிடு!!
யாக்கோபின் வம்சமிடம் மீறுதலை சொல்லிடு!!

பாவம் செய்யாதே! மகனே பாவம் செய்யாதே!!
பரலோக ராஜியம்! மிக சமீபம்!!

1. வாக்குவாதம் செய்யவே உபவாசியாதே
பிறர் பார்க்கும்படி நீ உபவாசியாதே
பொல்லாங்கு செய்யவே உபவாசியாதே
தப்பட்டம் அடிக்கவே உபவாசியாதே

2. நெருக்கப்படும் மனிதனுக்கு உதவிசெய்திடு
கட்டுகளில் இருப்போரை விடுதலையாக்கு
பசியுள்ளோனை பார்த்து பசியாற்றிடு
மாம்சமான எவறுக்கும் உன்னை ஒளிக்காதே

3. கற்பனை கைகொள்ள எடுத்து சொல்லிடு
கட்டளை நிறைவேற்ற என்றும் சொல்லிடு
உன் சுகவாழ்வு என்றும் செழித்திருக்கும்
உன் செளிச்சம் எழும்பி என்றும் ஒளி வீசும்

4. சிறுமைபட்டவனை ஒருபோதும் மறக்காதே
தரித்திரனை கண்டால் அள்ளி கொடுத்திடு
ஆடையில்லாதவனுக்கு ஆடை கொடுத்திடு
இருளிலே வெளிச்சம் உனக்கு உதிக்கும்

5. கர்த்தர் உன்னை நித்தமும் நடத்திடுவார்
நீதிமானை ஒருபோதும் கைவிடமாட்டார்
உன் ஆத்துமாவை என்றும் திருப்தியாக்குவார்
நீ வற்றாத நீரூற்றைபோல் இருப்பாய்

# பாடல் 183

தூரமாய் இருந்த என்னை இயேசு பார்த்தார்!!
இயேசுவால் இன்று நான் சமீபமானேன்!!!
துஷ்டனாய் இருந்த என்னை இயேசு பார்த்து!!
அவர் இஷ்டமான பிள்ளையாய் மாற்றிவிட்டார்!!!

ஆனந்தமே! பேரானந்தமே!!! - 4

குடியால் குடியை கெடுத்து கொண்டிருந்தேன்
இயேசுவால் நான் இன்று குடும்பமானேன்
மூடனாய் தெருவில் நான் விழுந்து கிடந்தேன்
இயேசுவால் இன்று நான் ஞானியானேன்

முன் கல்லுக்கு முன்பாக விழுந்து கிடந்தேன்
இன்று உள்ளத்தில் தேவனை சுமக்கின்றேன்
முன் பகலிலும் இடறி விழுந்து கிடப்பேன்
இன்று இரவிலும் பகலைப்போல நடக்கிறேன்

முன் தேடியும் தெய்வத்தை நான் காணவில்லையே
இன்று தேடி நான் இயேசுவை காண்கிறேன்
முன்பெல்லாம் எனக்கு குறைவாய் இருந்தது
இப்போது எல்லாமே எனக்கு நிறைவாகுதே

முன் இயேசு என் வாழ்கைக்கு தூரமானார்
இன்று இயேசுவே எனக்கு தஞ்சமானார்
முன் நான் மரித்தால் நரகம் சென்றிருப்பேன்
இன்று நான் மரித்தால் பரலோகம் சென்றிடுவேன்

முன் தேவ அன்பை நான் அறியவில்லையே
இன்று தேவ அன்பினால் நிரப்படுகிறேன்
தேவ இரட்சிப்பால் என்னை அலங்கரித்து
கிருபை மேல் கிருபையால் நிரப்பி விட்டார்

# பாடல் 383

கர்த்தாவே சத்துருவை நோக்கி பாரும்
எவ்வளவாய் என்னோடு போர் செய்கிறார்கள்
எனக்கு இரங்கும் என் தேவ தேவனே
இரங்கி என்னை தூக்கி திருத்திவிடும்

1. எனக்கு விரோதமாய் எழும்புகின்றார்கள்
   என் ஆத்துமாவை பறந்து பட்சிக்கின்றார்கள்
   தேவன் அவனை கைவிட்டார் என்று - 2
   இனி ஒருபோதும் அவன் எழும்பமாட்டார்

2. பக்தியுள்ளவனை தேவன் கைவிட மாட்டார்
   தெரிந்து கொண்டவனை மறக்கவும் மாட்டார்
   எனக்கு நன்மைகள் யார் செய்வார்கள்? - 2
   என்னை நன்மையால் தேவன் நிறப்பிடுவார்

3. நான் கர்த்தரை நோக்கி கூப்பிடுவேன்
   என் சத்தத்தை கேட்டு தூக்கிவிடுவார்
   கர்த்தாவே எனக்காய் ஏழுந்தருளும் - 2
   என்னை இரட்சித்து உயர்த்திவிடும்

4. இயேசு வருகின்றார் இயேசு வருகின்றார்
   இயேசு அதிவேகமாக வருகின்றாரே
   இயேசுவோடு செல்ல நீ ஆயத்தமாகு - 2
   உன் குடும்பத்தோடு செல்ல ஆயத்தமாகு

# பாடல் 384

பரலோக தேவனை நாம் பாடுவோம்
ஆடி அசைந்து நாம் பாடிடுவோம்

ஆராதிப்போம் நாம் ஆராதிப்போம்
அல்லேலூயா சொல்லி ஆராதிப்போம் - 3

1. உண்மையோடும் நாம் ஆராதிப்போம்
உத்தமத்தோடும் நாம் ஆராதிப்போம்
பயபக்தியோடும் நாம் ஆராதிப்போம்
பயந்து நடுங்கி நாம் ஆராதிப்போம்
ஆராதிப்போம்

2. ஓசன்னா சொல்லி ஆராதிப்போம்
ஓயாமல் தேவனை ஆராதிப்போம்
ஓய்வின்றி தேவனை ஆராதிப்பாம்
ஒழுக்கமாய் தேவனை ஆராதிப்போம்
ஆராதிப்போம்

3. கன்மலை தேவனை ஆராதிப்போம்
காணாத தேவனை ஆராதிப்போம்
கண்டு உணர்ந்து நாம் ஆராதிப்போம்
கடைசிவரையில் நாம் ஆராதிப்போம்
ஆராதிப்போம்

4. கண்ணீரோடு நாம் ஆராதிப்போம்
கதறி ஜெபித்து நாம் ஆராதிப்போம்
கண்ட இடமெல்லாம் ஆராதிப்போம்
கர்த்தரை பற்றி நாம் சொல்லிடுவோம்
ஆராதிப்போம்

# பாடல் 184

போற்றுவோர்! போற்றட்டுமே!!
தூற்றுவோர்! தூற்றட்டுமே!!
கர்த்தர் என் மேய்ப்பராக!!
என்றென்றும் இருக்கிறார்!!

1. சத்துரு சோதித்தாலும்
இருள் என்னை மூடினாலும்
என்னை சுற்றி தேவன் - தான்
இருக்கிறார் வெளிச்சமாக

2. பூமி நிலைமாறினாலும்
பர்வதங்கள் அதிர்ந்தாலும்
சேனைகளின் கர்த்தர் - தாமே
என்னோடும் இருக்கிறார்

3. பூமியின் கடைசி வரை
யுத்தங்களை ஒழிக்கின்றார்
ஈட்டிகளை முறிக்கிறார்
ரதங்களை அழிக்கிறார்

4. நீதிமானே பயபடாதே
எழுந்து நிமிர்ந்து நில்
நீதியின் தேவன் - தான்
உன் முன்னே சென்றிடுவார்

5. எலியாவின் தேவன் - தான்
என்னோடு இருக்கின்றார்
ஆபிரகாமின் தேவன் - தான்
உன்னோடும் இருக்கின்றார்

## பாடல் 185

வருகிறார்! வருகிறார்!! ஜெயவீரர்!!
மேசியா வேகம் வருகின்றார்!!

1. கர்த்தரின் வார்த்தைக்கு செவிகொடுங்கள்
உண்மையோடு தரிசிக்க முயன்றிடுங்கள்
விசுவாசத்தோடு தேடிடுங்கள்
கர்த்தரை நோக்கி காத்திருங்கள்

2. சந்தேகமின்றி நம்பிடுங்கள்
இரவும் பகலும் காத்திருங்கள்
தேவனுக்கு சித்தமான வேளையிலே
மேசியா வேகம் வந்திடுவார்

3. தேவனே கேடகம் என்றிடுங்கள்
இரட்சண்ய கொம்பு என்றிடுங்கள்
தேவனே அடைக்கலம் என்றிடுங்கள்
நீரே என் கோட்டை என்றிடுங்கள்

4. உத்தம வழியில் சென்றிடுங்கள்
கர்த்தரின் வாக்கை நம்பிடுங்கள்
நீரே என் ஜீவன் என்றிடுங்கள்
உன்னதத்தை நோக்கி காத்திடுங்கள்

5. இயேசுவை எந்நாளும் நம்புங்கள்
இடுக்கமான வழியில் சென்றிடுங்கள்
மேசியா வருவார் காத்திருங்கள்
குடும்பமாய் பரலோகம் சென்றிடுங்கள்

## பாடல் 385

அல்லேலூயா அல்லேலூயா கர்த்தரை துதியுங்கள்
அல்லேலூயா அல்லேலூயா கர்த்தரை போற்றுங்கள்
வானாதி வானங்களே கர்த்தரை துதிங்கள்
உன்னதத்தில் அவரை போற்றி துதியங்கள்

துதியுங்கள் துதியுங்கள்
கர்த்தரை துதியுங்கள்
போற்றுங்கள் போற்றுங்கள்
தேவனை போற்றுங்கள் - 2

1. பூமியின் ராஜக்களே கர்த்தரை துதியங்கள்
சகல நியாயாதிபதிகளே கர்த்தரை போற்றுங்கள்
வாலிபரே கன்னியரே கர்த்தரை துதியுங்கள்
பிள்ளைகளே முதியோரே கர்த்தரை போற்றுங்கள்

2. மலைகளே மேடுகளே கர்த்தரை துதியுங்கள்
கனி மரங்களே கேதுருக்களே கர்த்தரை போற்றுங்கள்
மகா மச்சங்களே ஆழங்களே கர்த்தரை துதியுங்கள்
அக்கினியே கல்மழையே கர்த்தரை போற்றுங்கள்

3. மாரநாதா மாரநாதா கர்த்தரை துதியுங்கள்
மேசியா வருகிறார் அவரை போற்றுங்கள்
கர்த்தரின் நாமத்தை உயர்த்தி துதியுங்கள்
ஓசன்னா! ஓசன்னா! என்று போற்றுங்கள்

# பாடல் 386

வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
ஆலய ஸ்தோத்திர பண்டிகை வந்து ஆசீர்வதியும்
வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
ஆண்டாண்டு காத்த தேவனே உமக்கு நன்றி நன்றி ஐயா

வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
தாரும் தாருமைய்யா உம் அன்பை தாருமைய்யா
வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
விருப்பத்தை இவ்வாண்டு நிறைவேற்றி மகிழச்செய்யும்

வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
தாரும் தாருமைய்யா உமக்குள் நடக்க பெலன் தாருமே
வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
வந்து உம் வார்த்தையை சொல்வதற்கு பெலன் தாருமே

வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
உம் ஆவியின் வரங்களால் உம் ஜனங்களை நிறப்பிடுமே
வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
அற்புதங்கள் அதிசயங்கள் அனுதினமும் செய்திடுமே

வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
எங்கள் சபைகள் வரங்களினால் அனுதினம் நிறப்பிடுமே
வாரும் வாருமைய்யா எங்கள் இயேசு ராஜா வாருமைய்யா
கனி கொடுக்கும் சபையாக எங்களை மாற்றிடுமே

# பாடல் 186

ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்!! ஸ்தோத்திரமே!!!
என் இயேசு ராஜனுக்கு ஸ்தோத்திரமே!!!
என்றென்றும் ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரமே!!!
எப்போதும் ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரமே!!!

1. எனக்காய் வந்த என் இயேசு ராஜா
   உமக்கே ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!
   பாவத்தை மன்னித்து இரட்சித்தீரே
   உமக்கென்றும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!

2. எனக்காய் சிலுவை சுமந்த இயேசுவே
   உமக்கே ஸ்தோத்திரம் ஸதோத்திரமே!!
   எனக்காய் நிந்தைகள் சகித்த இயேசுவே
   உமக்கென்றும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!

3. மரித்து அடக்கமும் பண்ணப்பட்டீரே
   உமக்கே ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!
   மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்து வந்தீரே
   உமக்கென்றும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!

4. எல்லோரும் பார்க்க பரலோகம் சென்றீரே
   உமக்கே ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!
   சீக்கிரம் வரப்போகும் என் இயேசையா
   உமக்கென்றம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே!!

## பாடல் 187

எக்காள சத்தம் கேட்க போகுது!
கவனமாக என்றும் இருங்கள்!!
ஒருவராலும் வஞ்சியாதிருக்க!!!
கவனமாக என்றும் இருங்கள்!!!!

ஆமென் ஆமென் அல்லேலூயா!! - 4

1. கள்ள உபதேசிகளுக்கு
கவனமாக என்றும் இருங்கள்
கர்த்தரின் வார்த்தை கேட்க
கவனமாக என்றும் இருங்கள்

2. தசமபாகம்! காணிக்கை!! கொடுக்க
கவனமாக என்றும் இரங்கள்
மனபூர்வமாய் கொடுப்பதற்கு
கவனமாக என்றும் இருங்கள்

3. கள்ள தீர்க்கதரிசனம் கேட்க
கவனமாக என்றும் இருங்கள்
நீதி நியாயங்களை நிறைவேற்றவும்
கவனமாக என்றும் இருங்கள்

4. தன் ஆத்துமாவை குறித்து என்றும்
கவனமாக என்றும் இருங்கள்
நண்பனின் ஆலோசனைக்கும்
கவனமாக என்றும் இருங்கள்

## பாடல் 387

சந்தோசம் உனக்கு வேண்டுமா
சமாதானம் உனக்கு வேண்டுமா
சிலுவை அண்டை ஓடிவா - சமாதானம் கிடைக்கும்
இயேசு அண்டை ஓடிவா - சந்தோசம் கிடைக்கும்

1. சமாதானம் பரலோகத்தில் உனக்க கிடைக்குமே
சந்தோசம் பரலோகத்தில் உனக்கு கிடைக்குமே
சிலுவையை சுமந்து நீ சென்றால்
சமாதானம் உனக்கு கிடைக்குமே
சிலுவையை நீ மறுதலித்தால்
அக்கினியில் அய்யோஅய்யோ தான் கிடைக்கும்

2. சிலுவையின் உபதேசம் இந்த உலகில்
கடினம் தான்
கேட்டு நடந்த பின்னால் சமாதானம் உணடாகுமே
சிலுவை உபதேசம் கேட்டு நடந்தால்
பரலோகில் எந்நாளும் சந்தோசமே
சிலுவை உபதேசம் கேட்க மறுத்தால்
நரகத்தில் எந்நாளும் அய்யோ அய்யோ தான்

3. பாடுகள் மத்தியில் சிலுவை சுமந்து சென்றால்
பரலோகில் எந்நாளும் ஆடிப்பாடலாம்
பாடுகள் மத்தியில் தான்
பரலோகம் போகலாம்
பாடுகள் சுமக்க நீ மறுத்தால்
நரக அக்கினியில் அய்யோ அய்யோ தான்

## பாடல் 388

ஆண்டாண்டு காத்து வந்த இயேசு ராஜனே
அடிமை நாங்கள் உமக்கு நன்றி சொல்லுகிறோம்

நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி அய்யா உமக்கு
நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி அய்யா

1. கடந்த நாட்கள் கண்மணிபோல் காத்த தேவனே
அடிமை நாங்கள் உமக்கு நன்றி சொல்லுகிறோம்
நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி அய்யா உமக்கு
நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி அய்யா

2. கடந்த நாளில் எங்களக்கு செய்த நன்மைக்காய்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அய்யா
வந்த சோதனையில் மீட்டு காத்த தேவ தேவனே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அய்யா

3. உம் வார்த்தையால் எங்களோடு பேசி தேற்றினீர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அய்யா
வியாதி வேதனை வந்த போதெல்லாம் கூடயிருந்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் அய்யா

4. கடந்த ஆண்டில் வாக்குரைத்த எங்கள் தேவனே
உம் வார்த்தையை சீக்கிறம் நிறைவேற்றிடும்
வார்த்தையில் உண்மையுள்ள எங்கள் தேவனே
உம் வார்த்தையை நிறைவேற்றி மகிழசெய்யுமே

## பாடல் 188

என் கைகளை தினம் போருக்கும்
என் விரல்களை தினம் யுத்ததுக்கும்
படிப்பிக்கின்ற என் கன்மலையாமே
தேவனுக்கு எந்நாளும் ஸ்தோத்திரமே - 2

1. தேவன் எனக்கு அடைக்கலமானார்
என்னை விடுவிக்கும் தேவனுமானார்
நான் நம்பும் உயர்ந்த கன்மலையானார்
என் புகலிடமும் கோட்டையுமானார்

2. ஜனங்களை எனக்கு எந்நாளுமே
கீழ்ப்படுத்தி நடத்தும் தேவனுமானார்
கர்த்தாவே பாவத்துக்கு எந்நாளும்
விலக்கி காக்க வேண்டுகிறோம்

3. காலைதோரும் உமது கிருபைகளை
தினந்தோரும் நான் கேட்கப்பண்ணும்
அனுதினமும் நான் நடக்கும் வழிகளை
போதித்து நல்வழியில் நடத்திடுமே

4. கர்த்தாவே உம்மை நோக்கி நிற்கின்றோம்
நீரே எனக்கு உயர்ந்த தேவனுமானீர்
தினம் நான் உம் வழியில் நடந்திடுவேன்
உமக்கு பிரியமானதை செய்திடுவேன்

5. தேவாதி தேவனை தினம் துதியுங்கள்
கர்த்தாதி கர்த்தரை என்றும் துதியுங்கள்
ராஜாதி ராஜாவை பாடி துதியுங்கள்
மேசியா வருகிறார் போற்றி துதியுங்கள்

## பாடல் 189

அப்பா! அப்பா!! இயேசப்பா!!! நீங்கபோதுமப்பா!!!!
அற்புதம் செய்யுங்கப்பா! அதிசயம் காணசெய்யும்!!!! - 2

என்னதான் வந்தாலும் எதுதான் நடந்தாலும்
பூமி நிலை மாறினாலும் மலைகள் சாய்ந்தாலும்
ஜனங்கள் கொந்தளித்து அழிந்து போனாலும்
தேவனின் அடைக்கலம் நமக்கு உண்டல்லவோ
- அப்பா! அப்பா!! இயேசப்பா!!!

நிற்க பெலன் எனக்கு என்றும் தாருங்கப்பா
விழுந்து போகாமல் தூக்கி நிறுத்துங்கப்பா
வார்த்தையால் தினம் பேசி என்னை தேற்றுங்கப்பா
சோர்ந்து போகாமல் என்னை நடத்துங்கப்பா
- அப்பா! அப்பா!! இயேசப்பா!!!

தினம் தினம் உம்மை நான் நோக்கி பார்க்கிறேன்
அனுதினம் உம்மை நான் நோக்கி ஜெபிக்கிறேன்
தினம் தினம் உம்மை நான் துதித்து பாடுகிறேன்
அனுதினம் உம்மை நான் துதித்து மகிழ்கிறேன்
- அப்பா! அப்பா!! இயேசப்பா!!!

ஆபத்து நேரத்திலே என் ஜெபத்தை கேளுங்கப்பா
யாக்கோபின் தேவனே வேகமாய் வாருமப்பா
எலியாவின் தேவனே இரங்கி வாருங்கப்பா
என் இயேசு ராஜனே என் பசியாற்றுங்கப்பா
- அப்பா! அப்பா!! இயேசப்பா!!!

என் ஜீவ நாளெல்லாம் உம்மையே துதித்திடுவேன்
நன்மையும் கிருபையும் என்னை தொடரட்டும்
கர்த்தரின் வீட்டிலே நீடித்த நாட்களாய்
ஒலிவ மரத்தை போல் செழித்து வளருவேன்
- அப்பா! அப்பா!! இயேசப்பா!!!

## பாடல் 389

மதுபானம் குடியாதே என் மகனே (மகளே)
வாக்குவாதம் பண்ணாதே நீ பண்ணாதே
அடிதடி பண்ணி வாழ்ந்தவன் யார்
உன் குடும்பத்தை நீயே அழித்து விடாதே

1. மது பானம் குடும்பத்தை கெடுத்து விடும்
மது பானம் உன்னை அழித்து விடும்
மது பானம் பகையை உருவாக்கிடும்
மது பானத்தால் உன் ஆஸ்தி அழிந்திடும்

2. மது பானம் சகோதரனை பகைத்து விடும்
மது பானம் கொலை வெறியை உண்டாக்கிடும்
மது பானத்தால் உன் மானம் போய்விடும்
மது பானத்தால் உன் அந்தஸ்தும் போய் விடும்

3. விடமுடியாத உன் கெட்ட பழக்கத்தை
மாற்றுவதற்காய் இயேசு வந்திருக்கிறார்
உன்னை மாற்றி அணைத்து கொள்வார்
உன் அறிகில் நிற்கும் யேசுவை நோக்கி பார்

4. உன்னை புதுமனிதனாய் மாற்றிடுவார்
உன் வாழ்க்கையில் மகிழ்ச்சி தந்திடுவார்
இயேசுவிடம் வா இயேசுவிடம் வா!
உன்னை இயேசு அழைக்கின்றார்!

# பாடல் 390

என் மகனே என் மகளே மனம் திரும்பு
நீ கெட்ட வார்த்தை பேசாதே பேசாதே
பக்திவிருத்தி உண்டாக பேச சொன்னார்
நல்ல வார்த்தைகளை நீ பேசிட வேண்டும்

1. கெட்ட வார்த்தை பேசினால் தேவன் தண்டிப்பார்
   தேவன் தண்டனை உனக்கு தந்திடுவார்
   தண்டனை கொடுக்கு நாள் சீக்கிறம் வரும்
   தப்புவதற்கு மனம்திரும்பி இயேசுவிடம் வா!

2. மனம் திரும்பி இயேசுவின் வழி வந்தால்
   அவர் உன்னை மன்னித்து ஏற்றுக் கொள்வார்
   உன் பேச்சுகள் எல்லாமே மாறி விடும்
   நீ புது மனிதனாய் மாறிவிடுவாய்

3. உன்னை இரட்சித்து ஆசீர்வதிப்பார்
   உன்னை வரங்களால் அலங்கரிப்பார்
   நீ தேவனின் வார்த்தை சொல்லிடுவாய்
   உன்னை பார்த்து தேவன் சந்தோஷிப்பார்

4. இந்த புது வாழ்க்கை உனக்கு வேண்டுமா!
   இன்று இயேசுவிடம் ஓடி வந்திடு
   உலகமும் உன்னை பார்த்து சந்தோஷபடும்
   உன்னை உண்டாக்கிய தேவன் சந்தோஷபடுவார்

# பாடல் 190

நெஞ்சம் கலங்கும் போது!
நெஞ்சார அணைக்கும் தேவா!!
கால்கள் சருக்கும் நேரம்!
வழுவாமல் காத்த தேவா!!

உமக்கென்றும் நன்றி ஐயா!!! - 4

1. இருள் என்னை சூழ்கையிலே
   வெளிச்சமாய் வந்த தேவா
   பயந்து நடுங்கும் நேரம்
   வசனத்தால் தேற்றினீரே

2. பாவத்தை மன்னித்தீரே
   இரட்சிப்பால் அலங்கரித்தீர்
   கிருபையால் நிரப்பி என்னை
   உம்மை நான் காண செய்தீர்

3. ஜெபத்தை கேட்கும் தேவா
   விருப்பத்தை நிறைவேற்றிடும்
   பலுகி நான் பெருகிடவும்
   வார்த்தையை நினைத்தருளும்

4. எலியா கூப்பிட்டபோது
   அற்புதம் செய்தவரே
   ஜெபிக்கும் நேரமெல்லாம்
   அற்புதம் செய்திடுமே

5. பாவியான என்னையுமே
   தூக்கி நிறுத்தினீரே
   உம்மை தினம் துதிக்க
   பாடி மகிழ செய்யும்

## பாடல் 191

நீதி நிறைந்தவரே! உம்மை உயர்த்துகின்றோம்!!
அன்பு நிறைந்தவரே! உம்மை போற்றுகின்றோம்!! -2

நன்றி நன்றி ஐயா!!!
நன்றி நன்றி ஐயா!!! - 2

1. இரக்கமுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்
இதயத்தின் வேந்தனே உம்மை ஆராதிக்கின்றோம் -2

2. அற்புத தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்
அதிசயம் செய்பவரே உம்மை ஆராதிக்கின்றோம் -2

3. சேனைகளின் கர்த்தாவே உம்மை ஆராதிக்கின்றோம்
ஜெபத்தை கேட்பவரே உம்மை ஆராதிக்கின்றோம் -2

4. ஒளிவீசும் தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்
அசைவாடும் தேவனே உம்மை ஆராதிக்கின்றோம் -2

5. எங்கள் தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்
எங்கள் ராஜாவே உம்மை ஆராதிக்கின்றோம் -2

6. பரிசுத்த தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்
பரலோக தேவனே உம்மை ஆராதிக்கின்றோம் -2

7. துதிக்குப் பாத்திரரே உம்மை ஆராதிக்கின்றோம்
துதியின் தேவனே உம்மை ஆராதிக்கின்றோம் -2

## பாடல் 391

காணாமல் போன ஆட்டை தேடி
கண்டுபிடித்த என் தேவ தேவனே
என்னை தேடி வந்த தேவனே
உம் வழியில் நடத்தி சென்றிடுமே

அல்லேலூயா ஓசன்னா! அல்லேலூயா ஓசன்னா!
அல்லேலூயா ஓசன்னா! அல்லேலூயா

1. ஆட்டின் பின்னால் அலைந்து திரிந்த
தாவீதை தேடி பிடித்து நடத்தி வந்தீரே
என்னையும் தேடி வந்த என் தேவனே
பரிசுத்த வழியில் நடத்தி செல்லுமே - என்னை

2. தாவீதை இரட்சித்து நடத்தினீரே
என்னையும் இரட்சித்து நடத்திடுமே
தாவீதை அபிஷேகித்து அற்புதம் செய்திரே
என்னையும் அபிஷேகித்து அற்புதம் செய்திடும்

3. சங்கீத ஆவியால் தாவீதை நிரப்பினீர்
சங்கீத ஆவியால் என்னையும் நிரப்பிடும்
இதயத்தில் ஏற்றவனாய் தாவீதை மாற்றினீர்
என்னையும் இதயத்தில் ஏற்றவனாய் மாற்றிடும்

4. அற்புதத்தின் தேவனே இறங்கி வாருமே
அதிசயத்தின் தேவனே இறங்கி வாருமே
உம் வார்த்தையால் ஜனத்தை இட்சித்திடும்
உம் வார்த்தையில் ஜனத்தை உறுதிபடுத்தும்

# பாடல் 392

எல்லாம் மாயை எல்லாம் மாயை மாயை மாயை தான்
உலகம் மாயை உலகம் மாயை மாயை மாயை தான்
மண்ணில் வாழும் மனிதனும் மாயை மாயை தான்
அவன் வாழும் வாழ்க்கையும் மாயை மாயை தான்

மண்ணான மனிதனே நீ அறிந்து கொள்
விண்ணுலகில் நிரந்தர வாழ்க்கை உனக்குண்டு

1. மனிதனாய் பிறக்கிறான் வளர்ந்து வாழ்கிறான்
இரா பகல் உழைத்து ஆஸ்தியை சேர்க்கிறான்
திடீர் என்று மரணம் அவனை அழைக்கின்றது
அவன் சேர்த்த ஆஸ்தியெல்லாம் எங்கே போகுது

2. பாவி உலகில் வாழ்கின்ற வாழ்க்கை மாயை தான்
பரிசுத்தவான் வாழ்கின்ற வாழ்க்கை மாயையே
பாவி மரித்து நரகத்தில் வேதனை அடைவான்
பரிசுத்தவான் மரித்தால் பரலோகம் சென்றிடுவான்

3. இன்று காணும் மனிதன் நாளை இல்லையே
நாளை காணும் மனிதன் மறுநாள் இல்லையே
மனிதனே நீ மரித்து எங்கே போகிறாய்
மனிதனே நீ மரித்தால் பரலோகம் செல்லணும்

# பாடல் 192

இரங்கி வாருமே! என் இயேசு ராஜனே!!
இரங்கி வாருமே! என் தெய்வம் இயேசுவே!!

1. நம்பிக்கையின் என் இயேசு ராஜனே
நம்பி நாங்கள் உம்மண்டை வந்து நிற்கிறோம்

2. நீதி நிறைந்த என் இயேசு ராஜனே
வேகம் வந்து என் விண்ணப்பம் கேளுமே

3. உத்தமம் நிறைந்த என் இயேசு ராஜனே
இறங்கி வந்து என் விருப்பம் நிறைவேற்றிடும்

4. மன்னிக்கும் தயைபெருத்த இயேசு ராஜனே
மன்னித்து என் ஜெபத்தில் பதில் தாருமே

5. மனதுருக்கம் நிறைந்த இயேசு ராஜனே
மனதுருகி என் வேண்டுதல் தினம் கேளுமே

6. வார்த்தையில் என்றும் உண்மை நிறைந்த
என் இயேசு ராஜனே விரைந்து வாருமே

## பாடல் 193

உம் பாதம் பணிந்திட நான் வந்துள்ளேன் தேவா!!
என் பாதை மாற்றிட நீர் வாரும் தேவனே!! - தினம்

உலக இச்சை என்னை விட்டு மாற்றிடும் தேவா
உம் சித்தம் செய்திட நான் என்னை படைக்கின்றேன்
- தினம்

உன்னத மகிமையால் தினம் என்னை நிரப்பும்
உமக்காய் தினம் எழுந்து நான் சேவை செய்திட
- தினம்

மனிதனை நான் என்றும் நம்பிடமாட்டேன்
நான் நம்பும் தேவனையும் விட்டிடமாட்டேன்
- தினம்

நான் உயிரோடு இருக்கும் வரையில் உம்மில் நிற்க
உத்தமனாய் என்றும் என்னை காத்துக்கொள்ளும்
- தினம்

என் கண்களினால் தினம் உம்மை காண்கின்றேன்
என் கன்மலையான என் தேவனே எனக்கு நீர் போதும்
- தினம்

உலக சேவையை பார்க்கிலும் தேவ சேவை பெரியது
தேவ சேவை செய்து பரலோகம் சென்றிடுவேன்
- தினம்

## பாடல் 393

தேவன் செய்த அற்புதத்தை சொல்லி நான் துதிப்பேன்
தேவர்களுக்கு முன்பாக கீர்த்தனம் பண்ணுவேன்
பரிசுத்த ஆலயத்துக்கு நேராக என்றும் நான்
பணிந்து குனிந்து போற்றி நான் துதிப்பேன்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
எங்கள் தேவாதி தேவனே வாரும் ஐயா

1. நடத்தி சென்ற பாதைகளை நான் நினைத்து
   எண்ணி எண்ணி நான் துதித்திடுவேன்
   கூப்பிட்ட நாட்களில் இரங்கி வந்தீரே
   ஆத்துமாவில் பெலன் தந்து தைரியபடுத்தினீர்

2. நான் துன்பத்தின் நடுவில் நடந்து சென்றாலும்
   என்னோடு இருப்பவர் பெரிய தேவன்
   உலகம் முடியம் வரை என்னோடிருந்து
   கைவிடாமல் காக்கும் என் தேவன்

3. சத்துருவின் கோபத்துக்கு என்னை விலக்கி
   தவராமல் தினம் தாங்கி நடத்திடுவார்
   நான் போகையிலும் என்னை நடத்திடுவார்
   நான் வருகையிலும் என்னை காத்திடுவார்

## பாடல் 394

சிறுமை பட்ட ஜனத்தை இரட்சிப்பீர்
மேட்டிமை உள்ளவனை தாழ்த்தி போடுவீர்
தயை உள்ளவனுக்கு தயை செய்கிறீர்
உத்தமனுக்கு நீர் உத்தம தேவன்

ஆமேன் ஆமேன் ஆமேன் அல்லேலூயா

1. கர்த்தரான தேவன் விளக்கானவர்
கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்
உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேன்
தேவனாலே மதிலை தாண்டிடுவேன்

2. தேவனின் வழி உத்தமமானது
தேவனின் வார்த்தை ஜீவுள்ளது
தேவனை நம்புவோர் செழித்திருப்பார்கள்
அவர்களை கைவிடாமல் காக்கும் தேவன்

3. கர்த்தரை அல்லாமல் தேவன் யார்
தேவனை அன்றி இரட்சகர் யார்
தேவன் பலத்த அரணானவர்
அவர் கோட்டையும் பலத்த துருகமானவர்

## பாடல் 194

முடிவு வருகுது! சபையே முடிவு வருகுது!!
தேசத்தின் எல்லை எங்கும் முடிவு வருகுது!!
தீங்கு வருகுது! ஜனமே தீங்கு வருகுது!!
உலகமெங்கிலும் அழிவு வருகுது!!

1. பஞ்சம் வருகுது உன் மேல் பஞ்சம் வருகுது
கர்த்தரின் கோபமும் உன் மேலும் வருகிறது
கர்த்தரின் கண் உன்னை தப்பவிடாது
கர்த்தரின் இரக்கமும் உன் மேல் வராது

2. கர்த்தர் வருகிறார் அதிவேகமாகவே
அவர் கோபத்தின் ஆயுதங்களும் கூட வருகுது
வானம் கவிழ்ந்த தேசத்தில் இருந்து வருகுது
அலறுங்கள்!! கர்த்தரின் நாள் மிக சமீபம்

3. வருகிறார் வருகிறார் மேசியா வருகிறார்
மேக மீதிலே அதிவேகமாக வருகிறார்
எக்காள தொனிமுழங்க இயேசு வருகிறார்
பரிசுத்தவான்களை சேர்க்க இயேசு வருகிறார்

4. தேவ சபையே நீ விழித்தெளிம்பிடு
கர்த்தருக்காய் ஆயத்தமாய் எழும்பி நின்றிடு
தூங்கினால் நீயும் கைவிடப்படுவாய்
நரக வேதனைக்குள் நீயும்போய் சேருவாய்

5. இரட்சிப்பின் காலம் முடியப்போகுது
இரட்சிக்கப்பட்டோரை சேர்க்க வருகிறார்
பரலோகம் செல்ல இரட்சகரண்டை ஓடிவா!
பரனோடு சேர்ந்து நீ வாழ்ந்திருப்பாய்

# பாடல் 195

என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருது!!
என் கொம்பும் கர்த்தருக்குள் உயருகிறது!!
சாத்தானின் கோட்டைகள் தகர்ந்தது!!
கர்த்தரின் இரட்சிப்பினால் பூரிக்கிறேன்!!

பலவானின் வில்லை முறியடித்தார்
விழுந்தோரை தூக்கி நிறுத்திவிட்டார்
பசியாய் இருந்தோரை பசி ஆற்றினார்
மலடியை பிள்ளை தாச்சியாக்கினார்

கர்த்தர் கொல்லுகிறார் உயிர்ப்பிக்கிறார்
பாதாளத்தில் இறங்கவும் ஏறவும் பண்ணுகிறார்
கர்த்தர் தரித்திரம் அடையவும் செய்கிறார்
கர்த்தர் ஐசுவரியம் அடையவும் பண்ணுகிறார்

தேவன் சின்னவனை புழுதியிலிருந்து தூக்குகிறார்
எழியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்
பூமியின் அஸ்திபாரம் கர்த்தருடையது
பரிசுத்தவானின் பாதங்களை காப்பாற்றுகிறார்

தேவனோடு வழக்காடினால் நொருக்கப்படுவான்
கர்த்தர் வானத்திலிருந்து முழங்குகிறார்
இரட்சிக்கப்பட்டோருக்கு பெலன் கொடுப்பார்
அபிஷேகம் பண்ணினோரை உயர்த்துகிறார்

இதுவே அனுக்கிரக காலம் என்றார்
இதுவே இரட்சண்ய நாள் என்றார்
இதுவே உனக்கு சமாதான நாள்
சமாதானத்தை பூமியில் இருந்து எடுத்திடுவார்

# பாடல் 395

உன் தேவனாகிய கர்த்தர் என்றும் பெரியவர்
மகிமையாய் அவர் நடுவில் வந்து விட்டார்
கர்த்தர் உன் ஆக்கினையை அகற்றி விட்டார்
உன் சத்துருவை விலக்கியும் போட்டுவிட்டார்

வருகிறார் வருகிறார் இயேசு வருகிறார்
ஆயத்தமாகு நீ ஆயத்தப்படுத்து

1. இனி தீங்கை என்றும் நீ காணமாட்டாய்
   அவர் வல்லமையின் தேவன் என்று சொல்லிடு
   நொண்டியானவனை தூக்கி விடுவார்
   தள்ளுண்டவனை அவர் சேர்த்துகொள்ளுவார்

2. சீயோனின் குமாரத்தியே கெம்பீரித்திடு
   இஸ்ரவேல் ஜனங்களே ஆர்ப்பரியுங்கள்
   தேவனின் நாமத்தில் நம்பிக்கையோடிரு
   சீக்கிரம் வந்து உன்னை தூக்கி நிறுத்துவார்

3. கர்த்தர் உன்னை என்றும் நடத்திடுவார்
   வறட்சியான காலத்திலும் நடத்திடுவார்
   கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் எண்ணிடு
   மகிழ்ச்சியோடும் கர்த்தரை நீ ஆராதித்திடு

# பாடல் 396

ஆபிரகாமை நோக்கி தேவன் கூப்பிட்டார்
ஆபிரகாம் தேவனை நோக்கி பார்த்தான்
ஆபிரகாமே - ஈசாக்கை அழைத்து சென்று
மோரியா மலையில் பலியிடு என்றார்

கைவிடாத எகோவாயீரே ஸ்தோத்திரம்
கைவிடாத எகோவாஷாலோம் ஸ்தோத்திரம் - 2

1. நான் குறிக்கும் மலையின் மேல் செல் என்றார்
ஈசாக்கை தகனபலியாய் பலியிடு என்றார்
தேவன் குறித்த மலைக்கு வந்து சேர்ந்தான்
ஈசாக்கை கட்டி பலிசெலுத்த போனான் - அவன்

2. தேவன் ஆபிராகாமை தடுத்து நிறுத்தினார்
தேவன் ஆட்டை பலிசெலுத்த ஒப்புகொடுத்தார்
சோதனை இல்லாமல் ஜெயம் இல்லையே
சோதனையின் மத்தியில் அவர் ஆசீர்வதிப்பார்

3. ஆபிரகாமை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்
அவனை கடைசிவரை கைவிடாமல் காத்த தேவன்
உன்னையும் அழைத்தவர் உண்மையுள்ளவர்
உலகம் முடியும்வரை பதறாமல் பாதுகாத்திடுவார்

# பாடல் 196

அறிவேன்! அறிவேன்!! நான் தேவனை அறிவேன்!!!
அறிவேன்! அறிவேன்!! நான் இயேசுவை அறிவேன்!!!

1. அறிவேன் அறிவேன் பரிசுத்தரை அறிவேன்
அறிவேன் அறிவேன் பரலோகம் அறிவேன்
வேறு எதையும் நான் அறியவில்லையே
இந்த உலகத்தையும் நான் அறியவில்லையே

2. வேதத்தை நான் என்றும் அறிவேன்
வேதத்தை தினம் படிக்க நான் அறிவேன்
வேதத்தை தியானிக்க நான் தினம் அறிவேன்
திருமறையின் மறைபொருளை தினம் அறிவேன்

3. தேவனை நோக்கி தினம் ஜெபிக்க அறிவேன்
தேவனிடம் அழுது புலம்ப தினம் அறிவேன்
தேவனை துதித்திட அனுதினம் அறிவேன்
தேவனில் மகிழ்ந்திருக்க தினம் அறிவேன்

4. தேவனின் சேவை செய்ய தினம் அறிவேன்
தேவனுக்குள் பாடு சகிக்க என்றும் அறிவேன்
என் போதகரை அறிந்து நான் தினம் ஜெபிப்பேன்
என் சபை வளர என்றும் தவராமல் ஜெபிப்பேன்

5. துன்ப பாதை செல்ல தினம் துணிந்திடுவேன்
துன்பத்திலும் சபை வளர அள்ளி கொடுப்பேன்
மரணத்தில் என்றும் நான் ஜெயம் பெற்றிடுவேன்
பரலோகம் சென்று நான் என்றும்
மகிழ்ந்திருப்பேன்

## பாடல் 197

யாக்கோபுக்கு விரோதமான மந்திரம் இல்லை
இஸ்ரவேலுக்கு விரோதமான தந்திரம் இல்லை

1. யாக்கோபே உன் கூடாரம் அழகு உள்ளது
   இஸ்ரவேலே உன் வாசஸ்தலம் இன்பமானது
   நீ பரவிபோகும் ஆறுகளை போன்றவனாம்
   நீ நதியோரம் நாட்டப்பட்ட மரம் போன்றவன்

2. கர்த்தர் நாட்டின சந்தண மரம்போன்றவன்
   பச்சையான ஒலிவ கன்றைப் போன்றவன்
   காண்டா மிருகத்தின் பெலனை போன்றவன்
   உன் ஆளுகை என்றும் மேன்னையடையும்

3. நீ பால சிங்கம் போல் பெலன் கொண்டவன்
   உன்னை சீண்டுபவன் உலகில் இல்லாமல் போவான்
   உன்னை ஆசீர்வதிப்பவன் ஆசீர்வாதம் பெருவான்
   உன்னை சபிப்பவன் என்றும் சபிக்கப்படுவான்

4. பொய் சொல்ல தேவன் மனிதன் அல்ல
   மனம் மாற தேவன் மனுபுத்திரன் அல்ல
   தேவன் யாக்கோபில் அக்கிரமம் காண்பதில்லை
   இஸ்ரவேலில் குற்றத்தை பார்ப்பதும் இல்லை

5. கர்த்தருக்குள் என்றும் நீ நிலைத்திருந்தால்
   ராஜாவின் ஜெயகெம்பீரம் உனக்கு உண்டு
   தேவனுக்காய் எழுந்து நீ பிரகாசிப்பாய்
   உன் ராஜ்ஜியம் என்றும் மேன்மை அடையும்

## பாடல் 397

ஆகாபை நோக்கி எலியா சொன்னான்
என் வாக்கின்படி பனிமழை பெய்யாதென்றான்
தேவனுக்கு முன் நிற்கும் நான் தானே
அவர் ஜீவனை கொண்டு சொல்லுகிறேன் - 2

ஊழியனின் வார்த்தையை நிலைப்படுத்தும்
என் தேவனே என்றென்றும் வாழ்க வாழ்கவே

1. எலியா சொன்னபடிதான் நடந்தது
   தேசத்தில் பனிமழை பெய்யாமல் நின்றது
   மூன்றாம் வருடம் ஆகும் போது தான்
   எலியா தேசத்தில் பனிமழை பெய்யும் என்றார்

2. சத்தியத்தை சொல்லி தேசத்தை விட்டான்
   ஓடி மலைக்குள் போய் ஒளித்துக்கொண்டான்
   ஆற்று நீரை குடித்தான் காகம் போஷித்தது
   எலியா நம்பின தண்ணீரும் வற்றிப்போனது

3. எலியாவை தேவன் சாரிபாத்துக்கு அனுப்பினார்
   விதவையயும் மகனும் பிழைத்திட அனுப்பினார்
   அவர் அற்புதத்தின் தேவன் அற்புதம் செய்தார்
   அற்புத தேவனை கண்டு மகிழ்ந்து
   களிகூர்ந்தாள்

# பாடல் 398

[illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] – [illegible]

1. [illegible] [illegible] [illegible] – [illegible]
   [illegible] [illegible] [illegible]

2. [illegible] [illegible] [illegible] – [illegible]
   [illegible] [illegible] [illegible]

3. [illegible] [illegible] [illegible] [illegible] – [illegible]
   [illegible] [illegible] [illegible] [illegible]

4. [illegible] [illegible] [illegible]
   – [illegible]
   ஆ்களுடைய [illegible] [illegible] [illegible]

5. [illegible] [illegible] [illegible] [illegible] – [illegible]
   [illegible] [illegible] [illegible] [illegible]

# பாடல் 198

துதிக்கு பாத்திரராகிய தேவனுக்கு நன்றி!
வானங்களை தாழ்த்தி வந்த தேவனுக்கு நன்றி!
கேருபீன்கள் மேல் வந்த தேவனுக்கு நன்றி!
காற்றின் மேல் பறந்து வந்த தேவனுக்கு நன்றி!

நன்றி! நன்றி!! நன்றி!!! உமக்கு நன்றி ஐயா!!!! - 2

1. இருளை மறைவிடமாக்கின தேவனுக்கு நன்றி
   மேகங்களை கூடாரமாக்கின தேவனுக்கு நன்றி
   மின்னல்களை பிரயோகித்த தேவனுக்கு நன்றி
   அம்புகளை உபயோகித்த தேவனுக்கு நன்றி

2. மரண கட்டை மாற்றின தேவனுக்கு நன்றி
   நெருக்கத்தில் இறங்கி வந்த தேவனுக்கு நன்றி
   கேடகமாக வந்த தேவனுக்கு நன்றி
   இரட்சித்து தூக்கி எடுத்த தேவனுக்கு நன்றி

3. நம்பிக்கையாய் வந்த தேவனுக்கு நன்றி
   கன்மலையாய் வந்த தேவனுக்கு நன்றி
   பெலனாக வந்த தேவனுக்கு நன்றி
   அஸ்திபாரமாக வந்த தேவனுக்கு நன்றி

4. எனக்கு தயவாய் வந்த தேவனுக்கு நன்றி
   என் துர்குணத்தை மாற்றின தேவனுக்கு நன்றி
   என் விளக்கை ஏற்றின தேவனுக்கு நன்றி
   இருளை வெளிச்சமாக்கின தேவனுக்கு நன்றி

# பாடல் 400

[illegible]

[illegible]

1. [illegible]
[illegible] -- [illegible]

2. [illegible]
[illegible] - [illegible]

3. [illegible]
[illegible] - [illegible]

4. [illegible]
[illegible] - [illegible]

5. [illegible]
[illegible] - [illegible]

6. [illegible]
[illegible] - [illegible]

7. [illegible]
[illegible] - [illegible]

# பாடல் 200

அதன் அதன் காலத்திலே!!
அதன் அதன் வேலையை!!
செய்திடவே தேவன் தான்!!
அனுக்கிரகம் பண்ணுகிறார்!!

ஆமேன்! ஆமேன்!! அல்லேலுயா!!! - 4

1. மேகத்தை என்றும் நோக்கி
கட்டளை தினம் கொடுக்கிறார்
மேகமும் புரண்டு திரண்டு
தன் காலத்தில் மழை பெய்கிறது

2. பகலில் சூரியன் உதிக்கிறது
இரவில் சந்திரன் உதிக்கிறது
பகலில் வார்த்தை தெறிவிக்குது
இரவில் அறிவை தெறிவிக்குது

3. மரம் காயகள் பழங்களும் - தன்
காலத்தில் கனி தந்திடும்
செடி கொடி பூக்களும் - அதன்
காலத்தில் தந்திடும்

4. ஜீவ பிராணிகள் எல்லாமே
ஜீவித்து மறிக்கின்றது
ஜீவனுள்ள தேவதி தேவன்
சகலமும் நேர்த்தியாய் செய்தாரே

5. கடல் அலை தண்ணீரும்
தினம் அதின் வேலை செய்கிறது
அதில் வாழும் உயிரை காக்கிறது
காற்று மழை தவறாமல் தந்திடும்